
பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்

பிரேமா பிரசுரம்



4/+

பன்னிரு ஆழ்வார்கள் கதைகள்

பதிப்பாசிரியர்

அரு. ராமநாதன்

மூலங்களை பரிசோதித்து தமிழில் எழுதியவர்

குறிஞ்சி. ஞான. வைத்தியநாதன்

பிரேமா™

பிரசுரம்

59, ஆற்காடு சாலை,

கோடம்பாக்கம்,

சென்னை – 600 024.


☎:24800325, 24833180, 24811755.

e-mail : aruram@premapirasuram.com

website: www.premapirasuram.com

பிரேமா பிரசுரம் - 328

முதற்பதிப்பு : ஏப்ரல் 1978
பதிமூன்றாம் பதிப்பு : ஆகஸ்ட் 2005
பதிநான்காம் பதிப்பு : ஜனவரி 2009
பதினைந்தாம் பதிப்பு : செப்டம்பர் 2011
பதினாறாம் பதிப்பு : பிப்ரவரி 2013
பதினேழாம் பதிப்பு : நவம்பர் 2015




விலை ரூ. 50-00

கணிப்பொறி
வடிவமைப்பு : ஏ.ஆர். எண்டர்பிரைசஸ், சென்னை - 24.

அச்சிட்டோர் : காரிஸ் ஆப்செட் பிரஸ், சென்னை - 29


4/1



இந்த நூல்

பன்னிரு ஆழ்வார்கள் கதைகள் அமரர் திரு. அரு. ராமநாதன் அவர்கள் காலத்திலேயே வெளிவர வேண்டிய நூல். 1967-ம் ஆண்டில் பிரேமா பிரசுரம் வாயிலாக புதுமுறையில் வசனவடிவில் புராண நூல் வரிசை வெளியீடுகள் கொண்டு வந்து மக்களிடையே பக்தி உணர்ச்சியைப் பரப்பிய பெருமை அவர்களையே சாரும். ஸ்ரீ விநாயகர் புராணம், ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீ தேவி பாகவதம் நூல்கள் தமிழகத்திலும் தமிழர்கள் வாழும் எல்லா ஊர்களிலும் அமோகமாக விற்பனையானதே சான்றாகும். இவ்வரிசையில் பன்னிரு ஆழ்வார்கள் கதைகள் இப்பொழுது கொண்டு வரப்பட்டுள்ளது. திரு. ஞான வைத்தியநாதன் மூலத்தை அனுசரித்து எழுதிய இக்கதையை முழுவதுமாக நோயுற்றிருந்த நிலையிலும் படித்துத் திருத்தி சேர்த்து அமைப்பை முழுமையாகத் தந்த பெருமை **அமரர். அரு. ராமநாதன்** அவர்களுக்கு உரியது.

1978 பிரேமா பிரசுரம்



பொருளடக்கம்



1. பொய்கையாழ்வார்

தமிழ்க் குமரியின் நெற்றித் திலகம் போல் தொண்டை நாடு திகழ்கிறது. அவளுடைய புன்சிரிப்பு போல் நாடு அங்கு இயற்கை நெடுகிலும் புத்திளமையின் பொலிவு படர்ந்திருக்கும், அத்தொண்டை நாட்டில் தொன்று தொட்டு பழம்பெரும் நகராகக் காஞ்சிபுரம் விளங்கி வருகிறது. இது கச்சி என்றும் திரு அத்தியூர் (சின்னக்காஞ்சிபுரம்) என்றும் வழங்கப்படுகிறது.

ஒரு காலத்தில் சோழ நாட்டின் தலைநகராகவும் பிறகு பல்லவ நாட்டின் தலைநகராகவும் காஞ்சிபுரம் விளங்கியது. இக்காஞ்சிபுரம் இயற்கை எழில் மிகுந்த ஒரு நகரம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த காஞ்சி நகரில் பல வைணவ தலங்களும், பல சிவ தலங்களும் உண்டு. அவ்வைணவ தலங்களுள் திருவெஃகா என்பதும் யதோத்காரி சந்நிதி என்பதும் ஒன்றாகும். அங்கு திருமாலின் பெருங்கருணை நிறைந்திருக்கும். பக்தர்களின் பக்திப்பாடல்கள் எக்காலத்தும் ஒலித்துக் கொண்டிருக்கும். அங்கு சொன்ன வண்ணம் செய்தான் (யதோத்காரி) சந்நிதியின் அருகே தேவர்களும் வானுலகக் கன்னியர்களும் நீராடுவதும், வீடு பேற்றை அளிக்கும் சிறப்புடையதும், பரந்தாமனின் கருணை நெஞ்சைப்போன்று மிகக் குளிர்ச்சி பொருந்தியதுமான ஒரு பொய்கை. அப்பொய்கையிலே நறுமணத்தை அள்ளிவீசும் அழகான செந்தாமரை, வெண்டாமரை, கருங்குவளை, நீரோற்பலம், அல்லி முதலான பூக்களெல்லாம் பூத்துக்குலுங்கும். வண்டினங்களிலே உயர்வான சுரும்புகள் அம்மலர்களிலே சுரக்கும் இனிய தேனையுண்டு மயங்கி, காலைப்போதும் மாலைப் போதும் முடியும் பொழுதில் மலர்கள் கூம்ப அதனுள் அகப்பட்டுத் தத்தளிக்கும். அன்னங்கள் கூட்டம் கூட்டமாக மலர்களினூடே அமைந்து நீந்தி விளையாடும்.

இவ்வாறான சிறப்பு பொருந்திய பொய்கையில் மலர்ந்திருக்கும் பொற்றாமரை மலர் ஒன்றிலிருந்து இனிய வாசம் கமழும் துளசிச் செடிபோல், அன்பே குணமாகக் கொண்டு அறிவொளி வீசும் ஞானச்சுடராக பக்தியின் முழுப்பொருளாக ஒரு மைந்தர், சித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாதத்தில் சுக்லாஷ்டமி செவ்வாய்க்கிழமையன்று திருவோண நட்சத்திரத்தில் அரங்கப் பெருமானின் ஐம்படைகளில் ஒன்றாகிய பாஞ்சசந்நியம் என்னும் திருச்சங்கின் அம்சமாக அவதரித்தார். அவர் பொய்கையில் அவதரித்த காரணத்தால் பொய்கையார் எனச் சிறப்பிக்கப்பட்டார்.

அவர் கற்க வேண்டிய நூற்களையும் திருவரங்கப் பெருமானின் அருங்கருணையினால் குற்றம் நீக்கிக்கற்றுத் தேர்ந்துணர்ந்தார். அதன் பயனாய் இம்மை மறுமைப் பயன்களையும் உணர்ந்து இம்மைக்கும் மறுமைக்கும் பயன் தருவது திருமாலின் தொண்டே என முடிவு செய்து உலகப்பற்றையும், நான் --- எனது என்ற அகப்பற்றையும்



1. பொய்கையாழ்வார்

புறப்பற்றையும் நீக்கி திருமாலிடம் அன்பு பூண்டு அவன் சேவைக்கே தன்னை முழுதுமாக அர்ப்பணித்துக்கொண்டார்.

"என் நெஞ்சம்" அவனது அன்பையே எக்காலமும் எண்ணி எண்ணி மகிழச் சொல்கிறது, என் நாக்கு அவனது அழகிய திருமேனியை, துளவ மாலை சூடிய மார்பை, செங்கமல கண்களை, சக்கராயுதம் தரித்த கையை, கழலணிந்த கால்களை, வெண்ணெய் ஒழுகும் செம்பவள உதடுகளை -எந்நேரமும் புகழ்ந்து பாடிக்கொண்டேயிருக்க விழைகிறது என் கண்கள், "பிறப்பறுக்கும் பெருமானை, உலகளந்த குறுமுனியை, மாயக் கள்ளனை, திருமகள் நாதனான கண்ணனைக் காண்" என்று இயம்புகின்றன. என் செவிகளோ "அவன் தன் அருட்புகழ் பேசும் பாடல்களைக் கேட்க விரைகின்றன என்று எப்பொழுதும் சொல்லிக் கொண்டேயிருப்பார். தன்னை மறந்து பரமன் மேல் பாடி மகிழ்வார். அவன் அருங்குணங்களையும் அரிய செயல்களையும் புகழ்வார். நெடியோன் மாயனின் திருப் பெயர்களையெல்லாம் கூறிக்கூறிப் போற்றுவார். அப்போது அவர் கண்களிரண்டும் ஆனந்தக்கண்ணீரைச் சொரியும். அகம் கரைந்து, உள்ஒடுங்கி திருமாலின் திவ்விய அழகில் தன்னையும் மறந்து போவார்.

பொய்கையார், "பிறர் பொருளை விரும்ப மாட்டேன்; கீழான தன்மையுள்ளவர்களுடன் நட்பு கொள்ள மாட்டேன்; உயர்ந்தவரோடு சேர்ந்து வாழ்வேனே அல்லாமல் மற்றவர் களோடு சேரமாட்டேன்; திருமாலைத் தவிர வேறு தெய்வத்தைத் தெய்வம் என்று புகழமாட்டேன்; வணங்க மாட்டேன்; ஆதலால் நம்மை நாடி பிறப்பு இறப்புத் துன்பத்தைத் தரும் வினை இனி வரமுடியாது,

"நயவேன் பிறர் பொருளை; நள்ளேன் கீழாரோடு:
உயவேன் உயர்ந்தவரோடு அல்லால்; - வியவேன்
திருமாலை அல்லது தெய்வம் என்று ஏத்தேன்;
வருமாறு எம் மேல் வினை?"

என்றெல்லாம் திருமாலைப் பாடிப் பரவுவார், மேலும் அவர்,

"ஏற்றான் புள்ஊர்ந்தான், எயில் எரிந்தான், மார்விடந்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான் - கூற்று ஒருபால்
மங்கையான், பூமகளான் வார்சடையன், நீள்முடியான்
கங்கையான், நீள்கழலான் காப்பு" என்று பாடுவார்.

"மாலும் சிவனும் ஒன்று. மாலை வணங்குவோர் சிவனை வெறுக்க வேண்டாம். சிவனைத் தொழுவோர் அரியைப் பழிக்க வேண்டாம். திருமாலைப் பழிப்பது சிவபிரானைப் பழிப்பதற்கு ஒப்பாகும். சிவனைப் பழித்து அரியை ஏத்தலும் அவ்வாறே என்று மக்களுக்குச் சொல்லிக் கொண்டும், திருமாலிடம் ஆராக் காதல் கொண்டும், அவனுக்குச் சேவை செய்துகொண்டும் நெடுங்காலம் வாழ்ந்து வந்தார் பொய்கையாழ்வார். பரஞான தத்துவத்தைக் கண்டார். இறைவனின் தன்மையையும், ஆத்மாவின் தன்மையையும் வர்ணிப்பதின் மூலம் சமய உணர்வை எழுப்புகிறார். ஒரு முழுப்பொருளான இறைவனை அடைந்து ஒன்றாகக் கலப்பது தான் ஆத்மாவின் தன்மை என்றும், அவனைப் பிரிந்திருப்பதே துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்பதையும் அவர் உணர்த்துகிறார். நாரணன் விளையாட்டினால் அவர் பூதத்தாழ்வாரையும், பேயாழ்வாரையும் ஒரு புதுமையான சூழ்நிலையில் சந்தித்தார்.

2. பூதத்தாழ்வார்


தொண்டை நாட்டில் கடன்மல்லை என்றொரு எழில் நகரம் உண்டு. கடற்கரையின் அருகிலே அமைந்த அந்த நகரை இறைவன் அடியார்கள் பலர் போற்றிப் பாடியிருக்கிறார்கள்.

அந்நகரம் "மாமல்லபுரம்" என்றும் "மகாபலிபுரம்" என்றும் இன்று வழங்கப் பெறுகிறது. அது ஒரு காலத்தில் துறைமுகப் பட்டினமாக விளங்கியது. அப்போது சாவகம், புட்பம், இலங்கை சீனம், யவனம் ஆகிய தூர நாடுகளிலிருந்து அப்பட்டினத்திற்குக் கப்பல்கள் அடிக்கடி வந்து போய்க் கொண்டிருக்கும். அதனால் கடல் வாணிபத்தில் அந்நகரம் சிறந்து விளங்கியது. பலநாட்டுப் பொருட்களும் அந்நகரத்திற்கு விற்பனைக்காக கப்பலின் மூலம்

கொண்டுவரப்பட்டு, கடற்கரையிலே குவித்து வைக்கப் பட்டிருக்கும். அதேபோல் அந்நகரத்துச் சிறப்புப் பொருட்கள் அத்தூரதேசங்களுக்கு விற்பனைக்கு அனுப்புவதற்காகவும் குவித்து வைக்கப்பட்டிருக்கும். தூர தேசங்களிலிருந்து ஏலம்; கிராம்பு, முத்துகள், பலவகையான மணிகள், தந்தப்பொருள்கள், கண்ணாடி கலைப்பொருட்கள், ஆகியவை கப்பலின் மூலமாக வந்து சேரும். வாணிபத்தில் செழித்தோங்கிய அப்பட்டினத்தில் கலைச் சிற்பிகள் நிறையபேர் வாழ்ந்து வந்தனர். அவர்களின் கலைத்திறனை அறிதற்குரிய பல உருவச் சிலைகள் அங்கே இருக்கின்றன.

அரங்கப்பெருமான் சில தலங்களில் நின்றபடி காட்சியளிப்பான் சில தலங்களில் வீற்றிருப்பான்; மற்றும் சில தலங்களில் பள்ளி கொண்டிருப்பான். பரந்தாமன் பள்ளி கொண்டிருக்கும் சிறந்த தலங்களுள் சிறந்து விளங்குவதில் கடல்மல்லையும் ஒன்று. ஆனால் மற்றைய தலங்களில் நெடியோன்மாயன் அரவுப் படுக்கையில் துயில் கொண் டிருப்பான். அத்தலத்திலோ எம்பெருமான் தலத்தில் துயில் கொண்டிருக்கிறான். எனவேதான் அத்தலத்தை சான்றோர்கள் "கடன் மல்லைத் தலசயனம்" என்றும் போற்றிப் புகழ்வார்கள்.

அத்தலம் செய்த அருந்தவப் பயனால் அழகில் மேம்பட்டு விளங்கும் ஒரு குருக்கத்தி மலரிலே (மாதவிப் பூவிலே) சித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாதம் நவமி அவிட்ட நட்சத்திரத்தில் திருமாலின் ஐம்படைகளில் ஒன்றான கௌமோதகி என்னும் கதையின் அம்சமாக பூதத்தாழ்வார் (கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்) அவதரித்தார். திருமாலின் ஈடுயிணையற்ற பக்தராக விளங்கினார். எந்நேரமும் மாலவன் புகழைப் பாடுவதையே அவர் மனம் மிக விரும்பியது. வேறெதிலும் அவர் சிறிதும் நாட்டம் கொள்ளவில்லை. பெருமையான வழிகள் திருமறைக் கருத்துகளெல்லாம் அவருக்குத் தானாகக் கைவரப் பெற்றன. ஆதிகேசவனின் அருளையே தினந்தினம் வேண்டிப்பாடுவார். உலகப் பற்றையும் நீக்கிய உத்தமராக விளங்கிய பூதத்தார் அருந்தமிழ்ப் பாமாலையைத் திருமாலுக்குச் சூட்டி மகிழ்ந்தார். பொய்கையார் கண்ட பரஞான தத்துவத்தோடு பரபக்தி



2. பூதத்தாழ்வார்

தத்துவத்தின் கரையையும் கண்ட பூதத்தார் அதிலேயே திளைத்தார்.

"ஞானத்தை - அறிவைப் பெருக்கும் தமிழை விரும்பிய நான் அறிவாகிய சுடர்விளக்கு ஒன்றைக் கொளுத்தினேன். அந்தச் சுடர் விளக்கை எப்படி ஏற்றினேன் தெரியுமா? அன்பையே அகலாக - எண்ணெய், திரி முதலியவற்றை தாங்கும் கருவியாக அமைத்தேன்; அன்பின் முதிர்ச்சியான ஆசையையே நெய்யாகக் கொண்டேன்; எம்பெருமானை எண்ணி இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெயில் இட்ட திரியாகக் கொண்டேன், இவ்வாறு தகழி, நெய், திரி முதலியவற்றைச் சேர்த்து, நன்றாக மனம் உருகி ஞான ஒளியாகிய விளக்கைத் திருமாலுக்காக ஏற்றினேன்" என்று தன்னுடைய இரண்டாம் திருவந்தாதியில் ஒரு பாடலில் கூறுகிறார். அப்பாடல்,

"அன்பே தகழியா, ஆர்வமே நெய்யாக,
இன்பு உருகு சிந்தை இடுதிரியா - நன்பு உருகி
ஞானச் சுடர் விளக்கு ஏற்றினேன் நாரணற்கு;
ஞானத் தமிழ் புரிந்த நான்"

அடுத்து ஒரு பாமாலையின் மூலம் அவர் "நானே பெருந்தமிழன், தமிழனாயிருப்பதால் நல்லவனும் ஆனேன்; எம்பெருமானே! யானே சிறந்த தவத்தைச் செய்தவன் ஆனேன்! ஏழ் பிறப்பிலும் எப்பொழுதும் நான்தான் எல்லோரையும் விடச்சிறந்த தவத்தை உடையவனாக இருக்கிறேன். சிறந்த - பெரிய தமிழிலே நல்ல பாமாலை உன் இரண்டு பாதங்களிலும் சூடும்படி செய்தேன்" என்றார்.

"யானே தவம் செய்தேன்; ஏழ் பிறப்பும் எப்பொழுதும்
யானே தவம் உடையேன்; எம்பெருமான் - யானே
இரும் தமிழ் நன் மாலை இணையடிக்கே சொன்னேன்;
பெருந்தமிழன் நல்லேன் பெரிது."

இவ்வாறு தன்னுடைய முழு முதற் தெய்வமான திருமாலிடத்தே பற்று மிகுந்து, ஆராக் காதல் கொண்டு, பாடியாடி, அகம் குளிர்ந்து, கண்ணீர் பெருக்கி, அவ்விறைவனின் திருவடிகளுக்கு நாள் தோறும் பாமாலை சாற்றி வந்தார் பூதத்தார்.


திருமாலின் திருப்பெயர்களை எக்காலமும் சொல்லிக் கொண்டே காலம் கழித்து வந்தார். அவரைக் கண்ட மற்றைய சான்றோர்கள் இவர் மனிதரினும் உயர்ந்தவர். கடவுளின் அருளைப் பூரணமாகப் பெற்ற பெரியார், ஆம். தெய்வப் பிறவியினர்" என்றெல்லாம் போற்றிப் புகழ நெடுங்காலம் திருமாலுக்குச் சேவை செய்து வாழ்ந்து வந்தார் பூதத்தாழ்வார்.

3. பேயாழ்வார்

தொண்டை நாட்டில் மற்றும் ஒரு திருத்தலமாக திருமயிலை என்னும் ஊர் ஒன்றிருக்கிறது. அது தற்போது மைலாப்பூர் என வழங்கப்படுகிறது. அது ஆன்றோர் பலரும் பிறந்த தெய்வ பூமி, வான்மறை தந்த தெய்வப் புலவர் திருவள்ளுவரும் அங்கே பிறந்ததாக சான்றோர்கள் கூறுவர். அத்தலம் சைவ வைணவ தலங்களுள்ளும் சிறந்த ஒன்றாகும். அங்கே செல்வர்களும், வணிகப்பெருமக்களும், புலவரேறுகளும் வாழ்ந்து வந்தார்கள்.

அத்தலத்திலே சிறந்து விளங்குவது, ஆதிகேசவப் பெருமாள் கோவில், அங்குள்ள கிணற்றில் அல்லது அருகிலுள்ள திருக்குளத்தில் ஓர் அதிசயமான செவ்வல்லிப் பூ மலர்ந்தது. அந்த மலரிலே சித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாதம் தசமி வியாழக் கிழமையன்று சதயநட்சத்திரத்தில் பேயாழ்வார் தோன்றினார். திருமாலின் பஞ்ச படைகளில் ஒன்றான நாந்தகம் என்னும் வாளின் ,அம்சமாகவே அவர் (கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்) அவதரித்தார். பேயாழ்வார் கல்வியின் பெருமையினை நன்குணர்ந்து பல நூற்களையும் பயின்று தேர்ந்தார்.

திருமாலின் திருவருளால் அனைத்து நூற்களின் பொருள்களும் எளிதில் அவருக்கு விளங்கின. பெரும் புலமையும் அதனால் அவர் கைவரப் பெற்றார். திருமாலிடம் பற்று மிகுந்தார். அவருடைய நெஞ்சம் தன்னையாளும் பாம்பணையில் துயில் கொள்ளும் பெருமானை முப்பொழுதும்



3. பேயாழ்வார்

நினைக்கலாயிற்று. வேறொன்றையும் நாடாதவராக அவன் திருவடிகளையே நாள்தோறும் எண்ணியெண்ணி காலம் கடத்தி வந்தார்.

பேயார் தம் மூன்றாம் திருவந்தாதியில் "அன்று இம் மண்ணுலகத்தை அளந்தவனை, நின்றிருந்து வேளுக்கை நீள் நகர்வாய் கிடந்தவனை கேடற்ற சிறப்புடையவனை, நெஞ்சே! நீ காண்" என்பார்; நெஞ்சே! வானவர் நாளும் நன் மலர்த்தூவிக் காணும்படியானவனை மெய்மைப் பொருளானவனை மிகுந்த பக்தியால் உள்ளம் உருகி செவ்வனே காண விரும்புவாயாக!" என்பார்; "கண்களே நாராயணாவென்று திரு பெயர்கள் பலசொல்லி நம் கைகளால் தொழுது, மண்ணுலகை உண்டு உமிழ்ந்த வண்டுகள் மொய்க்கும் மாலையணிந்த கண்ணனையே என்றும் காண்பீராக" என்பார்; "வாயே, என்றும் இறவாத சீரிய இணையடிக்கே ஆளாகி ஒவ்வொரு நாளும், செம்மை பொருந்திய திருமாலை வாழ்த்துவாயாக" என்பார்; "நாளும் திருமாலின் திருப்புகழையே பாடுக என் நெஞ்சே!" என்பார்;

அரங்கத்தம்மாலின் அருட்புகழைப் பாமாலையாக்கி நாள்தோறும் தொடுப்பார் பேயாழ்வார். அப்பொழுது அவர் நெஞ்சம் நெய்யென உருகி விடும். கண்களில் ஆனந்த வெள்ளம் கரைபுரண்டோடும். பரமனின் திருவடிக்கே பரகதியருளும் தன்மை உண்டு என்று சொல்லிச் சொல்லி மகிழ்ந்து பாடியாடுவார்.

மேலும் அவர் உலகத்திற்கு வேண்டிய உண்மைகளை உரைப்பார், "உங்கள் உள்ளத்திலே ஐயம் கொள்ள வேண்டாம். அது நல்லது, இது கெட்டது. ஆதலால் இதை விட்டு அதைப் பற்றுவோம் என்று எண்ண வேண்டாம். எது நல்லது எது கெட்டது என்ற சந்தேகங்கள் எல்லாம் வேண்டவே வேண்டாம். தேன் சிந்தும் குளிர்ந்த அழகிய துளசிமாலையை அணிந்த மார்பையுடைய திருமால் எல்லோருக்கும் பொதுவாக நின்றவன். அவனுடைய அழகான பாதங்களை வணங்குங்கள். இவ்வாறு திருமாலைத் தொழ நினைத்தீர்களானால் போதும், உடனே உங்கள் வினைகள் எல்லாம் நீங்கள் தொழுது முடிப்பதற்கு முன்பே ஓடிப்போய்விடும். மீண்டும் உங்களை தொடவே மாட்டா. முடிவாக விலகிப் போய்விடும்" என்பார்.

"அதுநன்று, இது தீது என்று ஐயப்படாதே.
மது நன்று தண் துழாய் மார்வன் - பொது நின்ற
பொன்அம் கழலே தொழுமின்! முழு வினைகள்
முன்னம் கழலும் முடிந்து"

என்னும் பாடலால் உணர்த்தினார். அத்துடன் பேயார், "முதலில் பகுத்தறிவு - அதாவது ஆராய்ந்து காணும் அறிவு என்னும் ஒளிநிறைந்த விளக்கை ஏற்றி வைத்தேன். இவ் விளக்கைக்கொண்டு நான் வணங்க வேண்டிய - விரும்பிய ஆசைப்பட்ட தெய்வத்தைத் தேடினேன். திருமால்தான் என் எண்ணங்களை நிறைவேற்றும் இன்ப தெய்வம் என்று அறிந்தேன், அவன் தான் மாசற்றவன். எல்லா அறிவும் ஆற்றலும் நிறைந்தவன் என்று துணிந்தேன்.

ஆதலால் அவனை என் அன்பு வலையில் மாட்டி என் வயமாக்கிக் கொண்டேன். அன்பு வலையில் சிக்கியவர்கள் யாராயிருந்தாலும் சரி கழற்றிக் கொண்டு போக முடியாது. வலை வீசியவன் விருப்பப்படி நடந்துதான் ஆக வேண்டுமல்லவா? அந்த மாயன் திருமால், மாயா ஜாலங்களிலே வல்லவனாயினும் பக்தி வலையிலிருந்து அவனால் தப்பித்துக் கொண்டு போக முடியவில்லை. ஆதலால் அந்த மாயன் மெதுவாக என் உள்ளத்தையே உறைவிடமாகக் கொண்டு விட்டான். அவன் நிற்கும் இடமும் என் உள்ளந்தான் உட்கார்ந்திருக்கும் இடமும் என் உள்ளந்தான். படுத்திருக்கும் இடமும் என் உள்ளந்தான்" என்று.

"உய்த்துணர்வு என்னும் ஒளி கொள் விளக்கு ஏற்றி
வைத்து, அவனை நாடி வலைப்படுத்தேன் -மெத்தனவே
நின்றான் இருந்தான் கிடந்தான் என் நெஞ்சத்துப்
பொன்றாமை மாயன் புகுந்து."

இத் திருப்பாடலைப் பாடி கூறி அகம் களித்தார். இவ்வாறு அவர் திருமகள் நாதன் மீது பேரன்பு பூண்டு, வேறெதிலும் நாட்டமில்லாதவராக தன் வாழ்நாளை செவ்வனே கழித்து வந்தார். திருமாலோடு திருமகளையும் (ஸ்ரீயையும்) இவர் இணைத்துப் பார்த்து போற்றிப் பாடினார். இதன் விளைவாக ஸ்ரீவைணவம் என்று கொள்கை பிறந்து வளர்ந்தது.

"செந்தாமரையிலுள்ள இனிய மதுவை உண்ட வண்டுகள் அதனுள் மயங்கிக் கிடப்பது போன்று. இப்பெரியாரும் திருமாலின் மேல் ஆராக் காதல் கொண்டு வேறெதையும் நினைத்திடார்" என்று அவரைக் கண்ட ஆன்றோர்கள் சிறப்பித்துப் போற்றினார்கள். அதற்கு ஏற்பவே அவரும் பேயனாயொழிந்தே எனம்பிரானுக்கே என்று பாடியருளினார்; பக்திப்பரவசத்தில் அதுவே ஒரு வெறிபோல் தோன்றும்படி அவர் அழுவார்; தொழுவார். ஆடிக் காண்பார். பாடி அரற்றுவார். இறை பக்தியில் தன்னை முழுதும் மறந்து போனதால் அவர் பேயர் போலும் பித்தர் போலும் திரிந்தார். இதனால் பேயாழ்வார் எனப் பெயர் பெற்றார்.

முதல் மூன்று ஆழ்வார்கள்

முதலாழ்வார்கள் என்று கூறும் அருஞ்சிறப்புடைய பொய்கையாழ்வார். பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகிய மூவரும் உலகப்பற்றை அறவே நீத்து முக்குணங்களில் சத்துவ குணம் ஒன்றிலே ஒன்றி நின்று திருமாலின் அருங்கழலுக்கே தொண்டு செய்து வாழ்ந்து வந்தார்கள். எங்கும் நிறைந்துள்ள மறைபொருளான அப்பரந்தாமனின் திருவடியைப் போற்றுதலே அருஞ்செல்வமாகக் கருதியதால் அவர்கள், உண்டிக்கும் உடைக்கும் போட்டிப் போட்டுக் கொண்டு தீய வழியில் செல்லும் மக்களைக் காணப்பிடிக்காமல் ஊர் ஊராகச் சென்று இறைவனைத் தேடித் திருக்கோயில்களில் அவ்விறைவனைத் தரிசித்து வந்தார்கள்.

இவ்வாறு அவர்கள் ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியாக மாலவனைச் சேவித்து வரும்போது அவன், "இவர்கள் மூலமாக ஞானமும் பக்தியும் ஊட்டவல்ல அரிய சிறந்த நூல்களை இயற்றுவித்து அவற்றால் உலகமக்களுக்கு அறியாமை எனும் இருளை அகற்றி நல்லுணர்வும், நம்பிக்கையின் ஒளியும் ஏற்படச் செய்ய வேண்டும்" என்று திருவுளங் கொண்டான். உடனே அம்மூவருடைய மனத்திலேயே திருக்கோவிலூருக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தான்.

இறைவனின் திருவிளையாட்டையறியாத அத்திருமால் செல்வர்கள், தனித்தனியாக திருக்கோவிலூரைச் சென்றடைந் தார்கள். பிறகு அத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் உலகளந்த பெருமாளான திரி விக்கிரமப் பெருமாளைச் சேவிக்கும் பொருட்டு திருக்கோவிலுள் சென்றார்கள்; அகமும் மெய்யும் ஒருங்கே குளிர, கண்கள் பனிப்ப அவ்வடிவழகான பெருமாளைச் சேவித்து மகிழ்ந்தார்கள். பகற்பொழுது போயிற்று. மாலைப்பொழுது மனங்களிக்கும் அழகுடன் தென் பொதிகைத் தென்றலையும், ஊரைச்சுற்றியுள்ள சோலையில் பூத்துக் குலுங்கும் மலர்களின் வாசத்தையும் ஏந்தி கன்னிப்பெண் போல் மென்னகை புரிய நடந்து வந்தது. அவளைக் கண்டு காதலன் ஆனந்தக் கண்ணீர் சொரிவது போல வானத்து மேகம் மழை பொழியலாயிற்று.

மூவருள் பொய்கையார் முதலில் ஒரு வைணவருடைய திருமாளிகைக்குச் சென்று அம்மாளிகையின் இடைக்கழியிற் படுத்து உறங்க முயன்றார். அப்போழுது அவர் படுத்துக் கொண்டிருக்கும் அதே திருமாளிகைக்கு பூதத்தாழ்வாரும் வந்து, "சுவாமி அடியவனுக்கும் சிறிது இடம் கிடைக்குமா?" என்று கேட்டு நின்றார்.

உடனே பொய்கையாழ்வார் எழுந்து உட்கார்ந்து கொண்டு, "சுவாமி! நல்லது. ஆனால், இவ்விடத்தில் ஒருவரே படுக்க முடியும். அல்லது இருவரே இருக்க முடியும். வந்தருளுக: நாம் இருவரும் இங்கே இருப்போம்!" என்றார்.

பூதத்தார் அவ்வாறே சென்று அவ்விடத்திலே அவருடன் உட்கார்ந்திருந்தார். அப்போது பேயாழ்வாரும் அங்கே வந்தார்; பூதத்தார் போன்றே அவரும், "சுவாமிகளே! அடியவனுக்குச் சிறிது இடம் கிடைக்குமோ?" என்று கேட்டார்.

பொய்கையார், ''நல்லது, சுவாமி! இங்கு ஒருவர் படுத்துறங்கலாம். இருவர் இருக்கலாம். மூவராயின் நிற்றல் வேண்டும், அதுவும் நல்லதே. வந்தருளுங்கள்; மூவரும் நிற்போம்!" என்று கூறி எழுந்து நின்றார். பூதத்தாரும் எழுந்து நின்றார்.

பிறகு பேயார் சென்று அவர்களோடு ஒருவராக நின்று கொண்டார். சிறிது நேரத்திற்குள் அவர்கள் ஒருவரையொருவர் வினவி தங்களைப்பற்றி மூவரும் அறிந்து கொண்டார்கள். பாலுடன் தேன் கலந்தது போல மூவரும் கலந்து திருமாலின் பெருமைகளைப் பற்றியும் தெய்வத் தரிசனம் சம்பந்தமாகத் தங்கள் ஆத்ம அனுபவங்களைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது திருக்கோவிலூரில் கோயில் கொண்டிருக்கும் உலகளந்த பெருமாள் கரிய இருளையும், பெருமழையையும் உண்டாக்கி, அவர்கள் அறியாவண்ணம் அக்குறுகலான இடத்தில் அம்மூவர்களுக்கிடையே தானும் புகுந்து அவர்களை மிகவும் நெருக்கிகொண்டு நின்றார். அம்மூவரும் திடீரென்று முன்னைக் காட்டிலும் அதிக நெருக்கம் இருப்பதையறிந்து வியப்புற்று, "இது என்ன மாயமாக இருக்கிறது? முன்னைக்காட்டிலும் இப்பொழுது அதிக நெருக்கடி இருப்பதுபோல் தோன்றுகிறதே, இது எப்படி ஏற்பட்டது? நம்மைத்தவிர வேறு யாரேனும் இவ்விடைக் கழியிலே வந்து நிற்கிறார்களோ?" என்று தங்களுக்குள் சிந்தித்து இடநெருக்கம் உண்டானதற்கான காரணத்தை அறிய முயன்றார்கள்.

பொய்கையாரும் பூதத்தாரும் ஞானச்சுடர் விளக்கினை ஏற்றி, மனம் என்னும் உட்கண்ணால் பார்த்தார்கள். பார்த்தளவிலே எங்கும் நிறைந்த பொற்சுடராக உள்ள எம்பெருமானின் கார்குழல் பின்னே தாழ, ஒளி பொருந்திய நவமணிகளையும் ஏந்திய அழகான முடி சிரத்தில் விளங்க, இருளை அகற்றும் முழுநிலவைப்போல் முகம் எழிலுடன் காட்சி தர, செங்கமலம் போன்று ஒளி வீசி அன்பர்களின் உள்ளத்தே அருள் பொங்கச் செய்யும் கண்கள் குளிர்ச்சியுடன் நோக்க, பவளம்போல் மின்னும் கொவ்வைச் செவ்வாய் அருட்புன்னகை புரிய, மடல்போல் நீண்ட காதுகளில் குண்டலங்கள் ஆட, வெண்சங்குபோல திகழும் கழுத்திலே கௌத்துவமணி புரள ஆதவனைக் காட்டிலும் பன்மடங்கு ஒளிமிக்க ஆழியை வலத்திருக்கையிலே ஏந்தி நிற்க, திங்களினும் ஒளிபொருந்திய வெண்ணிறச் சங்கு இடக்கையிலே இனிது பொருந்தியிருக்க, எல்லா உலகையும் அருளாலும் அன்பாலும் காக்கும் தாயான திருமகள் திருமார்பிலே குடிகொண்டிருக்க, பச்சை மாமலை போன்ற திருமேனியில்

பொன்னாடை பொலிவுடன் விளங்க, தம்மிடம் பேரன்பு கொண்டு தம் புகழ்பாடும் அடியவர்களின் மனங்களிலே பதித்த பொற்றிருவடிகள் தாமரையென சிவந்து காண, உலகத்து உயிர்களுக்கெல்லாம் ஒரு முதல் தந்தையாகிய அந்த நெடிய திருமால், பொன்மலை போல் கருடன்மீது அமர்ந்து வந்து, அவர்களுக்குத் தன்னுடைய அருட்காட்சியைக் காட்டியருளினார். அவ்விறைவனின் அருங்கருணையினால் அக்காட்சியைக் கண்ட அவ்வடியார்களின் மகிழ்ச்சியை இங்கு விவரிக்க முடியுமோ?

நாராயணனின் அருட்காட்சியைக் கண்டு அவர்கள் தங்களை மறந்து விட்டார்கள். "திருக்கண்டேன்! பொன்மேனி கண்டேன்" என்று தொடங்கும் பாமாலையில் பாடி பேயார் பரவசமடைந்தார்.

"வையம் தகளியா வார்கடலே நெய்யாக;
வெய்ய கதிரோன் விளக்காகச்; செய்ய
சுடராழியான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடராழி நீங்குகவே என்று."

என்று ஆரம்பித்து நூறு பாட்டுக்களைக் கொண்ட ஓர் அந்தாதியை பொய்கையார் பாடிப் பரவினார். அடுத்து பூதத்தார்.

"அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,
இன்பஉருகு சிந்தை இடுதிரியா - நன்பு உருகி
ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன், நாரணற்கு
ஞானத் தமிழ் புரிந்த நான்."

என்று தொடங்கி நூறு பாட்டுக்களைக் கொண்ட ஓர் அந்தாதியைப் பாடினார்.

அடுத்து பேயாழ்வார்,

"திருக்கண்டேன், பொன்மேனி கண்டேன், திகழும்
அருக்கண் அணி நிறமும் கண்டேன் - செருக்கிளரும்
பொன் அழி கண்டேன்; புரிசங்கம் கைக் கண்டேன்,
என்ஆழி வண்ணன்பால் இன்று!"

என்று தொடங்கி நூறு பாட்டுக்களைக் கொண்ட ஓர் அந்தாதியை பாடினார். அம்மூவருள் முதலில் பொய்கையார்

பாடியருளியதால் அந்த அந்தாதியை முதற்றிருவந்தாதி எனவும், இரண்டாவதாக பூதத்தார் பாடியதால், அவர் பாடியருளிய அந்தாதியை இரண்டாந்திருவந்தாதி எனவும் கடைசியாக பேயார் பாடிய அந்தாதியை மூன்றாந்திருவந்தாதி எனவும் கூறிப்போற்றி வருகிறார்கள்.

இவ்வாறு இறைவன் திருவிளையாடல் புரிந்து மூன்று அருந்தமிழ் அந்தாதிகளை இவ்வுலக மக்களுக்காக தம்மடியார்கள் மூலம் வெளிப்படுத்தினார்.

4. திருமழிசையாழ்வார்

தமிழகத்தின் ஒரு பகுதி தொண்டை நாடாகும். அது சான்றோர் பலர் தோன்றிய தெய்வத்திருநாடு. அந்நாட்டின் கடலுக்கு மேற்கில் திருக்கச்சிப் பதிக்குக் கிழக்கில் திருமழிசை என்னும் தலம் ஒன்று தனிச்சிறப்புடன் திகழ்கிறது. அது மறையவர்கள் வாழும் சிறந்த பதியாகத் திகழ்ந்தது. அதன் சிறப்பை பிரமதேவர்பால், கேட்டறிந்த பார்க்கவர் முதலிய சில முனிவர்கள் அப்பதியின் கண்வந்து தவம் புரிவாராயினர். பார்க்கவமுனிவர் திருமாலை நோக்கி தீர்க்கசத்திரயாகம் புரிந்தார். அப்போது அவர் மனைவியார் கருவுற்று தைத் திங்களில் மகம் நாளில் (கி.பி. ஏழாம் நூற்றாண்டின் இடைப் பகுதியில்) ஒரு பிள்ளையைப் பெற்றார். கைகால்கள் இல்லாது அப்பிள்ளை பிறந்தது. அதனைக் கண்ட முனிவரும், அவரது மனைவியாரும் மிகுந்த வருத்தமுற்று, அப்பிள்ளையைப் பிரம்பு புதர் ஒன்றின் கீழ் விட்டு விட்டுச் சென்றுவிட்டனர். அக்குழந்தை புதரிலே கிடந்தழுதது.

பிறகு, திருமகள் நாதன் தன் தேவியுடன் அங்கே தோன்றி அப்பிள்ளைக்கு முழு உருவம் கொடுத்தருளி மறைந்தான். பிரம்பு தொழில் புரியும் திருவாளன் என்பவன் பிரம்பு அறுத்துப் போவதற்காக அங்கே வந்தான். தன்னந்தனியாக அழகான ஒரு குழந்தை பிரம்புப் புதரில்

கிடந்து அழுவதைக் கண்டதும் அவன் பரிவோடு தூக்கி எடுத்தான். அதன் பெற்றோர்கள் பக்கத்தில் எங்காவது இருக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் தேடிப் பார்த்தான். அவர்கள் கிடைக்காததால் தனக்குப் பிள்ளையில்லாத குறையைத் தீர்ப்பதற்காகவே இறைவன் இக் குழந்தையைக் கொடுத்தருளியிருக்கிறான்! என்று எண்ணமிட்டுப் பெரு மகிழ்ச்சியோடு அதை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். தன் மனைவியான பங்கயச் செல்வியிடம் குழந்தையைக் கொடுத்து அது கிடைத்த விபரத்தையும் கூறினான்.

அவள், "நம்முடைய குறை இன்றே தீர்ந்தது. இக்குழந்தை தான் எத்தனை அழகுடன் இருக்கிறது. இனி நாம் பிறந்ததின் பயனை அடைந்தவர்களானோம்!" என்று குழந்தையைப் பார்த்துமகிழ்ச்சியுடன் சொல்லி அளவு கடந்த அன்பின் பெருக்கோடு அதற்கு முத்தங்கள் கொடுத்துக் கொஞ்சினாள். குழந்தை கிடைத்த மகிழ்ச்சியில் அவளே அக்குழந்தையைப் பெற்றதுபோல் அவள் மார்பில் தாய்ப்பால் 'சுரந்தது. ஆனால் அப்பாலைக் குழந்தை குடிக்கவில்லை. பங்கயச் செல்வித்தாய் உள்ளத்தின் தவிப்போடு தன் பாலை புகட்ட முயன்றும் குழந்தை அப்பாலை குடிக்க மறுத்தது. அந்த அறியா பருவத்திலே உணவின் மீதுள்ள பற்றைத் துறந்துவிட்டது. பங்கயச் செல்விக்கோ என்ன செய்வதென்றே புரியவில்லை. குழந்தையோ வெகுநாள் வரையிலும் பாலுண்ணாமலும் நீர் முதலியன கழிக்காமலும் அப்படியே பதுமை போல் இருந்து வந்தது. அதைக் கண்டு திருவாளனும் அவன் மனைவியும் மிகவும் மனம் வருந்தினார்கள். ஆனால் குழந்தை பால் உண்ணவில்லையே தவிர அதன் மேனி சிறிதும் வாட்டமுறவில்லை! பரிபூரண அங்க அவயவ வளர்ச்சியோடு அது மேன்மேலும் பொலிவு பெற்றே திகழ்ந்தது. அதைக் கண்டு அவ்விருவரும் பெருவியப்பு அடைந்தார்கள். இச்செய்தி ஊர் மக்களுக்கும் பரவியது. அவர்கள் ஒவ்வொருவரும் வந்து அக்குழந்தையைப் பார்த்து விட்டு, "இது ஓர் அதிசயமான தெய்வக் குழந்தை" என்று போற்றிப் புகழ்ந்துவிட்டு போனார்கள் திருமழிசை இறைவன் அருளால் தோன்றிய அக்குழந்தையைத் திருமழிசைப்பிரான் என்ற பெயராலேயே கூப்பிட்டுக் கொண்டாடினார்கள்.



4. திருமழிசையாழ்வார்

அச்சமயம் திருமழிசையில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் மிகவும் கிழவர், நான்காவது சாதியில் பிறந்தவர். ஆனால் எல்லாம் அறிந்த ஞானி.

அவர் திருமகள் நாதன்மீது நீங்காத பக்தி செலுத்தி வந்தார். அவருக்குப் பிள்ளையில்லை. அக்குறையை நாளும் எண்ணி அவர் வருந்திக் கொண்டிருக்கையில் பால் உண்ணாத அதிசயக் குழந்தையைப் பற்றிய செய்தியை அவர் கேள்விப் பட்டார். உடனே நற்பசுவின் பாலை இனிய சுவை கொள்ளும் படியாகக் காய்ச்சி ஒரு கிண்ணத்தில் எடுத்துக் கொண்டு தன் மனைவியோடு அக்குழந்தையிடம் வந்தார். குழந்தையை நோக்கி, "மழலை வாய்க் குழந்தை வடிவில் தோன்றியிருக்கும் திருவருட் செல்வமே! இப்பாலைக் குடித்து என்குறையை போக்கியருள வேண்டும்!" என்று விண்ணப்பித்து அதற்குத்தாம் கொண்டு வந்திருந்த பாலைப் புகட்டினார். குழந்தையும், புன்சிரிப்புப் பூத்து அந்தப்பாலை விரும்பிக் குடித்தது.

பங்கயச் செல்வி மேலும் வியப்புற்றாள். தன் மார்பிலே சுரந்த பாலைக் குடிக்காமல் இம் முதியவர் கொண்டு வந்த பாலை தன் குழந்தை குடித்ததே. ஆதலின் இம் முதியவன் ஒரு பெரும் அருட் செல்வராக இருக்க வேண்டும் என்று எண்ணினாள். தன் கணவரிடம் அதைக் கூறி, "தினந்தோறும் அப்பெரியவரே நம் குழந்தைக்குப் பால் கொண்டு வந்து ஊட்டும்படி கூறுங்கள்" என்றாள்.

அவ்வாறே திருவாளனும் அக்கிழவரை நோக்கி, "பெரியவரே நீங்களே நாள்தோறும் எங்கள் குழந்தைக்கு பால் கொண்டுவந்து கொடுத்து எங்கள் மனவருத்தத்தைப் போக்கி வர வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான். கிழவரும் அதற்கிணங்கி அன்று முதல் நாள்தோறும் தன் வயதான மனைவியோடு குழந்தைக்குக் காய்ச்சியபால் கொண்டு வந்து கொடுத்தார். குழந்தையும் அதைப் புன்சிரிப்போடு பருகி மகிழ்ந்தது. இப்படியிருக்கையில் ஒருநாள் அம்முதியவர் கொண்டு வந்த பாலில் ஒரு பகுதியை மட்டும் குழந்தை பருகிவிட்டு சிறிது மிச்சம் வைத்தது. அவ்வாறே எஞ்சியபாலை அம்முதியவரும் அவருடைய மனைவியும் அருந்தினால்

அவர்களுடைய பிள்ளையில்லாக் குறை தீரும் என்றும் தன் கடைக்கண் குறிப்பினால் அப் பெரியவருக்கு உணர்த்தியது. அவரும் அதுபோலவே தம் மனைவியோடு சேர்ந்து மிச்சப் பாலை அருந்தினார்,

அதனால் வயது முதிர்ந்த அத்தம்பதிகள் இருவருக்கும் மீண்டும் புத்திளமை மறுமலர்ச்சியடைந்தது போல் உடலெங்கும் இளமையுணர்வுகளும் உற்சாகக் குறுகுறுப்பும் பரவின. உடல் ஆற்றலும் அதிகரித்தது. அதன் விளைவாக தம்பதிகள் கூடி மகிழ்ந்ததும் மனைவி கர்ப்பம் தரித்தாள். நல்லதொரு நாளில் அழகான ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள்., பெற்றோர் அக்குழந்தைக்குச் செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் முடித்து பன்னிரண்டாம் நாளன்று அக் குழந்தைக்கு கணிக்கண்ணன் என்று பெயரிட்டார்கள். தங்கள் மைந்தனுக்கு கற்க வேண்டிய அனைத்து நூற்களையும் பிழையற கற்பித்தார்கள். அக்குழந்தை கணிக்கண்ணன் திருமழிசைப் பிரானுக்குத் தோழனாகி பிற்காலத்தில் அவருக்குச் சீடனாக விளங்கினார்.

திருமழிசைப்பிரானோ ஒருத்தி மகனாகப் பிறந்து ஓரிரவிலே இன்னொருத்தி மகனாக வளர்ந்த கண்ண பெருமானைப் போலவே பார்க்கவ முனிவரின் பத்தினிக்கு மகனாகப் பிறந்து வேடர் குலத்துப் பங்கையச் செல்விக்கு வளர்ப்பு மகனாக விளங்கினார். அவர் முனி குமாரராகையால் ஏழாம் வயதானவுடனேயே ஐம்புலன்களை அடக்கி கண்ணிமை மூடி அஷ்டாங்க யோகம் செய்ய வேண்டும் என்று விரும்பினார். அதற்கு இந்த ஜகத்திற்கெல்லாம் மூலகாரணமான பரம் பொருள் யார் என்பதைத் தெளிவாக அறிந்து கொண்ட பிறகே அத்தகைய பரம்பொருளைத் தியானித்து யோக நிஷ்டையில் அமர வேண்டும். எனவே அதற்குரிய வழியை ஆராய்வதற்காக எல்லா சமய நூல்களையும் மதங்களின் தத்துவ நுட்பங்களையும் கற்றுத் தெளிவு பெற எண்ணினார். முறையே சாக்கியம் (பௌத்தம்) சமணம் (ஜைனம்) என்னும் மதங்களில் உள்ள நூல்களைக் கற்றுணர்ந்து பின் அவற்றை விட்டு சைவ சமயத்தில் புகுந்து அச்சமய நூல்களையெல்லாம் ஆராய்ந்து. "ஜகத்திற்கெல்லாம்

மூலகாரணமான முழுமுதற்பொருள் சிவபெருமானே!'' என்று தீர்மானித்து சைவ சமயதத்துவங்களுக்கு ஓர் ஆதாரபுருஷராகவும் மகானாகவும் விளங்கினார். ஞான ஒளியும் தெய்வீக அருளும் பெற்று அவர் யோகங்கள் பலவும் புரிந்து சித்தராகவும் மாறினார். திருமழிசையார் சிவநேசச் செல்வராகி சிவபெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தலங்கள் பலவற்றிற்கும் சென்று விரிசடையில் பிறை சூடிய பெம்மானான முக்கண்ணனைச் சேவித்துவிட்டு, திருமயிலைக்கு வந்தார். அங்கே அவர் மௌன விரதத்தை கைக்கொண்டு யாரோடும் பேசுவதையே துறந்திருந்தார்.

அப்போது அவ்வூரிலே வைணவரான பேயாழ்வார் ஒரு பூஞ்சோலையில் தங்கியிருந்தார். திருமழிசையாரைப் பற்றி. "அவர் ஒரு மகாயோகி சித்தர்: தத்துவ மேதை! ஆனால் சைவர்!" என்று பேயாழ்வார் முன்னரே கேள்விப் பட்டிருந்தார். எனவே திருமழிசையாருக்கு உண்மையான பரம்பொருள் யார் என்பதை உணர்த்தி அந்தப் பரம்பொருளோடு இரண்டறக் கலக்கும் ஆத்மானுபாவத்தைப் போதித்து அவரை சைவ மதத்திலிருந்து வைணவத்திற்குத் திருப்ப வேண்டும் என்று பேயாழ்வார் எண்ணங் கொண்டார். எனவே அவர் திருமழிசையாரை நாடிச் சென்று சமய வாதம் செய்ய அழைத்தார். ஆனால், திருமழிசையார் மௌன விரதத்தைக் கைக் கொண்டிருந்ததால் அதற்கு இசையவில்லை. எனவே பேயாழ்வார் ஒரு யுக்தியைக் கைக்கொண்டார். திருமழிசையாரின் கண்களில் படும்படி பேயாழ்வார் ஓரிடத்தில் செடிகளை எடுத்துவந்து அவற்றின் வேர்கள் வானத்தை நோக்கியபடியும் இலைகள் பூமியில் பதியும் படியும் செடிகளைத் தலைகீழாக நட்டு வைத்து அறுத்து முடியப்பட்ட கயிற்றில் பல பொத்தல்கள் உள்ள ஓட்டைக் குடத்தைக் கட்டி நீர் எடுத்து அச்செடிகளுக்கு ஊற்ற முயன்றார்.

அவருடைய இந்த விசித்திரச் செய்கையைப் பார்த்ததும் திருமழிசையார் எள்ளி நகையாடினார் உடனே பேயாழ்வார் "யோகியாரே! ஏன் சிரிக்கிறீர்?" என்று கேட்டார். "நீர் செய்யும் பித்துக் கொண்ட செயலைக் கண்டால் யாவருமே சிரிக்கத்தான் செய்வார்கள்" என்றார் திருமழிசையார். "யாமோ பித்து கொண்ட செயலைச் செய்கிறோம்? பித்தனை வழிபட்டு வெறும் சித்துக்களாலும் யோக வித்தைகளினாலுமே பரம்பொருளை

அடைந்துவிட முயலும் நீர் தான் பித்துப் பிடித்தவர் செயல் புரிகிறீர், நான் செடி நடுவதைக் கண்டு பேதமையால் ஏளனம் செய்து சிரித்தீரே தவிர, அதன் உட்பொருளை உம்மால் உணரவும் முடியவில்லை. நீரோ மறுமையில் முக்தியெனும் பேரின்பத்தை அடைவதற்குரிய வழியை உலக மக்களுக்கு எடுத்துக்காட்டப் போகிறீர்?" என்று பேயாழ்வார் கேட்டார்.

திருமழிசையார் சற்றுத் திகைப்புற்று ஒன்றும் புரியாமல் நின்றார், பிறகு அவர், "மாயவனை வழிபடுபவரே, உம் செயலின் உட்பொருள் என்ன?" என்று கேட்டார்.

"சிவயோகியாரே! நாம் செய்த செயல் உம்முடைய மன நிலையைக் குறிப்பதாகும். அது எவ்வாறு என்று விளக்குகிறேன். உம்முடைய மனம் சிறிது காலம் ஒரு மதத்தைச் சார்ந்திருந்து, அதைவிட்டு மற்றொரு மதத்தைப் பற்றிக் கொள்ளுவதையே இந்த அறுந்து முடிபோட்ட கயிறு குறிக்கிறது. இந்த ஓட்டைக் குடத்தில் முகக்கும் தண்ணீரெல்லாம் அதில் ஒழுகி ஓடிவிடுமல்லவா? அது போலவே உம்முடைய மனத்தில் எவ்வித மதக்கொள்கையும் தத்துவ ஞானங்களும் நிலை கொள்ளாமல் பலவாறாக நீங்கி ஓடி விடுகின்றன. ஓட்டைக் குடத்தில் நிரப்ப முயலும் தண்ணீர் போல! செடிகளைத் தலைகீழாக நட்டது உலகத்திற்கு முதற்பொருளின் ஆதி அந்தம் தெரிந்து கொள்ளாமலே உண்மையான பரம் பொருளை அறிந்து விட்டதாக நினைத்து மயங்கித் தலைகீழாகச் செல்லும் உம்முடைய ஞான நிலையையே குறிப்பதாகும்'' என்றார் பேயாழ்வார்.

பிறகு அனைத்திற்கும் மூலகாரணமும் பரம்பொருளுமான முழுமுதற் கடவுளின் தத்துவம் பற்றி இருவருக்குமிடையே பலவித வாக்குவாதங்கள் நிகழ்ந்தன. "மாலவனுக்கு அடியாரே! காணுதற்கரிய அந்தப் பரம்பொருளை நீர் கண்டீரோ?" என்று திருமழிசையார் கேட்டார்.

"கண்டேன்! என்னுள்ளேயும் அவனைக் கண்டேன். எனக்கு வெளியிலும் அவனைக் கண்டேன். நான்மறையிலுள்ளும் அவனைக் கண்டேன்! அன்றலரும் மலரினுள்ளும் அவனைக் கண்டேன், வீசும் காற்றிலும் அவனைக் கண்டேன். மண்ணிலும்

அவனைக் கண்டேன். விண்ணிலும் அவனைக் கண்டேன். நாமங்கள் பல சொல்லி எல்லாம் நாரணனாகி நிற்பதைக் கண்டேன்" என்றார் பேயாழ்வார்.

"அவன் எல்லாமாகி எங்குமாகி நின்றாலும் அவன் உருவத்தைக் காண முடியுமோ?" என்று திருமழிசையார் கேட்டார்.

"அவன் ஒரு உருவமற்றவன் என்றாலும் அவன் உருவமெடுப்பதையும் நான் கண்டேன். நாராயணனாகி நிற்கும் அவன் திருமேனி கண்டேன். திகழும் அவன் நிறங் கண்டேன். அவன் பொன்னாழியும் அவன் கையில் வலம்புரிச்சங்கும் கண்டேன்; அந்த மணிவண்ணன் குழல் ஊதி மாடு மேய்ப்பதையும் கண்டேன்! வாமனனாகி மாவலியிடம் மூவடி நிலம் தானம் கேட்பதையும் கண்டேன். பின் நெடுமாலாகி மூவுலகையும் ஈரடியால் அளந்து மாவலியின் முடிமீது திருவடி வைப்பதையும் கண்டேன். இவ்வாறு என்னுள்ளே உய்த்துணர்தல் எனும் ஒளிவிளக்கேற்றி வைத்தவனை நான் நாடி நாடி என் மனத்தினுள்ளே வலைப்படுத்தினேன். அந்தமாயன் என் நெஞ்சத் தாமரையினுள் புகுந்து மெத்தெனவே நின்றான். இருந்தான். கிடந்தான். எங்கள் பெருமான் அடி சேர்ந்து வாழும் வகையையும் நான் அறிந்தேன்" என்று பேயாழ்வார் தம் இறைவனின் நினைவால் நெஞ்சமெல்லாம் உருகி உருகிக் கூறினார். திருமழிசையாருக்கு மெய் சிலிர்த்தது. அனைத்துல கிற்கும் ஆதிமூல பரம் பொருள் நாராயணனே என்று உணர்ந்தார்.

"யோகியாரே! கடல் அலைகள் எல்லாம் கடலிலே பிறந்து கடலிலிருந்தே பொங்கிப் பொங்கி எழுந்து, கடைசியில் கடலி னுள்ளேயே அடங்கி விடுவது போலவே உலகத்தில் தோன்றிய அனைத்தும் இறைவனாலேயே தோன்றி இறைவனுக்குள்ளேயே அடங்கிவிடுகின்றன. இதை உலகத்திற்கு எடுத்துக் காட்டவே எம்பெருமானாகிய திருமகள் நாதன் உலகத்தை உண்டு உமிழ்ந்தான்" என்றார் பேயாழ்வார்.

"அவர் ஆத்மானுபவமாகக் கண்ட பரம்பொருளைத் தாமும் காண்பதற்கு வழிகாட்ட வேண்டும்" என்று திருமழிசையார் கேட்டார்.

''பரஞான பரபக்தியோடு பரமபக்தியின் மூலம் பரம்பொருளின் அருள் பெற்றால்தான் அந்தப் பரம் பொருளைக் காணமுடியும்" என்றார் பேயாழ்வார். உடனே திருமழிசையார் பேயாரை நோக்கி "என் மன இருளை இன்றே போக்கி ஞானத்தை ஊட்டியருளினீர். நீரே எனக்குக் குருவும் ஆனீர். இனி நான் திருமகள் நாதன் திருவடித்தாமரை ஒன்றினையே உய்யும் பொருட்டு பற்றுக்கோடாகக் கொள்வேன். அதற்குரிய தன்மையை எனக்கு நீர் கூறியருள வேண்டும்" என்று வேண்டினார்.

பேயாரும் அதற்கு இணங்க அவருக்கு திருமந்திரத்தை முறைப்படி உபதேசித்தருளினார். பிறகு திருமழிசையார் பேயாரை வணங்கி அத்திருமந்திரத்தைத் தன் இதயத் தாமரையில் வைத்து யோகத்தில் ஆழ்ந்தார். திருமகள் நாதனான நாராயணர் தம் தேவியோடும் பரிவாரத்தினரோடும் சங்குச் சக்கரதாரியாக கருடன் மீது தோன்றி திருமழிசையாருக்குக் காட்சியளித்தார். திருமழிசையார் அக்காட்சியைக் கண்டு அகம் மகிழ்ந்து கைகூப்பி வணங்கி நெஞ்சமெல்லாம் அன்பால் கசிந்து உருகி பாடியாடிப் பரவினார்; திருமால் அவருக்கு மதி நலம் தந்து மறைந்தார்; தம்மிடம் பரம்பொருளான பரந்தாமன் வந்து காட்சி தந்த கருணைத் திறத்தை எண்ணியெண்ணி மகிழ்ந்தார் திருமழிசையார்.

"சாக்கியம் கற்றோம் சமணம் கற்றோம் அச்சங்கரனார்
ஆக்கிய ஆகமநூல் ஆராய்ந்தோம் - பாக்கியத்தால்
செங்கட்கரியானைச் சேர்ந்துயாம் தீதிவோம்
எங்கட்கு அரிய தொன்று மில!"

என்னும் வெண்பாவையும் திருமழிசையார் பாடினார்.

பிறகு திருமழிசையார் வைணவ சமயத்தில் சேர்ந்து பகவான் நாராயணன் மீது பல இன்னிசைப் பாக்களைத் தமிழில் புனையலானார். அவர் திருவல்லிக்கேணியை அடைந்து திருமகள் நாதனை எண்ணியவராய் யோகத்தில் ஆழ்ந்திருந்தார்; அவரது பரமபக்தியைச் சோதிப்பது போல் உமையொரு பாங்கரான சிவபெருமான் தம் தேவியரோடு ருத்திரவடிவம் பூண்டு

இடபவாகனத்தில் சென்று கொண்டிருந்தார். உமாதேவி திருமழிசையாழ்வாரைக் கண்டதும் "யோகத்தில் அமர்ந்திருக்கும் அவருக்கு காட்சியளித்து அருள்புரிந்து செல்வோம்" என்று கயிலைநாதரிடம் கூறினாள்.

"தேவி! அவர் திருமகள் நாதன்மீது பரமபக்தி பூண்டவர்; அவர் பாகவத அனுபவம் ஒன்றிலே லயித்திருப்பவர்; அதைத்தவிர அவர் வேறொன்றையும் விரும்ப மாட்டார்! நம்மைக் கவனிக்கவும் மாட்டார்" என்றார் சிவபெருமான்.

"ஆயினும் அவரைக் கண்டு செல்வதே தங்கள் திருவருளுக்கு ஏற்றதாகும்" என்று தன் நாதனை வற்புறுத்த சரி என்று சிவபெருமான் ஒப்புக்கொண்டு திருமழிசையாரின் முன் தம் தேவியோடு காட்சியளித்தார்.

திருமழிசையாரோ உமாநாதரை கண்ணெடுத்தும் பாராதிருந்தார்; புலித்தோலை அரையில் புனைந்திருக்கும் பெருமான் அதைக் கண்டும் காணாதவராக வலிய அவர் அருகில் சென்று "யோகியே! உமக்கு அருள் புரியவே நாம் இங்கு வந்தோம்; எம்மை அலட்சியம் செய்யலாமோ?" என்றார்; "உம்மால் எனக்கு ஆக வேண்டிய பயன் என்ன உண்டு? அதனால் தான் நாம் மௌனமாக இருந்தோம்!"; என்றார் திருமழிசையார்; "ஏதாவது வரம் கேள்! தருகிறேன்!" என்றார் சிவபெருமான், "எனக்கு ஒன்றும் வேண்டாம்" என்றார் திருமழிசை ஆழ்வார்.

ஆயினும் ஊழி முதல்வர்; "நம்முடைய வருகை வீணாகாமல் ஏதாவது ஒரு வரத்தைக் கேள்!" என்று மீண்டும் சிவபெருமான் புன்சிரிப்போடு கூறினார்.

திருமழிசையாழ்வாரும் புன்சிரிப்பு பூத்து, "எனக்கு பரமபதம் உம்மால் தர முடிந்தால் அதையே வரமாகத் தந்தருளும்!" என்று கேட்டார்.

"பரமபதம் தரக்கூடியவன் பரந்தாமனான வைகுந்த நாதனே! நானல்ல! ஆகையால் என்னால் தரக்கூடிய வேறு வரத்தைக் கேள்!" என்றார் பரமசிவன் புன்சிரிப்போடு.

"பரமபதம் பெற பல தவங்கள் புரிய வேண்டும்: அதற்கு அதற்கு எனக்கு அதிக ஆயுள் வேண்டும்; எனவே இன்று சாகவேண்டியவர்களை நாளைச் சாகும்படி செய்ய உம்மால் முடியுமோ?" என்றார் திருமழிசையார். "அது உயிர்களின் வினைப்பயன்படியே நடக்கும்!" என்றார் சிவபெருமான்.

உடனே திருமழிசையார் தம் கையிலுள்ள ஓர் ஊசியை எடுத்துக் காட்டி, "இவ்வூசியின் பின்னே நூல்வரும்படியாவது உம்மால் வரம் தர முடியுமா?" என்று குறும்புச் சிரிப்போடு கேட்டார்.

அது கேட்டதும் கூத்தபிரான் மிகுந்த சினங்கொண்டவர் போல் குமுறினார்; முன்னொரு சமயம் காமனை எரிப்பதற்காக திறந்த நெற்றிக் கண்ணை மீண்டும் திறந்தார்; அடுத்த கணம் அவருடைய சிவந்த நெற்றிக் கண்ணிலிருந்து பெரும் நெருப்பு எழுந்து மூவுலகையும் சூழ்ந்து தகித்தது; ஆனால் அந்நெருப்பால் திருமழிசையாரை ஒன்றும் செய்ய முடியவில்லை. உடனே திருமழிசையார் தம் பரமபக்தியின் யோக வலிமையால் தம்முடைய வலத்திருவடியில் ஒரு கண்ணை உண்டாக்கி அதைத் திறந்தார். அக்கண்ணிலிருந்து சூரியனைவிட பல்லாயிரம் கோடி சூடுடைய நெருப்பு; ஊழித்தீ போல் பொங்கி எழுந்தது; மூவுலகையும் சென்று எல்லா உயிர்களையும் தாக்கித் தகிக்கச் செய்தது. பிறையணிந்த பெம்மானையும் அந்நெருப்பு சூழ்ந்து கொளுத்த முயன்றது. பிரமன் உலகிலும் சென்று அங்குள்ளவர்களையும் தகிக்க வைத்தது. அதனால் இந்திரன் முதலிய தேவர்கள் அயனுடன் வைகுந்தம் சென்று பாற் கடலில் பள்ளி கொண்ட எம்பெருமானை வணங்கி "எங்களை காத்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்கள்.

திருமகள் நாதன் அத் தேவர்களை நோக்கி, "தேவர்களே கவலையை விடுங்கள். நாம் புட்கலாவர்த்தம் பொழியச் செய்து அப்பெரு நெருப்பை அடக்குகிறோம்" என்றார்.

இந்திரன் உடனே, "பரந்தாமா! எம்பெருமானே! திருமழிசையாரின் யோக வன்மையினால் எழுந்து வெள்ளிப்பனிதலைப் பெருமானையே சூழ்ந்து, வாட்ட முயலும்

அத்தீயை தாங்கள் அனுப்பும் மேக மழைகளால் அணைக்க முடியுமா?" என்றான்.

"அம்மேகத்திற்கு அத்தகைய ஆற்றலை நாமே கொடுக்கிறோம். ஆதலால் நீங்கள் பயப்படவேண்டாம்!" என்று பெருமான் கூறி அவ்வாறே புட்கலாவர்த்தம் என்னும் மேகத்தை அனுப்பினார்.

"அம்மேகம் பெருமழையை பெய்வித்து பெருந் தீயை அணைத்து பிரளய வெள்ளம் போல் பூமியெங்கும் நிறையலாயிற்று. ஆயினும் அதற்கு அஞ்சாதவராக திருமழிசையார், திருமகள் நாதனை மனத்தில் எண்ணியவராக பரமபக்தியின் ஆற்றலான அந்தப் பெரு வெள்ளத்தினிடையேயும் சிறிதும் அசைவற்று அமர்ந்திருந்தார். அவருடைய செயலைக் கண்ட சிவபெருமான் அவருடைய பரம பக்தியின் சித்தியைப் போற்றிப் புகழ்ந்து பக்திசாரர் என்னும் பட்டத்தைக் கொடுத்து விட்டு தேவியோடு கயிலைக்குச் சென்றார், அதிலிருந்து திருமழிசையாருக்குப் பக்திசாரர் என்ற பெயரும் வழங்கி வரலாயிற்று.

அதன்பிறகு திருமழிசையார் முன்போலவே யோகத்தில் இருந்தார்: அப்போது மாய மந்திர வித்தைகளில் வல்லவனான சுத்திகாரன் என்னும், சித்தன் ஒருவன் ஒரு புலியின் மீது அமர்ந்து வான் வழியில் சென்று கொண்டிருந்தான்; அப்புலி திருமழிசையாழ்வார் யோகம் புரியும் இடத்திற்கு வந்ததும் மேலே செல்லாமல் தயங்கி நின்றது: அதைக்கண்டதும் மந்திரச்சித்தன் மிகவும் வியப்புற்று விண்வெளியிலே நான்கு பக்கங்களிலும் பார்த்தான். பிறகு பூமியையும் நோக்கினான்; திருமழிசையார் யோகத்தில் ஆழ்ந்திருப்பதைக் கண்டு அவருடைய சக்தியால் தான் தன் புலி அவரைத் தாண்டிப் போகவில்லை என்பதை உணர்ந்தான்; உடனே கீழே இறங்கி அவர் முன்வந்து நின்றான்; அவர் சிதைந்த ஆடை உடுத்தியிருப்பதைப் பார்த்ததும், சுத்திகாரன் தன்னுடைய மந்திரவாத வித்தையின் வலிமையால் நல்லாடை ஒன்றைத் தோற்றுவித்து "அருந்தவச் செல்வரே! இவ்வாறு கந்தல் ஆடையைத் தாங்கள் உடுத்தியிருக்கலாமோ? நான் தரும்

அருமையான ஆடையை வாங்கி உடுத்திக் கொள்ளுங்கள்" என்றான். திருமழிசைப் பெருமான் அதை வாங்காமல் ஒரு புன்சிரிப்பு பூத்து தம் யோக பலத்தினால் மாணிக்கமயமாக மின்னும் ஆணிப் பொன்னாடை ஒன்றை உருவாக்கிக் காட்டினார்; சுத்திகாரன் சற்று வியந்து விட்டுத் தன் கழுத்தில் இருந்த இரத்தின மாலையைக் கழற்றி, "இதை உங்கள் ஜப மாலையோடு சேர்த்து வைத்துக் கொள்ளும்" என்றான்; திருமழிசையாரோ மறுபடியும் புன்முறுவலோடு அவனைப் பார்த்து விட்டு தன் கையிலுள்ள துளசி மாலையையே அந்தச் சித்தனின் ரத்தினமாலையை விடப் பன்மடங்கு பேரொளி வீசும் மணிமாலையாகத் தம் யோக வல்லமையால் மாற்றிக் காண்பித்தார்.

அதைக் கண்டதும் மந்திரம் வல்ல சுத்திகாரன் மிகவும் வெட்கமடைந்தான். ★பிறகு அவருடைய பெருந்தவச் சிறப்பைக் கண்டு "இவர் மகாத்மா! மகா பரிபூரண பக்தர்!" என்று அவரைப் போற்றி வணங்கி விட்டு, அம்மாலையைப் பெற்றுக் கொண்டு விடைபெற்றுச் சென்றான்.

பிறகு ''முன்போலவே திருமழிசைப் பிரானார் பரந்தாமனைக் தியானித்தபடி யோகத்தில் அமர்ந்தார். கொங்கணசித்தன் என்னும் இரசவாதி ஒருவன் அவருடைய பெருமைகளைக் கேள்விப்பட்டு அவரிடம் வந்து வணங்கி நின்று ''ஞான யோகியாரே! கோடி இரும்பையும் பொன்னாக்கவல்ல ஒரு குளிகையைத் தங்களுக்குத் தருகிறேன். இதை என் பரிசாக ஏற்றுக் கொள்ளுங்கள்" என்று ஒரு ரஸவாத குளிகையை நீட்டினான்.

உடனே திருமழிசையார் பொன் போல் திகழும் தம் உடம்பில் படிந்துள்ள புழுதியையும் காதின் குறும்பியையும் திரட்டியெடுத்து ஒரு சிறு உருண்டையாக உருட்டி "இந்தக் குளிகை கோடானு கோடி கருங்கற்களையும், செம்பொன்னாக்கும்" என்று கூறி அவனிடம் கொடுத்தார். அதை வாங்கி அவன் ஒரு கருங்கல்லை எடுத்துப் பரிசோதித்தான். அக்கருங்கல் அப்படியே செம்பொன்னாக மாறியது.

★அதைக் கண்டதும் அந்த இரசவாதி பெரும் வியப்படைந்து தன் தவறை உணர்ந்து அவரிடம், "பரம பக்தரே! நான் கற்றவித்தை அனைத்தும் உங்கள் ஆற்றலின் முன் தூசிக்குச் சமானமேயாகும். நான் அகம்பாவத்தால் அறியாமல் செய்த பிழையைப் பொறுத்தருள்வீராக!" என்று கூறிவிட்டு அவருடைய திருவடித்தாமரைகளை வணங்கி வலம் வந்து விடைபெற்றுச் சென்றான்.

பின்னர் திருமழிசையார் அவ்விடத்தை விட்டு நீங்கி ஒரு மலையின் குகைக்குச் சென்று பரமாத்மா தியானத்தோடு யோகத்தில் அமர்ந்தார். அப்போது முதலாழ்வார்கள் என்று சிறப்பிக்கப்பட்ட பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் மூவரும் அரங்கநாதனுக்கே ஆட்பட்ட அன்பில் தொண்டர்களாக தலயாத்திரைத் தொடங்கி பரந்தாமன் மீது பாமாலைகள் புனைந்து பரவசத்தோடு கூடி ஒவ்வொரு இடமாக வந்து கொண்டிருந்தார்கள். திருமழிசையார் யோகத்தில் அமர்ந்துள்ள குகைக்கு அருகில் உள்ள ஊரை அவர்கள் வந்தடைந்தபோது ஒரு பேரொளி அவர்களைக் கவர்ந்திழுத்தது, அதைக் கண்டு அம்மூவரும் வியப்பெய்தி "ஆகா! தெய்வ மணம் கமழும் இந்த தேஜஸ் எங்கிருந்து வருகிறது? தொடர்ந்து சென்று பார்ப்போம்!" என்று எண்ணமிட்டு அவ்வாறே தொடர்ந்து சென்று குகையை அடைந்தார்கள். அந்தக் குகையினுள்ளே திருமழிசையார் யோகத்தில் அமர்ந்திருப்பதைத் தங்கள் மனக் கண்களாலேயே கண்டார்கள். அப்போது அவர்களின் உள்ளத்தில் எழுந்த ஞான ஒளியால், இவர் இன்னார் என்பதை அறிந்து கொண்டார்கள். திருமழிசையாரும் அவர்களின் வருகையை அறிந்து கொண்டார்; உடனே முதல் ஆழ்வார்கள் மூவரும் ஒருமித்த குரலில், "பார்க்கவ முனிவரின் அருந்தவச் செல்வரே, நலம்தானா?" என்று கேட்டார்கள்.

திருமழிசையாரும், "ஆகா! தாமரை, குருக்கத்தி, செவ்வல்லி என்னும் முப்பூக்களும் பூவுலகில் புகழ் பெறும்படி,

★ *திருமழிசையார் அருளிய நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் ஆகிய இவ்விரு நூல்களிலும் இவ்வரலாற்றைக் குறிக்கும் சில பாசுரங்கள் காணப்படுகிறது.*

அப்பூக்களிலே பிறந்து வந்த மெய்ஞ்ஞானச் செல்வர்களே! நீங்களும் நலந்தானே?" என்றார். பிறகு முதல் ஆழ்வார்கள் மூவரும் அன்பின் மிகுதியினால் கண்களில் நீர் பொழிய திருமழிசைப் பிரானைத் தழுவிக் கொண்டு பக்திப் பரவசத்தில் லயித்தார்கள். பாலோடு பாலும், தேனோடு தேனும் சேர்ந்து கலந்ததுபோல் நால்வரும் சேர்ந்து பரம பக்தியிலே மனம் ஒருமிக்கக் கலந்து பகவத் அனுபவத்திலே லயித்திருந்தார்கள்.

பிறகு அந்நால்வரும் அரங்கப்பெருமானை உள்ளத்தில் கொண்டு யோகத்தில் அமர்ந்தார்கள். அதன்பிறகு நால்வரும் மயிலையம்பதிக்கு (மைலாப்பூருக்குச்) சென்று பேயாழ்வார் தோன்றிய கைரவதீர்த்தத்தின் அருகில் பக்தியோகம் புரிந்தார்கள். கடைசியாக முதலாழ்வார்கள் மூவரும் மறுபடியும் தலயாத்திரைக்குப் புறப்பட்டு திருமழிசையாரிடம் பிரியாவிடை பெற்றுச் சென்றார்கள். திருமழிசையார் மிகுந்த வருத்தம் கொண்டு, "நாரணனே! அரும்பெரும் மெய்யன்பர்களான அவர்களைப் பிரிந்தது எனக்கு வாட்டத்தைத் தருகிறது. மீண்டும் அவர்களைக்கண்டு பழகும் வாய்ப்பை எனக்குத் தந்தருள வேண்டும்" என்று திருமகள் நாதனை வேண்டிக்கொண்டு தாம் தோன்றிய ஊரான திருமழிசைக்குச் சென்றார்.

திருமழிசையை அடைந்ததும் அவர் திருமண் (நாமம்) இட்டுக் கொள்ள வேண்டி மண்ணில் ஓரிடத்தில் தோண்டினார். ஆனால் அங்கே திருமண் கிடைக்கவில்லை. அதனால் நெஞ்சில் பெரும் வருத்தம் எழ, அங்கேயே அமர்ந்து விட்டார்; இரவுப் பொழுதும் வந்தது. வருத்தத்தின் அயர்ச்சியாக அவர் உறங்கிவிட்டார்; அன்றிரவு கனவிலே திருவேங்கட நாதன் தோன்றி திருமண் இருக்கும் இடத்தைச் சொல்லிவிட்டு மறைந்தார். உடனே கண் விழித்தார் திருமழிசையாழ்வார் காலையிளம்பரிதி தோன்றிக் கொண்டிருந்தான்: முன் இரவில் தன் கனவில் தனக்கு ஏழுமலையான் கூறிய இடத்திற்கு சென்று தோண்டினார். அங்கே திருமண் இருந்தது. அதை எடுத்து பன்னிரண்டு திருநாமம் அணிந்து கொண்டு இறைவனின் அருங்கருணையை எண்ணி எண்ணி பக்திப் பரவசத்தில் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்.

பிறகு அவர் பொய்கையாழ்வார் அவதரித்ததும் காஞ்சிபுரத்தைச் சார்ந்ததுமான திருவெஃகா என்னும் தலத்திற்கு சென்றார். அங்கே திருக்கோயிலுள் பாம்பணைமீது பள்ளி கொண்டிருக்கும் பெருமானை வணங்கினார் அத்திருக் கோயிலுள்ளே சிறிது காலம் யோகத்தில் இருக்க வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது. எனவே அவ்வூரிலேயே அவர் தங்கியிருக்கலானார். அவர் பச்சிளம் குழந்தையாக இருந்தபோது அவர் பருகி எஞ்சியிருந்த பாலை கிழத்தம்பதிகள் அருந்தியபின் அவர்களுக்கு மகனாகப் பிறந்த கணிக்கண்ணன் அவரை நாடி வந்தார். திருமழிசையாரின் திருவருளைப் பெற்று சீடராகிப் பல தொண்டுகள் செய்து வந்தார். இவ்வாறிருக்கையில் கிழவி ஒருத்தி திருமழிசையாரின் பெருமைகளைக் கேள்விப்பட்டு வந்து நாள்தோறும் அவர் உள்ள இடத்தை அலகு கொண்டு கூட்டி பெருக்கி தூய்மைப்படுத்தி கோலமிட்டு அலங்கரித்து வந்தாள். ஒரு நாள் திருமழிசையார் கண் விழித்தபோது அவள் அவ்வாறு தமக்குத் தொண்டு புரிவதைக் கண்டு மனம் மகிழ்ந்து "பெருமாட்டி! உனக்கு ஒரு வரம் தருகிறேன். நீ என்ன விரும்புகிறாய்" என்று கேட்டார்.

அதற்கு உடல் தளர்ந்து தலை நரைத்திருக்கும் கிழவி, "என்னை வாட்டி வருத்தும் கிழப்பருவம் என்னை விட்டு நீங்கினால் போதும்!" என்று கேட்டாள். திருமழிசையார் புன்முறுவலோடு அவளைக் கண்குளிரப் பார்த்தார். "அவ்வாறே ஆகட்டும்" என்ற உடனே கிழவியின் நரைமூப்பெல்லாம் நீங்கிப் புத்திளங்குமரியாக மாறினாள். கருமேகங்கள் போல் சுருள் சுருளான கூந்தல், அக்கரு மேகங்களினூடே வட்டமிடும் முழு நிலாப்போன்ற முகம், அந்த முகத்தில் நிலாத்துண்டு போன்ற செவ்வரிகள் படர்ந்து இளமையின் மதர்ப்போடு மினுமினுக்கும் கருவிழிகள், அவ்விழிகளிலே தன்னையும் அறியாமல் பொங்கியெழும் பருவப்புன்னகை, கட்டுக்கோப்பான உடல், செம்பொன் போலவும் செக்கர்வானம் போலவும் ஜொலிக்கும் மேனி நிறம், உடுக்கை போல் துடிதுடிக்கும் துடி இடை தோற்றத்தோடு தேவ கன்னியர்களும் மயங்கி மனந்தடுமாறும்படியான பேரழகியாக அவள் விளங்கினாள். இத்தகைய தன் அழகையும் இளமையையும் கண்டு அவள்

வியந்து திருமழிசையாரை வணங்கி விடை பெற்றுக் கொண்டு தன் அழகில் தானே சொக்கியபடி தன் வீட்டிற்குச் சென்றாள்.

ஒருநாள் அவள் தன் வீட்டின் மேல்மாடத்தில் நின்று கொண்டிருந்தாள். அப்போது காஞ்சிபுரத்தை ஆண்டு வந்த பல்லவ மன்னன் பட்டத்து யானையின் மீது அமர்ந்தபடி பவனி வந்துகொண்டிருந்தான். அவன் அக்குமரியைக் கண்டதும் அவள் அழகில் மயங்கி அவள் மீது அளவில்லாத காதலும் கொண்டான். இவளே தனக்கு மனைவியாவதற்கு உரியவள்" என்று எண்ணினான். பிறகு ஊர்வலம் முடிந்து அவன் தன் அரண்மனைக்குச் சேர்ந்ததும் தன்னுடைய தூதர்களை அனுப்பி அவள் அனுமதி பெற்று அவளை சந்தித்து காதலையெல்லாம் அவளுக்குத் தெரிவித்தான். அவளும் மன்னனின் விருப்பத்திற்கிணங்கி அவனுடைய மனைவியானாள். இருவரும் அந்தப்புரத்தில் பலவிதமாகவும் கூடி மகிழ்ந்து இன்பமாக இல்லறம் நடத்தினார்கள்.

மன்னன் சற்று வயதானவனாக இருந்ததால் நாளாக நாளாக மூப்பும் நரையும் காரணமாக இல்லற இன்பத்தை நன்கு அனுபவிக்க முடியவில்லை. ஆனால் அவனுடைய ஆசைக்குரிய பத்தினியோ சிறிதும் உடல் கட்டுக் குலையாமல் அப்போதுதான் பூத்த புதுமலர் போல் புத்திளங் குமரியாகவே இருந்து வந்தாள். அதைக் கண்டு பல்லவன் பெரிதும் வியப்படைந்து, "நான் கிழவனாகிக் கொண்டு வருகிறேன். நீயோ கிழவியாகாமல் வாடாமலர் போல் என்றும் குமரியாகவே இருக்கிறாயே: இதன் ரகசியம் என்ன?" என்று கேட்டான். அவள் தனக்கு இளமை வாய்த்த வரலாற்றைக் கூறியபின் "வேந்தர் பெருமானே! அப்பெருமானான திருமழிசையாழ்வாருக்கு கணிக்கண்ணர் என்ற ஒரு சீடர் இருக்கிறார். அந்த சீடர் நாள்தோறும் பிச்சை பெறுவதற்கு நம் அரண்மனைக்கு வருகிறார். அவர் உதவியின் மூலம் அருள் பெற்று தாங்களும் இளமை அடையலாம். அந்த மகானை நீங்கள் சந்திக்கலாம். பைந்தமிழில் பாமாலைகள் பாடி பரந்தாமனுக்குச் சூடி அந்தத் திருமழிசையாழ்வார் அரும்பெரும் ஆற்றல்கள் காட்டியிருக்கிறார். பாமாலை பாடும் அப்பாவலர் வாயால் தாங்களும் அருள்பெற்றால் இளமை அடையலாம்!" என்றாள்.

பல்லவ மன்னன் மறுநாள் கணிக்கண்ணருடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். கணிக்கண்ணன் வழக்கம் போல் பிச்சை ஏற்க வந்தார். மன்னன் அவரை வரவேற்று, பெரிதும் உபசரித்து "பைந்தமிழ் பாடும் பாவலருக்கு அந்தரங்க சீடரே! தங்களுக்கு ஒரு வேண்டுகோள்! தங்கள் குருவான திருமழிசையாரை இங்கே என் அரண்மனைக்கு அழைத்து வரவேண்டும்" என்றான்.

அதற்கு "எங்கள் குரு எங்கும் எவர் அரண்மனைக்கும் வரமாட்டார்" என்றார் கணிக்கண்ணர்.

"அப்படியானால் நான் இளமை பெறும்படி நீரே உன் வாயால் நம்மீது ஒரு பாட்டுபாட வேண்டும்" என்றான் பல்லவ மன்னன்.

"மனிதர்களைப் பாடிப் பிழைக்கும் பாவலனல்ல நான்! மாலவனைப் பாடும் என்வாயால் எந்த மனிதனையும் நான் பாட மாட்டேன்" என்றார் கணிக்கண்ணர்.

"நாடாளும் மன்னர்கள் தெய்வத்திற்குச் சமமானவர்கள். அதிலும் உம் நாராயணனின் அம்சம் போன்றவர்கள்! எனவே நீர் என்மீது பாடுவது அந்த திருமாலையே பாடுவதாகும்" என்றான் பல்லவ வேந்தன்.

"அப்படியென்றால் நான் பாடுகிறேன்" என்று கணிக் கண்ணன் கூறிவிட்டுப் பின்வருமாறு பாடினார்.

"ஆடவர்கள் எங்கன் அகல்வார் அருள் சுரந்து
பாடகமும் ஊரகமும் பாம்பணையும்-நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்னார் பொழிற்கச்சி பாண்டி"

அப்பாடலைக் கேட்டதும் பல்லவ வேந்தன் வெகுண்டு "கணிக் கண்ணரே! எம்மைப் பாடுக என்றால் கோயிலில் படுத்துறங்கும் உம் திருமாலையல்லவோ பாடுகிறீர்" . என்று கேட்டான்.

"நீர்தானே சற்றுமுன் தெய்வத்திற்கு ஒப்பான அரசனை பாடுவது. திருமாலையே பாடுவதாகும் என்று சொன்னீர்!

அப்படியானால் நான் திருமாலைப் பாடுவது அரசனையே பாடுவதாகும் அல்லவா!" என்றார் கணிக்கண்ணன் சிரிப்போடு.

மன்னன் மேலும் கோபம் கொண்டு அவரை நோக்கி, "என் சொல்லையும் மீறி என்னைப் பாடாத நீர் இனிமேல் என் நகரிலும் இருக்கக் கூடாது, உடனே இந்நகரை விட்டு வெளியேறிவிடும்" என்று கட்டளையிட்டான்.

"பல்லவ வேந்தே! நான் போகிறேன், உம் நகரத்தைவிட்டே போகிறேன். நான் பாடிப் பணிவதற்குரிய எங்கள் பெருமாள் உன் நகரத்துக் கோயிலில் மட்டும் படுத்துறங்குவதில்லை" என்று கூறிவிட்டு கணிக்கண்ணர் அக்கணமே அவ்விடம்விட்டு நீங்கி தம் குருவான திருமழிசை ஆழ்வாரிடம் வந்து அரண்மனையில் நிகழ்ந்தனவற்றைக்கூறி, "நான் இந்நகரை விட்டுப் போகிறேன். விடை கொடுங்கள்" என்றார். "மெய்யன்பனே, நீர் இந்நகரை விட்டுப் போவதானால் நான் மட்டும் இங்கு இருப்பேனா? நானும் உன்னோடு வருகிறேன்'' சற்று இங்கே இரு. ஆலயத்தில் அறிதுயில் புரியும் நம் பெருமானையும் எழுப்பிக் கொண்டு வருகிறேன்" என்று சொல்லி வட்டு திருவெஃகா கோவிலுள் சென்றார். அங்கு பள்ளி கொண்டிருக்கும் பெருமானை நோக்கித் துதித்து. "கச்சிமணிவண்ணா, இவ்வூரைவிட்டு கணிக்கண்ணன் போகிறான். செந்நாப்புலவனான நானும் துணிந்து போகிறேன். நீ இங்கு படுத்துக்கிடக்க வேண்டாம்: நீயும் உன் பாம்புப் படுக்கையான பாயை சுருட்டி எடுத்துக் கொண்டு கிளம்பு" என்று வேண்டிக் கொள்ளும் விதமாகப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"கணிக்கண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி
மணிவண்ணா! நீ கிடக்க வேண்டா-துணிவுடைய
செந்நாப் புலவனும் போகின்றேன். நீயுமுன்றன்
பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்."

என்று வேண்டினார். உடனே கோயிலில் பள்ளி கொண்டிருந்த பெருமாளும் அறிதுயில் நீங்கித் துள்ளியெழுந்து தம் பாம்பணையை சுருட்டிக்கொண்டு கிளம்பி திருமழிசைப் பிரானைப் பின் தொடர்ந்து போனார். பெருமாள் புறப்பட்டுப் போனதினால் மற்ற திருக்கோயில்களிலெல்லாம் உள்ள தெய்வங்களும் மற்ற தேவர்களும் அவ்விறைவனைப் பின்தொடர்ந்து போனார்கள்.

அவர்கள் எல்லோரும் அந்நகரை விட்டு நீங்கிச் சென்று இரவு ஒரு சோலையில் தங்கினார்கள். அதனால் திருவெஃகா நகரம் களையிழந்து சூரியனும் அந்நகரை விட்டு நீங்கி எங்கும் நீளிரவாய் இருள் சூழ்ந்தது; பயிர்கள் முதலான எல்லா உயிர்களும் மக்களின் இருதயங்களும் வாடின. எங்கும் வெறுமை (சூன்யம்) நிறைந்தது. இதை அறிந்ததும் பல்லவ வேந்தன் மனம் பதை பதைத்து அதன் காரணத்தை அறிந்து வருமாறு தன் ஒற்றர்களுக்குக் கட்டளையிட்டான். திருவெஃகாவில் கோயிலில் பள்ளி கொண்டிருந்த பெருமாள் தம் பாம்புப் படுக்கையையும் சுருட்டிக்கொண்டு திருமழிசை யாழ்வாரையும், கணிக்கண்ணரையும் பின்தொடர்ந்து போய்விட்டது தான் அதன் காரணம் என்பதை அறிந்து அரசன் தன் தவறை உணர்ந்தான்.

உடனே பல்லவ மன்னன் தம் மதியமைச்சர்களோடு தன் நகரைவிட்டுப் புறப்பட்டு அவர்கள் தங்கியுள்ள சோலைக்கு வந்தான், கணிக்கண்ணரை நோக்கி, "திருமால்தாசரே! அரசன் என்ற அகம்பாவத்தால் நான் அறியாமல் பேசிய மொழிகளை பொறுத்தருளி என்னை மன்னித்து என் காஞ்சி நகருக்குத் திரும்பி வர வேண்டும்!" என்று கேட்டுக் கொண்டான். கணிக்கண்ணன் திருமழிசையாழ்வாரை வேண்ட, அவர் திருமகள் நாதனைப் பார்த்து, "நம் கணிக்கண்ணன் போவதை நிறுத்தி விட்டான். செந்நாப் புலவனான நானும் துணிந்து நிறுத்தி விட்டேன்! நாங்கள் நகருக்குத் திரும்புகிறோம். கச்சிமணிவண்ணா நீயும் உன் நகருக்குத் திரும்பி உன் கோயிலிலே படுத்திருக்கவேண்டும். உன்பைந்நாகப் பாயை அங்கு விரித்து அதில் படுத்துக்கொள்!" என்று வேண்டிக் கொள்ளும் விதமாகப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"கணிக்கண் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி
மணிவண்ணா நீ கிடக்க வேண்டும்-துணிவுடைய
செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன்
நீயும் உந்தன் பைந்நாகப் பாய்ப்படுத்துக் கொள்."

அவர் வேண்டுதலை பெருமாள் ஏற்றுக்கொண்டு அவரோடும் கணிக்கண்ணரோடும் மற்ற தேவர்களோடும் மீண்டும் திருவெஃகா திருக்கோயிலுக்கு வந்து தன் பைந்நாகப்

படுக்கையை விரித்துப் படுத்து திருக்கை கீழப்பட கண் வளர்ந்து ஆழ்வார் சொன்ன வண்ணமே செய்துவிட்டார். ★தன் அடியாரின் சொல்லுக்குச் செவிசாய்த்து அவர் சொன்னபடி செய்த அப்பெருமானை அன்று முதல் "சொன்ன வண்ணம் செய்த பெருமான்" என்று எல்லோரும் போற்றி வரலானார்கள். அவ்விறைவன் தம் அடியார்களோடு சென்று தங்கிய இடத்தை "ஓரிரவிருக்கை" என்னும் பெயராலும் வழங்கிவந்தார்கள். திருமழிசையார் பக்திப் பரவசமாகிப் பாடினார்.

"நன்றிருந்து யோக நீதி நண்ணுவார்கள் சிந்தையுள்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்த தேவதேவனே
குன்றிருந்த மாட நீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து வெஃகனைக் கடந்தது என்ன நீர்மையே!"

மீண்டும் நகரம் பொலிவு பெற்றது. மன்னன் மகிழ்ந்தான். அதன் பிறகு திருமழிசையார் கச்சி மணிவண்ணனைத் தம் நெஞ்சில் இருத்தி யோகத்தில் ஆழ்ந்தார்.

பின் ஒரு சமயம் திருமழிசையார் திருக் குடந்தைக்கு (கும்பகோணத்திற்கு) செல்ல எண்ணி திருவெஃகா இறைவனைச் சேவித்து விட்டு கணிக்கண்ணரோடு புறப்பட்டு நடந்து சென்றார். பயண வழியில் அவர்கள் பெரும்புலியூர் என்னும் ஊருக்குப் போய் சேர்ந்தார்கள். திருமழிசையார் வெகுதூரம் நடந்து வந்ததால் மிகவும் களைப்புற்றார். தம் களைப்பு நீங்கி பயணம் கொள்ள விரும்பினார். எனவே ஓர் அந்தணரின் வீட்டுத் திண்ணையில் போய் உட்கார்ந்தார். அப்போது அத் திண்ணையிலிருந்து மறையவர்கள் வேதம் ஓதிக் கொண் டிருந்தார்கள். அவர்கள் திருமழிசையாரைக் கண்டதும், "நான்காம் வருணத்தினனாகிய இவன்கேட்க நாம் வேதம் ஓதுவதாவது; கூடாது!" என்று நினைத்து வேதம் ஓதுவதை சட்டென்று நிறுத்தி விட்டார்கள்.

★ *"பைந்தமிழ்ப் பின் சென்ற பச்சைப் பசுங்கொண்டலே!" என்று இச்சரித்திரக் குறிப்பைக் குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் மூன்றாம் பாட்டில் குறித்துள்ளனர்.*

அதை அறிந்து கொண்டதும் திருமழிசையார் திண்ணையை விட்டு இறங்கினார்: உடனே அவர்கள் வேதம் ஓதத் தொடங்கி விட்ட வாக்கியம் தெரியாமல் திருதிருவென விழித்துத் தவித்தார்கள். திருமழிசையார் அவர்களின் தவிப்பைப் புரிந்து கொண்டு கீழே சிந்திக் கிடந்த நெற்களுள் ஒரு கரிய நெல்லை யெடுத்து அவர்கள் பார்க்கும்படி •உகிரால் அதனையிடந்து அதன் குறிப்பால் அவர்கள் விட்ட வாக்கியத்தை அவர்களுக்கு உணர்த்தினார்.

உடனே அவ்வேதியர்கள் தங்கள் தவறை அறிந்து திருமழிசையாரை கும்பிட்டு, "அடியாரே! தங்கள் அருமை பெருமை தெரியாமல் நாங்கள் செய்த தவறை பொறுத்தருளுக" என்று வேண்டினார்கள். அவர்களுக்கு ஆண்டவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரம் பொருள் தத்துவத்தை திருமழிசையார் எடுத்துரைத்து விட்டு விடைபெற்றுச் சென்றார்.

அவர் அவ்வூரில் பிச்சை பெறும் பொருட்டு பலவீதிகளுக்கும் சென்று கொண்டிருந்தார்: அப்போது அவ்வூரில் கோயில் கொண்டுள்ள திருமால் விக்கிரகத்தின்முகம் அவர் செல்லும் திசைகளிலெல்லாம் தன் முகத்தைத் திருப்பிப் பார்த்துக் கொண்டிருந்தது. அதைக் கண்டு அர்ச்சகர் பெரும் வியப்பெய்தி மறையவர்கள் சிலரிடம் அதைப் பற்றிக் கூறினார்; அவர்களுக்கும் அது வியப்பை அளித்தது; ஆனால் அதன் காரணத்தை அவர்களால் அறிய முடியவில்லை. அவர்கள் எல்லோரும் யாகசாலைக்குச் சென்று அங்கு வேள்வித் தலைவராக யாகம் தொடங்கும் பெரும்புலியூர் அடிகளிடம் அந்த அற்புதத்தை எடுத்துரைத்தார்கள்.

பெரும்புலியூர் அடிகள் இறைவன் அவ்வாறு செய்ததின் காரணத்தை உள்ளத்தால் உணர்ந்து: யாக சாலையை விட்டு விரைந்து சென்று திருமழிசையாரை அடைந்து, காலில் விழுந்து வணங்கி அவரைப் பலவாறு போற்றித் தம்முடன் யாக சாலைக்கு அழைத்து வந்து உன்னதமான ஒரு பீடத்தில்

• *அவ்வாக்கியம் "கிருஷ்ணா நாம் வ்ரீஹூணாம் நகநிர்ப்பிந்தம்" என்பார்கள்.*

அவரை அமரச் செய்து உபசரித்தார். யாகம் தொடங்கியது: வேள்வித் தலைவர் முதலாவதாகச் செய்ய வேண்டிய பூஜையைத் திருமழிசையாருக்கு செய்தார். அப்போது வேள்விச் சடங்குகள் செய்வதற்கு உட்கார்ந்திருந்த அங்கு சில வேதியர்கள். "நான்காவது சாதியானுக்கு அக்கிர பூஜை செய்வதா?" என்று அருவருத்தார்கள். முன்பு தருமர் நடத்திய யாகத்தில் கண்ணபிரானுக்கு அக்கிர பூசை செய்தபோது சிசுபாலன் எள்ளி நகையாடினானே அதுபோல சில வேதியர்களும் பழித்து ஏளனம் செய்தார்கள். பெரும்புலியூர் அடிகள் அதைக்கண்டு மனம் வருந்தி, உடல் நடுங்கிக் கண்ணீர் விட்டார்.

திருமழிசையார் அவற்றையெல்லாம் பார்த்து அவர்களுக்கு புத்தி புகட்ட எண்ணி திருமகள் நாதனை நோக்கி; "சக்கரத்தை கையிலேந்திய திருமாலே இக் குறும்பை நீக்கி என்னையும் உன்னைப் போல் ஓர் ஈஸ்வரனாக்க முடிந்தால் இவ்வேள்விச் சடங்கர் வாய் அடங்கிட என் உள்ளத்தினுள்ளே நீ கிடக்கும் வண்ணமே, என் உடம்பிற்கு வெளியிலும், உன் உருவப் பொலிவை காட்டிவிடு என்று வேண்டிக் கொள்ளும் விதமாகப் பின்வரும் பாடலைப் பாடினார்.

"அக்கரங்கள் அக்கரங்கள் என்று மாவது தன்கொலோ?
இக்குறும்பை நீக்கி என்னை ஈசனாக்க வல்லயேல்
சக்கரம் கொள்கையனே, சடங்கர் வாயடங்கிட
உட்கிடந்த வண்ணமே புறம் பொசிந்து காட்டிடே"

பெருமாள் தம்மையே எந்நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மைப் போல உருவம் கொள்ளும் சாரூப்பிய நிலையை தந்தருள்பவராகையால் பாற்கடலில் பாம்பு படுக்கையில் தன் திருவடிகளைத் திருமகளும் பூமகளும் வருடிட, தான் பள்ளிகொண்டு அறிதுயில் புரியும் காட்சியை அனைவரும் காணுமாறு திருமழிசையாரின் உடல்மீது காட்டினார். அச்சாரூப்பிய நிலை பெற்ற தோற்றத்தோடு திருமழிசையாரும் எழுந்தார். அனைவரும் அந்த அற்புதத்தைக் கண்டு வியந்தார்கள். தங்கள் குற்றத்தை உணர்ந்து அவரைப் பணிந்து மன்னிப்பு பெற்றார்கள். எல்லோரும் அவரைப் பரப்பிரும்ம நிலை கண்டார் என்று போற்றினார்கள்." பிறகு திருமழிசையார்

அவர்களிடமும் பெரும்புலியூர் அடிகளிடமும் பல நன்மொழிகள் கூறி விடைபெற்று திருக்குடந்தைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

திருக்குடந்தையான கும்பகோணத்திற்கு திருமழிசையார் வந்ததும் அங்குள்ள பெருமாள் கோயிலினுள் சென்று அங்கே உறையும் ஆரா அமுதப் பெருமானைக் கண்டு வணங்கிய பின் காவிரியாற்றை அடைந்தார். தாம் பாடிய பாசுரங்கள் அடங்கிய ஏடுகளையெல்லாம் காவிரி நீரிலே விட்டார். அவற்றுள் நூற்றிருபது பாசுரங்கள் கொண்ட திருச்சந்த விருத்தம், தொண்ணூறு பாசுரங்கள் கொண்ட நான்முகன் திருவந்தாதி என்னும் இருநூற்கள் மட்டும் நீரோட்டத்தை எதிர்த்து நீந்தி வந்து திருமழிசையார் திருவடிகள் அருகில் சேர்ந்தன. உடனே அவ்விரு நூற்களையும் எடுத்துக்கொண்டு அவர் மீண்டும் கோயிலுக்குச் சென்று அவ்விறைவனை வணங்கி அவற்றை உலகம் உய்ய வெளிப்படுத்தி வழங்கினார்.

கோயிலினுள் படுத்து அறிதுயில் புரியும் பெருமானின்கோலத்தை அவர் பார்த்துப் பார்த்து, "காவிரிக்கரை குடந்தையில் படுத்துறங்கும் பெருமானே! நடந்த கால்கள் நொந்தனவோ? பூமியை ஏனமாய் ஏந்திய உடல் குலுங்கினவோ? படுத்துறங்கும் நீ எழுந்து வந்து என்னோடு பேசு!" என்று வேண்டினார். பெருமாளும் உடனே எழுந்து வந்தார். அடியவர்க்கு எளியவனாய் அருகில் வரும் ஆராவமுதனின் அற்புதக் கோலத்தைக் கண்டு திருமழிசையார் "வாழி நேசனே" என்றார். பெருமாள் அப்படியே நின்று குடந்தையில் எப்போதும் நின்ற கோலத்தில் காட்சியளித்து வரலானார். அவரை திருமழிசையார் பின்வருமாறு பாடினார்.

"கடந்த கால்கள் நொந்தவோ நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்த காவிரிக் கரைக்குந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து பேசு வாழி கேசனே!"

பிறகு திருமழிசையார் அக்குடந்தையம்பதியிலே பல ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்து உலகத்துயிர்கள் இனிதுடன் வாழ அருளி பழுத்த வயதில் இவ்வுலகை நீத்தார்.

5. நம்மாழ்வார்

பாண்டிய நாட்டில் தாமிரபரணி நதிக்கரையில் திருக்குருகூர் என்னும் தெய்வப்பதி எல்லா நலன்களையும் பெற்று விளங்கியது. அவ்வூரிலே வழிவழியாக வந்த வேளாண் குலத்தில் அவ்வூரை ஆளும் உரிமையுள்ள ஒரு மரபு சிறந்து விளங்கியது. மறந்தும் புறமதத் தெய்வங்களைத் தொழாமல் திருமகள் நாதன் திருவடிகளுக்கே ஆட்படும் தொண்டர்குலம் அது. அக்குலத்தில் பிறந்த திருவழுதி வளநாடர் என்பவர் தன் நாட்டின் புகழை எங்கும் பரப்பினார். அவர் மைந்தர் அறந்தாங்கியார் என்பவர் அருள்வழியிலேயே அறச் செயல்கள் பல புரிந்து அறநெறிகளுக்கே ஒரு சுமைதாங்கி போல் விளங்கினார். அவர் புதல்வர் சங்கரபாணியார் சர்வோத்தம ராகத் திகழ்ந்து மறைந்தார். அவர் பெற்ற அச்சுதர் மதுரை முத்தமிழ் சங்கம் புகழ்ந்திடப் பெருமகனாராக விளங்கினார். அவர் மைந்தர் செந்தாமரைக் கண்ணரும் அவர் மைந்தர் செங்கண்ணரும், அவர் மைந்தர் பொற்காரியாரும், அவர் மைந்தர் காரியாரும் அவர் மைந்தர் மாறனும் அதுபோலவே வழி வழிச் சிறந்து விளங்கினார்கள். அத்தகைய பரம்பரைக் குடியில் பொற்காரியார் என்னும் திருமகள் நாதனின் தொண்டர் ஒருவர் தோன்றினார். அவர் முற்பிறவியில் செய்த தவப்பயனால் அவருக்கு காரியார் என்று ஒரு மைந்தர் பிறந்தார்.


காரியார் கற்க வேண்டிய அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்து மணப்பருவம் அடைந்தார். திருவண்பரிசாரத்தில் வாழ்ந்து வரும் அருங்குண பெரியவராகிய திருவாழ்மார்பரின் அருந்தவச் செல்வி உடைய நங்கையை மணம் புரிவிக்க விரும்பினார் பொற்காரியர். அதைச் சுற்றத்தாரிடமும் தம் மனைவியாரிடமும் தெரிவித்தார்: பிறகு திருவாழ்மார்பரைக் கண்டு தன் கருத்தைக் கூறினார். திருவாழ்மார்பர் அதைக் கேட்டு மகிழ்ந்து தம் மகளும் காரியாரை விரும்புகிறாள் என்பதைத் தன் மனைவியின் மூலம் அறிந்து இன்னும் அதிகம் மகிழ்ந்து அவ்வாறே செய்வோம் என்றார்.

நல்லதொரு மங்கல நாளில் காரியாருக்கும் உடைய நங்கையாருக்கும் திருமணம் சிறப்பாக நடந்தது. அவர்கள் இல்லறத்தைத் தொடங்கி மனமொருமித்த காதல் தம்பதிகளாக வாழ்ந்து வந்தார்கள். சில ஆண்டுகள் சென்றன. ஆயினும் அவர்களுக்கு குழந்தைச் செல்வம் மட்டும் கிடைக்கவில்லை. அதனால் காரியாரும் உடைய நங்கையாரும் ஒரு குழந்தைக்காக மிகவும் ஏங்கினார்கள். ஒரு சமயம் காரியார் தம் மனைவியோடு தன் மாமனாரின் வீட்டிற்குச் சென்றுவிட்டு திருவண்பரிசாரத்தில் இருந்து திருக்குருகூருக்குத் திரும்பி வந்துகொண்டிருந்தார். வழியில் திருக்குறுங்குடியை அடைந்து அவ்வூரில் கோயில் கொண்டிருக்கும் நம்பியைக் கண்டு வணங்கி பல வகையாகப் போற்றி. "எம்பெருமானே! எங்களுக்கு எல்லாச் செல்வமும் அளித்த நீ மழலைச் செல்வத்தையும் அளித்தருள வேண்டும்" என்று வேண்டிச்சென்று அன்றிரவு ஓரிடத்தில் படுத்துறங்கினார்கள்.

அத்தம்பதிகளின் இருவரின் கனவுகளிலும் குறுங்குடி நம்பி தோன்றி, "உங்களுக்கு நம்முடைய அமிசமாக ஓர் அரும்மகன் பிறப்பான்" என்று கூறி மறைந்தருளினார். காலையில் எழுந்ததும் அவர்கள் ஒருவருக்கொருவர் தங்கள் கனவைப் பற்றிக் கூறி மகிழ்ந்து கோயிலையடைந்து இறைவனை வணங்கிய பின் திருக்குருகூரை அடைந்தார்கள்.

பரந்தாமன் அருளியவாறே சேனை முதலியாரின் அமிசமாக உடைய நங்கையாருக்கு நம்மாழ்வார் எனப் போற்றப்படும் ஒரு மைந்தர் பிரமாதி ஆண்டு வைகாசி மாதம் பௌர்ணமி வெள்ளிக்கிழமையன்று விசாக நட்சத்திரத்தில் கடக லக்கினத்தில் (கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில்) அவதரித்தார். ஆழ்வாருக்கு முன்பே பெருமாளின் பஞ்சணையான ஆதிசேடன் அவ்வூரின் பெருமாள் கோவிலில் வடபுறத்தில் ஒரு புளிய மரமாய் தோன்றியிருந்தார். நம்மாழ்வார் பிறந்ததுமே நம்பியெம் பெருமான் அவர் மனையினுள் யாரும் அறியாமல் அருள் வடிவமாகப் புகுந்து அவருக்கு ஞானமென்னும் தெய்வீகப் பாலை ஊட்டி மறைந்தார்.

அதனால் பச்சிளங் குழந்தை அரங்கப் பெருமானின் திருவடி ஒன்றினையே தன் உள்ளத்தில் நிலைநிறுத்தி தாயின்



5. நம்மாழ்வார்

முலைப்பால் அருந்தாமலும் அழாமலும் கண் திறவாமலும் கண்ணிமை மூடியபடியே அசைவற்றுக் கிடந்தது. ஆனாலும் உடம்பில் வாட்டமோ பொலிவு குன்றுதலோ எதுவும் ஏற்படவில்லை.

காரியாரும் உடைய நங்கையாரும் தங்கள் பச்சிளம் பாலகன் அவ்வாறிருத்தலைக் கண்டு மனம் வருந்தினார்கள். தான் பெற்ற பிள்ளை தன்னிடம் பால் அருந்தவில்லையே, வாய் திறந்து அழவில்லையே கண் திறந்து பார்க்கவில்லையே என்று உடைய நங்கையின் உள்ளம் பெரிதும் ஏங்கி உருகியது. "தன் நிலை தவறாதவரின் தவத்தால் பிறந்த தமிழ் மாறனே! அப்பா! மகனே! பால் ஊறிப்பெருகி என் முலைகள் இரண்டும் விம்முகின்றன. அதை என்னால் தாங்க முடியவில்லையே! நான் என்ன பிழை செய்தேன்? உன்னைத் தூக்கி ஒக்கல் மேல் வைத்து ஒரு கரத்தில் உன்னைத் தாங்கி என் முலைப்பால் ஊட்ட முன்பு நான் ஏன் தவம் செய்யவில்லை? மக்களைப் பெற்று மங்கையரின் முகங்களையெல்லாம் பார்த்து நான் மனங்கூசி வெட்கினேனே! மைந்தனே! என் விதி இவ்வாறாயிற்றே? மான் விழி மங்கையரெல்லாம் தம் மக்கள் அழத் தாலாட்டி ஏன் அழுகிறாய், ஏன் அழுகிறாய் என்று ஓடியெடுத்து முலைப்பால் ஊட்டுகிறார்களே? நான் ஏது செய்தேன்? நம்பியே! அமரர் தேவனே! நீ அழவும் இல்லை! எம்முலைகளில் ஊறிச் சுரக்கும் பாலையும் நீ உண்ணவில்லை" என்றெல்லாம் உடைய நங்கையார் உள்ளம் உடைய அழுதாள்.

"பெருமாளே நமக்கு மகனாகப் பிறப்பதாக நம் கனவில் சொன்னாரே! அந்தப் பச்சிளம் பாலகன்தானே இப்படிக் கண் திறவாமல் கிடக்கிறான்?" என்று காரியாரின் தந்தையுள்ளமும் கரைந்துருகியது. பிறகு தம்பதிகள் இருவரும் தங்கள் பச்சிளம் பாலகனைத் தூக்கிச்சென்று அவ்வூரில் சங்கணித்துறையுடைய பொருநையாற்றின் தென்கரையில் திருக்கோயில் கொண்டிருக்கும் பொலிந்து நின்ற பெருமானின் திருமுன் கிடத்தி பெருமானை வணங்கி, "இது உன் செயலன்றோ?" என்று கூறினார்கள். பிறகு அத்திருமாலை வணங்கிப் போற்றிவிட்டு "மாறன்" என்று தங்கள் மைந்தருக்குப் பெயரிட்டு, ஆணிப் பொன்னாற் செய்த வண்ணச் சிறு தொட்டிலில் குழந்தையைக் கிடத்தித்

தாலாட்டி இறைவன் திருவருளை எதிர்நோக்கியபடியே இருந்துவரலானார்கள். வைகுந்தத்தில் திருமால் தம் சேனைத் தலைவரான சேனை முதலியாரிடம் "நீழவுலகம் சென்று நம் ஆழ்வாருக்கு உண்மைப் பொருள்களையெல்லாம் உபதேசம் செய்துவிட்டு வருக" என்று கூறினார்.

சேனை முதலியார் அவ்வாறே திருக்குருகூருக்கு வந்து பிறர் அறியாதவாறு பாலகனான மாறனுக்கு தத்துவப் பொருள்களையெல்லாம் விளக்கிக்கூற பாலகனான ஆழ்வாரும் எல்லா உண்மைப் பொருள்களையும் நன்குணர்ந்து கொண்டு பெருமாள் சந்நிதியின் வடப்புறத்தில் ஆதிசேடன் உருவமாக நிற்கும் புளியமரத்தடிக்குத் தவழ்ந்து சென்று அமர்ந்து அந்தப் பரந்தாமனின் முகத்தையன்றி வேறு எதிலும் விழியேன்! என் கண்களை மூடிய வண்ணமும், "யாருக்கு என் சொல்வேன்?" என்று வாய் மூடிய வண்ணமும் மௌனமாக விளங்கி எதையும் உண்ணாமலும் அருந்தாமலும், பதினாறு ஆண்டுகள் வரையிலும் யோகத்தில் இருந்தார்.

குழந்தைகள் கருவுற்றுப் பிறந்ததும் முன் உணர்வுகளை அகற்றி பிறவிப் பந்தத்தை பிணைப்பதற்காகச் சடம் என்ற வாயு வந்து குழந்தைகளிடம் சேர்ந்து விடுவதுதான் உலக வழக்கமாகும். ஆனால் இவர் தம் தாயின் கருப்பையில் இருக்கும் போதே தம்மையும் சேரவந்த அந்தச் சடவாயுவைக் கோபித்து வென்று விரட்டி முன் உணர்வோடு விளங்கி பிறவிபந்தச் சுழலையும் வென்று அதற்கு ஒரு முடிவும் கட்டிவிட்டாராகையால் இவரை "சடகோபர்" என்ற பெயராலும் அழைத்து வந்தார்கள்; சடகோபரோ பிறவித்தளைகளிலிருந்து விடுபட்ட ஆத்மாவாகி பரமாத்மா பரந்தாமனான பரமாத்மாவிடமே உள்ளுறைந்து வாழ்ந்தும், சஞ்சரித்தும் பரமாத்மாவை எல்லாவிதத்திலும் அனுபவித்து வந்தார். அப்போது மதுரகவி ஆழ்வார், திருக்கோளூர் என்னும் பதியில் அந்தணர்குலத்தில் தோன்றியிருந்தார். அவர் தென்மொழியிலும், வடமொழியிலும் பெரும்புலமை உடையவர்; வைகுந்தப் பெருமானிடம் மிகவும் பக்தி கொண்டவர்; ஒரு சமயம் அவர் அயோத்தி, மதுரை, கயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் ஏழுத் திருத்தலங்களிலும் கோயில் கொண்டிருக்கும் பெருமானைச் சேவிக்க விரும்பி அங்ஙனமே சென்று சேவித்து, பின் அவற்றுள் ஒன்றாகிய அயோத்தியில் தங்கியிருந்தார்.

அப்போது "குருவே! அடியேனை ஆட்கொண்டு அருள வேண்டும்" என்று மதுரகவியார் விண்ணப்பித்தார்.

"அன்பரே! நாம் இறைவனை அடைதற்கு உரிய வழியைக் காட்டும் பாமாலைகளைப் பாடுவோம் அவற்றைப் பட்டோலையில் எழுதுவீராக" என்று கூறியருளினார். அவ்வாறே மதுரகவியாரும் செய்யலானார் "மகாத்மாவே! பரமாத்மாவான அந்தப் பரந்தாமனின் பொன்னடி மெய்மையை நான் மேவினேன்" என்றார் மதுரகவியார். அவர் விருப்பத்தை சடகோபர் நிறைவேற்ற விழைந்தார். ஸ்ரீரங்கநாதப்பெருமான் மீது காதல் கொண்ட ஒரு பெண்ணாக உருவகப்படுத்திக்கொண்டு சடகோபர் ஒரு பாசுரம் பாடினார். "கால் கைகளை அசைக்க முடியாமல் இந்தப் பெண் இட்டகால் இட்டபடியே இருக்கும். வைத்த கை வைத்தபடியே இருக்கும்; எழுந்து வாய்பேச முடியாமல் மயங்கி நிற்கும், கைகூப்பி வணங்கி நிற்கும்; காதல் என்றால் கஷ்டந்தான் என்று மூர்ச்சிக்கும், கடல் போன்ற நீலவண்ணனான திருமாலே; நீ மிகவும் கடுமையானவன், பார்" என்று சொல்லும்; வட்டமான கூர்மை "பொருந்திய சக்கரப் படையை வலக்கரத்தில் ஏந்தி இருப்பவனே என்று சொல்லும்; என்னிடம் வந்துவிடு என்று சொல்லி மயங்கி நிற்கும். எனக்கு இஷ்டனே; செழித்த காவிரி சூழ்ந்த திருவரங்கத்தில் உள்ள திருமாலே; இந்தக் காதலியின் பங்கில் நீ என்னதான் சிந்தித்தாய்?" என்று கருத்தமைந்தது அந்தப் பாசுரம்.

இட்டகால் இட்ட கையளாய் இருக்கும்;
எழுந்து வாய் மயங்கும்; கை கூப்பும்;
கட்டமே காதல்' என்று மூர்ச்சிக்கும்;
கடல் வண்ணா கடியை காண் என்னும்
வட்டவாய் நேமி வலம் கையா' என்னும்;
வந்திடாய்' என்று என்றே மயங்கும்;
இட்டனே! செழுநீர்த் திருவரங்கத் தாய்
இவள் திறந்து என் சிந்தித்தாயே.

அது கேட்டுப் பரந்தாமன் தன்னைச்சேவித்து மகிழும் ஆழ்வாருக்குத் தன்னருளைப் புரிய எண்ணி, திருமகளுடன்

சங்குச்சக்கரதாரியாக கருட வாகனத்தில் தோன்றி அவருக்குச் சேவை சாதித்து மயர்வறு மதிநலம் அருளினார். சடகோபர் அக்கருணையை எண்ணியெண்ணி மனம் கனிந்தார்: பரமாத்மாவிடம் தாம் அனுபவித்த பேரின்பத்திலே திளைத்து உள்ளடங்காத பேரன்பால் பக்தி ரசம் பொங்கிட பாமாலைகள் பல பாடலானார். மதுரகவியாரை முன்னிட்டு ரிக்கு வேதம், யஜுர், அதர்வணம், சாமம் எனப்படும் நான்கு வேதங்களின் சாரங்களைத் தமிழில் பாடமுனைந்து அவற்றை முறையே திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி ஆகிய நான்கு தமிழ் மறைகளாகப் பாடியருளினார்: அவற்றை மதுரகவியாழ்வார் முதலான சத்ஜனங்களெல்லாம் கற்றுத்தேர்ந்து பேரருள் பெறும்படி உலகிற்கு வழங்கினார்.

அவருக்குப் பெற்றோர்கள் இட்ட மாறன் என்ற பெயரே, அவர் காரியாருடைய மைந்தருமானதால் அவரைக் 'காரிமாறன்' என்றுங் கூறுவார்கள். பெருமாளின் பிரசாதமான மகிழ மாலையை இவர் சூடியதால் வகுளாபரணர் என்னும் பெயரும் இவருக்கு வழங்கப் பெற்றது. தம் பாசுரங்களால் புற தத்துவங்களை ஒட்டியதாலும் அங்குசத்தால் பரமனாகிய களிறு தம் வசமாகும்படிச் செய்ததால் 'பராங்குசர்' என்றும் அவரைப் போற்றுவார்கள். திருமகள்நாதனே அவரை 'நம்மாழ்வார்' என்று கூறிச் சிறப்பித்ததாலும் வைணவர்கள் அனைவரும் அவரிடம் கொண்ட அன்பினால் 'நம்மாழ்வார்' என்றே குறிப்பிட்டு வந்ததாலும் அப்பெயரும் நிலைபெற்று விளங்கியது.

நம்மாழ்வார் திருப்புளிய மரத்தடியிலே வீற்றிருந்தபோது நூற்றெட்டு திவ்விய திருமால் தலங்களில் உள்ள எம்பெருமான் களெல்லாம் அங்கு வந்து நம்மாழ்வாரின் திருமுகம் பார்த்துச் சென்றார்கள். அவர் இவ்வுலகில் முப்பத்தோராண்டு காலம் அப்புளிய மரத்தடியில் வீற்றிருந்து பரஞானம், பரபக்தி, பரமபக்தி உடையவராக பரமாத்மாவிடமே உள்ளுறைந்து திருமாலின் தொண்டர்கள் தெய்வீக அமுது அருந்துவதற்காகப் பாமாலைகள் பல பாடிவிட்டு இவ்வுலகை நீத்து பரமாத்மாவின் பரம பதத்திற்குப் போய்ச்சேர்ந்தார். ஸ்ரீ வைணவத் தத்துவத்தை நம்மாழ்வார் நிலைநாட்டியதால் அவரை 'குலபதி" என்று கூறி வைணவர்கள் அவரை மிகவும் உன்னத நிலையில்

கொண்டாடுகிறார்கள், திருமாலுக்கு ஆட்பட்ட அவர் தம்மை திருமாலின் பெரிய திருவடிகள் என்று ஒரு பாடலில் குறிப்பிட்டிருக்கிறார். எனவே அவரைப் பெருமாளின் பெரிய திருவடிகளாகவே வைணவர்கள் பாவித்து பிற்காலத்தில் அவருடைய திருமேனி உருவையும் பெருமாள் கோயில்களில் வைத்துப் போற்றிப் பூஜித்து வரலானார்கள்.

வைணவ குரவர்களை ஆழ்வார்கள் எனவும், ஆச்சாரியார்கள் எனவும், இருவகையாக வைணவர்கள் பிரித்துக் கூறுவார்கள். ஆனால் நம்மாழ்வாரையே அவ்விரு வகையினரையும் சேர்ந்தவராகக் கருதுகிறார்கள்.

பன்னிரு ஆழ்வார்களில் நம்மாழ்வாரை அவயவி எனவும், மற்ற ஆழ்வார்களை இவரின் அம்ச அவதாரங்களான அவயவங்கள் என்றும் குறிப்பிடுவார்கள்.

வைணவர்கள் போற்றும் பத்து ஆச்சாரியார்களில் திருமால் திருமகள், சேனை முதலியார் எனப்படும் முதல் மூன்று ஆச்சாரியார்களும் பரமபதத்தைச் சார்ந்தவர்கள். எனவே நான்காவதாகக் குறிப்பிடும் நம்மாழ்வாரே பூவுலகத்தைச் சேர்ந்த முதலாவது ஆச்சாரியராக விளங்கினார். மகாகவி கம்பர் இராமாயணம் பாடப்புகுந்தபோது முதலில் நம்மாழ்வாரைத் துதித்துப் பாடியிருக்கிறார், அந்த துதிப்பாடல்,

"தருகை நீண்ட தயரதன் தான் தரும்
இருகை வேழத்தி ராகவன் தன் கதை
திருகை வேலைத் தரைமிசைச் செப்பிடக்
குருகை நாதன் குரைகழல் காப்பதே"

எனவே சைவர்கள் நூல் இயற்றத் தொடங்கும்போது முதலில் விநாயகருக்கு வாழ்த்துக் கூறுவது போலவே வைணவர்கள் நூல் இயற்றத் தொடங்கும்போது முதலில் நம்மாழ்வாருக்குத் துதி கூறும் வழக்கம் உண்டாயிற்று. நம்மாழ்வார் தோன்றிய ஊர் ஆழ்வார் திருநகரி எனப்புகழ் பெறறது. அவ்வூரின் பெருமையை எடுத்துரைக்கும் விதமாக ஒரு கதையும் வழங்கி வருகிறது. அந்தக் கதை:

தாமிரபரணியாற்றின் வடகரையில் ஒரு யோகி இருந்தார். அவர் அன்புடன் ஒரு நாயை வளர்த்து வந்தார். நாள்தோறும் அந்நாய் வைணவப் பெரியார் வீடுகளின் முன் கிடக்கும் எச்சிலையில் உள்ள உணவை உண்டு திரும்பி வரும். இவ்வாறிருக்கையில் ஒருநாள் வழக்கம்போல் திருநகருக்குச் சென்ற நாய் வெகுநேரம் வரையில் திரும்பி வரவில்லை. அதனால் யோகி மனம் வருந்தியவராய், பொருனையாற்றில் வடகரையில் நின்று தென் கரையிலிருக்கும் அத்திரு நகரை நோக்கி, அதன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்போது அந்நாய் நட்டாற்றில் வந்து கொண்டிருந்தது. அச்சமயம் திடீரென்று ஆற்றில் பெருவெள்ளம் வந்துவிட்டது. அவ்வெள்ளத்தை எதிர்த்து நாய் தன்னால் ஆன மட்டும் நீந்திக்கரையை அடைய முயன்றது. ஆனால் வெள்ளத்தை அதனால் கடக்க முடியவில்லை. வெகு நேரத்துக்குப் பின் அதன் கால்களும் சோர்ந்துவிட்டன. அது நீரில் மூழ்கி மேலே வந்தது. வயிறு நிறைய நீரையும் குடித்துவிட்டது.

அதனால் நாயின் மண்டை வெடித்தது. உடனே மண்டை வழியே நாயின் ஆத்மா பெரும் பேரொளியுடன் எழுந்து விண்வெளி நோக்கிச் சென்றது. அதைக் கண்ட யோகி பெரும் வியப்படைந்தார். நாய் வீடுபேறு பெற்றதை எண்ணினார். எதனால் அதற்கு இப்பேறு கிடைத்தது?" என்று சிந்தித்தார், ஆழ்வார் திருநகரியில் வாழும் வைணவர்களின் எச்சிலை உண்டதால்தான் அந்த நாய்க்கு இந்த அரும் பெரும் பேறு கிடைத்தது என்பதை முடிவில் உணர்ந்தார். அதனால் அவர் மனம் உருகிக் கண்களில் நீர் மல்கி நம்மாழ்வாரின் பெருமைகளை எண்ணி,

'வாய்க்கும் குருகைத் திருவீதி எச்சிலை வாரியுண்ட
நாய்க்கும் பரமபதம் அளித்தாய் அந்த நாயோடு இந்தப்
பேய்க்கும் இடமளித்தால் பழுதோ? பெருமான் மகுடம்
சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத் தமிழ்க்கடலே!

என்று போற்றி, மேலும் பல பாடல்களைப் பாடிப் பணிந்தார், அது முதல் நம்மாழ்வார் மீது ஆராக்காதலும் பக்தியும் கொண்டு

வாழ்ந்திருந்தார். முடிவில் நம்மாழ்வாரின் அருட்திறத்தால் யோகியும் பரமபதம் அடைந்தார்.

ஒருசமயம் மதுரை தமிழ்ச்சங்கத்தைச் சேர்ந்த சில புலவர்களுக்கும் மதுர கவிராயருக்கும் வாக்குவாதம் எழுந்தபோது நம்மாழ்வார் எழுதிய ஒரு சிறு பாடலுக்கு சங்கப்பலகை இடந்தந்து மற்றவர்களை கீழே தள்ளிய ஒரு நிகழ்ச்சி சடகோபரந்தாதியில் கூறப்படுகிறது. (அதன் விரிவை மதுரகவியாழ்வார் கதையில் காண்க.)

மகாகவி கம்பர் இராம கதையைத் தமிழில் பாடவிரும்பி வால்மீகர் அத்யாத்மம் போதாயனம் முதலான இராமாயணங்களையும் புராணங்களையும் வடமொழிப் புலவர்கள் மூலம் ஆராய்ந்து தமக்கென ஒரு தனி வழி வகுத்துக்கொண்டு, தமிழில் கம்பராமாயணத்தின் ஆறு காண்டங்களையும் பதினைந்தே நாளில் பாடி முடித்து அதை ஸ்ரீரங்கத்திலே அரங்கநாதப் பெருமாள் முன் அரங்கேற்ற விரும்பினார்.

அதனால் அவர் ஸ்ரீரங்கத்திற்குச் சென்று வைணவ சமய ஆச்சாரியாரான ஸ்ரீமத்நாத முனிகளின் அனுமதி பெற்று ஒரு மண்டபம் எழுப்பி ஒரு நன்நாளில் தம் இராமாயணத்தை அரங்கேற்ற முனைந்தார். அப்போது ஸ்ரீரங்கநாதபெருமான் அவர் கனவிலே 'எம்மை நீ பாடினாய் அன்றி நம் சடகோபனைப் பாடினாயோ! அவனையும் நீ பாடினால்தான் உன் ராமாயணத்தை நாம் ஏற்போம்!" என்று கூறினார்.

அதற்கெனவே கம்பர் நம்மாழ்வாரான சடகோபர் மீது நூறு கட்டளைக் கலித்துறைப் பாக்களால் சடகோபரந்தாதியை இயற்றினார். அதன் பிறகே அவருடைய ராமாயணம் நாதமுனியின் திருவோலக்கத்தின் மோட்டழகிய சிங்கர் சிரக்கம்பம் செய்யும் வண்ணம் அரங்கேற்றப்பட்டது.

6. குலசேகராழ்வார்

சோழ நாடு சோறுடைத்து. பாண்டி நாடு முத்துடைத்து, என்பது போல் 'மலை நாடு வேழமுடைத்து, என்று கூறுவார்கள், மலை நாடு என்பது சேர நாடாகும். அச்சேரநாட்டிலே யானைகள் மிகுதியாக பசுக்களைப்போல் எங்கும் வட்டமிட்டுத் திரியும், அங்கே நீண்ட தொடரென மலைகளும் காடுகளும் கவின் பெறு அழகோடு கண்களைக் கவரும், மலைகளில் தோன்றி வழியும் அருவி கீழிறங்கி நதியாக வெள்ளப் பெருக்கோடு வயல் வெளிகளின் நடுவில் பாய்ந்து, அந்த நாட்டை வளம் கொழிக்கும் பூமியாக்கும் அந்த நாட்டின் தலைநகராக சிறப்புகள் பல கொண்ட வஞ்சிக்களம் விளங்கியது. அதற்கு கொல்லிநகர் என்று பெயரும் வழங்கி வந்தது. அத்திரு நகரில் வானுயர்ந்த மாளிகைகளும் கலைக் கோயில்களும் படை வீடுகளும் நிறைந்திருந்தன. கற்பின் கொழுந்தாய் பெண்களும் நல்லொழுக்கச் சான்றோர்களும் அந்நாட்டை விட்டு என்றும் நீங்காமல் வாழ்ந்து வந்தார்கள். சேர நாட்டை வழிவழியாக, நெடுங்காலம் சேர மன்னர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்கள் பெரும் சிறப்பும் புகழும் உடையவர்கள்.

சேரமன்னர் மரபில் அன்பிற்கும் அருளுக்கும் இருப்பிடமாக திடவிரதன் என்னும் மன்னன் ஒருவன் திகழ்ந்தான். அவன் கல்வியறிவிலும் செங்கோல் வழுவாமல் அறநெறி பிறழாமல் ஆட்சி செலுத்தும் தன்மையிலும் சிறந்தவன். மக்களுக்கு நன்மைகளையே செய்து திருமாலின் மீது நீங்கா பக்தி கொண்டிருந்தான். அவன் பகைவர்களைப் புறமுதுகிட்டு ஓடச் செய்யும் வீரன். அதே போல் தன்பால் பரிசில் வேண்டி வருவோர்க்கு வேண்டிய பொருள்களைக் கொடுத்தனுப்பும் ஈகை குணமும் வாய்ந்தவன்.

'வீரக்ஷத்திரிய குலத்தை சேர்ந்த அப்பேரரசனுக்கு, தான் செய்த தவத்தின் பயனாக, முழு நிலாவைப் போன்ற அழகும், திருமாலின் அருங்கருணையே திரண்டு வந்தது போலவும், அடியவர்களின் அருட்செல்வம் போன்றும் உலகம் போற்றி

வாழ்த்துதற்கு உரிய ஒரு மைந்தர் (கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே) பராபவ ஆண்டில் மாசி மாதம் சுக்கில துவாதசி வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரம் கூடிய நன்னாளில் ஸ்ரீகௌஸ்து அம்சமாகப் பிறந்தார், அம்மைந்தரைக் கண்டு மாமன்னன் அளவிடற்கரிய மகிழ்ச்சியடைந்து, உடனே தலைநகரெங்கும் மங்கலவிழா எடுக்கச் செய்தான். வறியவர்களுக்கு வாரி வாரிச் செல்வத்தை வழங்கினான், புலவர் பெருமக்களுக்கெல்லாம் வேண்டியளவு பொன்னும், பொருளுமாகப் பரிசுகள் தந்து மகிழச்செய்தான். நகரக் கோயில்கள் அனைத்திலும் பூசைகள் செய்வித்தான். அந்நகரமே எழிலோடு திருவிழாக்கோலம் பூண்டு சொல்லொண்ணாத குதூகலத்தில் ஆழ்ந்தது.

உலகம் உய்யும் பொருட்டு திருமாலின் அருளால் வந்து பிறந்த மைந்தருக்குப் பத்து நாட்களும் செய்ய வேண்டுவன வற்றைச் செய்து பின் மலர்களைக் கூந்தலிலே அணிந்த நல் மங்கையர்கள் மங்கலப் பாட்டுகள் பாடச் சான்றோரும் ஆன்றோரும் வாழ்த்த புலவர்கள் புகழ்ப் பாட்டுயியற்ற, செந்தமிழ்க் கன்னி மகிழ்ச்சி தெரிவிக்க, மங்கல வாத்தியங்கள் முழங்க, முதியவர்கள் ஒன்று கூடி நன்கு சிந்தித்து சேரர்குலம் செழிக்கப் பிறந்த செம்மலுக்குக் 'குலசேகரன்' என்று பெயர்ச் சூட்டி மகிழ்ந்தார்கள்.

குலசேகரர் கிள்ளைமொழி பேசியும், முத்தம் கொடுத்தும். புலவர்கள் பிள்ளைத்தமிழ்பாட அதற்குரிய செயல்களான செங்கீரை ஆடியும்,- சப்பாணி கொட்டியும் சிறு பொற்தேர் உருட்டியும் பெற்றோர்களை மகிழ்வித்தார். தங்கள் புதல்வரின் மீது பெற்றோர்கள் அளவற்ற பாசத்தைக் கொட்டி வளர்த்து வந்தார்கள். தங்களின் ஆருயிரே போன்றும், கண்ணே போன்றும், அம்மைந்தரை சிறிது நேரமும் விட்டுப் பிரியாது வெகுகவனமாக அன்புடன் வளர்த்தார்கள்.

குலசேகரருக்கு ஐந்து வயதாயிற்று. அவருக்கு கற்கவேண்டிய நூல் பலவும் கற்பித்தனர். செந்தமிழிலும் வான் மொழி என்னும் வடமொழியிலும் அவர் எல்லா நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். அவற்றில் கவி பாடவும் ஆற்றல் பெற்றார். யானையேற்றம், குதிரையேற்றம், தேர் ஓட்டுதல்,



6. குலசேகராழ்வார்

வாள் சண்டை, குத்துச்சண்டை, ஈட்டி எய்தல் ஆகிய படைக்கலப் பயிற்சியும் பெற்று பெரும் வீரராகவும் விளங்கினார். அவரின் வீரத்தையும் கல்வியறிவையும் கலைப்பற்றையும் தெய்வ பக்தியையும் கண்டு சான்றோர்கள் போற்றிப் புகழ்ந்தார்கள். தக்க பருவம் வந்ததும் அவருடைய தந்தை அவரை இளவரசராக்கி மகிழ்ந்தார்.

தம் தந்தையாரின் காலத்திற்குப் பிறகு குலசேகரர் நல்லதொரு மங்கல நாளில் பெரியோர்கள் கூடி முடி சூட்டப்பெற்று சேர நாட்டை ஆண்டு வரலானார். தந்தையைக் காட்டிலும் மிகத் திறமையாக அரசாட்சி நடத்தினார். அவருடைய அறநெறி ஆட்சியில் மக்கள் கவலையற்று வாழ்ந்தனர். வலியார் மெலியாரைத் துன்புறுத்தாமலும் எங்கும் பஞ்சம் என்பதே தலைகாட்டாமலும் பெண்களின் கற்புக்குக் களங்கம் வராமலும் தெய்வநியதிகள் தவறாமலும் புலவர்கள் இகழப்படாமலும் பார்த்துக் கொண்டார். அதனால் தமிழகத்துச் சான்றோர்களெல்லாம் அவரே சிறந்த மன்னர் என்று போற்றிப் புகழ்ந்தனர். அவருடைய திறமையையும், அறிவையும் ஆட்சி செய்யும் ஆற்றலையும் சான்றோர்கள் அவரைப் போற்றுதலையும் கண்ட சோழ மன்னனும் பாண்டிய மன்னனும் அவர்மீது பொருமை கொண்டார்கள். அவரைப் போரிலே வென்று அவமானப் படுத்தவும், தங்கள் சிறப்பைப் பெருக்கிக் கொள்ளவும், சேர நாட்டைத் தங்கள் ஆட்சிக்குள் கைப்பற்றிக் கொள்ளவும் பேராசைப்பட்டார்கள். அதனால் குலசேகரரைப் போரில் வெல்லக்கருதி அவரை எதிர்த்தார்கள். அவர் அப்போரிலே அவ்வேந்தர்களை வென்று வெற்றி மாலை சூடினார். அவர் தாமே "கொல்லியலும் படைத்தானைக் கொற்ற ஒள்வாள் கோழியர் கோன்குடைக் குலசேகரன்" என்று நாந்திப் பாசுரங்களில் கூறியவாறு சேர சோழ பாண்டிய நாடுடைய தமிழகத்தை ஒரு குடைக்கீழ் ஆண்டு பெரும் சக்கரவர்த்தியென கீர்த்திப் பெற்றுத் திகழ்ந்தார். பாண்டிய மன்னன் அவருடைய ஆண்மையைக் கண்டு தன் அருந்தவப் புதல்வியை அவருக்கு திருமணம் செய்து கொடுத்தான்.

குலசேகரர் அவ்வாறு வீரப்போர் நிகழ்த்தும் விருப்பம் உடையவராகவும், இல்லற வாழ்க்கையில் பெரும் இச்சை கொண்டவராகவும் வாழ்ந்து வரும்போது பாம்பணையில் பள்ளி

கொண்ட பரந்தாமன், அவர் மனத்திலே புகுந்து அவரிடம் உறவாடிய 'நான்' என்று அகப்பற்றையும் 'எனது' என்ற புறப்பற்றையும் நீக்கி தன் மீதே மிகுந்த நேசம் உடையவராக இவரை மாற்றியருளினார், அது முதல் குலசேகரர் நாராயணனான அந்த பரந்தாமன் தன்னடியாருக்கு எளியவனாக விளங்குவதையும், உலகத்து உயிர்களைத் தன்னுயிர்போல் காத்தருளும் தன்மையையும், அவனுடைய பெருமைகளையும் உணரத் தொடங்கினார். தாம் இதுவரை செய்த போர்களின் தன்மையை எண்ணி மனம் வருந்தினார். உலகப்பற்றில் அவருக்கு வெறுப்பு உண்டாயிற்று. பவளவாய் கமலச் செங்கண்ணனின் அருட்திறத்தை நாள்தோறும் எண்ணி எண்ணி மகிழ்ந்தார், அதே சமயம் தாம் இதுவரை வாழ்ந்த வாழ்க்கையை நினைத்து 'நான் எனது என்றும் பற்றினால் நான் செய்த செயல்களெல்லாம் எத்தனை அற்பமானவை மெய்யறிவை மறந்து பொய்யறிவிலே புரண்டு மறுமைப் பேரின்பத்திற்குரிய வழியை நாடாமல் பிறவிச் சுழலுக்கே கவர்ந்திழுக்கும் போகங்களை நாடி சிறுமைகளை எல்லாம் பெருஞ்செல்வமாகவும் கருதி வீண்பொழுதாகக் கழித்து விட்டேனே' என்று மனங்கலங்கி வருந்துவார்.

மேலும் "திருவரங்கத்தில் கோயில் கொண்டுள்ள கரும்பனைய ரங்கநாதனைக் கண்டு மகிழாமலும், அவருக்குத் தொண்டு செய்யாமலும், நீள் சுவரென வாழ்ந்து வீண்பொழுது கழித்து விட்டேனே" என்பார்.

குலசேகர ஆழ்வாருக்கு நாளாக நாளாகத் திருவரங்கப் பெருமான் மீதுள்ள பக்தி அளவு கடந்ததாயிற்று. அவர் நாள்தோறும் 'நான் மிகுந்த செல்வமுள்ள குடியிலே மனிதனாகப் பிறந்து வேறு இடத்தில் வாழ்ந்து இன்பம் அடைவதை விரும்பவில்லை. அதைவிடத் தாழ்வான-இழிவான பிறவியென்று கருதப்படும் நாரையாகப் பிறந்து-உனது திருவேங்கடமலையில் உள்ள கோனேரித் தீர்த்தத்திலே வாழும் நாரைகளுடன் கலந்து வாழ்ந்து எப்பொழுதும் உன்னையும் உனது திருவேங்கட மலையையும் விட்டு நீங்காமல் இருப்பதையே விரும்புகிறேன்" என்பார். "நான் தேவலோகத்திலே அரசனாக இந்திரனாக வாழ்ந்து அனுபவிக்கும் இந்திரபோகத்தையும் விரும்பவில்லை. இவ்வுலகம் முழுவதையும் ஆண்டு இன்பமடையும், அரச

போகத்தையும் விரும்பவில்லை. இத்தகைய இன்பங்களை யெல்லாம்விட கோனேரி தீர்த்தத்திலோ அல்லது திருவேங்கட மலையில் உள்ள வேறு நீர்ச்சுனையிலோ ஒரு மீனாகப் பிறந்து திருவேங்கடமலையை விட்டுப் பிரியாமல் வாழ்வதையே விரும்புகிறேன்" என்பார்.

அத்துடன் மட்டும் அவர் மனம் செல்லவில்லை. கண்ணனைப் பெற்றெடுத்த தாயாகிய தேவகி, அவனுடைய பால லீலைகளைப் பார்த்து மகிழும் பேற்றைப் பெறவில்லையே என்று வருந்துவார். அவர், தன்னைத் தேவகியாகவே பாவித்துக்கொண்டு தானே தேவகியாகவே இருந்து தன் மகன் கண்ணனைப்பற்றிப் பாடி மகிழ்வார்.

'தண்அம் தாமரைக் கண்ணனே! கண்ணா
தவழ்ந்து எழுந்து தளர்ந்து ஓர் நடையால்
மண்ணில் செம்பொடி ஆடிவந்து என்தன்
மார்பில் மன்னிடம் பெற்றிலேன்! அந்தோ!
வண்ணச் செம்சிறு கைவிரல் அனைத்தும்
வாரி வாய்கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன் ஓ! கெடுவினையேன்
என்னை என்செயப் பெற்றது எம் மோயே!"

என்று நெஞ்சுருகிப் பாடுவார். ஆம், குலசேகரர் கண்ணனைத் தன்னுடைய குழந்தையாகவே பாவித்தார். அவருடைய உள்ளம் அவன்மீதே சென்று கலந்துவிட்டது. கண்ணன் குறும்புகள் பல புரியும் பாலகனாக ஆயர்பாடியிலே வளர்ந்து குமரப்பருவம் கோலம் கொண்டு கோதையர் மயங்கிடக் குழல் ஊதிக் கோமளக் கண்ணனை ஆடிப்பாடி மகிழ்வூட்டிய கதைகளையெல்லாம் தம் கற்பனையிலே நடமாடவிட்டு அக்கண்ணன்மீதே ஆழ்ந்த காதல் கொண்டார். தன்னையே காதலியாக வைத்துப் பாடி மகிழ்ந்தார். 'காதலன் கணவன்-கொடியவனாயிருக்கலாம். பிறர் இகழத்தக்க செய்கைகளைச் செய்கின்றவனாக இருக்கலாம். அவர் மனைவி நல்ல கற்புடையவளாக இருந்தால் அவனைக் கைவிடமாட்டாள். கொடும் செயல்களைச் செய்யினும் கணவனையே தெய்வம் என்று போற்றுவாள்.

அதுபோலவே, வானைமுட்டும் மதில் சூழ்ந்த விற்றுவக்கோட்டில் உள்ள தலைவனே, என்னை நீ ஆட்கொண்டு காப்பாற்றாவிட்டாலும் உன்னுடைய ஓசையிடும் வீரக்கழலையுடைய அடிகளைப்பற்றியே எப்பொழுதும் போற்றிக் கொண்டிருப்பேன். தன் காதலனைப் போற்றும் கற்புடைய மகளைப் போலவே நான் வாழ்வேன். கண்டார் இகழ்வனவே காதலன் தான் செய்திடினும் கொண்டானை அல்லால் அறியாக் குலமகள் போல் விண்நோய் மதில்புடைசூல் விற்றுவக் கோட்டு அம்மானே! கொண்டு ஆளாய் ஆகிலும் உன்குரை கழலே கூறுவனே!"

தம் உள்ளத்தில் ஆத்மநாதனுக்கே காதலியாக மாறிய ஆழ்வார் மேன்மேலும் அஞ்சன வண்ணனிடம் பக்திபூண்டு ஞான முதிர்ச்சி பெற்றபோது சிவந்த நெருப்பைப்போல வந்து தீய்த்தாலும் சரி கொடியவனான கதிரவனைச் செந்தாமரை கண்டால் மலராமல் இருப்பதில்லை. குளிர்ச்சியைத் தரும் சந்திரனைக் கண்டால் மலர்வதில்லை. சூட்டைத் தரும் சூரியனைக் கண்டால்தான் மலர்கிறது. விற்றுவக் கோட்டில் உள்ள தலைவனே! நீ என் துன்பத்தை ஒழிக்கா விட்டாலும் சரி, உன்னுடைய அளவற்ற புகழைக் கேட்டால்தான் - பாடினால்தான்- என் உள்ளங்கனியும், குழையும். வேறு யாருடைய புகழைக் கேட்டாலும் நான் மனங்கனிய மாட்டேன்" என்று அவ்விறைவனிடம் தன்னையாட்கொள்ள வேண்டியும், "என்றும் உன்பால் நான் அடியவனாயிருப்பேன்" என்றும் கூறுகிறார். அவர் பாமொழியாக இதனைக் காண்க.

"செந்தழலே வந்து அழலைச் செய்திடினும், செங்கமலம்
அந்தரம் சேர் வெம்கதிரோற்கு அல்லால் அலராவால்;
வெம்துயர் வீட்டாவிடினும். விற்றுவக் கோட்டு
அம்மானே! உன்
அந்தம் இல்சீர்க்கு அல்லால் சுகம் குழையமாட்டேனே"

இவ்வாறு அவர் திருமால்மீதே அன்படிமையாகி வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு நாளும் அவ்விறைவனின் தொண்டர்கள் பலரை வருவித்து அவர்களுக்கு அறுசுவை உணவளித்து, அவர்களுடைய சேவடிகளை அன்புடன் போற்றி வாழ்த்தினார்.

குலசேகரர் இவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் புராணக் கதைகளைக் கேட்பதில் ஆர்வம் உள்ள அவருக்கு நாராயணன் விளையாட்டான இராமாயணம் கேட்க வேண்டும் என்ற விருப்பம் எழுந்தது. நற்குணசீலரும், ராமபக்தருமான ஒரு வைணவப் பெரியாரைக் கொண்டு வால்மீகர் இயற்றிய இராமகதையை நாள்தோறும் கூறச் செய்து கேட்டு வந்தார். ஆழ்வார் இராமாயணம், கேட்கும் பொழுது அவருடைய நெஞ்சம் கரைந்து போகும் கண்களில் ஆனந்தக்கண்ணீர் கங்கையெனப் பெருகி வழிந்தோடும். கதை கூறும் சூழ்நிலைகளிலே அவருடைய உள்ளமெல்லாம் குளிர்ந்துவிடும் பக்திப் பரவசமாகி தம்மையும் தம் சுற்றுப்புற சூழ்நிலைகளையும் மறந்து அதிலேயே ஒன்றி விடுவார். ஒருநாள் இராம காதையைக் கூறி வந்த வைணவப் பெரியார் இராமபிரான் அரக்கர்களுடன் போர் புரிந்த நிகழ்ச்சியை விவரிக்கத் தொடங்கி. ''இலக்குமணன் வில்லை ஏந்திக் கவசத்தைத் தரித்து அம்புறாத்தோணியை தோளில் இட்டு, வாளை இடையில் செருகிக் கொண்டு, இராமபிரானிடம் வந்து அவ்வரக்கர்களிடம் சென்று போர் புரிய விடை கேட்டான்.

உடனே இராமன். "நீ சீதையைக் காத்துக் கொண்டிரு, நான் சென்று அவ்வரக்கர்களையெல்லாம் அழித்துவிட்டு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுக் குகையிலிருந்து வெளிவரும் சிங்கம்போல் பன்னசாலையிலிருந்து வெளியே வந்தான். அது கண்ட சூர்ப்பனகை. "இவனே அரக்கர்களின் பகைவனாகிய இராமன்" என்று கத்தினாள். அம்மொழியைக் கேட்ட அரக்கர்கள் இராமனைச் சுற்றிச் சூழ்ந்து ஒரே சமயத்தில் எல்லோரும் பலவகை படைக்கலங் கொண்டு தாக்கத் தொடங்கினார்கள். அரக்கர்களின் அம்புகளும், வேல்களும். வாள்களும், சூலங்களும் எம்பெருமான் இராமன் மீது பட்டு விழுந்தன" என்று கூறினார்.

இராமனின் சரிதத்தைக் கேட்டுவந்த குலசேகருடைய மனம் அப்பொழுது அதிலே முழுதுமாக ஆழ்ந்திருந்ததால் அவர். "ஆ! இராமர் அரக்கர்களின் மத்தியிலே தன்னந்தனியாக நின்று போர் செய்கிறாரே! மாயையில் வல்லவர்களும் விண்ணவர்களும் கண்டு பயந்தோடும்படியான போர்த்

திறமையைப் பெற்றவர்களுமான கரன், தூடணன், திரிசிரன் ஆகியோர்களின் பெரும் படையை எப்படித்தான் எதிர்த்து வெல்லப் போகிறாரோ? ஐயோ இது என்ன? எப்படி இது முடியுமோ? நம்மையாளும் ஆருயிர்த் தலைவருக்கு உதவிபுரியாமல் நாம் சும்மா இருத்தல் தகுதியில்லையே உடனே சென்று அவருக்கு உறுதுணையாக அரக்கர்களை எதிர்த்துப் போர் புரிய வேண்டும்' என்று உணர்ச்சி வேகத்தோடு துள்ளியெழுந்தார்.

உடனே தம் படைத் தலைவர்களைக் கூவியழைத்தார், நான்கு வகைப் படைகளையும் உடனே போருக்கு ஆயத்தமாகும்படி திரட்டச் சொன்னார்! படைத் தலைவர்களோ ஒன்றும் புரியாமல் மயங்கி நின்றார்கள். நம்மை எதிர்த்த சோழரும் பாண்டியரும் மூலையில் முடங்கிக் கிடக்கிறார்களே! வேறு எதிரிகளும் நமக்கு இல்லையே? அவ்வாறிருக்க ஏன் படைகளை மன்னர் உடனே போருக்கு ஆயத்தமாகத் திரட்டச் சொல்கிறார்? ஒரு வேளை மன்னரின் மனத்தை யாரேனும் புண்படுத்தியிருக்கக் கூடுமோ? அவ்வாறிருக்க நியாயமும் இல்லை. மன்னர் எல்லோரிடமும் அன்புடனும், அருளுடனும் இருக்கிறாரே. அவருடைய தெய்வ பக்தியை பாராட்டாதாரும் இவ்வுலகில் உண்டோ? எது எவ்வாறாயினும் இருக்கட்டும். அவர் கட்டளையை நிறைவேற்றுவதே நம் கடமை என்றெல்லாம் எண்ணமிட்ட படைத் தலைவர்கள் பிறகு நால்வகை சேனைகளையும் உடனே போருக்கு ஆயத்தமாகத் திரட்டிக் கொண்டு வந்தார்கள். அப்படைகளை நோக்கினால் நிச்சயம் அரக்கர்கள் மட்டுமல்ல. வானத்து தேவர்களும் அஞ்சி ஒடுங்கி விடுவார்கள் எனத் தோன்றும்.

குலசேகரனின் தேர்ப்பாகன் தேரைப் போர் கோலத்துடன் கொண்டு வந்து அவரருகே நிறுத்தினான். குலசேகரரும் போர்க் கோலம் பூண்டு அருச்சுனன் போல் வெகு பீடுடன் தேரில் அமர்ந்தார்.

மன்னரின் மனநிலையை ஒருவாறு அறிந்து கொண்ட அமைச்சர்கள், இராமாயணம் கூறும் அப்பெரியவரைத் தனியே அழைத்து உண்மையை அறிந்து கொண்டு அவருக்கு இனி

செய்யவேண்டுவனவற்றைக் கூறினார்கள். அவரும் குலசேகரச் சக்கரவர்த்தியிடம் சென்று வணங்கி அவர் பாதங்களில் மலர்களை வைத்து "உலகம் யாவையும் ஒரு குடைக்கீழ் ஆளும் தன்மையுடைய வேந்தர்பிரானே! தங்களுடைய அன்பும் அருளும் மேலும் மேலும் சிறந்து விளங்குவதாக! தங்களுடைய வீரம் உலகம் உள்ளளவும் வாழ்வதாக! ஆ, என்ன வியப்பு! ஒரு நொடிப் பொழுதில் அரக்கர் சேனை முழுதும் சின்னாபின்னமாகி விட்டன அனைவரும் அழிந்தனர். கரனும் தூடனனும் திரிசிரனும் தங்களுடைய பெறற்கரிய உயிரைத் துறந்தனர். சக்கரவர்த்தி மகனான ஸ்ரீராமன் தனி ஒருவராகவே நின்று அரக்கர்களை யெல்லாம் அழித்து வெற்றி வாகை சூடி விட்டார்.

பிறகு பன்னசாலையை நோக்கி வந்தார்; சீதாப்பிராட்டி எம்பெருமானின் மார்பில் பட்டிருந்த புண்களுக்கெல்லாம் மருந்தாக அவரைத் தழுவி மகிழ்ந்தாள். இளையபெருமானான இலக்குமணன் வந்து அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி எழுந்து அந்தக் காட்சியை ஆனந்தக் கண்ணீர் சிந்தக் கண்டான். கார்குழல் வேந்தர் பின்பு விபீடணனை இலங்கைக்கு மன்னனாக்கி மணிமுடி சூட்டி மகிழ்ந்தார். இறுதியில் எல்லோரும் அயோத்தி மீண்டனர். அயோத்தியின் ஏகச் சக்கரவர்த்தியாக இராமபிரான் மணிமுடி தரித்து இவ்வுலகை அன்புடனும் அருளுடனும் பரிபாலித்து வந்தார். வாழ்க, ஸ்ரீராமபிரான்! வாழ்க. சீதாபிராட்டி; அப்பெருமானின் கழலடி போற்றித் துதிப்போம் என்று இராமன் காதையைக் கூறி முடித்தார்.

குலசேகரருக்கு, அவற்றைக் கேட்டுத் தெளிவு உண்டாயிற்று, அவர் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினார். எம்பெருமானாகிய இராமபிரான் அருள் திறத்தில் மனம் ஒன்றிப் பேரானந்தமுற்றார். தம் நிலையையும் அவர் அறிந்தார். நமக்கு இராம காதையைச் சொல்லிய வைணவப் பெரியாரை வணங்கி அவருக்கு விடைகொடுத்து அனுப்பிவிட்டுப் படைத்தலைவர்களை நோக்கி "படைத் தலைவர்களே! படைகளை அவற்றின் இருப்பிடத்திற்கே அனுப்பிவிடுங்கள் என்று கூறிவிட்டு அரண்மனைக்குச் சென்றார்.

மன்னரின் வைணவபக்தி அதிகமாகிவிட்டதை அறிந்த அமைச்சர்கள் ஒன்றுகூடி விவாதித்தார்கள். "வைணவர்களின்

கூட்டுறவாலேயே இவ்வாறு மன்னர் பைத்தியமானார். அதனால் அவர்களின் கூட்டுறவை ஒழிக்க வேண்டும். அதற்கு என்ன வழி? என்று ஆராய்ந்தார்கள். கடைசியில் ஒருவழியாக பெருமானுடைய அணிகலப் பேழையிலிருந்து ஒரு நவமணி மாலையை யாரும் அறியாதவாறு எடுத்து, மறைத்து விட்டார்கள்.

மறுநாள் வழக்கம்போல் குலசேகரர் எம்பெருமானை ஆராதிப்பதற்காகப் பேழையைத் திறந்தார். அதிலே நவமணி மாலை இல்லாதிருப்பதைக் கண்டுத் திடுக்கிட்டார். செய்வதறியாது கலங்கினார். பிறகு அமைச்சர்களை அழைத்துச் செய்தியைக் கூறினார்.

அமைச்சர்கள், "வேந்தே! இவ்வரண்மனையில் இவ்விடம் வருவதற்கு வைணவர்கள் மட்டுமே உரிமை உடையவர்கள். அவர்களில் தான் யாரேனும் அதைத் திருடிச் சென்றிருக்க வேண்டும்; வேறு யாரும் எடுத்திருக்க ஒரு சிறிதும் நியாயம் இல்லை!" என்றார்கள்.

"அமைச்சர்களே! அவ்வாறு கூறாதீர்கள், ஆதனூர் எந்தையடியார், இப்பெரும் பாவத்தைப் புரியமாட்டார்கள். அவர்கள் நான் எனது என்ற அகப் புறப்பற்றை நீக்கிய உத்தமர்கள். பேரழகுப் பெண்களாலும் அவர்களை மயக்க முடியாது. அப்படியிருக்க அவர்கள் இக்கீழ்நிலையானச் செயலை ஒருக்காலும் புரிந்திருக்கமாட்டார்கள் அவர்கள் எடுத்திருக்க மாட்டார்கள் என்பதை நீங்கள் நன்கு உணரும்படிச் செய்கிறேன். ஒரு குடத்தில் நல்ல பாம்பு ஒன்றையிட்டு என்னிடத்தில் கொண்டு வாருங்கள்" என்று குலசேகரர் கூறினார்.

அவ்வாறே அவர்களும் வேறு வழியின்றிச் செய்து முடித்தார்கள். ஆயினும் அவர்களுடைய நெஞ்சம் பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. குலசேகரர் அவர்களையெல்லாம் ஒருமுறை பார்த்து விட்டு, எம்பெருமானுடைய அடியவர்கள் அம்மாலையை எடுத்திருப்பார்களானால் இப்பாம்பு என்னைத் தீண்டட்டும்; இல்லையேல் இது என்னைத் தீண்டாது சும்மா இருக்கட்டும்" என்று கூறி தம் கையை குடத்தினுள் நுழைத்தார். நல்ல பாம்பு அவரைத் தீண்டாது அவர் கையை முத்தமிட்டு

வணங்குவது போல் மடங்கி குடத்தினுள் ஒடுங்கிக் கிடந்தது. பிறகு அவர் கையை வெளியே எடுத்தார். பாம்பு வெளியே வந்து படம் எடுத்தாடி அவரை வணங்கியது. குலசேகரர், "இப்பாம்புக்கு தீங்கு ஏதும் செய்யாமல் பத்திரமான இடத்தில் கொண்டு போய்விட்டு விடுங்கள்!" என்று தம் பணியாளனுக்குக் கட்டளையிட்டார்.

அமைச்சர்கள் மனம் நடுங்கித் தாங்கள் செய்த தவறை அவரிடம் கூறி, நவரத்தின மாலையைத் திருப்பிக்கொடுத்து தலை முடி கீழே படுமாறு வணங்கி எழுந்து, தங்களை மன்னித்தருளு மாறு வேண்டினார்கள்.

குலசேகரர், அவர்கள் அறியாமையால் செய்த தவறை மன்னித்தார். பின்பு அவர்களை நோக்கி "என் அன்புக்குரிய அமைச்சர்களே! நீங்கள் இவ்வுலகத்து இன்பம் ஒன்றையேகருதி அதற்கே ஆட்பட்டு மயங்கி மாயையில் தவித்து நிற்கிறீர்கள். இவ்வுலகப்பற்றை நீக்கி எம்பெருமானின் திருவுளத்தைக் கண்டுகளிக்க வாருங்கள். அதுதான் நித்திய இன்பத்தைத் தரக்கூடியது பேரின்பத்திற்கு வழிகாட்ட வல்லது. எம்பெருமானின் திருவடி ஒன்றே சாகாவரத்தை அளிக்கும் அருமருந்தாகும்! இனியும் மாயையில் உழலாதீர்கள், ஆதிகேசவனின் அருங்கருணைத் தேனை உண்டு கொண்டிருக்கும் என் மனவண்டை இவ்வுலகத்து மாயையான இன்ப மலரில் இருக்கச் செய்ய இனி ஒருபோதும் முயலாதீர்கள். அது மட்டுமல்ல; என் செயல்களைப் பேயர்கள் செய்யும் செயலாகக் கருதாதீர்கள். நானே உங்களையெல்லாம் பேயர்களாக மதிக்கிறேன். இனி நான் அரசு வேண்டேன். இவ்வரசை என் மைந்தருக்கு கொடுத்துவிட்டு எம்பெருமானின் திருத்தொண்டில் நான் முழுதுமாக ஈடுபடப் போகிறேன்" என்றார்.

அமைச்சர்கள் இனிமேல் தங்கள் மன்னரின் மனத்தை எவற்றாலும் மாற்ற முடியாது என்பதை உணர்ந்து கொண்டார்கள். நல்லதொரு மங்கல நாளில் அவருடைய மைந்தருக்கு முடிசூட்டுவித்தார்கள். குலசேகரர் தம் மைந்தருக்கு அரசியல் திறமைகளைக் குறைவறப் போதித்து நாட்டை ஆளும் பொறுப்பிலிருந்து தம்மை முழுதுமாக விடுவித்துக் கொண்டார்.

பிறகு அமைச்சர்களிடமும் மைந்தரிடமும் மக்களிடமும் விடைபெற்றுக்கொண்டு, அரங்கத்தம்மானின் அடியவர்களோடு சேர்ந்து ஸ்ரீரங்கத்திற்குச் சென்று ரங்கநாதப் பெருமாளைச் சேவித்தார். காஞ்சிபுரம் திருப்பதி முதலான திருத்தலங்களுக்கெல்லாம் யாத்திரை சென்றார்.

அவர் பெரிய பெருமாளாகிய இராமனிடத்தே அதிக பக்தி பூண்டு எப்பொழுதும் இராம காதையைக் கேட்டு இன்புற்றாராகையால் அவரை "பெருமாள்" என்றும் "குலசேகரப் பெருமாள் என்றும் சான்றோர்கள் சிறப்பித்தார்கள். ஆகவே குலசேகர ஆழ்வார் பாடியருளிய பாசுரங்களின் தொகைக்கு "பெருமாள் திருமொழி" எனப் பெயர் வழங்கலாயிற்று. அவர் பத்துத் திருமொழிகளை அருளி செய்தார். அவற்றில் இரண்டு ஐந்து, ஆறு ஆகிய மூன்று திருமொழிகள் ஒவ்வொன்றிலும் பப்பத்து பாசுரங்களும் மூன்றாம் திருமொழியில் ஒன்பது பாசுரங்களும் மற்றைத் திருமொழிகளுள் முறையே ஒவ்வொன்றிலும் பதினொரு பாசுரங்களும் பாடியருளினார். குலசேகர ஆழ்வார் தன் வாழ்நாள் முழுவதும் பாமாலையும் பூமாலையும் கொண்டு அரங்கப்பெருமானுக்கு எவ்விதக் குறையுமில்லாமல் நன்முறையில் தொண்டு செய்து நெடுங்காலம் வாழ்ந்து மன்னார் கோவிலுக்குச் சென்று பெருமாளைத் தரிசித்து நிற்கும்போது பரமாத்மாவின் பேரருளால் இவ்வுலகை விட்டுப் பரமபதத்திற்குப் போய்ச் சேர்ந்தார்.

அவருடைய கழலினை வணங்குவோமாக! அவர் அருளிச் செய்த திருமொழிகளைப் பாடுவோமாக.

7. பெரியாழ்வார்


ஒரு காலத்தில் பாண்டிய நாடு முத்துக்களாலும் முத்தமிழாலும் மிகவும் பொலிவு பெற்று உலகெங்கும் தன் புகழ் பரப்பி வந்தது. தமிழ்குமரி கடைச் சங்கம் ஏறி பாவலர்களும் நாவலர்களும், புரவலர்களும் போற்றிடத் தனிப்பெரும் ஆட்சி புரிந்து வந்தனர். வைகை நதியும், பொருனை ஆறும், அந்நாட்டிலே பலவகை வளங்களையும் பெருக்கி வந்தன. அதன் செழிப்பைக் கூறுவதற்கு மாடுகட்டிப் போரடித்தால் மாளாது என்று ஆனைகட்டிப் போரடித்த அழகான

மாமதுரை என்று கூறிச் சிறப்பித்தார்கள். அங்கே அழகான சோலைகளும் வாவிகளும், நீரோடைகளும் நிறைந்திருந்தன.

அத்தகைய பாண்டிய நாட்டிலே புத்தூர் என்னும் சிறப்புடைய ஊர் ஒன்று உண்டு. அதன் ஒரு பகுதி ஒரு காலத்தில் காடுகள் அடர்ந்த பகுதியாக விளங்கியது. அங்கேகொடிய மிருகங்கள் அதிகம். விலங்குகளை வேட்டையாடும் வேடர்கள் பலர் அக்காட்டிலே வசித்தார்கள். அவர்களின் தலைவனுக்கு மல்லி என்னும் அழகும் கற்புமுள்ள ஒருத்தி மனைவியாக வாய்த்திருந்தாள். அவளுக்கு இரண்டு பிள்ளைகள், மூத்தவனுக்கு வில்லி என்றும் இளையவனுக்கு கண்டன் என்றும் பெயரிட்டு அன்போடு அருமையாக மல்லி வளர்த்து வந்தாள். தக்க பருவம் அடைந்ததும் அவர்கள் இருவரும் வேட்டையாடச் சென்றார்கள். வழியிலே ஒரு கொடிய புலி தென்பட்டது. இளையவனான கண்டன் அதன்மீது அம்பு எய்தான். ஆனால் அந்தப் புலி சாகாமல் தப்பி ஓடியது. கண்டன் அதை விடாமல் துரத்திச் சென்றான். ஓடிய புலி சட்டென்று ஒரு புதருக்குள் மறைந்து கொண்டு கண்டன் அதற்கு அருகில் வந்ததும் அவன்மீது பாய்ந்து அவனைக் கொன்று விட்டு ஓடியது. வெகு நேரம் ஆகியும் தம்பி திரும்பி வராததைக் கண்ட வில்லி அவனைத் தேடிச் சென்றான், புதர் ஒன்றின் அருகில் தம்பி மாண்டு கிடப்பதைக் கண்டு கதறியழுதான்.

அவனுக்கு உலகமே சூனியமாகி விட்டது போல் தோன்றியது. தம்பியைப் பிரிந்த துயரத்தை அவனால் தாங்கவே முடியவில்லை. அப்படியே மண்ணில் விழுந்து புரண்டு அடிபட்ட மதயானை போல் துன்பத்தால் துடித்துக் கதறி இறுதியில் மூர்ச்சையடைந்தான்.

உலகம் யாவையும் தாமுளவாக்கலும் நிலை பெறச் செய்தலும் நீக்கலுமான அலகிலா விளையாட்டுகள் உடைய அத்தலைவரான அந்த விஷ்ணு பரமாத்மா தம் தேவியோடு வில்லியின் கனவிலே தோன்றி கவலைப்படவேண்டாம்! உன் துயரத்தை நாம் போக்குவோம். நாம் இவ்விடத்தே ஓர் ஆலமரத்தினடியில் பாம்பணையில் அமர்ந்திருக்கிறோம். நமக்கு



7. பெரியாழ்வார்

அவ்விடத்தே நீ ஒரு கோவிலைக் கட்டுவித்துச் சிறப்புகள் செய்வாயாக. புத்தூர் மக்களையும் இங்கு குடியேறச் செய்து இதை ஒரு சிறந்த தலமாக மாற்றுவாயாக" என்று கூறியருளினான்.

வில்லி, எம்பெருமானின் திருத்தாளைப் போற்றி, "அச்சுதா" அமரரே! ஆயர்தம் கொழுந்தே! நானோ என் தம்பியைப் பிரிந்த துயரத்தால் வாடுகிறேன். இந்நிலையில் எவ்வாறு உமக்கு ஆட்பட்டுத் தொண்டு செய்வேன்? என்னுடைய தம்பியை உயிர்ப்பித்து அருளுக. மேலும் உமக்கு கோவில் கட்டுவதற்கு என்னிடம் பொருள் இல்லை. அதற்கு தேவையான பொருளைத் தந்தால் உமக்குத் திருக்கோவில் கட்டுகிறேன்" உம்முடைய கட்டளையை இனிதே நிறைவேற்றுகிறேன்" என்றான்.

"அப்படியே ஆகட்டும். உன்னுடைய தம்பியை உயிர்பெறச் செய்கிறோம். இதற்கும் சிறிது தூரத்தில் ஒரு குகை இருக்கிறது. அங்கே நீயும் உன்னுடைய தம்பியும் சென்று பாருங்கள். குகையில் அப்புலி மாண்டுகிடக்கும். அக்குகைக்குள் வேண்டிய பொருள் இருக்கிறது. அவற்றைக் கொண்டு நாம் குறிப்பிட்ட தொண்டுகளை நீ செய்க" என்று வைகுந்தவாசன் வில்லிக்குக் கூறி மறைந்தருளினார்.

உடனே வில்லி கனவிலிருந்து கண் விழித்தான். ஆண்டவனின் அருங்கருணையை எண்ணியவனாய் தன்தம்பி கண்டனைப் பார்த்தான். கண்டன் அப்பொழுதுதான் உறங்கி எழுபவன்போல எழுந்தான். அண்ணனை வணங்கி நின்றான். வில்லிக்கு அளவில்லாத மகிழ்ச்சி பொங்கியெழுந்தது. அவன் நடந்தவற்றைத் தம்பிக்குக் கூறினான். பின்பு இருவருமாகப் புறப்பட்டுச் சென்று ஆலமரத்தை அடைந்தார்கள். உலகைக் காத்தருளும் உலகளந்த பெருமான் பாம்பணையில் பள்ளிக் கொண்ட பரந்தாமனாக விக்கிரகவடிவில் அதன் அடியில் காட்சி தந்தான். இருவரும் அப்பெருமானை நெஞ்சுருகச் சேவித்து நின்றார்கள்.

"இதுவரைக் கொடிய செயல்கள் புரிந்து, வாழ்நாளை வீணாளாக்கி வாழ்ந்த எங்களுக்கு அருள் புரிய வந்த

பெருமானே! உலகத்து இன்பங்களையே மெய்யென நம்பி வாழ்ந்த எங்கள் மாசுபடிந்த நெஞ்சைத் தூய்மையாக்கி அருளிய தூயவனே! வேங்கட மலைமேல் வீற்றிருக்கும் பெருமானே! உமக்கு கோயில் கட்டுவித்து தொண்டுகள் பல புரிந்து வாழுவதே நாங்கள் உய்யும் வழியாகும் இப்பொழுதே அத்திருத் தொண்டைத் தொடங்குகிறோம்!" என்று கூறி வணங்கி விட்டு பெருமாள் சொன்ன குகைக்குள் சென்று பார்த்தார்கள். அங்கே அப்புலி இறந்து கிடந்தது. மேலும் அதற்குள் அளவிடற்கரிய செல்வம் குவிந்து கிடந்தன. அதை பார்த்ததும் இருவரும் பெரும் வியப்பும் பெரு மகிழ்ச்சியும் அடைந்தார்கள். பிறகு ஆட்களைக் கொண்டு, அக்குகைக்கு காவல் வைத்தார்கள்.

சிறிது காலத்திற்குள் அவ்வால மரத்தடியில் பள்ளி கொண்டிருந்த திருமாலுக்கு கோயில் கட்டினார்கள். அத் திருக்கோயிலைச் சுற்றி மண்டபங்களும், மாட மாளிகைகளும் நிறைந்த அழகிய வீதிகளையும் பூஞ்சோலைகளையும் ஏற்படுத்தி புத்தூரின் மக்களையெல்லாம் அழைத்து வந்து அவ்வூரில் குடியேற்றி, எம்பெருமான் செய்தருளுமாறு கூறிய திருத்தொண்டுகளைச் செவ்வனே முடித்தார்கள். அவ்வாறு குடியேறிய மக்களின் சொந்த ஊரான புத்தூருடன், தன்னுடைய பெயராகிய வில்லியையும் சேர்த்து, அத்திருப்பதிக்கு "வில்லி புத்தூர்" என்று வில்லி பெயர் சூட்டி, பெருமாளுக்கு சிறப்புகள் பல செய்தான். அவ்வூரைச் சுற்றிய நாடும்; அவன் தாயின் பெயரான மல்லியைக் குறிப்பதாக மல்லி நாடு என்று பெயர் விளங்கப் பெறுவதாயிற்று.

வில்லிபுத்தூரில் குடியேறிய பிராமணர்களுள் வேயர்கள் என்னும் வகுப்பினரும், இருந்தார்கள் அவர்களுள் முன் குடுமிச் சோழிய அந்தணர் பரம்பரையில் வந்துதித்த முகுந்தபட்டர் என்னும் பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கல்வியில் சிறந்து விளங்கினார். திருவரங்கப் பெருமானின் மீது அளவற்ற பக்தி பூண்டு அவனுக்கே பரம்பரை வழியாக ஆட்பட்டு அவன் திருத்தொண்டை நாளும் குறைவில்லாமல் செய்து வந்தார். கற்பும் பொற்பும் வாய்ந்த 'பதுமவல்லி' என்னும் பெயருடைய பெருமாட்டி அவருக்கு மனைவியாக வாய்த்திருந்தாள், அவர்களுடைய இல்லறம் இனிதே நடந்து

வந்தது. அவர்கள் செய்த பெருந்தவத்தின் பயனாக குரோதன வருஷம் ஆனி மாதத்தில் சுக்ல ஏகாதசியன்று சுவாதி நட்சத்திரத்தில் (கி.பி. எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்) அவர்களுக்கு அருமையான ஒரு மைந்தர் பிறந்தார். அவ்வாறு பிறந்தவரே பின்னால் விஷ்ணுசித்தர் என்றும் பெரியாழ்வார் என்றும் போற்றிப் புகழப் பெற்றவராவார்.

விஷ்ணு சித்தர் சிறு வயதிலேயே எல்லா நூற்களையும் கற்கத் தொடங்கினார். ஆயினும் அவர் எண்ணம் முழுதும் அந்நூற்களில் பதியவில்லை. எம்பெருமானாகிய திருமகள் மணவாளன் மீதே பதிந்திருந்தது. அப்பெருமாள் கண்ணனாக அவதரித்து யசோதையின் பாலகனாக விளையாடியதும் கோபாலனாகக் குறும்புகள் பல புரிந்து கன்னியரும் காளையரும் மயங்கிடக் குழலூதியதுமான கதையைக் கேட்பதிலும், சொல்வதிலும் அவற்றைப் பற்றிய கற்பனைக் காட்சிகளிலேயே மனதை ஈடுபடுத்துவதிலுமே அவர் அதிக நாட்டங் கொண்டிருந்தார். தன்னுள் உறையும் அவ்விறைவனுக்கே தொண்டு செய்து வாழ வேண்டும் என்ற பெரும் விருப்பம் அவர் உள்ளத்தில் எழுந்தது.

அதனால் முறையாக வேதம் முதலானவற்றையும் கலைகளையும் கற்பதை மறந்து பரந்தாமனுக்கு எவ்வகையில் சேவை செய்வது சிறப்பாகும் என்று சிந்திக்கலானார். முன்னம் கண்ணபெருமான் தன்னுடைய பகைவனான கம்சனுக்கு மாலை கட்டித் தரும் மாலாகாரரிடம் மாலைச் சூட்டிக்கொள்ள வேண்டும் என்ற பெரும் ஆசையினால் அம்மாலாகாரரிடம் சென்று, மாலை வேண்டிப் பெற்று அதைச் சூடி மகிழ்ந்ததை எண்ணினார். ஆம் பரந்தாமனின் திருத்தொண்டுக்கு அதுவே சிறந்த முறையாகும் என்று அகம் களித்தார்.

உடனே அவர் தம் மூதாதையர் சேர்த்து வைத்திருந்த பொருளில் ஒரு பகுதியைக் கொண்டு தக்க நிலம் வாங்கிச் செப்பனிட்டு, அழகான ஒரு பூஞ்சோலையை அமைத்தார்.

அதில் கண்டோர் வியக்கும்படியாக பொய்கைகளும் நீரோடைகளும் அமைந்திருந்தன, செவ்வரளி, ரோசா,

செம்பருத்தி, பவளமல்லி, மந்தாரை, பூந்துவளம், கொன்றை, புன்னை ஆகிய நிலப்பூக்களும் செந்தாமரை, வெண்தாமரை, அல்லி, கருங்குவளை ஆகிய நீர்பூக்களும் மல்லிகை, முல்லை மாதவி ஆகிய கொடிப்பூக்களும் மற்றும் கோட்டுப்பூக்களும் என நான்குவகைப் பூக்களும் பூத்துக் குலுங்கின. அதனூடே எங்கும் துளசிச் செடிகளும் நிறைந்து செழித்து வளர்ந்திருந்தன.

நாள்தோறும் விஷ்ணு சித்தர் தம் பூஞ்சோலையில் பூத்தமலர்களைக் கொண்டு மாலை தொடுத்து, வடபெருங்கோயில் கொண்டவனாகிய திருமாலுக்கு அவற்றைச் சூட்டி மகிழ்ந்தார். இவ்வாறு அவர் திருத்தொண்டு செய்துவரும் நாளில் வல்லபதேவன் என்னும் பாண்டியமன்னன் தென்மதுரையை முறையாக அரசாண்டு வந்தான், அவன் குடிகளின் நன்மை ஒன்றையே கருதிய அன்பினன்; பெரும் வீரன், அமைச்சர்களும் ஒற்றர்களும் கூறும் செய்தியை மட்டுமே கொண்டு அரசாளாது தானும் அடிக்கடி மாறுவேடம் பூண்டு நகர் சோதனைக்குப் புறப்பட்டுச் சென்று, நாட்டை நன்கு பாதுகாத்து வந்தான். ஒருநாள் மாமன்னன் நகர் சோதனைக்காக நகர வீதிகளில் சுற்றி வரும் பொழுது ஒரு வீட்டுத்திண்ணையில் யாரோ தூங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அருகில் சென்று பார்த்த பொழுது அவர் ஓர் அந்தணர் என்பது தெரிந்தது. அவரை எழுப்பி "நீர் யார்?" என்ன காரணத்தால் இங்கே வந்து படுத்திருக்கிறீர்? என்று வினவினான்.

"ஐயா! நான் வடநாடு சென்று உலகளந்தப் பெருமானின் திருவடித் தாமரையிலிருந்து தோன்றிய கங்கையில் புனித நீராடித் தெற்கு சேதுவில் நீராடுவதற்காகத் திரும்பி வந்து கொண்டிருந்தேன். இந்நகரை அடையும் பொழுது இருட்டி விட்டது. எனவே இரவை இங்கே கழித்துவிட்டுச் செல்லலாம் என்று எண்ணி, இத்திண்ணையிலே படுத்துக் கொண்டேன். இந்நகரம் பார்ண்டியரின் ஆட்சிக்கு உட்பட்டதல்லவா? அவர்களுடைய ஆட்சியிலே எவ்வித தீங்கும் நமக்கு நேராது என்ற பெருந்துணிவிலே இவ்வாறு இங்கே படுத்துக் கொண்டேன்" என்று மறுமொழி புகன்றார் மறையவர்.

அதைக் கேட்டதும் அவர் மிகுந்த அறிவும் அருளும் பொருந்தியவர் என்பதை பாண்டிய மன்னன் அறிந்து கொண்டான்,

உடனே அவன் அவரை நோக்கி, "மறையவரே! தாங்கள் கற்றுணர்ந்த பெரும் ஞானி என்பதைத் தங்களுடைய பேச்சு எடுத்துக்காட்டுகிறது. உலகியலையும் நன்றாக ஆராய்ந்து தெளிந்தவர், ஆதலின் நீர் கேட்டு அறிந்தனவற்றில் நன்னெறிக்கு வழிகாட்டும்படியான ஒரு சுலோகத்தைச் சொல்லும்" என்று வேண்டினான். அவனுடைய அறிவையும், திறத்தையும் நன்கு அறிந்து கொண்டார் அம்மறையவர் இப்பெருமகனாருக்கு தக்க ஒரு சுலோகத்தைக் கூறவேண்டும் என்று கருதி "மழை காலமாகிய நான்கு மாதங்களுக்குத் தேவையான பொருட்களையெல்லாம் மீதி உள்ள எட்டு மாதங்களுக்குள் சேகரித்து சேமித்துக் கொள்ள வேண்டும். இரவு வேளைக்கு வேண்டியதைப் பகற்பொழுதிலேயே தேடி வைத்துக் கொள்ள வேண்டும். முதுமைக்குத் தேவையானதை இளமைப் பருவத்திலேயே தேடிச் சேர்த்துக் கொள்ள வேண்டும். அது போலவே மறுமைக்கு வேண்டிய உண்மைப் பொருட்களை யெல்லாம் இப்பிறவியிலேயே சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்" என்னும் பொருள் அமைந்த வடமொழி சுலோகம் ஒன்றை எடுத்துக் கூறினார்.

பாண்டிய மன்னன் தமிழ் மொழியில் மட்டுமின்றி வடமொழியிலும் கற்றுத் தேர்ந்திருந்தானாகையால் அதைக் கேட்டதும் பெருமகிழ்ச்சி அடைந்து அவரிடம் தான் யார் என்பதையும் தான் அங்கு வந்த காரணத்தையும் எடுத்துக்கூறி அம்மறையவரைத் தன்னுடன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று பலவிதச் சிறப்புக்களைச் செய்தான். சில காலம் மறையவரை அரண்மனையிலே தன்னுடன் வைத்திருந்து அவரோடு பலவற்றையும் உரையாடி மகிழ்ந்தான். பின்பு பாண்டியன் அவருக்கு வேண்டும் பொருள் கொடுத்து சேதுவில் நீராடுவதற்காக அவரை அனுப்பி வைத்தான்.

அதன் பிறகு அம்மறையவர் கூறிய சுலோகமே அவன் உள் மனதை ஓயாமல் உறுத்திக் கொண்டிருந்தது. "ஆகா! வெற்றிதேடிப் போர்களிலே விளையாடுவதிலும் பொருள் தேடி என் பொற்களஞ்சியத்தை நிரப்புவதிலும் புகழ்தேடி அறச்செயல்கள் புரிவதிலும் இன்பம் தேடி மங்கையரை மருவிக் குலவுவதிலுமே என் பொழுதைப் போக்கி என் வாழ்நாளில் பெரும் பகுதியை வீணாக்கிவிட்டேனே! நான் மடிந்து இவ்வுலகை விட்டுப் போகும்

காலத்தில் அந்தப்பொன்னும் புகழும் மங்கையரின் இன்பமுமா என் கூட வரப்போகின்றன? நான் செய்த நல்வினைத் தீவினைப் பயன்கள் மட்டுந்தானே என்னைப் பின்தொடர்ந்து வரும்? ஆனால் அவையும் என்னை மறுபடியும் பிறவிச் சுழலில் பிணைக்க உதவுமே தவிர, பிறவாப் பெருநிலையான இறைவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்பத்தை அடைவதற்கு வேறு வழியையன்றோ காணவேண்டும்? ஆனால் முழுமுதற் கடவுளான பரம்பொருள் யார் என்பதை முதலில் நிர்ணயித்துக் கொள்ளவேண்டுமே! அந்தப் பரம்பொருள் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான தத்துவம் சொல்கிறார்களே! மதக் கொள்கைகளும் பலவாறாக மதியைக் குழப்புகின்றனவே? பரம்பொருள் எது என முடிவுகட்டிக்கூறிய உண்மையான தத்துவம் எது?" என்றெல்லாம் மன்னன் வல்லபதேவன் சிந்தித்தான். செல்வநம்பி என்னும் தன் அரண்மனைக் குருவை அழைத்து வருமாறு கட்டளையிட்டான். அவ்வாறே அவரும் மன்னனிடம் வந்தார். செல்வநம்பி மறைநூல்கள், அறநூல்கள், வேதங்கள் பலவும் கற்றுத் தேர்ந்தவர். அவரிடம் பாண்டிய மன்னன் தன் எண்ணங்களை எடுத்துரைத்தான்.

அதற்கு அவர், "அரசே! வேத விற்பன்னர்களையும், தத்துவ ஞானிகளையும் வரவழைத்து வேதங்களின் உட் பொருளாகவும் முடிவாகவும் விளங்கும் பரம்பொருள் என்பது என்ன என்று கேட்டு முடிவு கட்டலாம்" என்று கூறினார்.

அவ்வாறே செய்வோம் என்று மன்னன் கூறி விட்டுத் தன் அரண்மனையில் கொலு மண்டபத்தில் தன் சிம்மாசனத்திற்கு முன்னால் ஒரு தோரணக் கம்பத்தை நட்டுக் கிழிச்சீரையிலே பெரும் பொற்குவியலை வைத்து முடிந்து, அப்பொற்கிழியை அக்கம்பத்திலே கட்டித் தொங்கவிட்டு, "யார் பரம் பொருளை நிர்ணயித்துக் கூறி இப்பொற்கிழி தானே அறுந்து விழும்படிச் செய்கிறாரோ அவருக்கே இப்பொற்கிழி உரியதாகும்" என்று கூறி முரசு அறைவிப்பவனின் மூலம் நாடு முழுதும் தெரிவிக்கச் செய்தான். அதுமுதல் பல சமயவாதிகளும் வேதவிற்பன்னர்களும் பண்டிதர்களும் தத்துவ ஞானிகளும் திரண்டு வந்து சொற்பொழிவாற்ற முனைந்து பரம்பொருள் நிர்ணயம் பற்றிய பலவிதமான தத்துவ விளக்கங்களையெல்லாம் மடை திறந்த

வெள்ளம்போல் பொழியலானார்கள். ஆனால் அவற்றிலும் எதையும் முடிவான உண்மையென ஏற்றுக் கொள்ளாததைப் போல் அப் பொற்கிழி அறுந்து விழவேயில்லை.

இவ்வாறு நடந்து வரும் நாளில் உலகத்தைக் கடைத்தேற்றும் பொருட்டுப் பாம்பணையில் பள்ளி கொண்டுள்ள பரந்தாமன் உண்மைப் பொருளை உலகினிற்கு விஷ்ணு சித்தர்மூலம் உணர்த்த வேண்டும் என்று திருவுளங் கொண்டு ஒருநாள் இரவில் விஷ்ணு சித்தர் படுத்துறங்கும்போது அவரது கனவிலே தோன்றி, "அன்பனே! நீ நாளை பாண்டியனின் அவைக்குச் சென்று வேதத்தின் முதலும் முடிவுமான பரம்பொருள் தத்துவத்தை நிர்ணயித்துக் கூறி அப்பொற்கிழியை அறுத்து வா!" என்று கூறியருளினார்.

விஷ்ணுசித்தர் குழம்பி "ஐயனே! எம்பெருமானே! மாலவனே! திருவேங்கடத்தானே! நானோ கல்வியறிவு அதிகம் பெறாதவன், வேதங்களைக் குரு மூலமாகவோ முறையாகவோ கற்றறியாதவன் அப்படியிருக்க வேதவேதாந்த சாஸ்திரங்களை யெல்லாம் கற்றுத் தேர்ந்தவர்களைச் சோதிப்பதற்காகவே அமைக்கப்பட்டிருக்கும் அப்பொற்கிழியை நான் எப்படி அறுத்துவர முடியும்?" என்றார்.

அதற்கு பரமாத்மா, "கவலை கொள்ளற்க. நீ வெறும் கருவியேயன்றி பிரிதொன்றும் இல்லை. அக்கருவியை இயக்கும் சூத்ரதாரியாக நான் இருக்கிறேன். ஆதலால் அஞ்சாமல் செல்க!" என்று அருளி மறைந்தார்.

விஷ்ணு சித்தர் உடனே கண்விழித்துக் கொண்டார். தனக்கு இறைவன் இட்ட கட்டளையை எண்ணிப் பக்திப் பரவசமானார். அவ்வாறிருக்க ஆயர்தம் கொழுந்தான அரங்கப் பெருமான் செல்வநம்பியின் கனவிலும் தோன்றி விட்டு சித்தரின் வருகையைத் தெரிவித்து மறைந்தருளினார்.

மறுநாள் காலையில் விஷ்ணுசித்தர் வடபெருங் கோயில் பெருமானின் சந்நிதிக்குச் சென்று அப்பெருமானை வணங்கியபின் பல்லக்கில் ஏறி பாண்டியனின் அரண்மனையை அடைந்தார். அரண்மனை வாசலில் நின்ற காவலர்கள் மன்னன் முன் சென்று வணங்கி, "அரசர் பெருமானே! வில்லிப்புத்தூரிலிருந்து விஷ்ணு

சித்தர் என்னும் பெரியார் ஒருவர் தங்களைக் காண வந்துள்ளார்" என்று கூறினார்கள்.

அப்போது அரசனின் அருகிலிருந்த செல்வநம்பி, "அரசரே! அப்பெரியாரின் மூலம் தங்களின் கேள்விக்கு விடை கிடைக்கும் என்று நம்புகிறேன்! உடனே அவரை நாம் எதிர்கொண்டு அழைப்பதே சிறந்ததாகும்!" என்றார்.

அவர் கூறியவாறே மன்னன் அவருடன் சென்று அரண்மனை வாயிலில் விஷ்ணுசித்தரின் தெய்வீக முகத்தில் தவழ்ந்த அடக்கத்தையும், அருளையும், அன்பையும் கண்டு அவரைத் தானாகவே வணங்கி நின்று, 'அடியவன் தங்களின் வருகையால் மகிழ்ச்சியடைந்தேன். தாங்கள் சொல்லப் போகும் உண்மைப் பொருளால் என் கேள்விக்கான விடைகிடைக்கும் என்று முற்றும் நம்புகிறேன்" என்று கூறினான். செல்வ நம்பியும் அவருடன் இனிய மொழி பல பேசினார். பிறகு மன்னன் விஷ்ணு சித்தரை சபைக்கு அழைத்துச் சென்றான். உயர்ந்ததோர் பொன்னாசனத்தில் அமரச் செய்து சிறப்பித்தான்.

அப்போது அங்கே கூடியிருந்த மதத்தலைவர்களும் வேத விற்பன்னர்களும், பண்டித மேதைகளும், தத்துவ ஞானிகளும் விஷ்ணு சித்தரைக் கண்டு வியப்பெய்தார்கள். 'குருவின் மூலம் வேதம் முற்றும் முறையாகக் கற்றறியாத இந்த விஷ்ணு சித்தனோ மறைவழிப் பரம்பொருளை முடிவு கட்டிக் கூறப் போகிறான்? அறிஞர் அவைக்குப் பொற்கிழி அறுக்க வந்த இவன் அவமானப்பட்டு வெறுங்கையனாகத்தான் திரும்பிப் போவான்?" என்று அவர்கள் பேசிக் கொண்டார்கள்.

வேத விற்பன்னர்கள் அனைவரும் இப்படி ஒரு முகமாக கூறிக் கொண்டிருக்கையில் செல்வநம்பி மன்னரின் குறிப்பின்படி விஷ்ணு சித்தரை நோக்கி, "அருங்குணச் செல்வரே! தாங்கள் இவ்வவையிலே நான்மறை முடிவான பரம்பொருளின் தத்துவத்தைக் கூற வேண்டுகிறோம்" என்றான்.

அதுவரை அச்சம் கொண்டிருந்த விஷ்ணுசித்தருக்கு அரங்கனின் திருவருளால், வேதங்களின் பொருளும், வேதாகமங்களின் விரிபொருளும் மற்றும் அனைத்தும்

வெள்ளிடை மலையென விளங்கலாயிற்று. குருவின்மூலம் வேதங்களை விரித்துக் கற்றறியாத அவருக்கு வேத வேதாந்தங்களிலுள்ள ரகசியங்களெல்லாம் ஞான குருவான விஷ்ணு பரமாத்மா மூலம் அப்போதே தெளிவாக விரிந்து புலப்பட்டதோடு வேதத்தின் முடிவான பரம்பொருள் நிர்ணயத்தை ஒரு தத்துவ தரிசனமாகவும் கண்டார். அதன் பிறகு அவர் கம்பீரமாக எழுந்து அவையோரைப் பார்த்து வணங்கிவிட்டு அகரமுதல எழுத்திற்கெல்லாம் ஆதியாகவும், எங்கும் எல்லாம் எப்போதும் நிலைத்திருக்கும் பரம்பொருள் ஸ்ரீமந்நாராயணனே என்பதை வசிஷ்டாத்துவைதத்தின் மூலம் விளக்கக் கூறி அந்தத் தத்துவத்தை நிலை நாட்டினார். கட்டப்பட்ட கம்பம் அப்போது அவர் அருகே வளைந்து நின்றது. விஷ்ணுசித்தர் உடனே அப்பொற்கிழியை அறுத்துக் கொண்டார்.

அதைக் கண்டு அவையில் அனைவரும் பெரும் வியப்பில் அப்படியே அசைவற்று மெய்மறந்திருந்தார்கள். மன்னர் பிரானும், செல்வநம்பியும் மற்றவர்களும் பெருமகிழ்ச்சி எய்தினார்கள். அம்மகிழ்ச்சியோடு அருட்பெருமகனாரின் தாமரைத் திருவடிகளில் தங்கள் தலைமுடி படுமாறு வணங்கி எழுந்தனர். பிறகு மன்னன், "திருமகள் நாதனின் அருளை முழுதுமாகப் பெற்ற பெருந்தகையீர்! எனது ஐயம் நீங்கும் வண்ணம் இச்சபையிலே வந்து பேரின்பம் பெறுதற்குரிய வழியான பரம்பொருள் தத்துவத்தை நிர்ணயித்துக் கூறியருளினீர்கள். பாராளும் மன்னனாகிய நான் எத்தனைச் செல்வங்களைப் பெற்றிருப்பினும் தங்களுக்குக் காணிக்கையாக்கக் கூடியதும் தக்கதும் ஒன்றுதான் உண்டு. என்னுடைய மனத்திலே பொங்கி நிறைந்திருக்கும் அன்பையே தங்கள் திருவடிகளில் சமர்ப்பிக்கிறேன்" என்றான்.

"பாண்டிய மன்னரே! பாமரனுக்கும் ஞான குருவாக விளங்கக் கூடியவன். அந்த விஷ்ணு பரமாத்மா! நாமங்கள் பல சொல்லி நாராயணா என்று போற்றித் துதிக்கும் என் உள்ளத்தின் உள்ளே இத்தனை நாளும் அறிதுயில் புரிந்த அந்த பரமாத்மா இன்று வேத விரிவான ஞானத்தையெல்லாம் வெகு எளிதில் அள்ளித்தந்தான். அத்தகைய பெரும்வாய்ப்பு உம்மாலன்றோ எனக்குக் கிடைத்தது?" என்றார் விஷ்ணு சித்தர்.

இதுவரை நடந்தவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த அச்சபைச் சான்றோர்கள் அனைவரும் தாங்கள் அறியாமையால் பேசிய மொழிகளையெல்லாம் எண்ணி வருந்தினார்கள். திருமாலின் அருட்செல்வரை, கற்றறியாதவர் என்று இகழ்ந்துரைத்தது எத்தகைய பேதைமை என்பதை உணர்ந்து திருந்திவிட்டு சித்தரின் தாமரைத் திருவடிகளிலே விழுந்து வணங்கி எழுந்தார்கள். "திருமால்தாசரே நாங்கள் வெறும் நூலறிவையே பெரிதாக எண்ணி இறுமாந்திருந்தோம். எங்களின் அகக்கண்களைத் தங்களின் ஞான ஒளியால் திறந்து விட்டீர்கள்" என்று கூறி ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார்கள்.

குருமூலம் அறியாத வேதவேதாந்த ஞானங்களை எல்லாம் விஷ்ணுவின் அருள் மூலமாகவே தம் சித்தத்தால் அறிந்தவர் என்று குறிப்படும் விதமாக விஷ்ணுசித்தர் என்ற பெயரையும் அவருக்குச் சூட்டிக் கொண்டாடினார்கள்.

மன்னன் வல்லபதேவன் விஷ்ணுசித்தருக்குப் "பட்டர் பிரான்" என்னும் உயர்வான பட்டத்தைக் கொடுத்தான். பிறகு தன் பட்டத்து யானையின்மேல் தங்கப் பல்லக்கு அமைத்து அதில் விஷ்ணு சித்தரை நகர்வலம் புறப்படச் செய்தான். அப்பொழுது வீதியெங்கும் மக்கள் தோரணங்களாலும், கொடிகளாலும், அலங்காரம் செய்து வைத்திருந்தார்கள், விஷ்ணுசித்தர் பட்டர் பவனி வரும்பொழுது மக்கள் அனைவரும், 'எங்கள் பட்டர்பிரான் வந்தார் பொற்கிழி அறுத்த பொருட் செல்வர் வந்தார்! கற்றறிந்தோரின் கண்களைத் திறந்த ஞானச்சுடர் வந்தார்" என்று பலவகை விருதுகள் கூறி அவரை வானளாவப் போற்றிப் புகழ்ந்தார்கள்.

தாங்கள் பெற்ற பிள்ளைக்கு மற்றவர்கள் பெருமை செய்வதைப் பார்க்க ஆவலோடு ஓடிவரும் தாய் தந்தையரைப்போல அப்போது தம்முடைய அடியவரான விஷ்ணுசித்தருக்கு மக்களும் மன்னனும் அளிக்கும் விருதுகளைக் கேட்கவும் அவர் பவனி வரும் காட்சியைக் காணவும் விரும்பிய வைகுந்தப் பெருமான், பட்டுப் பீதாம்பரம் அணிந்து சங்குச்சக்கரதாரியாகத் தம் திருமகளுடன் கருடவாகனத்தில் தேவர்களெல்லாம் புடைசூழ வானவெளியில் வந்து விஷ்ணு சித்தருக்குக் காட்சியளித்தார்.

அக் காட்சியைக் கண்டதும் விஷ்ணு சித்தர் பெரும் பரவசம் எய்தினார். இறைவன் தன்னுடைய பேரழகை முழுதுமாகக் காட்டி நிற்கின்றானே, அவனுக்கு இதனால் யாது வருமோ?" என்று நினைத்தார். உடனே அவர் உள்ளத்தே பெரும் அருள் பொங்கி வழிந்தது. "அவன் நீடுழி காலம் எழில் வடிவினனாக விளங்க வேண்டும்" என்று எண்ணி, அன்பின் மிகுதியால் தாம் அமர்ந்திருந்த பட்டத்து யானையின் கழுத்திலுள்ள மணிகளையே தாளமாகக் கொண்டு வாழ்த்துகள் பாட ஆரம்பித்து விட்டார்.

"பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா
உன்சேவடி செவ்வி திருக்காப்பு."

என்று தொடங்கி பல்லாண்டு பாசுரங்கள் பாடி வாழ்த்தினார்.

அப்பாசுரங்களைக் கேட்டு மகிழ்ந்த மணிவண்ணன் மறைந்தருளினான். மற்ற ஆழ்வார்களைப் போலன்றி தம் உள்ளத்தில் பொங்கும் பரிவாலே ஸ்ரீமந் நாராயணனை வாழ்த்திப் பல்லாண்டு பாசுரங்கள் பாடியதால் வில்லிபுத்தூர் பட்டர் பிரானான அவர் பெரியாழ்வார் என்ற பெயரும் பெற்றார். பிறகு பெரியாழ்வார் மன்னரிடமும் மக்களிடமும் விடை பெற்றுக் கொண்டு வில்லிப் புத்தூருக்கு வந்து தான் பெற்ற பொற்கிழியை வடபெருங்கோவிலுடைய பெருமாளுக்கே காணிக்கையாக்கி மகிழ்ந்தார். அது முதல் பூமாலையுடன் அரங்கத்தம்மானுக்கு பாமாலையும் சூட்டி வருவாரானார். தம்மையாளும் திண்தோள் மணிவண்ணனின் கிருஷ்ணாவதார விளையாட்டுகளிலே நெஞ்சமெல்லாம் ஊன்றி அந்தக் கண்ணனையே தம் பாலகனாகப் பாவித்துப் பாசுரங்கள் பாடி தண்ணீர் கூட அருந்தாமல் அதன் சுவையையே பருகிக் கொண்டிருந்தார்.

'எம்பெருமானே! கண்ணனே! நீ பிறந்த பிறகு, நான் எனக்கென்று எதையும் செய்து கொள்ளவில்லை. நான் வாழ்வதே எனக்காக அன்று உனக்காகவே உயிர்வாழ்கிறேன். காய்ச்சி வைத்த நெய்யும் நன்றாகக் காய்ந்த பாலும் வடித்தெடுத்த தயிரும், நல்ல வெண்ணெயும், இவ்வளவையும் நீ பிறந்தபின்

நான் பெற்றதேயில்லை. சுவைத்து உண்டதேயில்லை. இவற்றையெல்லாம் உனக்கே உரிமையாக்கி விட்டேன்!"

"வைத்த நெய்யும், காய்ந்த பாலும், வடிதயிறும் நறுவெண்ணெயும்
இத்தனையும் பெற்றிலேன் எம்பிரான்; நீ பிறந்த பின்னை,
எத்தனையும் செய்யப் பெற்றாய்; ஏதும் செய்யேன் கதம்படாதே;
முத்தனைய முறுவல் செய்து, மூக்குறிஞ்சி, முலை உணாயே!"

என்று தானே யசோதையாகி கண்ணனைத் தன் குழந்தையாகப் பாவித்துப்பாடி இன்புற்றார். மேலும் அவ்விறைவன் முன்னொரு நாளில் செய்த குறும்புகளையெல்லாம் எண்ணி,

"பாலைக் கறந்து அடுப்பு ஏறவைத்துப்
பல் வளையாள் என் மகள் இருப்ப,
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச் சென்று
இறைபொழுது அங்கே பேசி நின்றேன்;
சாளக் கிராமம் உடையநம்பி சாய்த்துப்
பருகிட்டுப் போந்து நின்றான்
ஆலைக் கரும்பின் மொழி அனைய அசோதை
நங்காய்! உன் மகனைக் கூவாய்!"

என்று அசலிடத்தார் முறையிடுவதாக உணர்ந்து, மகனே வருவாய்! இங்கே வருக! நான் வரமாட்டேன் என்று சொல்லாதே! இங்கே வா! அசல் வீட்டார் உன் மேல் ஏதேனும் குறை சொல்லி, ஏதேனும் பழி பேசுவதை நான் கேட்கப் பொறுக்க மாட்டேன், எப்பொழுதும் குதூகலமாக விளையாடும் என் குமாரனே! மலையைக் குடையாகப் பிடித்தவனே! குடக்கூத்து ஆடிய கூத்தனே! வேதங்களில் கூறப்படும் மெய்ப்பொருளே; என் அன்பிற்குரிய வேங்கடேசா! அறிவுள்ளவனே! இங்கே வா, என் செல்வமே!" என்று தம்மை மறந்து,

'போதர் கண்டாய்; இங்கே போத கண்டாய்.
போதரேன் என்னாதே போதர் கண்டாய்,
ஏதேனும் சொல்லி அசல் அகத்தார்
ஏதேனும் பேச நான் கேட்க மாட்டேன்;
கோதுகலம் உடையக் குட்டனேயோ!
குன்று எடுத்தாய்; குடம் ஆடு கூத்தா!

வேதப் பொருளே என் வேங்கடவே;
வித்தகனே இங்கே போதராயே!"

என்னும் பாமாலையின் மூலம் அழைப்பார். இவ்வாறு கண்ணன் விளையாடல்களைப் பாடிப் பாசுரங்கள் புனைவதையும் மாலவனுக்குப் பாமாலைகள் பாடுவதோடு பூமாலைகளும் தொடுத்துச் சூடுவதையுமே தம் திருத்தொண்டாகக் கொண்டார் பெரியாழ்வார். "புனத்திலே விளைந்த தினைக்கதிர்களைக் கிள்ளியெடுத்து, அவற்றைப் புது ஆவியிலே காட்டி வதக்கி எடுத்து, உன் பொன் போன்ற அடிகள் வாழ்க என்றுகூறி வணங்கி அதன் பிறகே கூட்டமான குறவர்கள் அந்தப் புதிய தினையை உண்பார்கள். இத்தகைய அழகான பெரிய திருமாலிருஞ் சோலையிலே இருக்கின்ற எந்தையே! உனக்குத் தொண்டு புரிந்து வாழும் தவத்தைப்பெற்ற நான், இனிமேல் சென்று வேறு ஒருவனை வணங்கி, அவன் கடைத்தலையிலே நிற்கமாட்டேன். அப்படி நிற்பேனாயின், என்னிடம் சேர்ந்துள்ள நினது அருள் அழிந்து போவதற்கே இடமாகும். இதை நீ அறிவாய்! நானும் அறிவேன். ஆதலால் உன்னையன்றி இனி ஒருவரையும் நாடேன்" என்று, தாம் என்றும் அவ்விறைவனுக்கு அடியவனே என்பதை அவனுக்கே அறிவித்து வாழ்ந்தார்.

உனக்குப் பணி செய்திருக்கும் தவம் உடையேன்
இனிப்போய் ஒருவன்
தனக்குப் பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயை
அழிவு கண்டாய்!
புனத்தினைக் கிள்ளிப் புதுஅவி காட்டி உன்
பொன்அடி வாழ்க என்று
இனக்குறவர் புதியது உண்ணும் எழில் மால்
இரும்சோலை எந்தாய்!"

பட்டர் பிரானான பெரியாழ்வார், திருமாலை என்றும் வணங்கி வாழ்ந்ததோடு நானூற்று அறுபத்தொன்பது பாசுரங்களைப் பாடினார். அவை பெரியாழ்வார் திருமொழி என்று சிறப்பிக்கப் பட்டன. திருமகள் நாதன் மேல் ஆராக் காதல் கொண்டு அவனுக்கு வாழ்நாள் முழுதும் சேவை புரிந்த பெரியாழ்வாரை நாம் போற்றித் துதிப்போமாக!

8. ஆண்டாள்

செந்தமிழ் நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூர் என்னும் நகர் ஒன்று உண்டு. அதுதான் பெரியாழ்வார் பிறந்த தெய்வபூமி, அவரை வில்லிபுத்தூரார் என்றும், 'விஷ்ணுசித்தர்' என்றும் ஆன்றோர்கள் போற்றிப் புகழ்வார்கள். அவர் அரங்கநாதப் பெருமானான கண்ணபிரான்மேல் நீங்காத பக்தி பூண்டவர். திருப்பல்லாண்டு முதலான பாமாலைகளைப் பெருமாளுக்குச் சூடி மகிழ்ந்தவர். பாமாலையுடன் பூமாலையும் பெருமாளுக்குச் சாற்ற வேண்டும் என்னும் பெரும் அவாவினால் அழகியதோர் நந்தவனத்தை அமைத்தார்.

நாள்தோறும் பெரியாழ்வார் துளசி இலைகளையும் மலர்களையும் கொய்து, அவைகளைப் பலவகையான மாலைகளாகக் கட்டிக் குடலைக்குள் போட்டுக் கொள்வார். பின் அவ்வூர்ப் பெருமாளான வட பத்ரசயனருக்கு அம் மாலைகளைச் சூடி மகிழ்வார். அப்போது அவர் கண்கள் இறைவனின் எழில் உருவைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கினால், கண்ணீரைக் கரை புரளச் செய்யும். இவ்வாறான திருப்பணிகளைப் பெருமாளுக்கு ஒரு குறையும் படாமல் அவர் செய்து வந்தார்.

ஒருநாள் வழக்கம்போல் பெரியாழ்வார் தம்மை ஆளும் பெருமாளுக்கு மாலை சூட்டுவதற்காக மலர் கொய்து கொண்டிருந்தார். எவ்வளவு நேரம் தான் அவ்வாறு அவர் பூக்கொய்து கொண்டிருந்தாரோ, அவ்ருக்கே தெரியாது. பொழுது இன்னும் விடியவில்லை. அதைக் கண்டு வியப்புற்று அவர், "ஏன் இன்னும் பொழுது புலரவில்லை? அப்படியிருந்தும் இவ்வளவு வெளிச்சத்திற்குக் காரணம் என்ன?" என்று புரியாமல் திகைத்து நின்று, சுற்றுமுற்றும் நோக்கினார்.

நந்தவனத்திலே பச்சைப் பசேலென்று துளசிச் செடிகள் செழித்து வளர்ந்திருந்தன. இலைகள் தளதளவென்று பொங்கித் தெய்வ மணம் கமழச் செய்தன. அவற்றிலே ஏதோ ஒரு புதுக் கவர்ச்சி! பெரியாழ்வார் தம்மையுமறியாமல் அங்கே சென்று



கண்ணிமைக்காமல் பார்த்தார், "இதுவும் கனவோ? இல்லை நினைவுதானோ?" என்று ஐயமுற்றுக் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் அதே இடத்தை உற்றுப் பார்த்தார்.

துளசிச் செடியின் அருகே அவர் பூமியில் கொத்திய இடத்தில் தெய்வீக அழகு கொஞ்சும் பெண் குழந்தை ஒன்றைக் கண்டார் பெரியாழ்வார். முன்னொரு சமயம் ஜனக மகாராஜன் யாக சாலையின் இடத்திற்காக பூமியை உழுதபோது படைச்சாலிலே மகாலட்சுமி ஒரு பெண் குழந்தையாகப் பிறந்து சீதை எனப் பெயர் பெற்றதுபோல இந்தப்பெண் குழந்தையும் பூதேவியின் அம்சமாக பூமியிலே தோன்றியிருந்தது.

நள வருஷம் ஆடி மாதம் சுக்ல சதுர்த்தசி செவ்வாய்க்கிழமை பூர நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளோடு அன்று குழந்தையின் அருகே இருந்த மலர், மரங்கள், பூக்களைக் குழந்தையின் மேல் சொரிந்தன. குயில்கள் தாலாட்டுவது போல் பண்ணிசைத்தன. கிளிகள் குழந்தையோடு கொஞ்சிப் பேசுவதுபோல் மழலை பேசின. அன்னங்கள் சிறகால் மெல்ல குழந்தைக்குச் சாமரம் வீசின. அதே சமயம் கோயிற் சங்குகள் முழங்கின. பேரிகைகள் அலைகடல் போல் அதிர்ந்தன. எதுவுமே பெரியாழ்வாருக்குத் தெரியவில்லை. அவர் குழந்தையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

சூரியன் மெல்ல மெல்ல வானில் ஏறிவந்தான். கடைசியாக பெரியாழ்வார், "நாம் செய்த தவப் பயனே இக் குழந்தைவடிவில் வந்திருக்கிறது" என்று எண்ணமிட்டுக் குழந்தையை எடுத்துக் கொண்டு அதற்கு முத்தமிட்டார். உச்சி மோந்தார் பிறகு குழந்தையுடன் சோலையைவிட்டுப் புறப்பட்டார். கோயிலை அடைந்தார். இறைவன் திருமுன் குழந்தையைக் கிடத்தி, "எம்பெருமானே! வடபத்திரசாமி! உன் அருளால் கிடைத்த இக் குழந்தையை உனக்கே சமர்ப்பிக்கிறேன்" என்றார். அவர் கண்களிலே ஆனந்த ஒளி மின்னியது. முகத்திலே என்றைக்கும்விட இன்று அதிக தெய்வகாந்தி சுடர் விட்டது.

பிறகு குழந்தையை எடுத்துக்கொண்டு வீட்டுக்குச் சென்றார். கணவரின் கையிலே தெய்வீகக் களையுடன் இருந்த



ஆண்டாளின் குழந்தைப் பருவம்

குழந்தையைக் கண்டதும் அவருடைய மனைவி விரஜை, மிகவும் மகிழ்ச்சியுற்று பயபக்தியுடன் இரண்டு கைகளாலும் அந்தக் குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

பிறகு விரஜை அதைத் தொட்டிலில் இட்டாள். பெரியாழ்வார் தனக்கு குழந்தை கிடைத்த வரலாற்றை மனைவியிடம் சொன்னார். அதைக் கேட்கக் கேட்க விரஜையின் பக்தியும் வியப்பும் வளர்ந்தன. அந்தக் இளங்குழந்தையின் அருள் பொங்கும் அழகை அள்ளி அள்ளிப் பருகி மகிழ்ந்தாள். பிள்ளைக்கலிதீர இந்தக் குழந்தையை பெருமாளே நமக்கு கொடுத்திருக்கிறார் என்று எண்ணி எண்ணி அளவிலா ஆனந்தம் அடைந்தாள். ஆழ்வாரும் அக்குழந்தையின் மூலம் நாம் உய்யும் பொருட்டே அதை இறைவன் தமக்கு அளித்திருப்பதாக எண்ணினார். அப்பெருமானின் கருணையை நினைந்து நினைந்து உருகி உருகி, அன்பே வழிந்தோட அகம் குளிர்ந்தார். நல்ல நாளில் குழந்தைக்கு வேண்டிய சடங்குகளைச் செவ்வனே செய்து அதற்கு "கோதை" என்று பெயரிட்டார் பெரியாழ்வார்.

பெற்றோர்கள் சீராட்டிப் பாராட்ட கோதை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தாள். பெரியாழ்வாருக்குக் கோதையிடம் மிகுந்த அன்பு! அவளுக்கு இளமையிலேயே கற்க வேண்டிய நூல்களையெல்லாம் பயிற்றுவித்தார். அறிவின் செல்வியாய், அன்பின் மகளாய் வளர்ந்து வந்தாள் கோதை. அவ்வூர் மக்களும் கோதையைத் தங்கள் பெண்ணாகவே பாவித்து அவள்மீது அன்பைப் பொழிந்தார்கள்.

கோதைக்குத் தந்தையின் மீது மிகுந்த அன்பு! அவர் செய்யும் வேலைகளில் அவளுக்கு மிகுந்த ஆர்வம், அவரைப்போலவே அதிகாலையில் துயிலெழுந்து விடுவாள். ஆழ்வார் குடலையை எடுத்துக்கொண்டுப் பூஞ்சோலைக்குப் புறப்படும்போது அவளும் அவரோடு குடுகுடுவென ஓடி வருவாள். நந்தவனத்தில் பூக்கொய்து, அவரைப்போலவே கண்ணி, தொடையல், பிணையல் இண்டை முதலிய பல விதமான மாலைகளை அழகுடன் தொடுப்பாள். சிறு குடம் ஒன்றில் நீர் எடுத்து வந்து துளசிச் செடிகளுக்கும் ஊற்றுவாள்.



8. ஆண்டாள்

பிறகு பெரியாழ்வார் தாம் தொடுத்த மாலைகளை வடபத்ர சயனருக்குச் சூட்டி மகிழ்வதுபோல் தானும் அம்மலர் மாலைகளைப் பெருமாளுக்குச் சூட்டி மகிழ்வாள். இவ்வாறு இளமைப் பருவத்திலேயே பெருமாள்மீது கோதை பக்தியும் பாசமும் கொண்டு சேவை செய்து வந்தாள். அதுவே அவளுக்குப் பெரும் விருப்பமான விளையாட்டாக இருந்தது. பெருமாள் முன்னர் தந்தையும் மற்றைய பாகவதர்களும் பாடும் பாடலைக் கேட்டுத் தன்னை மறந்து அப்படியே நின்று விடுவாள். நாளாக நாளாக கண்ணன் மேல் அவளுக்குப் பற்று மிகுந்து வந்தது, அதைக்கண்ட பெரியாழ்வார் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

தந்தையைப் போலவே சிறிது நாளில் கோதைக்கும் கவிபாடுவதில் விருப்பம் ஏற்பட்டது. பெருமாளின் புகழைப்பாட அவள் நெஞ்சம் ஆசை கொண்டது, இயற்கையாகவே அவளிடம் கற்பனைத் திறனும் கவிபுனையும் ஆற்றலும் இருந்தன. பரந்தாமன்மீது கொண்ட பக்தியில் ஞானமுதிர்ச்சி ஏற்படத் தொடங்கியது. அவள் அவன் புகழைப் பாமாலையாகப் பாடத் தொடங்கினாள். நாள்தோறும் தன் பாமாலையை வடபத்ர சயனருக்குச் சூட்டி மகிழ்ந்தாள். இயற்கையின் அழகைக் கண்ட போதெல்லாம் அழகிய மணவாளனான கண்ணனையே கண்டாள். குயிலின் குரலிலெல்லாம் அவன் புகழையே கேட்டாள். கண்ணனின் அழகும் புகழும் அவள் நெஞ்சோடு ஒன்றாக, உடலோடு இணைந்த உயிராகக் கலந்து விட்டன.

இயற்கையழகுகளிலெல்லாம் அவள் கண்ணனைக் கண்டு மகிழ்ந்து வந்தாள். ஒருநாள் பூஞ்சோலையில் ஒரு மரத்தைச் சுற்றிப் படர்ந்திருந்த பூங்கொடி ஒன்றைக் கண்டதும் தனக்கு மணப்பருவம் வந்து விட்டதை அவள் உணர்ந்தாள். அவள் உள்ளம் கண்ணனின் நினைவைத் தாங்கி வாடியது, விம்மிப் பெருமூச்செறிந்தது. தந்தைக்குத் தெரியாமல் தன்னுடைய நெஞ்சத்து உணர்வுகளை ஒளித்து வைக்க முயன்றாள்.

ஆனாலும் பெரியாழ்வார் அதை உணர்ந்து கொண்டார். கோதையின் வாய் மழலைச் சொற்களோடு கண்ணனின் திருப்பெயர்களையும் சொல்லிச் சொல்லிப் பழகிவிட்டதை அறிந்து மகிழ்ந்தார். 'தன் உள்ளத்திலே இவள் கண்ணனது உருவத்தையே சித்தரித்துப் பார்க்கிறாள். என்ன பக்திக் காதல்!" என்று வியந்தார்.



கண்ணனின் நினைவு கோதையை அல்லும் பகலும் வாட்டி எடுத்தது. அவள் அவன்மீது. ஆராக்காதல் கொண்டாள். அதனால் அவள் மேனி பசலை நோயால் மிகவும் மெலிந்தது. ஒருசமயம் அவளுடைய காதல் தீவிரப்பட்டு, அவளைப் பேதையென ஆக்கியது. அப்போது அவள், தன்னுடைய மனத்திலே மணவாளனாக வரித்துவிட்ட அக்கண்ணனுக்குத் தான் தகுந்த அழகி தானா? மணப்பெண்தானா? என்பதை அறிய ஆசைப்பட்டாள். உடனே காலிலே காறை பூண்டு கூறைப்புடவை உடுத்தி, நகைகளையும், மணிமாலைகளையும் அணிந்து கண்ணாடியில் தன்னழகைப் பார்த்தாள். ஆனால் அவள் கண்கள் கைவளையல்களை குலுக்கி கோவைச் செவ்வாய் திருத்தி கண்ணாடியைப் பார்க்கவில்லை. அவள் மயங்கிய நிலையில் கண்ணனது உருவையே கற்பனையாகக் கண்டு மகிழ்ந்தாள். இவ்வாறு அவள் உள்ளத்துக்குள் போராடினாள்.



ஆண்டாளுடன் பெரியாழ்வார்

இப்படியெல்லாம் அவள் கலங்கித் தவிக்கையில் பெரியாழ்வார் அவளைக் கண்டுத் திடுக்கிட்டார். அக்கண்ணனிடம் அதை முறையிடவேண்டும் என்று எண்ணினார்.

'காறை பூணும் கண்ணாடி காணும், தன்
கையில் வளை குலுங்கும்
கூறை உடுக்கும், அயர்க்கும், தன்கொவ்
வைச்செவ் வாய்திருத்தும்!"

என்று கூறி முறையிட்டார். கோதையும் அவர் முறையீட்டை அறிந்தாள். எப்பொழுதும் அவர் பாடிய பாடல் அவள் செவிகளில் ரீங்காரமிட்டவண்ணமாக இருந்தது. அதுவே அவளுடைய காதலை மேலும் அதிகரிக்கச் செய்து, ஆழ்வாருடைய கவலையையும் பெருக்கியது.

பெரியாழ்வார் ஒருநாள் தாம் பறித்த மலர்களைக் கொண்டு, வடபத்ரசாமி பெருமாளுக்குச் சாத்துவதற்காக மாலைகள் தொடுத்து ஒரு குடலைக்குள் வைத்து விட்டு வெளியே சென்றிருந்தார். அச்சமயம் அப்பூமாலையைக் கண்ட கோதை "ஆகா, இம்மலர் மாலைகளைக் கண்ணனுக்குச் சூட்டினால் அவன் எத்தனை அழகுடன் தோன்றுவான்" என்ற எண்ணம் போதை கொள்ளச் செய்தது. அப்போதையுடன் இதை நாம் சூட்டிக் கொண்டால், "இன்னும் அதிகமான வாசத்தை இம்மாலைகள் பெற்றுவிடும். கண்ணனும் பின் இந்த மாலைகளைச் சூட்டிக் கொண்டு மகிழ்வான்" என்று நினைத்தாள். அம்மாலைகளை எடுத்துக் கூந்தலிலும், கழுத்திலும் அணிந்து கொண்டாள். சிறிது நேரம் கடந்தவுடன், தந்தை வந்து பார்த்தால் என்ன சொல்வாரோ என்று பயந்து, திரும்பவும் கசங்காமல் அம்மாலைகளை எடுத்துச் சுருட்டிக் குடலைக்குள்ளேயே வைத்து விட்டாள். அவ்வாறே அவள் பலநாட்கள் செய்து வந்தாள்.

அதையறியாமல் ஆழ்வாரும் மாலைகளை வழக்கம் போல கோயிலுக்கு எடுத்துப் போய் வடபத்ரசாமி பெருமாளுக்கு அணிவித்து வந்தார். அவை முன்போல் இல்லாமல் அதிக வாசமும் ஒளியும் கொண்டு திகழ்வதைக் கண்டு அர்ச்சகர்கள் வியப்படைந்தார்கள். அதனால் ஆழ்வார்மீது அதிக பக்தியும், மதிப்பும் கொண்டார்கள். ஆழ்வாருக்கோ இவையெல்லாம் தெரியாது.

ஒருநாள் கோதை என்றும்போல் தன்னை மிக அழகாக அலங்கரித்துக் கொண்டு, குடலைக்குள் இருந்த மாலைகளைச் சூடிக்கொண்டாள். தன்னழகைத்தானே கண்டு மகிழ்ந்தாள். கண்ணனைப் பற்றிய கற்பனை நினைவுகளில் மூழ்கியும் போனாள். அந்த சமயம் ஆழ்வார் திடீரென்று அங்கே வந்து விட்டார். பெரு மகிழ்வில் தன்னை மறந்திருந்த கோதை அவரைக் கவனிக்கவில்லை.

ஆழ்வார் தம் பெருமாளுக்குச் சூட்டவேண்டிய மாலைகளை தம் மகள் சூடிக்கொண்டிருப்பதைக் கண்டு சிறிது நேரம் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார். பிறகு, "என்ன அபசாரம்?" என்று பதறினார். அவர் உள்ளம் நடுங்கி எழுந்தது; ஏனோ அவரால் மகளைக் கோபித்துக் கொள்ளவும் முடியவில்லை; மெல்ல அவள் முன் சென்று தழுதழுத்த குரலில், "அம்மா குழந்தாய்! நீ தினந்தோறும் இப்படித்தான் செய்துகொண்டு வருகிறாயா? பரந்தாமனுக்கு சூட்ட வைத்திருக்கும் மாலைகளை நீ சூடிக் கொள்ளலாமா? இது தவறாயிற்றே? இளமையிலேயே ஞானக் கல்வி பெற்ற நீயா இப்படிச் செய்தாய்? இந்தத்துணிவு கூடாதம்மா; ஆண்டவனுக்கு மிகவும் பயபக்தியுடன் தொண்டு புரிய வேண்டும்!" என்று சொன்னார்.

அவர் சொன்ன வார்த்தைகளை கோதையின் செவி ஏற்கவில்லை. அவர் என்ன சொன்னார் என்பதும் அவளுக்கு விளங்கவில்லை. ஆனாலும் அவர் எதற்கோ வருந்துகிறார் என்பதை மட்டும் உணர்ந்தாள். கோதை, அடுத்த கணம் கண்களில் நீர்ப் பெருக விம்மி விம்மி அழத்தொடங்கினாள். அவளுடைய அழுகையைக் கண்ட ஆழ்வார் தம் வருத்தத்தை ஒரு கணத்தில் மறந்து விட்டார். அவருடைய கோபமும் அடங்கி விட்டது அழும் மகளை அணைத்துக்கொண்டு, 'குழந்தாய்; நான் சொல்லிய வார்த்தைகளை நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம். உன்னைப் பயமுறுத்தி விட்டேனோ? உன் முகம் மிகவும் வாடிவிட்டதே, ஆனாலும் இனி இப்படிச் செய்யாதே அம்மா!" என்றார்.

கோதையோ, தான் குற்றஞ் செய்ததாக நினைக்கவேயில்லை. தனக்கு அச்செயல் தகாதது என்றும்

அவள் எண்ணவில்லை. அவள் தலைகுனிந்து நிலத்தைப்பார்த்து, 'நான் அவனுடைய பிரியை அல்லவா?" என்று மெல்லச் சொன்னாள்.

மகளின் வார்த்தையைக் கேட்டுத் திடுக்கிட்டார் ஆழ்வார், ஆயினும் ஒன்றும் பேசாதவராக, அக்குடலையை எடுத்துக் கொண்டு பூஞ்சோலையை நோக்கிப் புறப்பட்டார். ஆம்; கோதை சூடிப் பார்த்த மாலைகளை வடபெருமாள் கோயிலுடையானுக்குச் சூட்ட அவர் மனம் ஒப்பவில்லை. வழி நெடுகிலும், சோலையில் மலர்கொய்யும் பொழுதும் தம் மகள் செய்த செயலையே எண்ணி வருந்தினார். பின்பு பூக்குடலையுடன் வீட்டுக்கு வந்துப் புதிதாக மாலைகள் தொடுத்தார். அவருக்கு உதவியாகக் கோதையும் மாலைகளைத் தொடுத்தாள்.

மாலைகள் எல்லாம் தொடுத்து முடிந்ததும் பெரியாழ்வார் அவற்றைக் கோயிலுக்கு எடுத்துச்சென்று வடபத்ரசயனப் பெருமாளுக்குச் சூட்டினார். ஆனால் வழக்கம்போல் பெருமான் தம் புன்முறுவலில்லை. பொலிவு காட்டவில்லை. நேற்றிருந்த பொலிவும் இன்று இல்லை. அந்த மாலைகளுக்கும் பழைய மணம் இல்லை. சன்னதியே ஒளியிழந்து போயிற்று. ஆழ்வார் அதைக்கண்டு பெருங்கவலை கொண்டார். அவர் வருத்தத்துடன் வீட்டுக்கு வந்தார். வீட்டுக்கு வந்து சேர்ந்த பின்பும் அவர் மனம் அமைதியடையவில்லை. 'எம்பெருமானே; என் பேதைப் பெண் அறியாமல் இந்தத் தவறைப் புரிந்துவிட்டாள். அவள் தவறை மன்னித்து நீதான் அவளைக் காத்தருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

பெரியாழ்வார் அன்று இரவு வெகு நேரம் வரையில் தூக்கம் வராமல் புரண்டு புரண்டுப் படுத்துக்கொண்டிருந்தார். இறுதியில் உறங்கிப் போனார். அவருடைய கனவிலே வடபெருங்கோயிலுடைய பெருமான் தோன்றி, "ஆழ்வாரே! நீர் உம்முடைய மகளை அறிந்துகொள்ளவில்லை. அவள் நமக்குச் சூடிக்கொடுக்க வந்த சுடர்கொடி. அதை அறியாமல் இன்று அவள் சூடிய மாலைகளைப் புறக்கணித்து, வேறு மாலைகளைத் தொடுத்துக் கொண்டு வந்து எமக்குச் சாத்தினீர். கோதை கூந்தலில் சூடிக்கொடுக்கும் மாலைகளையே நாம்

விரும்புகிறோம், அம்மாலையே மணத்திற் சிறந்ததும் என் மனதிற்கு உகந்ததுமாகும்" என்ற சொல்லி மறைந்தருளினார்.

பெருமாளுக்குரிய பெரியாழ்வார் புத்துணர்வு பெற்றார். பூமகளோ திருமகளோதான் தம் மகளாகத் தோன்றியிருக்க வேண்டும் என்று நினைத்தார். அன்று முதல் ஆழ்வார் தாம் கட்டிய மாலைகளை கோதையைச் சூட்டிக் கொள்ளச் செய்த பின்பே, அம்மாலைகளை வடபத்ரசயனருக்குச் சூட்டி வரலானார். பகவானுடைய தரிசனமும் முன்னைப்போலவே அற்புதமாகத் திகழ ஆரம்பித்தது. அர்ச்சகர்களும் பிறரும் அதன் காரணத்தை அறிய வேண்டி ஆழ்வாரின் திருவடிகளில் விழுந்து வணங்கி "நீரே உலாவும் பெருமாள்! இத்தனைச் சிறந்த நறுமண மாலைகளைத் தங்களால்தான் சூட்ட முடியும். இது எவ்வாறோ?" என்று கேட்டார்கள்.

பெரியாழ்வார் மகிழ்ச்சி பொங்கக் கோதையை நோக்கி, "எம்பெருமானுக்குச் சூடிக் கொடுத்து என்னை ஆண்டாள் இவளே!" என்று சொல்லி ஆனந்த பரவசமானார். அது முதல் கோதைக்குச் "சூடிக் கொடுத்தாள்" "சூடிக் கொடுத்த நாச்சியார்" "ஆண்டாள்" என்ற திருப்பெயர்கள் வழங்கி வரலாயின. கோதையையும் அன்று முதல் வடபத்ர சாமியுடன் இணைத்துப் பார்த்து இருவரையுமே பக்திக் கண்ணோடு கண்டு வந்தார் பெரியாழ்வார்.

திருத்துழாயோடு நறுமணமும் கூடவே முளைப்பது போல் ஆண்டாளுக்கு பரஞான பரபக்தி பரமபக்தி அதிகம் வளரலாயிற்று. நாளுக்கு நாள் ஆண்டாளின் மனத்தில் கண்ணனிடம் கொண்ட காதலும் முற்றி, அவளைத் தீயெனத் தகிக்கச் செய்தது. அப்போது அவள் அக்கொடுமையைத் தாங்க மாட்டாமல் என்று கண்ணனுக்கு உரிமையாவேன் என்று எண்ணுவாள். முன்னொரு சமயம் கோபிய கன்னிகைகள் கண்ணனை நாயகனாக பெற விரும்பி மாதங்களில் மாலவனுக்குப் பிடித்த மார்கழி மாதத்தில் கார்த்தியாயினி தேவியைக் குறித்து நோன்பு நோற்று, அவ்விரதம் செய்து வரும் போதே கண்ணபிரான் அவர்களுக்கு அருள் புரிந்ததை நினைத்தாள். மணமாகாத கன்னிப்பெண்கள் தங்களுக்கு தகுந்த நாயகன் கிடைக்க வேண்டுமென்று மார்கழி மாதத்தில் நோன்பு

இருப்பதும் வழக்கமாகும். எனவே தனக்குக் கண்ணனே நாயகனாக வேண்டும் என்று வரித்து தானும் அவ்வாறு நோன்பு நோற்றால் அவனுக்கு அதிவிரைவில் மணமாலை சூடி மகிழலாம் என்று மனங்கொண்டாள். உடனே ஆண்டாள் மார்கழித் திங்களில் நோன்பு நோற்கத் தொடங்கினாள். ஸ்ரீவில்லிபுத்தூரையே ஆயர்பாடியாக்கி அங்குள்ள பெண்களையே கோபிகா கன்னிகைகளாக்கி தானும் அவர்களுள் ஒருத்தியாக நின்று வடபத்ரசாமியைக் கண்ணபிரானாக எண்ணி பாவை நோன்பு நோற்றாள். அப்பொழுதே அவள் "திருப்பாவை"யைப் பாடினாள்.

அத்துடன் அவள் அமைதி கொள்ளவில்லை. மன்மதனை நோக்கி "காமதேவா! அவரைப் பிராயம் தொடங்கி என்றும் ஆதரித்தெழுந்த என் தடமுலைகள் துவரைப்பிரானுக்கே சங்கல்பித்துத் தொழுது வைத்தேன். அந்த உத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த என் தடமுலைகள் மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழ்கில்லேன். கண்டாய் மன்மதனே! திரிவிக்கிரமன் திருக்கைகளால் என்னைத் தீண்டும் படி செய், கேசவநம்பியைக் கால் பிடிப்பாள் என்றும் இப்பேறு எனக்குத் தந்தருள்! மணிவண்ணற்கு என்னை வரித்திடு" என்று நோன்பு நோற்றாள். பின்னும் குயில்களையும், தென்றலையும் மேகங்களையும் கண்ணனிடம் தன் எண்ணத்தைச் சொல்லுமாறு தூது விடுத்தாள்.

"என் காதலன், முழங்குகின்ற வெண்மையான சங்கத்தை இடது கையிலே கொண்டவன். அவன் யாதொரு குற்றமும் இல்லாதவன், அவன் தன் உருவை எனக்கு நேரடியாகக் காட்டவில்லை, மறைத்துக் கொண்டான். எப்படியோ என் உள்ளத்திலே புகுந்து விட்டான். அவன் எப்படி வந்து புகுந்தான் என்பதை நான் அறியேன். என் உள்ளத்தில் புகுந்தவன் சும்மா இருக்கிறானா? இல்லை. என்னைத் துன்புறுத்துகிறான் துன்புறுத்துவதோடு இரக்கமின்றி விட்டு விடவும் இல்லை. ஒவ்வொரு நாளும் எனக்குப் புதிய உயிரைத் தந்து என்னை இன்பத்திலும் துன்பத்திலும் கூத்தாடச் செய்கிறான்.

"ஏ அழகிய குயிலே, தேன்சிந்துகின்ற செண்பக மலரைக் கோதித் தேனையுண்டு களிக்கின்ற குயிலே, அக்களிப்பின்



மிகுதியினால் உனை மறந்து இசைபாடி இன்புறும் குயிலே! மெதுவாக இருந்து குதலை மொழிகளைக் கூறியும், கூறாமலும் நீ ஒரு காரியம் செய்யவேண்டும். என் உள்ளத்தே என் கண்காணாமல் புகுந்துள்ள திருவேங்கடத்தானை என் கண்எதிரே வந்து காட்சியளிக்கும்படி கூவுக, இதுதான் நான் உன்னை வேண்டும் வேண்டுகோள்"

"வெள்ளி விளிசங்கு இடம்கையில் கொண்ட
விமலன் எனக்கு உருக் காட்டான்;
உள்ளம் புகுந்து எனை நைவித்து,
நாளும் உயிர்பெய்து கூத்தாட்டுக் காணும்;
கள் அவிழ் செண்பகப் புதுமலர் கோதிக்
களித்து இசைபாடும் குயிலே!
மெள்ள இருந்து மிழற்றி மிழற்றாது, என்
வேங்கடவன் வரக் கூவாய்!"

மேலும்,

'என் காதலை எண்ணி எண்ணி என் எலும்பு முழுதும் உருகிவிட்டது, வேல் போன்ற என்னுடைய கண்கள் இமையோடு இமை பொருந்தவில்லை; உறங்கவேயில்லை. இவ்வாறு பல நாட்களாகத் துன்பக்கடலிலே கிடந்து தவிக்கிறேன். அக் கடலிலிருந்து கரையேற வேண்டுமானால் வைகுந்தவாசன் என்னும் தோணியைப் பெற்றால்தான் முடியும்; அந்தத் தோணியைப் பெறமுடியாமல் வருந்திச் சோர்ந்து கிடக்கிறேன்.

'குயிலே! உனக்கு நான் விளக்கமாக என் துன்பத்தை விரித்துக்கூற வேண்டியதில்லை! அன்புடையாரை காதலரை பிரிந்துரைவதனால் வரும் துன்பம் இத்தகையது என்பது உனக்கே தெரியும். நீ பல தடவை அத்தகைய பிரிவுத் துன்பத்தை அனுபவித்திருப்பாய் ஆதலால்தான் என் துயரத்தை நான் விரித்துரைக்க விரும்பவில்லை. நீ எனக்கு உதவி செய்ய வேண்டும். காதலனைப் பிரிந்திருக்கும் என் துன்பத்தை நீக்குவதற்கு நீ உதவி புரியவேண்டும். பொன்போன்ற நிறத்தையுடைய கருடனைக் கொடியிலே கொண்ட அந்தப் புண்ணியவானைக் காணாமல் வாடி வருந்துகிறேன். அவனை என்னிடம் வருமாறு உன் இனிய குரலால் கூவுக." இதுதான் நான் உன்னிடம் வேண்டிக்கொள்ளும் விண்ணப்பம்.

"என்பு உருகி இனவேல் நெடும் கண்கள்
இமை பொருந்தா; பல நாளும்
துன்பக் கடல்புக்கு, வைகுந்தன் என்பது ஓர்
தோணி பெறாது உழல்கின்றேன்:
அன்புடையாரைப் பிரிவுறு நோய்
அதுநீயும் அறிதி குயிலே!
பொன்புரை மேனி கருடக் கொடி உடைப்
புண்ணியனை வரக் கூவாய்"

என்றெல்லாம் தூது விடுத்தாள். இவ்வாறு ஆண்டாள் தன் காதல் நினைவுகளில் மூழ்கி வாடிமெலிவதைக் கண்டார் பெரியாழ்வார். இதற்கு என்ன செய்வது? என்று அவர் ஆராயலானார். கடைசியாகத் தலயாத்திரை செய்தால் இவள் சித்தம் சரியாகும் என்று எண்ணினார். முதலில் அவர், அவளை திருமாலிருஞ்சோலை என்ற அழகர் மலைக்கு அழைத்துப் போனார். அங்கும் அவள் சித்தம் முன்னைப்போலவே மாறாமல் இருப்பதைக் கண்டார்.

பிறகு வடக்கேயுள்ள திருப்பதி மலைக்கு அழைத்துப் போனார். அங்கேயும் ஆண்டாள் அதே பக்திப் பைத்தியமாக இருந்தாள். கடைசியாக ஆண்டாளை அழைத்துக்கொண்டு சீரங்கத்திற்குப் போனார் பெரியாழ்வார். அவளுக்கு நூற்றெட்டுத் திருப்பதிகளின் சிறப்புகளையும் தனித்தனியே எடுத்துச் சொன்னார். அம்மூர்த்திகளையெல்லாம் ஆண்டாளின் நெஞ்சம் கண்ணனாகவே கருதிக் காதலித்தது. எனினும் அரங்க நாதனுடைய அருமை, பெருமைகளைப் பெரியாழ்வார் கூறியதும், ஆண்டாள் தன்னை மறந்து மகிழ்ந்து சிறிதும் அசைவற்றிருந்தாள்! தான் விரும்பும் கண்ணனே அரங்கநாதன் வடிவில் அங்கே எழுந்தருளியிருக்கிறான் என்பதாக நினைத்தாள்.

அவனை எண்ணி எண்ணி உள்ளம் கரைந்தாள். கண்ணீர் மல்க அவனைப் பற்றிய நினைவுகளிலே மூழ்கிக் கிடப்பாள். கண்களையும் அவள் ஒரு பொழுதேனும் மூடுவதில்லை எத்தனை நாள் தான் இப்படியே இருக்க முடியும்? ஒருநாள் அவளையும் மறந்து இரவின் பிற்பகுதியில் அயர்ந்து உறங்கி விட்டாள். உறங்கும் பொழுது அவள் ஒரு அற்புதக் கனவைக்

கண்டாள் ஆண்டாளின் கனவிலே நாரணன் நம்பி அவளைக் கைப்பிடித்து மணந்தான். மணம் பேசுதல், காப்பு, நாண் கட்டுதல், மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத மதுசூதனன் வந்து தன்னைக் கைத்தலம் பற்றுதல், மறையோர் மந்திரம் ஓதிடக் கைப்பற்றி தீவலம் வருதல், நாராயணன் நம்பி தன் திருக்கையால் தாள்பற்றி அம்மி மிதித்தல், கைமேல் கைவைத்து பொரி முகந்தட்டுதல். மஞ்சணம் ஆட்டல் அத்தனையையும் ஆண்டாள் தன் கனவிலே கண்டாள். அவளுக்கு அது பேரின்பத்தை அளித்தது; அவள் கனவின் மயக்கம் தெளிந்து விழித்தாள். தான் கண்ட அந்த அற்புதக் கனவை தன் தோழியிடம்,


"வாரணம் ஆயிரம் சூழவலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்னெதிர்
பூரணப் பொற்குடம் வைத்துப் புரம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்!"

என்று தொடங்கி பாடல்களாகவே கூறினாள்.

அவளுடைய கனவை பெரியாழ்வாரும் அறிந்தார். என்ன செய்வதென தெரியாமல் விழித்தார். அவர் ஆண்டாளை நோக்கி, "உனக்கு மணப்பருவம் வந்துவிட்டது. நீ யாருக்கு வாழ்க்கைப்பட உன் மனதில் நினைத்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"மானிடருக்கென பேச்சுப் படில் வாழ மாட்டேன். அந்த மணிவண்ணனையே என் மணாளனாக என் மனதில் வரித்து விட்டேன்!" என்றாள் ஆண்டாள். "அந்த மணிவண்ணன் எவ்வூரான்?" என்று பெரியாழ்வார் கேட்டார், பெயர்கள் பல உள்ள அந்தப் பரந்தாமன் கோயில் கொண்டிருக்கும் நூற்றெட்டு திருத்தலங்களின் பெயர்களையும் சொல்லும்படி ஆண்டாள் கேட்டாள்.

பெரியாழ்வாரும் அத்தலங்களின் பெயர்களையும் அங்கு கோயில் கொண்டிருக்கும் பெருமானின் திருநாமங்களையும் சொல்லிக் கொண்டே வந்தார். ஸ்ரீரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் ரங்கநாதப் பெருமானின் பெயரைச் சொன்னதும் ஆண்டாள் வெட்கத்தோடு புன்முறுவல் பூத்து நாணிக்



கோணினாள். அவள் திருவரங்கனையே தன் மணாளனாக்கிக் கொள்ள விழைகிறாள் என்பதை பெரியாழ்வார் புரிந்து கொண்டார். ஆனால் அது இம்மண்ணுலகில் எவ்வாறு கைகூடும் என்று குழம்பினார்.

அன்றிரவு அவர் கவலையோடு கண்ணயர்ந்து உறங்கும்போது அவர் கனவில் திருவரங்கத்துச் செல்வன் தோன்றி, "உம் மகள் கோதையை அலங்கரித்து திருமணக் கோலத்தோடு எம்கோயிலுக்கு அழைத்துவா. அவளுக்குத் தகுதியாக நாமே கைத்தலம் பற்றுகிறோம்" என்று கூறிவிட்டு தம் கோயில் பரிவாரத்தினருக்கும் அதை அறிவித்து நம் வாத்தியங்கள் சாமரங்கள், விருதுகள் முதலானவற்றோடும் பரிஜனங்கள் அனைவரும் ஸ்ரீ வில்லிபுத்தூருக்குச் சென்று அங்கு மணக்கோலம் பூண்டிருக்கும் ஆண்டாளை நம் திருக்கோயிலுக்கு அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார்.

கோயிற் பரிஜனங்கள் அவ்வாறே சென்று பெரியாழ்வாரிடம் விண்ணப்பித்தார்கள். ஆழ்வாரும் வட பெருங் கோயிலுடை யானிடம் விடைபெற்று, ஆண்டாளை மணிப்பல்லக்கில் உட்கார வைத்து, பிறர் கண்படாதபடி தட்டுப் பாயிட்டு மூடிக்கொண்டு திருவரங்கத் திருத்தலத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு அழகிய மணவாளன் திருமண்டபத்தை அடைந்து பல்லக்கை இறக்கியதும் அதில் மூடியிருந்த தட்டுப்பாயை எடுத்தார். உடனே சூடிக்கொடுத்த நாச்சியாரும் அரங்கநாதன் சந்நிதியில் உலகர் அனைவரும் காணும்படி உதறியுடுத்த சேலையும் பருத்த செங்கழுநீர் மாலையும், திருநெற்றியில் கஸ்தூரித் திருநாமமும், காதளவு ஓடி கயல்விழி புரள, கடைக்கண் பார்வையும் ஒளிவிட, கொங்கைகள் குலுங்கி கால்களில் சிலம்பும் கைகளில் அழகிய வளையல்களும் ஒலிக்க, அன்னமென மென்நடை நடந்து கேசவ நம்பி நெருங்கி அவளைக் கண் குளிரக் கண்டு அவன் கால் பிடிக்கும் பேறு பெறுபவளாகி, நாகபர்யங்கத்தை மிதித்தேறி திருவரங்கச் செல்வனைச் சேர்ந்து அவன் திருவடிகளின் அருகே அமர்ந்தாள். உடனே பெரும் பேரொளி ஒன்று எழுந்து மறைந்தது. அதற்குப்பின் ஆண்டாளைக் காணவில்லை. ஆம்!

அவள் ஸ்ரீரங்கநாதனுடன் ஒன்றெனக் கலந்து அவனை என்றும் பிரியாதிருப்பவளானாள். இதைக்கண்ட பெரியாழ்வார் ஸ்ரீவல்லபர் முதலான எல்லோரும் பெரும் வியப்பிலும் பக்திப் பெருக்கிலும் மெய்மறந்து நின்றார்கள்.

அழகிய மணவாளனான அரங்கநாதப்பெருமான், "பாற்கடல் மன்னனைப் போல நீரும் எனக்கு மாமனாராகி விட்டீர்" என்று மிகவும் பெரியாழ்வாருக்கு உவந்தருளி "நீர் வில்லிபுத்தூர் உறைவான் பொன்னடி பூண்டு கொண்டு வாழும்!" என்று விடை கொடுத்தனுப்பினார்.

பெரியாழ்வார் தாமும் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் திரும்பி வந்து, வடபெருங் கோயிலுடையானுக்கு வழக்கம் போல் திருத்தொண்டு புரிந்து வரலானார்.

ஆண்டாள் திருமணத்தை நம்மாழ்வாரைக் கொண்டு திருக்குருகூரில் பெரிய சுயம்வரமாகப் பெரியாழ்வார் நடத்தினார் என்றும் அதற்கு நூற்றெட்டு திருத்தலத்து எம்பெருமான்களும், அடியார்களும் பலரும் விஜயம் செய்தார்கள் என்றும் நம்மாழ்வாரின் திருமாளிகையில் எல்லாத் தேவர்களும் வந்திருக்க நான்முகனே புரோகிதம் செய்யத் திருமணம் நடந்தேறியது என்றும் அன்றிரவு மணமக்கள் திருப்பள்ளியறை சேர்ந்தார்கள் என்றும் மறுநாட்காலை தொண்டரடிப் பெரியாழ்வார் திருப்பள்ளியெழுச்சிப் பாடினார் என்றும் ரங்கநாதர் ஆண்டாளோடு கருட வாகனத்தின்மீது ஏறி வான்வெளியாகப் பல தலங்களைக் காட்டிக்கொண்டு சென்றாரென்றும் ஒரு கதை வழங்குகிறது.

ஆண்டாளின் அருட்காதல்தான் என்னே! அவளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்ட அரங்கநாதப் பெருமானின் அருட் கருணையை என்னென்று சொல்வது? வாழ்க ஆண்டாள்! வாழ்க அரங்கப் பெருமான்!" ஆண்டாள் பாடியவை; திருப்பாவை, நாச்சியார் திருமொழி.

❖ ❖ ❖

9. தொண்டரடிப் பொடியாழ்வார்

காவிரி நதியால் அதிக நீர்வளம் பெற்று புனல் நாடு என்ற புகழும் பெற்ற சோழ வளநாடு ஒரு காலத்தில் மிகவும் சிறந்து விளங்கியது. இளங்குமரி கலகலவெனச் சிரித்தோடுவது போல் சல சலவென ஓடும் நீரோடைகளும், அவள் பச்சைப் பாவாடை உடுத்திக் குலுங்குவது போல் பச்சைப் பசேலென்ற பசுமையான வயல்வெளிகளில் குலுங்கும் நெற்கதிர்களும், மாடமாளிகைகளிலே சிரித்து விளையாடும் மங்கையரைப் போல் மரங்களிலும் செடிகளிலும் பூக்கள் சிரித்து விளையாடும் மலர்ச் சோலைகளும், குளத்திலே குதித்து விளையாடும் குமரிகள் போல் கழனிகளிலே துள்ளி விளையாடும் கயல் மீன்களும், பள்ளியறை நாயகனின் கையணைப்பிலேயே படுத்துறங்கும் பாவையரைப் போல் ஓலைகளிலே படுத்துறங்கும் பனித் திவலைகளும் சோழ நாடெங்கும் நிறைந்திருக்கும்; அத்தகைய நாட்டில் ஈரிபதாஞ் சோழம் என்று பிரசித்தமான திருமால் தலங்கள் நாற்பது உண்டு.

அவற்றுள் திருமண்டங்குடி என்பதும் ஒன்றாகும். அது சிறு கிராமம்; அங்கே ருக், யஜுர், சாமம், அதர்வணம் எனப்படும் நான்கு மறைகளிலும் தேர்ந்த அந்தணர்களின் இன்னிசைப் பாடல்களும், எழுவதால் அவ்வூரில் தெய்வ மணமும் தமிழ் மணமும் கலந்து வீசும். அவ்வூர் பிராமணர்களில் முன் குடுமி சோழியப் பிராமணர் (விப்ர) என்னும் வகுப்பினரும் வாழ்ந்து வந்தார்கள். அவர்களில் வேத விசாரதர் என்ற ஒரு சோழியப் பிராமணர் சிறந்த திருமால் தாசராக விளங்கி வந்தார்; பரந்தாமனுக்குப் பாத சேவை செய்வதே. பரமபதம் தரும் என்பதை அவர் நன்கறிந்தவர்; நாமங்கள் பல சொல்லி நாராயணா என்று நினைத்து அப்பெருமாள் கோயிலுக்கு பூமாலைகளைத் தொடுத்துச் சென்று திருமாலுக்குச் சாத்தி வருவார். மற்றைய மறையவர்களும் வணங்கத் தக்க பேரறிவும் நல்லொழுக்கமும் சிறந்த பக்தியும் கொண்டு சகல வேத விசாரதர் என்று சிறப்பிக்கவும் பெற்றார்; உலகளந்த பெருமாளின் நற்கருணையினால் அவருக்கு பிரபவ



9. தொண்டரடிப் பொடியாழ்வார்

வருஷம் மார்கழி மாதம் கிருஷ்ண சதுர்த்தி செவ்வாய்க் கிழமை யன்று கேட்டை நட்சத்திரத்தில் திருமாலின் ஸ்ரீவைஜயந்தி வனமாலையின் அம்சமாக அருமையான ஒரு புதல்வர் பிறந்தார்.

குழந்தை பிறந்த பன்னிரண்டாம் நாள் செய்ய வேண்டிய சடங்குகளையெல்லாம் பெற்றோர்கள் அதற்குச் செய்து விப்பிர நாராயணர் என்று பெயர் சூட்டி மகிழ்ந்தார்கள். விப்பிர நாராயணர் தக்க பருவத்தில் கல்வி கற்றார். வேத விசாரதர் தென்மொழியிலும், வடமொழியிலும் கற்கவேண்டிய நூல்கள் அனைத்தையும் குற்றம் குறையற விப்பிரநாராயணர் கற்றுத் தேர்ந்தார். அதனால் கலையறிவும் நல்லொழுக்கமும் தெய்வ பக்தியும் நிறையப் பெற்று முழு நிலா என விளங்கினார் விப்பிரநாராயணர். இத்தனையும் பெற்ற அவரை "சகல கலா வல்லவன்" என்று யாவரும் போற்றிப் புகழ்ந்தனர். ஆயினும் அவரிடம் கர்வம் சிறிதும் இல்லை. பழுத்த அறிவு பெற்றதால் அவர் அடக்கமே வாய்மை தரும் என்பதை உணர்ந்திருந்தார். அவரிடம் இளமையின் செழுமையும் பொலிவும் தேஜசின் கவர்ச்சியும் இருந்தும் அவர் மிகவும் அடக்கமாக அமைதியான போக்கிலே நடமாடியதால் மற்றவர் கண்களுக்கெல்லாம் குளுமையான நிலாவைப் போலவே விருந்தளித்தார். ஆனால் திருமாலிடமே தன் நெஞ்சமெல்லாம் பதிய வைத்திருந்த அவரோ மாயவன் அடியாரைத்தவிர மற்றவர்களைக் காணவும் கூசினார்.

இவ்வாறு அவர் வாழ்ந்து வரும் நாளில் திருமாலின் சேனைத் தலைவரான 'சேனை முதலியார்' மோட்ச உலகத்திலிருந்து விப்ர நாராயணருக்காக மண்ணுலகிற்கு வந்து அவருக்கு உண்மைப் பொருளை உணர்த்திச் சென்றார். அதன் விளைவாக சகல மந்திரப் பொருட்களையும் விப்பிரநாராயணர் அறிந்துணர்ந்தார். அன்றைய தினத்திலிருந்து திருமாலிடத்தே அவர் அன்பு, பற்று, பாசம் அனைத்தும் பெருகியது. வேறெதிலும் அவருடைய மனம் செல்லவேயில்லை. அரங்கனின் அருளை எண்ணியெண்ணிக் காலம் கழித்தார். எந்த நேரமும் அவன் பெருமைமிக்க குணநலன்களை எண்ணுவார். பேசுவார். இப்படியே இருப்பதில் தான் அவருக்கு மிகுந்த விருப்பமாக இருந்தது. அதனால் அவர் திருமணம் செய்து கொள்வதை வெறுத்து பிரம்மச்சாரிய விரதத்தையே உயர்வாக எண்ணிக் கடைப்பிடித்து வரலானார்.

ஒருநாள் திடீரென்று அவருக்கு ஓர் எண்ணம் தோன்றியது இறைவன் ஓங்காரப் பொருளானவனல்லவா? அத்தகைய திருமால் பள்ளி கொண்டுள்ள தலங்களுக்கெல்லாம் சென்று வருவதே. நாம் பிறந்ததின் பயனான பேரின்பத்தைப் பெறுவதற்குரிய வழியாகும்" என்று நினைத்தார். உடனே தல யாத்திரையையும் தொடங்கினார். எனினும் எந்தத் தலத்திற்கு முதலில் செல்வது என்ற கேள்வி அவர் உள்ளத்தே எழுந்தது. சிந்தித்துப் பார்க்கையில் காவிரியின் கரையிலே இருப்பதும் திருமாலின் அருள் நிறைந்து விளங்குவதும், தனக்கு இணையற்றதும் அருளும் நன்மையும் வழிவழியாக இலங்குவதுமான சீரங்கம் என்னும் அருள்தலம் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. ''சரி, அங்கேயே முதலில் செல்வோம்" என்று அவர் முடிவெடுத்தார்.

சீரங்கத்தை நோக்கி விப்ரநாராயணர் உடனே கிளம்பிவிட்டார். ஊரையடைந்து கோயிலுள் சென்றார். அங்கே காவிரியாறு கோவிலின் இருபுறம் சுருண்டு மாலை போலிருக்க அதன் நடுவே பாம்புப் படுக்கையிலே கருநிற மேனியனான திருமால் முடியை மேற்கில் வைத்தும், திருவடிகளைக் கிழக்கில் நீட்டியும், விபீடணனுக்காக தெற்குபுறமாகத் திரும்பி இலங்கையைப் பார்த்துக் கொண்டும் இருக்க, அவனது இரு திருவடிகளை தேவியர் பிடித்து வருட, அறிதுயில் புரியும் அழகான கோலத்தைக் கண்டார், அக் காட்சியில் தம்மை மறந்தார். அரங்கநாதப் பெருமானையே வைத்த கண் வாங்காமல் கண்டுகளித்த வண்ணம் இரு கைகளையும் கூப்பி வணங்கி நின்றார்.

அரங்கநாதர் அப்பொழுது தன்னுடைய அழகின் காந்தியாலே அவரைத் தீண்டி, பரவசம் அளித்தார். தன்மீது மிகுந்த பற்றும் பக்தியும் விப்பிர நாராயணருக்கு பொங்கியெழும்படிச் செய்தார்.

"பச்சை மாமாலைபோல் மேனி! பவள வாய்க் கமலச் செங்கண், அச்சுதா! அமரரே! ஆயர்தம்கொழுந்தே என்றெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழும் இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே" என்று நெஞ்சுருகி வேண்டினார்.

பாம்பணையில் பள்ளி கொண்ட பெருமாளைச் சேவித்த பிறகு விப்பிர நாராயணருக்கு வேறு எவரையும் காணப் பிடிக்கவில்லை. திருமாலுக்குத் தொண்டு செய்வதே என் வாழ்வின் லட்சியம் என்று அவர் உள்ளத்தில் வேரூறியிருந்த எண்ணம் இப்போது பெரும் விருட்சமாக ஓங்கி வளர்ந்து விட்டது. ஆனால் தன்னையாளும் அரங்கத்தம்மானுக்கு என்ன வழியில் தொண்டு செய்வது என்று அவர் தீவிரமாகச் சிந்தித்தார். முடிவில் கண்ணன் கதையில் 'கம்சனுக்கு நாள்தோறும் மாலைகட்டித் தந்த மாலாகாரரின் நினைவு வந்தது. தானே எல்லாம் என்று இறுமாந்திருந்த பகைவனான கம்சனின் பணியாள் தான் மாலாகாரர் என்றும் பாராமல் கமலக்கண்ணன் மலர் சூடிக் கொள்ள வேண்டும் என்ற பெரும் விருப்பத்தால் அவர் இருக்கும் இடம் போய் மாலை வாங்கிச் சூடி மகிழ்ந்தானே? மாலவனுக்கு மகிழ்ச்சியூட்டும் வண்ணம் அப்பெருமானுக்கு மாலை சூட்டும் அத்திருத்தொண்டையே நாம் செய்வோம். அதுவே மாலவனுக்கு ஏற்றத் தொண்டாகும்' என்று விப்பிர நாராயணர் தீர்மானங் கொண்டார்.

உடனே அவர் திருவரங்கத்தில் ஒரு நந்தவனம் அமைத்தார். அதில் பலவகையான மரங்களையும், பூச்செடி கொடிகளுக்கிடையே துளசிச் செடிகளையும் நிறைய வளர்த்தார். அச்சோலையில் பொய்கைகளும், நீரோடைகளும் இருந்தன. அவற்றில் செந்தாமரை, வெண்தாமரை, கருங்குவளை, அல்லி முதலிய பூக்கள் மலர்ந்து சிரிக்கும் சோலையின் அடர்த்தியில் ஏற்பட்ட இருளை உவமை கூற, இளமை பொருந்திய பெண்களின் கரிய கூந்தலின் நிறங் கூட தோற்றுப் போகும். மயில்களும், குயில்களும் அன்னங்களும் அங்கே தங்களை மறந்து உல்லாசமாக உலாவும். அந்த நந்தவனத்தின் நடுவே விப்பிர நாராயணர் அழகான குடிசை அமைத்து அந்த பர்ண சாலையில் தங்கியிருந்தார்.

நாள்தோறும் அந்தப் பருவ காலங்களில் பூக்கும் மலர்களை வெகு அழகாக தொடுத்துக் குடலைக்குள் போட்டுக் கொள்வார். துளசியைத் தொடுத்து கட்டப்பட்ட மாலையையும் எடுத்து வைத்துக் கொள்வார். அரங்கப் பெருமாளுக்குச் சாற்றுவார். மாலைச் சூடிக்கொண்டே மகிழ்வார். அவன் அழகில் தம்மையே மறந்து

நிற்பார். இவ்வாறான தன் சேவை முடிந்தபின், நல்லொழுக்க முடைய அந்தணர்களின் வீடுகளுக்குச் சென்று பிச்சை ஏற்று உண்பார்; இவ்வாறு விப்பிரநாராயணர் நாள்தோறும் தன் பணியை அரங்கனுக்குச் செவ்வனே செய்து காலங்கழித்து வந்தார்.

அரங்கநாதப் பெருமானான அழகிய மணவாளனின் பேரழகையே கண்டு கவர்ச்சியுற்ற அவருக்கு உலகில் வேறு எந்த அழகின் கவர்ச்சியுமே தெரியவில்லை. கார்முகில் வண்ணன் மீதே காதல் கொண்ட அவருக்குப் பெண்ணொருத்தி மீது காதல் கொள்ளும் எண்ணமே கனவில் கூட அவருக்குத் தோன்றவில்லை. இன்னும் சொல்லப்போனால் ஆண், பெண் என்ற வித்தியாச உணர்ச்சிகூடத் தெரியவில்லை. அதனால் உலகமே தெரியாத வெகுளிக் குழந்தை போலவும், உணர்ச்சியே இல்லாத ஜடம் போலவுமே அவர் மற்றவர்களுக்குத் தோற்றமளித்தார். ஒருநாள் வைகுந்தத்தில் பெருமானிடம் திருமகள் ''சுவாமி, தங்கள் அடியாரான விப்பிரநாராயணருக்கு தங்கள்மீது அவர் கொண்டுள்ள காதலுக்கும் பெண்ணொருத்தியின்மீது வைக்கும் காதலுக்கும் வித்தியாசம் தெரியுமோ?" என்று கேட்டாள். "இப்போது தெரியாது இனிமேல் அது அவனுக்குத் தெரியத்தான் வேண்டும்!" என்றார்.

"ஆண்பெண் வித்தியாசம் தெரியாமல் பெண்ணையும் ஆணையும் ஒன்றாக நினைக்கும் அவரை எந்தப் பெண்தான் என்ன செய்யமுடியும்? உம் மாயைதான் என்ன செய்ய முடியும்?" என்று புன்சிரிப்போடு கேட்டாள்.

"அதை உனக்குக் காட்டுகிறேன்! இனிமேல் பார்!" என்றார் பரந்தாமரும் புன்சிரிப்போடு.

அப்போது திருக்கரம்பனூரிலே இரண்டு தாசிகள் இருந்தார்கள். அப்போது மகளிர் இருவரும் பார்த்தவர்கள் மயங்கும் இளமையும் அழகும் வாய்ந்தவர்கள். இருவரும் உடன் பிறந்தவர்கள். மூத்தவள் பெயர் தேவி, இளையவள் பெயர் தேவதேவி. அவர்களில் தேவதேவிக்கு இணையாக எந்த வகையிலும் வேறொரு பெண்ணைச் சொல்லவே முடியாது. அத்தனை அழகும் சாமர்த்தியமும் ஒருங்கே வாய்ந்தவள். எதையும் சாதிக்க வல்லவள். குலவழிக்கேற்ப அவர்கள் இருவரும் ஆடலிலும் பாடலிலும் சிறந்து விளங்கினார்கள்.

ஆயகலைகள் அறுபத்து நான்கையும் தெள்ளெனக் கற்றறிந்திருந்தார்கள்.அவர்கள் இருவரும் வாழ்ந்த காலத்தில் திருச்சிக்கு அருகிலுள்ள உறையூரைத் தன் தலைநகரமாகக் கொண்டு சோழ மன்னன் ஒருவன் அரசாண்டு வந்தான்.

அவனுடைய ஆட்சியிலே மக்கள் நலமுற வாழ்ந்து வந்தார்கள். எங்கும் செல்வம் கொழித்தது. வளமான நாட்டை மேலும் அவன் தன் திறமையினால் வளமாக்கினான். மக்களின் பெரும்புகழுக்கு உரிமையானான். அதனால் அந்த நாட்டிலே கலைகள் செழித்தோங்கின. கலையறிவு நிரம்பப் பெற்ற மன்னனாதலால் அறிஞர்களையும் கலைஞர்களையும் ஆடல் பாடல் மங்கையரையும் நன்முறையில் ஆதரித்து அவர்களுக்கு ஏற்ப சிறப்புச் செய்து வந்தான்.

அதை அறிந்ததும் தேவியும், தேவதேவியும் தங்களின் திறமையையும் மன்னனிடம் காட்டிப் பெரும் பரிசில் பெற ஆசைப்பட்டார்கள். எனவே தங்கள் தோழியர்கள் தொடர உறையூருக்குச் சென்றார்கள். அரச சபையில் மன்னன் எதிரில் பல வகையான நாட்டியங்களை ஆடிக் காட்டினார்கள். தங்களது இனிமையான குரலால் பாடி அவையோரை மகிழ்ச்சியுறச் செய்து மயங்க வைத்தார்கள். அவர்களுடைய திறமையை முழுதும் கண்ட மன்னன் மிகுந்த பாராட்டை அவர்களுக்கு வழங்கினான். ஏராளமான பரிசுகள் தந்தான். அளவிடுதற்கு முடியாத செல்வங்களைப் பெற்ற அக்காளும் தங்கையும் சொந்த ஊருக்குச் செல்லப் புறப்பட்டார்கள்.

ஊருக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் வழியில் தேவதேவி தன் தமக்கையை நோக்கி "அக்கா! எனக்கு ஏனோ திடீரென்று பேரழகனான ரங்கநாதப்பெருமானின் நினைப்பு வருகிறது. ஸ்ரீரங்கத்தில் கோயில் கொண்டு பாம்பணையில் பள்ளிகொண்டிருக்கும் அந்தப் பேரழகனைப் பார்த்துவிட்டுப் பிறகு நம் ஊருக்குப் போவோம்" என்றாள்.

"தேவதேவி, நான்கூட அப்படித்தான் நினைத்திருந்தேன், இருவர் கருத்தும் ஒன்றாய் இருப்பதிலிருந்தே நாம் கண்டிப்பாக திருவரங்கத்துப் பெருமானை வணங்கிவிட்டுப் போவதே நல்லதாகும்" என்று மறுமொழி கூறினாள் தேவி.

பிறகு இருவரும் தங்களின் தோழியர்கள் புடைசூழ திருவரங்கத்தை நோக்கிச் சென்றார்கள். வழியில் கண்ணைக் கவரும் விப்பிர நாராயணரின் பூஞ்சோலையைக் கண்டார்கள். பயணம் வந்த களைப்பால் மேற்கொண்டு செல்ல முடியாமல் பூஞ்சோலையினுள் தங்க எண்ணி பல்லக்கை விட்டு இறங்கி அழகான சோலையின் தெய்வீகம் கொஞ்சும் அழகைக் கண்டு வியப்புற்று நின்றார்கள். மாலையில் இளந் தென்றலிலே கலந்து தவழ்ந்து வந்த நறுமண மலர்களின் வாசம் போதைமூட்டி, நெஞ்சை மயங்க வைத்தது. ஒவ்வொருவரும் வெகுநேரம் அந்த இனிய மயக்கத்தில் தங்களை மறந்து கற்பனை உலகில் எழில் மோகன நினைவில் அமிழ்ந்து போயிருந்தனர்.

இறுதியாக மெல்ல மயக்கத்தினூடே தேவதேவி தன் தமக்கையை நோக்கி, "அக்கா, இது சோலைதானா? இல்லை, தேவலோகத்து கற்பகமும் பாரிஜாத மலரும் பொற்றாமரையும் நிறைந்த எழிற் பூங்காவா? இத்தனை அழகு கொஞ்சும் தெய்வீகச் சோலையை நான் இதுவரை பார்த்ததேயில்லை. இப்படிப்பட்ட ஒரு சோலை இருப்பதாகவே நான் கேள்விப்பட்டது கூடக் கிடையாதே. ஆகா, அந்த இந்திரன் முதலான தேவர்களும் இச்சோலையைக் கண்டால் நிச்சயம் தங்களை மறந்து இங்கேயே தங்கி விடுவார்கள். இத்தனை அழகு பொருந்திய சோலையை யார் அமைத்தது? எதற்காக இச்சோலை அமைக்கப்பட்டது? இதனை அமைத்தவர் நிச்சயம் கலையறிவும் நல்லொழுக்கமும் இறைபக்தியும் நிரம்பப் பெற்றுள்ளவராகத்தான் இருக்கவேண்டும்" என்றாள்.

"நீ சொல்வது முற்றும் சரிதான்; இது விப்பிரநாராயணர் என்னும் மறையவருக்குச் சொந்தமானது. அவர் அரங்க நாதனின்மேல் நீங்காத பக்தியுடையவர். அனுதினமும் அவனுக்குப் பூமாலைச் சூட்டி மகிழும் சேவைக்காகவே இச் சோலையை அவர் அமைத்துள்ளார்" என்று தங்கைக்கு உணர்த்தினாள் தேவி.

"அப்படியா? அப்பெரியாரை இப்பொழுதே பார்க்க வேண்டும்; வா, அக்கா சென்று தரிசிப்போம்!" என்று கூறிய தேவதேவி, தன் தமக்கையுடனும் தோழியர்களுடனும் பூஞ்சோலை ஆசிரமத்தைத் தேடி நடந்தாள். அவர்கள்

அவ்வாறு நடந்து வருகையில் மரஞ் செடி கொடிகளுக்குக்களை எடுத்து நீர்பாய்ச்சிக் கொண்டிருந்த விப்பிரநாராயணரைக் கண்டு அதிசயித்து நின்று விட்டனர்; அவருடைய இடையிலே மெல்லிய தூய ஆடை தவழ்ந்தது. தோளிலே முப்புரி நூலும் உடலின் பன்னிரு பகுதிகளிலும் திருமாலடியவர்களின் சின்னமான திருமண்ணும், கழுத்திலே அணியாகத் தாமரை மணிமாலையும் துளசிமணி மாலையும் திகழ தூய நற்பண்பே உருவெடுத்தாற்போல் காணப்பட்ட விப்பிரநாராயணரைக் கண்ட தேவதேவி அவரது எழிலால் நெஞ்சம் கவரப்பட்டுத் தன்னை அவர் நோக்கும்படிச் செய்வதற்காக இனிய காதற்மொழிகளைப் பலவாறாக தன் தமக்கையிடம் பேசினாள். ஆயினும் அவர் அவளுடைய வார்த்தைகளைச் செவி மடுக்கவில்லை. சுய உணர்வில் இருந்தாலல்லவோ அவர்களை அவர் நோக்குவதற்கு? பரமனின் சேவையிலும் நினைவிலும் மூழ்கிவிட்டால் அவருக்கு இந்த உலகமே புரிவதில்லை.

தேவதேவியோ அதனைச் சிறிதும் அறியாது, அவர் தன்னைப் பார்க்கவேண்டும் என்ற ஒரே அவாவினால் தனக்குத் தெரிந்த தன் குலத்தொழிலால் கைவந்த வித்தைகள் அனைத்தையும் செய்து காட்டினாள்; மோகப் புன்முறுவல் பூத்தாள். கிள்ளை மொழி பகர்ந்தாள்; அன்னநடை நடந்தாள்; மின்னல் இடை காட்டினாள்; தோகை மயிலென ஆடினாள். குயிலாகப் பாடினாள்; பாடும் பொழுதும் பேசும்பொழுதும் இடையிடையே சலங்கை மணிகள் சிதறினாற்போன்று கலகலவென நகைத்தாள்; தன்னை அவர் பார்த்தால் தன்னுடைய ஒரே பார்வையில் அவரைத் தன்வசமாக்கிக் கொள்ளவேண்டும் என்று கண்களில் மயக்கத்தினை ஏற்றினாள். மையுண்ட அம்மை விழிகளில் ஒரு கவர்ச்சியை ஒரு அம்பின் கூரிய ஒளிச்சுடரை ஏற்றி அவரை நோக்கிக் கொண்டேயிருந்தாள்.

எத்தனைதான் செய்தும் அவளால் விப்பிரநாராயணரின் கவனத்தைத் திருப்பவே முடியவில்லை. தேவதேவி அதனால் பெருங் கோபம் அடைந்தாள். "பாராளும் மன்னரே தன் அழகில் மயங்கினார் என்றால், இந்த மறையவர் எந்த மூலை?" என்று எண்ணி வெகுண்டாள். உடனே தன் அக்காவைப் பார்த்து,

"அக்கா, இவர் முழுமனிதராக இருக்கமாட்டார்; அலிப் பிறப்பினராகவோ, உன்மத்தராகவோ இருக்க வேண்டும். இல்லையென்றால் நான் இதுகாறும் பேசிய இனிய காதல் மொழிகளை அவர் கொஞ்சமாவது செவிமடுத்திருக்க வேண்டும். அப்படியே இல்லாவிட்டாலும், நம்மைத் திரும்பியாவது பார்த்திருக்க வேண்டும், இல்லையா?" என்று கேட்டாள்.

தங்கையின் அறியாமையைக் கண்டு சிறிதே நகைத்தாள் தேவி. "என் அன்புள்ள தங்கையே! இப்பெரியார் நீ நினைப்பது போல அலிப்பிறப்பினர் அல்லர். உன்மத்தரும் கிடையாது. உலகப்பற்றினை நீக்கிய ஓர் உத்தமர். நாம் இருவரும் சேவிக்க வந்துள்ள அரங்கப் பெருமானின் இணையற்ற பக்தர். அவன் பால் உள்ளத்தைக் கொடுத்து அவனுக்குச் சேவை செய்வதையே லட்சியமாகக் கொண்ட மறையவர்; ஆகவே நாம் பேசிய இனிய காதல் மொழிகளையும், காமக்கலையின் நிகழ்ச்சிகளையும் அவர் அறிய மாட்டார்" என்றாள்.

அதைக்கேட்டுப் பெரும் வியப்புற்ற தேவதேவி "தமக்கையே. நீ சொல்வது பெரும் வியப்பளிக்கிறது. உலக இன்பத்தைத் துறந்தவரானாலும், அருகிலே அவ்வின்பத்தைத் தூண்டும் அழகிய இள மங்கையர் இருப்பதைக் கண்டால் சற்றே சலனமடையமாட்டார்களா? அம் மங்கையரின் இனிய காதல் மொழியில், மயக்கும் அழகில் தங்களை மறந்து இவ்வின்பத்தின் பிடியில் அகப்பட்டுக் கொள்ள மாட்டார்களா? இந்திரன் அகலிகையின் எழிலில் மதிமயங்கி விட்டானே. விசுவாமித்திரன் மனத்தை அடக்கிய பெரும் ஞானியல்லவா? அம்முனிவன் தன்னருகே அழகிய பெண்ணைக் கண்டதும் மனத்தை தன் வசத்திலிருந்து இழந்துவிட்டானே! அப்படியிருக்க இச்சாதாரண மறையவர் எம்மாத்திரம்? ஆகவே நீ சொல்வது வெறும் பொய்யான வார்த்தை., நான் அதை ஒரு சிறிதும் நம்பவில்லை; ஒப்புக்கொள்ளவும் மாட்டேன்!" என்றாள்.

"தங்கையே, நீ சொல்வது பாவ வார்த்தைகள்; இப்பெரியாரை இகழ்வது நமக்குத் தகாது. அரங்கப் பெருமாளின் அடியவர்களின் உயர்வை அறியாமல் நீ பேசுகிறாய். அவர்கள் தாம் பிறந்த பயனை உணர்ந்தவர்கள். கயல்விழி மாதரின்

கரும்பனைய பேச்சில் ஒரு சிறிதும் மயங்கமாட்டார்கள். கடவுளின் தெய்வீக உருவில், அவனுக்குச் செய்யும் தொண்டில், அவன் புகழ்ப்பாடும் பாடலில்தான் மயங்குவார்கள்; அவர்களிடம் நான் என்ற அகப்பற்றையும், எனது என்ற புறப்பற்றையும் கொஞ்சமும் காணமுடியாது. பெறுதற்கரிய பெருங்குணங்கள் பெற்று சிறந்து விளங்குபவர்கள். அவர்களைச் சாதாரண மக்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பது நல்லதல்ல" என்று தங்கையின் அறிவற்ற பேச்சிற்குப் பதிலுரைத்தாள் தேவி.

தேவதேவி இந்தப் பேச்சுக்களைச் செவிமடுக்காமல் மேலும் "இவரை நான் ஒரு மாதத்திற்குள் என் அடியவராக மாற்றுகிறேன். நீ வேண்டுமானால் பார்!" என்று புகன்றாள்.

தங்கையின் அறியாமையைக் கண்டு பின்னும் நகையாடிய தேவி, "அப்படி நீ இவரை ஒரு மாதத்திற்குள் உன் வயப் படுத்திவிட்டால், உனக்கு நான் ஆறுமாத காலம் பணிப்பெண்ணாக இருக்கிறேன். இல்லை என்றால் நீ எனக்குப் பணிப்பெண்ணாக இருக்க வேண்டும், என்ன சொல்கிறாய்?" என்று கேட்டாள்.

"சரி. நான் இந்த வீர சபதத்தை ஏற்கிறேன். நான் தோற்றுவிட்டால் உனக்குப் பணிப்பெண்ணாக ஆறுமாதம் ஊழியம் செய்கிறேன் போதுமா?" என்றாள் தேவதேவி.

"சரி!"

உடனே தேவதேவி தன் ஆடையணிகளைக் களைந்துவிட்டு சாதாரண துவாராடையை அணிந்து கொண்டாள். பின் தன்னிடமுள்ள பொருள்களையெல்லாம் தமக்கையிடம் கொடுத்துவிட்டு, "அக்கா, இவற்றையும் மன்னர் அளித்த பரிசுப் பொருட்களையும் நம் வீட்டுக்கு எடுத்துச் செல். கூடிய விரைவில் நான் செய்த சபதத்தை நிறைவேற்றிக் கொண்டு வந்து உன்னைக் காண்கிறேன்!" என்று கூறினாள்.

"அப்படியே செய்கிறேன். தேவதேவி! உன் செயலுக்கு வெற்றி கிட்டட்டும். உனக்கு எனது மனமார்ந்த நல்லாசிகள்!" என்று கூறி தேவதேவியிடம் விடை பெற்றுக் கொண்டு தோழியருடன் சென்றாள் தேவி.

தமக்கைச் சென்றபின் தேவதேவி விப்பிர நாராயணரிடம் சென்றாள். அவரைக் கண்டு அடிபணிந்து, கண்களில் நீர்ப்புரள வாய்ச்சொல் தடுமாற, "அரங்கப்பெருமானின் அடியவரே! ஞானச்சுடரே! நற்குணச்சீலரே! அன்புள்ளவரே! அருள் வள்ளலே! இவ்வடியாளைத் தாங்கள்தான் காத்தருளல் வேண்டும். நான் முற்பிறவியில் என்ன தீங்கிழைத்தேனோ எம் குலப்பெண்கள் செய்யும் செயல்கள் யாவும் எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. அவர்களின் அச்செயல்களைக் கண்ட போதெல்லாம் நாணமும் வெறுப்பும்தான் என் மனத்திலே தோன்றுகிறது. எனவே அவர்களுடன் வசிப்பது எனக்குப் பிடிக்கவில்லை. இத்தனை நாளும் எப்படியோ நரகத்தில் வசிப்பதுபோல் வாழ்ந்து விட்டேன்.

இனியும் என்னால் முடியாது. எனவே அவர்களை விட்டு நீங்கி வந்துவிட்டேன். பிறந்த பயனைப் பெறவேண்டும் என்று என் மனம் மிக விரும்புகிறது. அதற்குத் தக்க பெரியாரின் துணை வேண்டுமல்லவா? அப்பெரியாராகத் தாங்கள்தான் எனக்குக் காட்சியளிக்கிறீர்கள். நான் உய்யும் நெறியைப் பெறுதல் வேண்டும். தங்களைப்பற்றி நான் பலரால் முன்னமேயே கேள்விப்பட்டுள்ளேன். தங்களின் மேன்மையை அவர்கள் புகழ்ந்தது சிறிதே என்பதைத் தங்களைக் கண்ட பின்னால்தான் என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. தங்களின் சிறப்பை அளவிட்டு உரைப்பது இயலாச் செயலன்றோ? ஆகவே தங்கள் திருவடிகளையே என் உயிருக்குப் பாதுகாப்பாக எண்ணுகிறேன், இச்சிறியவளைக் காத்தருளுதல், உய்யும் நெறியை அளித்தல், எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் எண்ணும் தன்மையுடையவராகிய தங்கள் கடமையாகும்" என்று கூறி மீண்டும் அவருடைய அழகிய தாமரைத் திருவடிகளிலே தலைவைத்து வணங்கி எழுந்தாள். அவள் கண்களிலே நீர் சரசரவென்று வெள்ளம்போல் புரண்டு பெருகியது.

விப்பிர நாராயணர் கள்ளம் கபடமற்றவர்; தேவதேவி கூறியவற்றை உண்மையென நம்பினார். எனவே, "பெண்ணே! நாம் பெருமாளுக்குச் செய்துகொண்டிருக்கும் திருத்தொண்டு களைச் செய்து கொண்டிரு, உனக்கு அவன் அருள் கிட்டும்!" என்றார்.

தேவதேவி, அது முதல் விப்பிரநாராயணருக்கு உதவியாகப் பல தொண்டுகளைச் செய்து அவரை மகிழ

வைத்தாள். இவ்வாறு தன்னுடைய செயல்களால் அவரைக் கவர எண்ணினாள். ஆனால் அவரோ அதை அறியாது தம் திருத்தொண்டிலேயே மனம் ஒன்றியவராக இருந்து வந்தார். கடைசியாக அவள் அத்திருத்தொண்டுகளைச் செய்கையில் ஒருநாள் திருமொழிகளைப் பண்ணுடன் கலந்து தன் இனிய குரலால் பாடுவாளானாள். விப்பிரநாராயணரின் மனத்தை அப்பாட்டுகள் கவர்ந்து விட்டன. அவர் தேவதேவியிடம், "நீ மிகவும் இவ்வேலைகளால் களைத்துவிட்டாய்; ஆகவே உன் சோர்வு நீங்க போய் நீராடி விட்டு வா!" என்றார்.

இவ்வாறு இரண்டு நாட்கள் சென்றன. மூன்றாம் நாள் பெருமழை பெய்தது. விப்பிர நாராயணர் பன்னசாலைக்குச் சென்றார். தேவதேவி அப்பன்னசாலையின் அருகே வெளியே நின்றிருந்தாள். மழைத்துளிகள் அவள் மேல் விழுந்து கொண்டிருந்தன. அதைக்கண்ட அவர், "ஏன் வெளியே நிற்கிறாய்? மழை பெய்கிறதே, உள்ளே வா!" என்றார்.

தேவதேவி உள்ளே சென்றாள். அவள் உடல் மழையில் நன்றாக நனைந்திருந்ததால், ஈர ஆடை உடலோடு ஒட்டி அவள் அழகை முழுதுமாக வெளிகாட்டியது. உடனே விப்பிர நாராயணர் தன் மேலாடையை அவளிடம் கொடுத்து உடம்பைத் துடைத்துக் கொள்ளுமாறு கூறினார். அதைப் பெற்றுக் கொண்ட தேவதேவி தன் உடம்பில் உள்ள ஈரத்தைத் துடைத்துக் கொண்டபின், "அருந்தவப் பெருமானே! உங்கள் மேனியில் பட்ட இந்த ஆடையால் என் மேனியையும் துடைத்துக் கொள்வதற்கு நான் பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும். மற்றும் ஒரு வரத்தை எனக்கு தாங்கள் அருள வேண்டும்" என்றாள்.

''என்ன? சொல், அருஞ்செல்வியே!'' என்றார் விப்பிரநாராயணர்.

"சோலையைக் கால் கடுக்கச் சுற்றி வந்த தங்களது திருவடிகளை நோவு தீரும்படிப் பிடிக்க எனக்கு அனுமதி அளித்தருள வேண்டும்" என்றாள்.

"அவ்வாறே ஆகுக!" என்றார் விப்பிரநாராயணர்.

இங்ஙனம் சிறிது சிறிதாக தேவதேவி அவரைச் சில நாட்களுக்குள் தன்னுடையவராக மாற்றி விட்டாள். பின்பு அவள் தன்னுடைய ஆடையணிகளை வரவழைத்து அணிந்து மேலும் அவரைத் தன் வசம் ஈர்த்துக் கொண்டாள். விப்பிரநாராயணரும் அவளும் ஒருயிராகச் சேர்ந்தார்கள். சில காலம் இருவரும் மகிழ்ந்து இல்லறம் நடத்தினார்கள்.

அவ்வாறிருக்கையில் தேவதேவி தன் அன்னையையும் தமக்கையையும் காண விரும்பினாள். தன் எண்ணத்தை விப்பிரநாராயணரிடம் எடுத்துக் கூறினாள். அவர் உடனே, "என் அன்புக்குரியவளே! உன் விருப்பப்படியே ஆகட்டும். என் மனம் உன்னை ஒருக்கணமும் பிரிந்திருக்கச் சம்மதிக்காது. அதனால் நானும் உன்னுடன் வருகிறேன்!" என்றார்.பின்பு தேவதேவி அவருடன் தன் வீட்டுக்குச் சென்றாள். தேவி தன் தங்கையின் சபதம் நிறைவேறியதை எண்ணி மகிழ்ந்தாள்.

அவளுடைய அன்னையும் தேவதேவியை பாராட்டினாள். அவ்வீட்டோடு தங்கி விப்பிர நாராயணர் தேவ தேவியுடன் கூடியிருந்து மகிழ்ந்து வருவாராயினர். அவர் தம் முன்னோர்கள் ஈட்டிய பொருட்களையெல்லாம் அவளுக்கு வழங்கினார். பொருள் தீர்ந்தபின், தம்மிடம் அவளுக்குக் கொடுக்கப் பொருள் இல்லையே என்று வருந்திக் கொண்டிருந்தார்.

தேவதேவியின் அன்னை அதனால், தன் மகளைத் தனியே அழைத்து "பாணன் இறந்தபிறகு கைமாறும் வீணையைப் போன்றவர்கள் நாம். எனவே பொருளற்ற அவரிடம் நீ இனி கூடியிருக்கக் கூடாது. அவரை வெளியே போகச் சொல்!" என்றாள். தேவதேவி, அன்னையின் சொற்களைக் கேட்டு மிகவும் வருந்திக் கண்ணீர் விட்டாள். மகளை இக்காரியத்தில் நம்புவதால் யாதொரு பயனும் இல்லை என்று அறிந்த அம்முதியவள் தானே அவரிடம் சென்று "மதியற்ற மறையவனே! நீ எங்களுக்குக் கொடுக்கப் பொருள் சிறிதும் இல்லாதிருக்கிறாய். இங்கு பொருள் இல்லார்க்கு வேலையில்லை. ஆகவே உடனே இவ்விடத்தை விட்டுப் போய்விடு!" என்று கூறி அவரை வெளியேற்றினாள்.

விப்பிரநாராயணர் அதனால் மனம் வருந்தி ஒரு சோலையில் வந்து அமர்ந்தார். பின்பு அவர் அவ் வருத்தத்துடன் உறங்கிப் போனார். தம்முடைய அடியவரின் துன்பத்தை

உணர்ந்தான் அரங்கபெருமான். அவருடைய துன்பம் நீங்கவும் பெண்ணெனும் மாயவலையில் அகப்பட்டு சிற்றின்பம் விழையும் மனத்தைத் திருத்தி, பேரின்பப் பாதைக்கு அழைத்துச் செல்லவும் விரும்பினான். உடனே தன் ஆராதனைக்கு உரிய பொற்கிண்ணத்தை எடுத்துக் கொண்டு தேவதேவியின் வீட்டுக்கு வந்து கதவைத் தட்டினான்.

தேவதேவியின் தாய் கதவைத் திறந்து "நீர் யார்?" என்று கேட்டாள்.

அரங்கநாதன், "மூதாட்டியே! நான் விப்பிரநாராயணரின் தூதுவன், என் பெயர் அழகிய மணவாளன். இப்பொற் கிண்ணத்தை தேவ தேவியிடம் கொடுத்து வருமாறு என்னிடம் சொல்லிக் கொடுத்தனுப்பினார்" என்று கூறி அதை அவளிடம் கொடுத்தான்.

அதைப் பெற்றுக் கொண்டபின் அவள், "அன்புடைய தூதுவனே! உடனே நீ சென்று அவரை வரச்சொல். அவர் பிரிவால் தேவதேவி மிகவும் வருந்துகிறாள் என்று சொல்!" என்றாள்.

"அவ்வாறே செய்கிறேன்!" என்று கூறிய இறைவன் சோலைக்கு வந்து விப்பிரநாராயணரை எழுப்பி "உம்மை தேவதேவியினுடைய தாய் வரச் சொன்னாள். நீர் உடனே செல்வீராக!" என்றருளினான்.

விப்பிரநாராயணர் உடனே விரைந்து தேவதேவியின் வீட்டுக்குச் சென்றார்; முதியவள் அவரை எதிர்கொண்டு அழைத்து "அருட்செல்வரே! நான் ஏதோ அறியாமல் கூறியவற்றை மனத்தில் வைக்க வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள்; தங்களைக் காணாது என் செல்வி மிகவும் வருந்துகிறாள்; அவளை நீர்தான் சென்று தேற்ற வேண்டும்" என்றாள்.

அவர் தேவதேவியிடம் விரைந்து சென்றார். அவரைக் கண்டதும் அவள் எழுந்து வந்து அவரைத் தழுவிக்கொண்டாள். பிரிந்தவர் கூடினால் பெறும் இன்பத்திற்குக் கேட்கவா வேண்டும்?

காலையில் கோயில் அர்ச்சகர் அரங்கநாதனுக்கு ஆராதனை செய்ய வந்தார்; அப்போது பொன் வட்டில்களுள் ஒன்றினைக் காணாமல், அதை அரசனிடம் சென்று கூறினார்; உடனே அரசன் அதிகாரிகளிடம் அப்பொன் வட்டிலைத் தேடிக் கண்டு பிடிக்கும்படிக் கட்டளையிட்டான். அவர்கள் அது தேவதேவியின் வீட்டிலிருப்பதைக் கண்டுபிடித்தனர். எனவே தேவதேவியின் தாயையும், விப்பிர நாராயணரையும் சிறை பிடித்து வந்து அரசன்முன் நிறுத்தினர்.அரசன் தேவதேவியின் தாயை நோக்கி "இப்பொற்கிண்ணம் உன்னிடம் எப்படி வந்தது?" என்று கேட்டான்.

அவள், "மன்னவா! இதை அழகிய மணவாளன் என்னும் விப்பிரநாராயணருடைய தூதுவன் என்னிடம் கொண்டு வந்து கொடுத்தான்" என்றாள்."எனக்கு அப்படி ஒரு தூதுவன் இல்லை. அப்பொற்கிண்ணத்தையும் நானறியேன்!'' என்றார் விப்பிரநாராயணர்.

அரசன், அமைச்சர்களைத் தனி இடத்திற்கு அழைத்துச் சென்று, அது குறித்து ஆலோசித்தான்; அமைச்சர்கள், "மன்னரே! தேவ தேவியின் தாய் பொது மகள். ஆகவே அவள் பொற் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது தவறாகாது. எனவே, அவளை விட்டுவிடலாம்; விப்பிரநாராயணரோ இறைவன் மீது நீங்கா அன்புகொண்ட பெரியார் அவரைப்பற்றித் தவறாக நினைக்க முடியவில்லை" என்றார்கள்.

அமைச்சர்களின் அறிவுரைகளைக் கேட்ட மன்னர், தேவதேவியின் தாயை விட்டுவிடுமாறும், விப்பிரநாராயணரை அன்றிரவு சிறையில் வைக்குமாறும் தன் சேவகர்களுக்குக் கட்டளையிட்டான். அரச சேவகர்கள் அவ்வாறே செய்தனர்.

பின் அரசன், தன் அமைச்சர்களிடம் "இதைப்பற்றி நாளைய நீதி மன்றத்தில் முடிவு செய்வோம்" என்று கூறிவிட்டு தன்னிடத்திற்குச் சென்றான். விப்பிரநாராயணர் "எம்பெருமானே! இதுவும் உன் திருவருளோ? நீ யாது வேண்டுமானாலும் செய்க!" என்று அரங்கத்தம்மானிடம் வேண்டி அவனை நினைப்பாராயினர்.அன்றிரவு எம்பெருமான், விப்பிரநாராயணருக்கு அருள்செய்ய வேண்டி, அரசனின் கனவிலே தோன்றி உண்மையைக் கூறியருளினான்; அரசன் உண்மை உணர்ந்து

விப்பிரநாராயணருக்கு தான் செய்த தீங்கை எண்ணி வருந்தினான். பின்பு அவரை விடுதலை செய்து போற்றினான். தான் இப்படிச் சிறைப்பட்டு மீண்டது தன்னுடைய மனத்திலே புகுந்த இருளைப் போக்குவதற்காக அரங்கத்தம்மான் விளையாடிய திருவிளையாடலே என்பதை விப்பிரநாராயணர் உணர்ந்தார். அந்தக் கணத்தில் எழுந்த பக்திப் பரவசத்தால், அவன் கோயிலுக்குச் சென்று, அவனைப் போற்றித் துதிக்க திருவுளங் கொண்டார்.

விப்பிரநாராயணரின் கருத்தை ஊகத்தால் உணர்ந்த மன்னன் அவருக்கு முத்துப் பல்லக்கை அளித்தான். அவர் அதிலேறி அரங்கனின் கோயிலை அடைந்து அதனுள் சென்று, இறைவனைச் சேவித்து, அவன் திருவடித் தாமரைகளைப் போற்றிப் புகழ்ந்தார். பின் அங்குள்ள திருத்தொண்டர்களை வணங்கினார்; அவர்களுடைய திருவடிப் பொடியைத் தம் தலையில் சூடிக்கொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்து அவர்களைப் போற்றிப் புகழ்ந்தார், அதுமுதல் அவருக்குத் 'தொண்டரடிப் பொடியாழ்வார்' என்ற சிறப்புப் பெயர் வழங்குவதாயிற்று.

தேவதேவி அதை அறிந்தாள். நிலையிலா வாழ்க்கையில் தான் இத்தனை நாளும் வாழ்ந்து விட்டதை எண்ணி வருந்தினாள். அவளுக்கு ஞானத் தெளிவு ஏற்பட்டது. தன் பொருட்களையெல்லாம் அரங்கநாதனுக்கும் அவன் தன் அடியவர்களுக்கும் தொண்டு செய்தற் பொருட்டுச் செலவிட்டாள். தொண்டரடிப் பொடியாரின் கூட்டுறவினால் அவள் பின்பு வீடுபேற்றைப் பெற்றாள்.

அதன் பின்னர் தொண்டரடிப் பொடியாழ்வார் "மனத்திலே பரிசுத்தம் இல்லை, மனம் மாசடைந்து கிடக்கின்றது. வாயிலிருந்து ஒரு இனிய சொல்கூடப் புறப்படுவதில்லை. கோபத்தினால் பகைமை உணர்ச்சியுடன்தான் ஒவ்வொருவரையும் பார்க்கின்றேன். அதனால் தீமையான சாவினாலேயே சாகின்றேன். இவ்வாறு வீணாகிப் போய்க் கொண்டிருக்கின்றேன். காட்டிலே விளைந்த துளசிமாலையணிந்தவனே! காவிரியாற்றால் சூழப்பட்ட திருவரங்கத்தில் வாழ்கின்றவனே! எனக்கு இனி என்னதான் கதி? அதை நீதான் சொல்ல வேண்டும்! என்னை ஆளுகின்ற தலைவனே!"

"மனத்தில் ஓர் தூய்மையில்லை; வாயில் ஓர்
இன்சொல் இல்லை;
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளி
விளிவன் வாளா,
புனத்துழாய் மாலையானே!
பொன்னிசூழ் திருவரங்கா!
எனக்கு இனிக்கதி என் சொல்வாய்!
என்னை ஆளுடைய கோவே"

என்ற தீந்தமிழ்ப் பாவால் பாடி திருவரங்கத்தானிடம் தன்னைக் கடைத்தேற்ற வேண்டி வருவாராயினர். இவ்வாறு அவர் திருவரங்கநாதன் மேல் ஆராக் காதல்கொண்டு, தன்னையாட் கொண்ட செயலையெல்லாம் எண்ணியெண்ணிக் கண்களில் நீர் மல்க அவன் புகழைப் பாடி வாழ்ந்து வந்தார்.

தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருத்தொண்டு வாழ்க!

10. திருப்பாணாழ்வார்

அன்னை காவிரி ஆறாகப் பெருகி ஓடி வளம் கொழிக்கச் செய்வது சோழ வளநாடு. அங்கே செந்தண்மை பூண்ட அந்தணர்களும், நல்லறிஞர்களும் சான்றோர்களும், பாவலர்களும், புரவலர்களும் தோன்றி அந்நாட்டைப் பெருமைப்படுத்தியிருக்கிறார்கள். சோழமன்னர்களின் அன்பும், அறமும், அரும்பெரும் வீரமும் செறிந்த ஆட்சியில் மக்கள் கவலை என்பதே இல்லாமல் வாழ்ந்தார்கள். அந்நாட்டிற்கு உறையூர் தலைநகராக விளங்கி வந்தது; அந்நகரில் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்து பார்ப்பதற்குக் கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்; பூமி எனும் கண் போன்றது உறையூர் என்று புகழும் பெற்று அந்நகர் விளங்கியது; பூ மகளின் பிரிய நாதனான பெருமாள் உறையூர் என்னும் அக்கண்ணை இடையறாமல் பார்த்துக் கொண்டிருப்பதற்காகவே பரந்தாமத்தை விட்டு எழுந்து வந்து உறையூர் அடுத்துள்ள திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனாகப் பள்ளி கொண்டான்.

உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டு வந்த தர்மவர்மன் என்ற சோழ மன்னன் தனக்கு நீளாதேவியின் அம்சமாகப் பிறந்த உறையூர் நாச்சியார் என்ற பெண்ணை ரங்கநாதப் பெருமாளுக்குத் திருக்கல்யாணம் செய்து கொடுத்தான்; ரங்கநாதன் நாச்சியாரோடு கோயில் கொண்டுள்ள சீரங்கம் சோலை சூழ்ந்து தெய்வீக மணங்கமழும் சிறப்புடையது. தேவேந்திரனின் அளகாபுரி நகரின் அருகில் இன்னிசைபாடும் கந்தர்வர்களின் அளகாபுரி நகர் அமைந்திருப்பது போல் ஸ்ரீரங்கத்தில் பாணர் சேரி ஒன்று அமைந்திருந்தது. அப்பாணர் சேரியில் வாழ்பவர்கள் அனைவரும் இசைக் கலையில் சிறந்து விளங்கினார்கள்.

அவர்கள் கையிலே வீணையோ, யாழோ ஏந்திப் பாடும்போது தேவர்களும், கந்தர்வர்களும், பறவைகளும், விலங்குகளும் கூட தங்களை மறந்து அவ்விசையில் மயங்கிடுவது உண்டு என்றால், மனிதர்கள் அவ்விசைக்கு ஆட்படாமல் இருக்க முடியுமோ? அத்தகைய பாணர் சேரி மக்களை நான்காவது சாதியை விடக்கீழான பஞ்சமாதியைச் சேர்ந்தவர்களென்று வெறும் சம்பிரதாயச் சடங்கர்கள் ஒரு காலத்தில் ஒதுக்கி வைத்தார்கள். பாணர்கள் தீண்டத் தகாதவர்கள் என மறையோதும் அந்தணர்களும் அருவருத்தார்கள். அந்தக் காலத்தில் அதே பாணர் சாதியில் பரமாத்மாவான திருமாலின் திருவருளால் அவருடைய ஸ்ரீவத்ஸத்தின் அம்சமாக புர்துர்மதி வருஷம் கார்த்திகை மாதம் புதன்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் நெற்கதிரின் அருகே ஒருவர் பிறந்தார்.

அவர் நாள்தோறும் காலையில் எழுந்து கொள்வார். எழுந்தபின் நீராடித் திருமண் அணிவார். துளசி மணி மாலையையும் தாமரை மணி மாலையையும் கழுத்திலே சூடிக் கொள்வார். கையில் வீணையை ஏந்திக் காவிரியாற்றின் தென் கரைக்குச் செல்வார். அந்தணர்களால் தீண்டத் தகாதவர்களென ஒதுக்கப்பட்ட பஞ்சமாசாதியான பாணர் குலத்தில் பிறந்தவராகையால் உபய காவிரியின் நன்னீர் நடுவே நிற்கவோ அதைத் தாண்டி அரங்கநாதன் ஆலயத்திற்குப் போக முடியாமல் காவிரிக்கரையில் திருமுகத்துறைக்கு அருகில் வந்து திருவரங்கநாதனை நோக்கி நிற்பார். பரந்தாமன் மேல்



10. திருப்பாணாழ்வார்

தம்முடைய நினைவு முழுவதையும் பதித்து, அவனுடைய அருட்குணங்களையெல்லாம் பொருளாகக் கொண்ட பாட்டுக்களை இசையில் வடித்து வீணையிசையோடு தம்முடைய குரலிசையும் கலந்து பாடுவார். அப்போது பக்திப்பரவசத்தில் அங்கம் முழுதும் புல்லரிக்கும். அரங்கனின் புகழ்பாட்டில் தன்னை மறந்து வெளியுலகையும் மறந்து தம் கண்களில் தாரை தாரையாக ஆனந்தக் கண்ணீர் சொரிய நிற்பார்.

இவ்வாறு அரங்கநாதப்பெருமாளை திருப்பாணர் காவிரியின் தென் கரையில் நின்று துதிப்பாடலை இசையுடன் தன் வீணை ஒலியுடன் பாடிப் பரவி வரும் நாளில் ஒருநாள் அரங்கநாதனின் அருட்கருணை திரண்டெழும்படி அன்பின் பிழம்பில் ஆழ்ந்து லயித்துக் கேட்பார் நெஞ்சம் அனல் மேவிய மெழுகென உருகும் வண்ணம் பாடி, அந்த அரங்கநாதன் நினைவாலேயே பக்திப் பரவசத்தில் தன்னையும் மறந்து நின்று கொண்டிருந்தார்.

அச்சமயத்திலே அந்தணர் குலத்திலே தோன்றியவரும் ஆலயத்தில் அரங்கநாதனுக்கு நீராட்டும் பணி புரிபவருமான உலோக சாரங்கமுனி என்பவர் காவிரியில் நீராடித் திருமண் பூண்டு கழுத்திலே துளசிமணிமாலையும் தாமரை மணிமாலையும் சூடித் திருவரங்கனின் விக்கிரகத்திற்கு நீராட்டும் திருமஞ்சனத்திற்கு ஆற்று நன்னீர் எடுத்துப் போவதற்காக கையில் பொற்குடம் ஏந்தி அங்கே வந்தார். ஆற்றில் அவர் வழக்கமாக நீர் எடுக்கும் இடத்திற்கு அருகில், வழிமறைத்துக் கொண்டு திருப்பாணர் நிற்பதைக் கண்டு தீண்டத்தகாத பாணர் கீழ்குலத்தவர் என்பதை அறிந்து அவரைத் தள்ளிப்போகச் செய்ய வேண்டுமென்று துடித்தார்.

ஆனால் நீர் எடுக்கும் பணியின் போது அவர் வாய் திறந்து பேசும் வழக்கம் இல்லையாதலால் தம் கைகளைத்தட்டித் தள்ளிப் போகும்படி குறிப்பிட்டார்.திருப்பாணரோ அதை அறியவில்லை. பரம பக்தியில் உள்ளமெலாம் ஈடுபட்டு தன்னையும் வெளியுலகையும் மறந்திருந்ததால் அவர் பழைய நிலையிலேயே அசைவற்று நின்று கொண்டிருந்தார். அதைக் கண்டதும் சாரங்க முனிவர் மேலும் சீற்றம் கொண்டார்.

"அக் கீழ் குலத்தானுக்கு என்ன ஆணவம்? அந்தணர்கள் வருவார்களே, தான் இங்கு இருத்தல் தகாதே என்று ஒரு சிறிதும் நினையாமல் இங்கு வந்திருப்பதோடு, நான் கை தட்டி அப்பால் போகச் சொல்லியும், அதையும் காதில் வாங்காமல் மரம் போல் நின்ற இடத்திலேயே நிற்கிறானே? அவன் என்ன செவிடனா? அல்லது அந்தணன் சொல்லி அப்பால் போவதா என்று அகம்பாவத்தோடு நிற்கிறானா?" என்று எண்ணமிட்டு பெருங்கோபம் கொண்டு ஒரு கல்லை எடுத்து திருப்பாணர் மீது வீசினார்.

அக்கல் பாணர் நெற்றியில் மோதி காயமிட்டு விழுந்தது; உடனே நெற்றிக்காயத்திலிருந்து இரத்தம் பெருகி வழிந்தது. அதன் பிறகே பாணர் தன் நிலையையடைந்து சாரங்க முனிவர் எதிரே பெருமாளுக்குப் புனித நீர் எடுக்கும் வழியில் தாம் நிற்பதைக் கண்டு உள்ளமும் உடலும் நடுங்கி ஒடுங்கி அந்த இடத்தைவிட்டு நீங்கிச் சென்றார்.

அவர் வழி விட்டுச் சென்றதும், உலோக சாரங்க முனிவர் பொற்குடத்தில் காவிரியின் புனித நீரை எடுத்துக் கொண்டு ஆலயத்திற்குத் திரும்பி அரங்கநாதருக்கு நீராட்டுவதற்கு விக்ரஹத்தின் அருகில் சென்றார். அப்போது விக்ரஹத்தின் நெற்றியிலிருந்து இரத்தம் பெருகி வழிந்து கொண்டிருந்தது. 'மெய்யன்பரான திருப்பாணருக்குக் கல்லடிப்பட்டு நெற்றியில் காயம்பட்டு இரத்தம் கொட்டியது போலவே அவரை ஆட்கொள்ளும் அரங்கநாதப்பெருமானின் நெற்றியிலும் அதே மாதிரி கல்லடிக் காயம் ஏற்பட்டு அதே அளவு இரத்தம் கொட்டியிருந்தது. அதை திருமஞ்சனமாக சாரங்க முனிவர் கண்டதும் இப்படி அரங்கநாதன் நெற்றியினின்றும் ஏன் குருதி வழிகிறது? அவர் அடியார்களில் எவருக்கேனும் ஊனம் ஏற்பட்டதோ? இதற்கு என்ன செய்வதென்றும் புரியவில்லையே?' என்று பலவாறாக எண்ணிப் பதைபதைத்தார். மனம் குழம்பித் தடுமாறினார் துயரக் கடலில் மூழ்கித் தத்தளித்தார். இப்படியே மாலைப்பொழுது வரும் வரையில் ஒரு நிலையில்லாமல் வாடி நின்றார். அரங்கநாதரின் நெற்றி இரத்தத்தைப் போல அந்தி வானம் சிவந்து செங்கதிரோனும் மறைந்து அறியாமை எனும் இருளைப் போல் இரவும் சூழ்ந்து கொண்டது.

கடைசியில் ஏதும் புரியாதவராக உலோகசாரங்க முனிவர் தம் இருப்பிடம் வந்து சேர்ந்தார். உணவையும் அவர் உட்கொள்ளவில்லை. அப்படியே படுத்து விட்டார். தூக்கம் வரவேயில்லை. அரங்கநாதரின் நெற்றியில் அவர் கண்ட காட்சி அவர் நெஞ்சைப் பிழிந்தெடுத்து உறக்கத்தை அணுகாதபடித் தூரத்தியது. எப்படியோ நெடுநேரத்திற்குப் பின் திரு மாயவனின் அருங்கருணையினால் அவர் துயில் கொள்ள லானார்.

அப்போது அவர் கனவிலே அரங்கபெருமாள் தோன்றி, "என்மீது நீங்கா அன்பு பூண்ட அருமைச் செல்வனே! நீ இன்று ஒருபெருந் தவறு செய்து விட்டாய். காவிரியின் தென் கரையிலே தினமும் நீராடி, திருமண் அணிந்து, துளசி மணிமாலையும் தாமரை மணிமாலையும் கழுத்திலே கிடக்க, வீணையைக் கையிலேந்தி நம் புகழைப் பாடிப் பரவும் என் மெய்யன்பனான திருப்பாணனை இழிகுலத்தவனாய் எண்ணி அவனைத் துரத்துவதற்காக ஒரு கல்லை எடுத்து அவன்மீது வீசினாய்! அக்கல் அவன் நெற்றியில் பட்டு இரத்தம் வழியச் செய்தது. முன்பு தேவர்களுக்காக நாம் மகாபலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் வேண்டக் கருதினோம். உடனே அதனால் நம்முடைய உருவம் சுருங்கியது. அவ்வடிவுடன் மாபலியிடம் சென்றபோது அவ்வசுரத் தலைவன் என்மீது பேரன்பு கொண்டு அம்மூன்றடி மண் நமக்குத் தந்தான்.

அவனது பக்தியைக் கண்டவுடனே நம் உருவம் மூவுலகும் பற்றாதது போல் விசுவரூபம் எடுத்துப் பெருத்தது. என் அடியவருக்கு எளியனாய் அவர்களிலே நாம் கட்டுண்டு கிடப்போம்! இன்று அவ்வாறே திருப்பாணனின் நெற்றி காயத்தை நாமும் ஏற்றுக் கொண்டோம். அதனால் தான் நம் நெற்றியிலே குருதி வழிந்தது. ஆகவே நீ நாளை விடியற்காலை எழுந்ததும் காவிரியாற்றிற்குச் செல். அங்கு திருமண்சூடி, துளசி மணி மாலையும், தாமரை மணிமாலையும் கழுத்திலே பூண்டு எம் திசை நோக்கியே நின்று நெஞ்சுருகிப் பாடும் திருப்பாணனை உன்னுடைய தோளின் மீது ஏற்றிச் சுமந்து கொண்டு ஆலயத்திற்குள் வந்து நம்மருகே கொண்டு வந்து விடுக" என்று கூறி மறைந்தார்.

உலோக சாரங்க முனிவர் விழித்துக் கொண்டார். கீழ்த் திசையிலே செங்கதிரவன் உதித்திருக்கும் கோலத்தைக் கண்டார். "ஆ! விடியற்காலை வந்து விட்டதே! அரங்கநாதனின் கட்டளையை உடனே நிறைவேற்ற வேண்டும்" என்று எண்ணியவராய் குடிலை விட்டு நீங்கி, பல மறையவர்களைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டு காவிரியின் தென் கரைக்கு வந்தார். புனித நீரிலே நீராடி திருமண்ணை மேனியில் அணிந்து துளசிமணிமாலையையும், தாமரை மணிமாலையையும் அழகாகக் கழுத்திலே சூடிக் கொண்டார். அனைத்து தெய்வக் காரியங்களும் முடிந்த பிறகு திருப்பாணர் இசைபாடி நிற்கும் இடத்தை நோக்கி நடந்தார்.

அப்போது பாணர் பெருமாள் தெய்வ ஒளிவீச, கண்டோர் மனம் பக்திப் பரவசமாக மேனியிலே திருமண் தரித்து, மணிமாலைகளைக் கழுத்திலே சூடி கையிலே வீணையேந்தி, காவிரித் தென்கரையில் அரங்கநாதக் கோயில் துறைமுகத்தை நோக்கியபடியே நின்று மெய்குளிர வாயினிக்க கேட்போர் நெஞ்சமெல்லாம் நெகிழ்ந்து உருக பரந்தாமனைப் போற்றிப் பாடியாடிக் கொண்டிருந்தார். அங்கே வந்த உலோக சாரங்க முனிவர், பாண பெருமாளின் திருவடிகளிலே தன் தலைமுடி படியுமாறு வைத்து வணங்கினார்.

அதைக்கண்டதும் பாணர் திடுக்கிட்டு, "அருங்குலத்தவரே! நானோ கீழ்க்குலத்துதித்தவன், தாங்களோ, பெறுதற்கரிய மறையவர் குலத்தில் தோன்றிய செம்மல், மறையவர்களுள் சிறந்து விளங்கும் தாங்கள் என்னை வணங்குவது முறையல்லவே!" என்று பதறியபடிச் சொன்னார்.அதைக் கேட்டதும் சாரங்கமுனிவர், "அருந்தவத்தீர்! இனிய தமிழும் இசையும் செய்த பெரும் தவத்தால் பாணர்குலத்தில் தோன்றி பரந்தாமனின் பேரருளுக்குப் பாத்திரமானவரே! இம்மண்ணுலகத்தார், மட்டுமன்றி அவ்விண்ணுலகத்தாரும், வணங்கத்தக்க பெரும் மேன்மை வாய்ந்தவரன்றோ நீர்? பெருமாளின் அருள் உள்ளம் உம் அன்பினாலன்றோ அல்லவா முழுதுமாக நிறைந்திருக்கிறது. அரங்கநாதன் என் கனவில் தோன்றி உம்மை என்தோளின் மேற்சுமந்து தன்னிடம் கொண்டு வந்து விடுமாறு எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

எனவே தெய்வ மணங்கமழும் அருட்செல்வரே! அந்த ஆண்டவன் கட்டளையை மறுக்காமல் என் தோளின்மீது ஏறிக் கொள்ளும்" என்றார். "திருவிளையாடல் பலபுரியும் அந்த அரங்கநாதப் பெருமானின் திருவுள்ளம் அவ்வாறாயின் அது போலவே நடக்கட்டும்" என்று திருப்பாணர் கூறிவிட்டு மௌனமானார்.

உலோக சாரங்க முனிவர் திருப்பாணரைத் தம் தோளிலே தூக்கி வைத்து அவரைச் சுமந்துகொண்டு மறையவர்கள் புடைசூழ, கோயிலையடைந்து அதனுள் நுழைந்து பாம்பணையில் பள்ளி கொண்ட அரங்கநாதரின் திருச்சந்நிதியின் முன் இறக்கி விட்டார்.

இதுவரை தம் கண்களால் காணவே முடியாமல் தூர நின்றே மானசீகமாகக் கண்டு களித்த திருவரங்கப் பெருமானின் திருமேனி உருவத்தை நேரில் கண்டதும் திருப்பாணருக்கு மெய் சிலிர்த்தது. உள்ளத்திலே மகிழ்ச்சி பெருக, கண்கள் ஆனந்தக்கண்ணீரை வெள்ளமெனக் கொட்ட, உள்ளமும் உடலும் உருக, இருகைகளையும் குவித்துத் தம் தலைமுடி பெருமாளின் திருவடிகளிலே படியுமாறு வணங்கினார். அவர் பெருமாளின் திருமேனியை உச்சி முதல் பாதம் வரை அங்கம் அங்கமாகத் தன் கண்களால் கண்டு களிக்கவும் இசையாளராகையால் பள்ளிகொண்ட பெருமானை பைந்தமிழ்ப் பாக்களால் பாட நினைத்தார்.

தாயின் உறுப்புகள் பல இருப்பினும், பிறந்த பச்சிளம் குழந்தை முதலில் தன் தாயின் மார்பகத்திலே தன் செவ்விதழ் வாயை வைத்து பால் குடிப்பதுபோல் திருப்பாணாழ்வாரின் நெஞ்சமும் கண்களும் முதலில்-அரங்கநாதரின் செந்தாமரை போன்ற திருவடிகளிலே லயித்தது.

ஆதலின் அவர் 'அமலன், ஆதிப்பிரான் என்று தொடங்கி "அரங்கத்தம்மானின் திருக்கமலபாதம் வந்து என் கண்ணின் உள்ளன ஒக்கின்றதே! என்று முதலில் திருவடியைப் பாடினார்; அப்பாசுரம் முதலாகப் பத்து பாமாலைகளைப் பாதாதிகேச மாலையாகப் பாடினார். பிரணவத்தில் உள்ள அகரம், உகரம், மகரம் என்னும் மூன்று திருவெழுத்துக்களுள் முதல்

எழுத்தாகிய அகரத்தை முதல் பாசுரத்தின் முதலினும், இரண்டாம் எழுத்தாகிய உகரத்தை இரண்டாம் பாசுரத்தின் முதலினும், மூன்றாம் எழுத்தாகிய மகரத்தை மூன்றாம் பாசுரத்தின் முதலினும் முறையே அமைத்துப் பாடினார். அப்பாசுரங்கள் பனிமலர்த் தேனோடு பாலும் நற்கருப்பஞ்சாறும், தென்னையிளநீரும், கலந்த ஓர் இன்சுவைப் பாற்கடல் அமுதமாக விளங்குகின்றன. அவற்றைப் படித்தாலும் வாய் மணக்கும், படிக்கப் பக்கம் நின்று கேட்டாலும் செவி மணக்கும். உள்ளுணர்ந்தாலும் நெஞ்சமெல்லாம் மணக்கும்.

"அமலன் ஆதிப்பிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர் கோன்விரை யார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதில் அரங்கத்
தம்மான் திருக்
கமல பாதம் வந்து என் கண்ணி னுள்ளனே ஒக்கின்றதே!"

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என் உள்ளங் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கனென் னமுதினைக்
கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே." (10)

பத்துப்பாசுரங்களையும் திருப்பாணாழ்வார் பக்திப் பரவசத்தோடு பாடி முடித்ததும் திருவரங்கப் பெருமான் அவரைத் தன்னோடு ஒன்றெனக் கலந்து விடுவதற்கு அருள் பாலித்தார். திருப்பாண் ஆழ்வார் கடைசிப் பாசுரத்தில் "அரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்ற ஒன்றினைக் காணாவே!" என்ற இறுதி அடியைப் பாடி முடித்ததுமே அனைவரும் காணும்படி பெருமானின் திருவடிகளில் உட்புகுந்து தோன்றாத்தன்மை பெற்று இவ்வுலகை விட்டு மறைந்தார். அந்த அற்புதத்தைக் கண்ட அனைவரும், "வாழ்க அரங்கநாதனின் பேரருள் வாழ்க, பாண்பெருமாளின் பக்திப் பெருக்கெடுத்தோடும் இன்சுவைப் பைந்தமிழ் பாமாலைகள்! வானகமும் வையகமும் உள்ளளவும் அவருடைய புகழ் நீடூழி காலம் வாழ்க; வாழ்க! திருமகள் நாதனோடு திருப்பாணர் வாழ்க, வாழ்க!" என்று வாழ்த்தி ஆடிப்பாடி அகம் மகிழ்ந்து பலவாறாகவும் போற்றித் துதித்தார்கள். திருப்பாணாழ்வார் உலோக

சாரங்க முனிவரின் தோள்மீது ஏறி திருமாலின் சந்நிதிக்குச் சென்றதால், அவருக்கு முனிவாகனர் என்ற பெயரும் உன்னதமான இன்னிசை பாமாலைகள், பாடியதால் கவீஸ்வரர் என்ற ஒரு பெயரும் வழங்கி வருகின்றன.

11. திருமங்கையாழ்வார்

சோழ நாட்டிலே பல உட்பிரிவுகள் உண்டு. அவற்றுள் திருவாலிநாடு (அது திருவாலி திருநகரி எனவும் கூறப்படும்) என்பது ஒன்றாகும். அது ஒரு சிறு நாடானாலும் பூஞ்சோலைகளும், வாவிகளும், நீரோடைகளும் கொண்டு காண்போர் போற்றும் தன்மையைப் பெற்றிருந்தது. அவற்றுள், திருக்குறையலூர் என்னும் ஊர் ஒன்று சிறந்து விளங்கியது.

அது மறையவர்கள் வாழும் தெய்வபூமி, அங்கே எப்பொழுதும் தெய்வப் பாடல்கள் கேட்டுக் கொண்டேயிருக்கும். அத்திரு அமைந்த ஊரில் ஆலிநாடர் என்பவர் சோழ மன்னனின், சேனைத் தலைவராக விளங்கினார், அவர் சிறந்த வீரமும் அன்பும் அருளும் கொண்டவர். வல்லித் திரு என்னும் நற்குணவதி அவருக்கு மனைவியாக வாய்த்திருந்தாள். அவர்களின் அருந்தவப் பயனால் நளவருஷம் கார்த்திகை மாதம் பௌர்ணமி வியாழக் கிழமையுள்ள கார்த்திகை நட்சத்திரத்தில் (கி.பி. எட்டாம் நூற்றாண்டில்) திருமாலின் ஐம்படைகளில் ஒன்றான சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாக உலகம் உய்யும் பொருட்டு ஒரு மைந்தர் அழகும் அருளும் உடையவராக அவதரித்தார். பெற்றோர்கள் அவருக்கு நீலன் என்று பெயரிட்டுப் போற்றி வளர்த்தார்கள்.

நீலர் தம் ஐந்தாம் வயது தொடங்கிக் கற்க வேண்டிய நூல்களை தென்மொழி, வடமொழி ஆகியவற்றிலே கற்றுப் பெரும் புலமை பெற்றார். அவருக்கு இணையாக கல்விக் கேள்விகளிலே யாரையும் ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. அவர், ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நான்கு வகைக் கவிகளையும் பாடும் திறமையையும் திருமாலின் கருணை திறத்தால் பெற்றுச் சிறந்தார்.



11. திருமங்கையாழ்வார்

வீரர் மரபிலே தோன்றியவரானதால் வாள், வில், வேல் முதலிய படைக்கலன்களை உபயோகித்துப் போர் புரியும் சிறந்த ஆற்றலையும் யானை, தேர், குதிரை, காலாள் ஆகிய நான்கு சேனைகளையும் நன்முறையில் நடத்திச் சண்டை செய்து பகைவரைச் சுலபமாக வெற்றிக் கொள்ளும் புத்தி கூர்மையையும் பெற்று பெரும் வீரராக நீலர் விளங்கினார். அவருடைய திறமைகளையும் கல்வியறிவையும் கேள்விப்பட்டுச் சோழவேந்தன் அவரைத் தன்னுடைய படைத்தலைவர்களுள் ஒருவராக நியமித்தான்.

அப்பொழுது நாற்கவிப் பெருமாள் என்னும் பெருஞ் சிறப்புடைய புலவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் மற்றைய புலவர்களையெல்லாம் வாதிலே வென்று, புலவரேறு என்னும் பெருமையால் அகந்தை கொண்டிருந்தான். நீலரைப் பற்றி அவன் கேள்விப்பட்டதும் அவரிடம் தன் வாதத் திறமையைக் காட்டி வாதிட்டு வெற்றி பெற எண்ணி வந்தான். அவ்வாறே நீலர் அவனுடன் வாதப் போர் நிகழ்த்தினார். இறுதியில் புலவன் தோல்வியடைய தன்னுடைய "நாற்கவிப் பெருமாள்" என்னும் பட்டத்தை நீலருக்கு அளித்து விட்டுச் சென்றான். அதையறிந்த சோழ மன்னன், நீலரை அழைத்து, "உமக்கே இப்பட்டம் உரியது. ஆகவே நீரே அதற்குரிய விருதுகளைப் பெற்றுக் கொள்ளும்" என்று கூறி அவரைச் சிறப்பு செய்தான்.

பிறகு நீலர் சோழனுக்காக பல போர்களிலே பல அரசர்களை வென்று வெற்றி வாகைச் சூடினார். தன்னாட்சியின் பொருட்டு அவர் செய்த சேவைகளைப் பாராட்டி, திருமங்கை என்னும் ஊரைத் தலைநகராகச் செய்து, ஆந்நாட்டிற்கு அவரை மன்னராக்கி மகிழ்ந்தான். மன்னர் பகைவர்களுக்கு காலன் போல் விளங்கி வெற்றி பெற்றதால் பரகாலன் என்ற சிறப்புப் பட்டத்தையும் அவருக்கு உவந்தளித்தான். பரகாலர் என்பதற்குக் காலத்தைக் கடந்து நிற்பவர் என்ற தத்துவார்த்தமும் உண்டு. திருமங்கைக்கு நீலர் மன்னரானதும், அவரை எல்லோரும் திருமங்கை மன்னர் என்றே அழைத்துப் போற்றலாயினர். அது முதல் அவர் குடிகளின் நன்மையைக் கருதி, அன்பும் அருளும் கொண்டு தன்னாட்டை நன்முறையில் ஆண்டு

வந்தார். வீரத்தின் மிடுக்காலும் இளமையின் துடிப்பாலும் மன்மதனின் காமக்கணைகளுக்கு வசப்பட்டு விஷய சுகங்களையும் பெரிதாக எண்ணியிருந்தார்.

அவ்வாறு திருமங்கை மன்னர் வாழ்ந்து வருகையில் தேவர்கள் வாழும் வானுலகத்து மங்கையர்களுக்குத் தலைவியாக "சுமங்கலை" என்பவள் சிறந்து விளங்கினாள். அவள் வைகுந்த நாதனுக்கு சாமரம் வீசும் கன்னிகளில் ஒருத்தி. அவள் தன் தோழிகளோடு பூவுலகிற்கு வந்து இமயமலையின் அழகையும் வளங்களையும் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது திருமால் மீது நீங்காத பக்தி பூண்ட கபில முனிவர் என்னும் மாமுனிவர் பல முனிவர்களுக்குத் திருமாலின் பெருமைகளைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தார். அவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த முனிவர்களுள் ஒருவர் விகார வடிவுடன் காணப்பட்டார். அவரைக் கண்ட அவ்வானத்து நங்கை கேலி செய்தாள். அதைக் கண்டதும் கபில முனிவருக்குக் கோபம் எழுந்தது. அவர் கண்கள் தீ உமிழ்ந்தன. பெரும் சீற்றத்துடன் அவர் சுமங்கலையை நோக்கி, "பெண்ணே! நீ அறிந்தோ அறியாமலோ செய்த இந்த தவறுக்காக உன்னைச் சபிக்கிறேன். நீ பூவுலகில் மானிடப் பெண்ணாகப் பிறந்து ஒரு மனிதருடைய மனைவியாக வாழ்வாயாக" என்று சபித்தார்.

அது கேட்ட சுமங்கலை பெரும் அச்சத்திற்கு உள்ளானாள். உடலும் உள்ளமும் நடுங்க, அம்மாமுனிவரின் திருவடிகளிலே விழுந்து வணங்கி, "முனிவர் பெருமானே! நான் தெரியாமல் செய்த இத்தவறை மன்னித்து எனக்கு அருள் புரிய வேண்டும்" என்று கண்களில் நீர் பெருகக் கெஞ்சினாள்.

முனிவருக்கு அவள் மீது இரக்கம் ஏற்பட்டது. "பெண்ணே, கவலைப்படாதே! உன்னால் ஒரு நற்செயல் ஏற்படவே நான் இவ்வாறு உன்னைச் சபித்தேன். பூவுலகில் சோழநாட்டிலே வைகுந்த நாதரின் சாரங்கம் என்னும் வில்லின் அம்சமாக பரகாலன் என்பவன் உலகம் உய்யும் பொருட்டுத் தோன்றி திருமங்கையென்னும் பதியைத் தலைநகராகக் கொண்டு திருமங்கை மன்னனாக ஆட்சி செய்து வருகிறான். அவன் சிறந்த வீரன்! அவனுடைய உள்ளம் எப்பொழுதும் போர்த்தொழிலையும்

உலகியல் இன்பங்களையுமே நாடி அலைகிறது; காமதேவனான மன்மதனின் பஞ்சபாணங்களுக்கு வசப்பட்டு பெண்ணின்பமே பெரிதென நினைத்து விஷய சுகங்களிலே ஆழ்ந்து கிடக்கிறான். நீ பூவுலகிற்குச் சென்று அவனுக்கு காதல் மனைவியாகி அவன் உள்ளத்தைத் திருத்தி பாம்பணையில் துயிலும் பரந்தாமனின் பரமபக்தனாக அவனை மாற்றி அவனோடு வாழ்வாயாக! அப்போது உன் குறை தீரும். உன்னுடைய வானுலகத்தையும் இறுதியில் நீ சென்று சேர்வாய்" என்று அருள் பொங்க புன்னகையுடன் கூறி முடித்தார் கபில முனிவர்.

தேவகன்னியான சுமங்கலை நட்சத்திரங்கள் சூழவரும் முழுநிலவைப்போல் தோழிகளான அப்சரஸ்களோடு திருநாங்கூர் என்னும் ஊருக்கு வந்து சேர்ந்தாள். அவள் அவ்வூரினுள் நுழைந்தபோது கண்ணிற்கினிமையான ஒரு தாமரைப் பொய்கையைக் கண்டு அதன் அழகில் மயங்கி நின்றாள். அதில் நீந்தி விளையாடி நீராடவேண்டும் என்ற ஆசை அவளுக்கும் அப்சரஸ் கன்னிகைகளுக்கும் பொங்கி எழுந்தது. தாமரையும் அல்லியும் பூத்துக் குலுங்கும் அழகை ரசித்தவாறு சுமங்கலை தன் தோழிகளோடு அத்தாமரைத் தடாகத்தில் ஆனந்தமாக நீந்தி விளையாடிக் கொண்டிருந்தாள். அந்நீரோடையிலிருந்து எழுந்து வருவதற்கே அவளுக்கு மனம் வரவில்லை. எனவே வெகுநேரம் நீராடினாள். உடன் வந்த தோழிகளெல்லாம் பூவுலகை விட்டு வானுலகத்திற்கு செல்லும் நேரம் நெருங்கிவிட்டதை உணர்ந்ததும் சுமங்கலையை விட்டு விட்டு வேகமாக தேவலோகத்திற்குச் சென்று விட்டார்கள். சுமங்கலையோ தடாகத்திலுள்ள ஓர் அல்லி, (குமுத) மலரின் அழகில் சொக்கி அதைக் கொய்ய முயன்றாள்; அப்போது தான் தன் தோழிகள் போய்விட்டதை அறிந்தாள். உடனே சுமங்கலை செய்வதறியாது கலங்கித் தவித்தாள். "இதுவும் அப்பரந்தாமனின் திருவுளமோ?" என்று எண்ணியவளாக, தன் மனத்தைக் கவர்ந்த ஓர் அல்லி மலரையே தனக்குத் தாயாகக் கொண்டு, அதன் இடையில் மாணிக்கம் போன்ற அழகான ஒரு குழந்தையாகத் தோன்றினாள்.

அவ்வூரில் ஒரு சிறந்த வைத்தியர் இருந்தார். அவர் நீராடுவதற்காக அந்தப் பூங்குளத்திற்கு வந்தார். அல்லி மலரின்

அருகே தெய்வீகம் கொஞ்சும் குழந்தையைக் கண்டதும் வியப்புற்றார். அதன் அழகிய இளமேனியையும் காந்தள் மலர் போன்ற சிரிப்பையும் கண்டு ஆனந்தமடைந்தார். 'எம்பெருமானே தமக்குக் குழந்தையில்லாத குறையைத் தீர்ப்பதற்காக இக்குழந்தையைக் கொடுத்தானோ?' என்று நினைத்து, பெருமகிழ்ச்சி எய்தி அக்குழந்தையை எடுத்துச் சென்று தன் மனைவியிடம் கொடுத்தார். அக்குழந்தை தனக்குக் கிடைத்த விதத்தையும் சொன்னார். அவருடைய மனைவி மகிழ்ச்சி பொங்க அம்மகவைச் சீராட்டிப் பாராட்டித் தொட்டிலிட்டு அதில் கிடத்தினாள். பிறகு இருவரும் அக்குழந்தைக்கு வேண்டிய சடங்குகளையெல்லாம் முறையே செவ்வனே நிகழ்த்தினார்கள். அல்லி (குமுத) மலரின் அடியிலே கண்டெடுக்கப்பட்டதால், அக்குழந்தைக்கு குமுதவல்லி என்ற பெயர் சூட்டி அன்புடன் வளர்த்து வந்தார்கள். குழந்தையும் தன் மழலை மொழியாலும், குறு நகையாலும் வேடிக்கை நிகழ்ச்சிகளாலும் அவர்களை மகிழ்வித்தாள்.

குமுதவல்லி தன் ஐந்தாம் வயது தொடங்கி எல்லா நூல்களையும் கற்று உண்மைப் பொருள்களை உணர்ந்தாள். அறிவும் அடக்கமும் திருமால்மீது பக்தியும் கொண்டு வளர்ந்து திருமணப் பருவத்தை அடைந்தாள். அவளுடைய பேரழகைக் கண்ட வைத்தியரும் அவர் மனைவியும், 'இவள் சீதாப் பிராட்டியோ, அல்லது ரதிதேவியோ, இல்லையென்றால் யசோதையோ?' என்று போற்றினார்கள். அவளுக்கு கூடிய விரைவில் ஒரு மங்கல நாளில் திருமணம் செய்விக்க எண்ணினார்கள். தங்கள் செல்வியின் கருத்தையும் அறிய மனம் கொண்டார்கள்.

வைத்தியர் அவளைத் தனியே அழைத்து, "குமுதவல்லி !உனக்குத் தக்க பருவம் வந்து விட்டது. உன்னை இதுவரை நாங்கள் அன்புடன் வளர்த்து கற்கவேண்டிய நூல் பலவும் கற்கச் செய்து அறிவையும் அருளையும் கொள்ளுமாறு செய்தோம். இனி நீ வேறிடம் செல்ல வேண்டும். ஆம், எப்படி மலையிலே பிறந்த சந்தனம் அம்மலைக்கு உரிமையில்லாமல் போய்விடுகிறதோ, கடலிலே பிறந்த முத்து அக்கடலுக்குச் சொந்தமில்லாமல் போய்விடுகிறதோ-அப்படியே பெண் என்பவளும் பிறந்த வீட்டுக்குச் சொந்தமில்லாதவளாக

கணவனின் வீட்டுக்குப் போய்விடுவாள். இது இயற்கை வகுத்த நியதி. அந்த நியதிக்கு நாம் விதிவிலக்காக மாட்டோம். எனவே உனக்குத் தக்க மணாளனைத் தேர்ந்தெடுத்து அவனுக்கு உன்னைத் திருமணம் செய்து கொடுக்க ஆசைப்படுகிறோம். இதில் உன்னுடைய கருத்தையும் அறிய வேண்டுவது அவசியமல்லவா? நீ என்ன சொல்கிறாயம்மா?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டார்.

குமுதவல்லி அவரை நோக்கி, "என்னை வளர்த்த அருள் தந்தையே! என் பிறப்பைப்பற்றி நான் இப்போது கூற வேண்டுவது அவசியமாகிறது. அதைக் கேட்டுத் தாங்கள் வியப்பும், அதிர்ச்சியும் அடையலாம்; ஏதோ துர்தேவதையின் பற்றுதலால் இவ்வாறு கூறுகின்றாளோ என்றும் ஐயம் கொள்ளலாம்: ஆனால் அப்படி ஒன்றும் இல்லை" என்றவள் தான் தேவமாது என்பதையும் இமயமலைக்கு வந்து கபில முனிவரால் சாபம் பெற்றதையும், பின்பு நீரோடையில் குழந்தையாகப் பிறந்ததையும் கூறினாள்.

அவற்றைக் கேட்ட வைத்தியர், "என் பொற்செல்வியே! அப்படியானால் அந்தத் திருமங்கை மன்னரைக் கண்டு உன்னை மணந்து கொள்ளுமாறு கூறி அழைத்து வரட்டுமா?" என்றார்.

"என் அருந்தந்தையே! சற்றுப் பொறுங்கள். அந்தத் திருமங்கை மன்னரே சிறிது நாளில் தங்களிடம் வந்து என்னைப் பெண் கேட்பார்; அப்பொழுது தாங்கள் என்பேச்சின் முழுப் பொருளையும் தெரிந்து கொள்வீர்கள். அப்படி அவர் வரும் பொழுது அவரிடம் சொல்லவேண்டிய செய்திகள் இரண்டு உண்டு" என்று சொல்லி, அவற்றையும் அவருக்குக் கூறி முடித்தாள்.

மகள் கூறிய செய்தியைக் கேட்டு ஒருங்கே வியப்பும் மகிழ்ச்சியும் எய்தப் பெற்ற வைத்தியர். "நல்லது மகளே! அவ்வாறே பரகாலரிடம் கூறுகிறேன்" என்று கூறி அவளை அனுப்பி வைத்துவிட்டு அப்பரந்தாமனின் திருவருளை எண்ணியெண்ணிப் பூரித்துக் கொண்டிருந்தார்.

இவ்வாறாக குமுதவல்லி இருக்கையில் அவளுடைய அழகைக் கண்ட சிலர் திருமங்கை மன்னரிடம் சென்று அவள்

அழகைப் பற்றிக் கூறினர். அதைக் கேட்டதும் பரகாலர் காமதேவனுக்கு வசப்பட்டு குமுதவல்லிமீது அளவிலாத காதல் கொண்டு அவளே தனக்கு மனைவியாவதற்குத் தகுதியுடையவள் என்று தீர்மானித்தார். உடனே தம் அமைச்சர்களுடன் 'ஆடன்மா' என்னும் குதிரையில் ஏறி திருநாங்கூரை அடைந்து. குமுதவல்லியின் மாளிகை முன் வந்தார். அப்போது அவள் மாளிகையின் மேல் மாடத்தில் இருந்தாள். 'அண்ணலும் நோக்கினான். அவளும் நோக்கினாள்' என்று கம்பாழ்வார் பாடியது போலவே திருமங்கை மன்னரும் அவளை நோக்கினார். குமுதவல்லியும் அவரை நோக்கினாள்.

திருமங்கைமன்னர் குதிரையினின்றும் இறங்கி தம் வருகையை அமைச்சர்கள்மூலம் அவ்வைத்தியருக்குத் தெரிவித்தார்; வைத்தியர் உடனே விரைந்து வந்து, மன்னரை எதிர்கொண்டு வரவேற்று மாளிகையினுள் அழைத்துச் சென்று தக்கதோர் ஆசனத்தில் அமர்த்தினார். மன்னர் தாம் வந்த காரணத்தை அவரிடம் சொன்னார். அதைக் கேட்டு மகிழ்ந்த வைத்தியர் தம் புதல்வியை அழைத்து மன்னரிடம் காட்டினார்.

குமுதவல்லியை நோக்கிய வைத்தியர், "என் அருமைப் புதல்வியே! இவர் இந்நாட்டின் மன்னர்பிரான்: அருங்கலைகளில் வல்லவர். பெருஞ்செல்வர். உன்னை மணக்க வேண்டுமென்ற விருப்பத்தால் நம் வீடுதேடி வந்திருக்கிறார்!" என்றார்.

அதற்கு குமுதவல்லி "தந்தையே! தங்கள் எண்ணத்திற்கு நான் மறுப்புச் சொல்வேனா? ஆனால் நான் அரங்கநாதப் பெருமானுக்குத் திருத்தொண்டு புரியும் அடியவரையே மணந்துகொள்ள விரும்புகிறேன். இம்மன்னர்பிரானும் அவ்வாறே எம்பெருமானின் திருத்தொண்டரானால் நான் இவரை நிச்சயம் மணந்து கொள்வேன்!" என்றாள்.

திருமங்கை மன்னர் குமுதவல்லியின் எண்ணத்திற்கு ஒப்புதல் தெரிவித்து திருநறையூரை அடைந்து திருநறையூர் நம்பியின் திருமுன் சென்று தம் கருத்தை விண்ணப்பித்து பெருமானால் திருவலச்சனை முதலியன அளிக்கப்பெற்று திருமண் சூடிக்கொண்டு, தொண்டராக மாறி வைத்தியர் மாளிகைக்கு வந்தார்.

குமுதவல்லி தந்தையரை நோக்கி, "தந்தையே! எனக்கு மற்றும் ஒரு நோன்பு உண்டு. திருமால் தொண்டர்களான ஆயிரம் பாகவதர்களுக்கு நாள்தோறும் விருந்துணவு படைத்து அவர்களின் திருவடித் தீர்த்தமும் தளிகைப் பிரசாதமும் பெற வேண்டும் என்பதுதான் அந்த நோன்பாகும். அதன்படி இவர் செய்வதாகப் பிரதிக்ஞை செய்வாரானால் நான் இவரை மணந்துகொள்ள எந்தத் தடையும் இல்லை" என்றாள்.

திருமங்கை மன்னர் அதற்கு ஒப்புதல் தெரிவித்து தம் மாளிகையை அடைந்தார். பிறகு திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். நல்லதொரு மங்கல நாளில் ஆன்றோரும் சான்றோரும் வாழ்த்த குமுதவல்லியைத் தம் துணைவியாக்கிக் கொண்டார்.

அன்று முதல் திருமங்கை மன்னர் இல்லக் கிழத்தியிடம் தாம் கூறியபடி திருமால் அடியார்களுக்குத் தொண்டு செய்ய எண்ணி அவ்வாறே ஒவ்வொரு நாளும் ஆயிரம் பக்தர்களுக்கு அன்புடன் அறுசுவையோடு கூடிய உணவிட்டு அவர்களுக்குத் தொண்டு செய்து வந்தார். பெண்ணொருத்தியின் அழகில் மயங்கி அவள் மீது கொண்ட காதலை முன்னிட்டும் பெருமாள் பக்தராக மாறிய அவருக்கு அழகிற்கெல்லாம் அழகான அந்தப் பரம்பொருளின் அழியாப் பேரழகிலே மனம் ஒன்றி அந்தப் பெருமாள் மீதே காதலாக மாறி விட்டது. அவர் நாள்தோறும் ஆயிரம் பாகவதர்களுக்கு அமுதுபடி செய்து வந்ததால் அவருடைய செல்வங்கள் குறைந்துகொண்டே வந்தன. அதனால் சோழ மன்னருக்குச் சிற்றரசன் என்ற முறையில் கப்பம் கட்டுவதையும் கைவிட்டார். அவ்வப்போது அவனைப் போய் பேட்டி காணாமலும் இருந்தார்.

சோழமன்னன் அவரின் செயல்களைக் கேள்விப்பட்டு கோபம் கொண்டு தூதுவர்களை அவரிடம் கப்பம் பெற்றுவரும் பொருட்டு அனுப்பி வைத்தான். அத்தூதுவர்கள் திருமங்கை மன்னரான பரகாலரிடம் சென்று கப்பம் கேட்க அவர் "இதோ தருகிறோம், அதோ தருகிறோம், நாளை தருகிறோம்" என்று நாளைக் கடத்தி வந்தார். முடிவில் அவர்கள் வற்புறுத்தி கேட்டும் பயனில்லாமல் "உடனே கப்பப் பொருளைக் கொடுக்காவிட்டால்

நாயைக் கட்டுவது போல இரும்புச் சங்கிலிகளால் உன்னைக் கட்டி கொண்டு போய் எம்முடைய அரசர் முன்னிலையில் விடுவோம்" என்றார்கள்.

அதைக் கேட்டதும் பரகாலர் கொதித்தெழுந்தார். அவர் கண்கள் சிவந்தன. அவ்வீரர்களை நோக்கி, "பேதைகாள்! என்னையா சங்கிலியால் கட்டுவீர்கள்?" என்று கோபத்துடன் கூறி, அவர்களைத் தாக்கினார். அவர் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாத அவ்வீரர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள். சோழ மன்னரிடம் ஓடி வந்து அச்செய்தியைக் கூறினார்கள். பரகாலரின் அடாத செயலை அறிந்த சோழன் வரிப்புலிபோல் கோபத்தால் உறுமினான்.

உடனே படைகளைத் திரட்டிக்கொண்டு திருமங்கையை அடைந்தான். அதற்குமுன்பே ஒற்றர்கள் மூலம் அதை அறிந்த திருமங்கை மன்னர் தயாராக தம் படையோடு எதிர் நின்றார். இருபெரும் படைகளும் மோதின. பரகாலரின் வீரத்தின் முன் சோழப் படைகள் நிற்க முடியாமல் தோற்று ஓடின. பரகாலரின் வீரத்தைக் கண்டு சோழன் பெருங் கவலையடைந்தான். அவன் கவலையைப் பரகாலர் உணர்ந்து கொண்டார். தம் குதிரையைச் சோழனின் அருகே செலுத்திச் சென்று நின்றார்.

சோழன் கண்கள் சிவக்க சினத்துடன் அவரை நோக்கி, "பெருவீரனே! உனக்கு நான் செய்த நலன்களை மனத்தில் சிறிதும் எண்ணாமல் நன்றிக் கடனை மறந்து என்னை எதிர்க்கவும் துணிந்து விட்டாய், இதுதான் கற்றறிந்த உன்னைப் போன்றவர்களுக்குத் தகுதியோ?" என்றான்.

பரகாலர் சோழமன்னனின் பேச்சைக் கேட்டதும் மிகவும் வருந்தினார். சோழ மன்னனுக்கு நன்றிக்கடன்பட்ட நாம் இவ்வாறு நடந்து கொண்டது தவறே என்று எண்ணினாலும், "மன்னர் மன்னரே! நீர் முன்பு அனுப்பிய தூதுவர்கள் என்னிடம் தவறாக நடந்து கொண்ட காரணத்தால் தான் நான் அவ்வாறு செய்தேன். அதைப்பற்றிச் சிந்தித்துப் பாராமல் என்னுடன் போர் புரிய வந்தீர். நானும் உம்முடன் போரிட்டேன். ஆனால் இனி நான் போர் புரியமாட்டேன். இனி நீர் செய்ய எண்ணியுள்ளதைச் செய்வீர்!" என்றார்.

"என் அருமைத் தோழனே! உன்னுடைய குணநலன்களை நான் அறிவேன். ஆதலால் உன்னை இழக்க என் மனம் விரும்பவில்லை. இருந்தாலும் உன்னிடமிருந்து கப்பப் பொருளைப் பெறுமட்டும் உன்னைச் சிறைப்படுத்துவேன்" என்று பரகாலரை நோக்கிக் கூறினான் சோழமன்னன்.

பரகாலர் பாம்பணையில் பள்ளிகொண்ட பரந்தாமனை மனத்தில் எண்ணி "எம்பெருமானே! உனக்குத் தொண்டு புரியும் எண்ணத்தால் உன் அடியவர்கட்கு உணவளித்து என் செல்வத்தையெல்லாம் இழந்தேன். ஆதலால் சோழருக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருளையும் செலுத்தவில்லை. என் தொண்டு குறையுடன் நிற்காமல் அவருக்குத் திறையும் செலுத்தவேண்டும்! இதற்கு நீ அருள் செய்யாவிட்டால், நான் என்ன செய்வேன்? என் உயிரான இறைவனே! என் துன்பம் நீங்கும் வரை நான் உணவும் கொள்ளேன்!" என்று கூறி, மூன்றுநாள் வரையிலும் உணவு உட்கொள்ளாமல் இருந்தார்.

காஞ்சிபுரம் என்றும் திருக்கச்சி என்றும் வழங்கப்படும் அத்தியூரின் இறைவனான வரதராஜப் பெருமாள் திருமங்கை மன்னரின் மனநிலையை அறிந்தார். மூன்றாம் நாள் இரவு பரகாலரின் கனவிலே அப்பெருமாள் தோன்றி "அன்பனே! கவலை வேண்டாம். சோழ மன்னருக்குச் செலுத்த வேண்டிய கப்பப் பொருளை நாம் தருகிறோம், கச்சிக்கு வருக!" என்று கூறி மறைந்தருளினார்.

பரகாலர் தம் இறைவன் தமக்குக் கனவிலே கூறிய மொழியை எண்ணி மகிழ்ந்தார். அமைச்சர்களிடம் தம்மைக் கச்சியம்பதிக்கு அழைத்துச் சென்றால், திறைப் பொருளைத் தருவதாக கூறினார். அவர்களும் அவ்வாறே அவரைக் காவலர்களோடு கச்சிக்கு அழைத்துச் சென்றார்கள். கச்சிக்கு வந்த பரகாலர் அங்கு பல இடங்களில் தேடியும் பொருள் கிடைக்காமையினால் மிகவும் வருந்தினார். அதன் காரணமாக எழுந்த மனச்சோர்வில் உறங்கி விட்டார்.

மீண்டும் அவர் கனவிலே வரதராஜர் பெருமாள் தோன்றி, "என் அன்பனே! கவலைப்பட வேண்டாம் நாம் குறித்த

பொருட்குவியல் வேகவதியாற்றின் கரையிலே இருக்கிறது" என்று கூறி அப்பொருள் இருக்கும் இடத்தையும் சொல்லி மறைந்தார்.

அதன்படி திருமங்கையார் அமைச்சர்களோடு சென்று அப்பொருட்குவியலை எடுத்தார். சோழனுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருளையும் கொடுத்தார். பிறகு அவரை அமைச்சர்கள் உறையூருக்கு அழைத்து வந்து சிறைக்கோட்டத்தின் வெளியே நிறுத்தி விட்டுத் தங்கள் மன்னனிடம் வந்தார்கள், பரகாலர் தந்த பொருளை அரசனிடம் காட்டி, அது கிடைத்த விவரத்தைக் கூறினார்கள்; மன்னர் அவற்றைக் கேட்டு வியப்படைந்தான்; தன் தவறையும் உணர்ந்தான். திருமாலின் அடியவராகிய பரகாலரைத் துன்பத்திற்கு ஆளாக்கியதை எண்ணி வருந்தினான். உடனே அவரை அழைத்து வரும்படி அமைச்சர்களிடம் கூறினான்.

அமைச்சர்கள் பரகாலரிடம் சென்று அவரை வணங்கி, "வரதராஜப் பெருமாளின் பெருமருளைப் பெற்ற பெரியவரே! உம்மை எமது மன்னர் காண விரும்புகிறார்!" என்றார்கள்.

பரகாலரும் இது அவ்விறைவனின் திருவருளே என்று கருதியவராக மன்னனிடம் வந்தார்; சோழ மன்னன் அவரைப் பலவாறாகப் போற்றி மகிழ்ந்தான்; தனக்கு அவர் அளித்த திறைப்பொருளைத் திருமால்தாசர்களுக்கு அமுதளிப்பதில் செலவிட்டு தன் தோஷத்தை நீக்கிக் கொண்டான்; பிறகு அவன் திருமங்கை மன்னரிடம் ஒரு வேலைகொடுத்து தேரில் ஏற்றி, சற்றுதூரம் அவருடன் வந்து விடைபெற்று அவரை திருமங்கை நகருக்கு அனுப்பி வைத்தான்.

குமுதவல்லியார் தன் மணாளரை சோழமன்னர் சிறை பிடித்துச் சென்றதனால் மிகவும் வருந்தி 'என்ன செய்வது?' என்று புரியாமல் வாடியிருந்தாள். அவ்வம்மையார் தம் மணாளர் திரும்பி வந்த செய்தியைக் கேட்டு மகிழ்ந்து உடனே அவரைக் காண எண்ணினாள். அப்போது பரகாலர் தன் தேவியின் அருகில் வந்தார். பிரிந்தவர் ஒன்று கூடினர். அங்கே பெருமகிழ்ச்சி வெள்ளமெனப் பாய்ந்தது.

மீண்டும் திருமங்கையார் அன்று முதல் எவ்வித இடையூறும் இல்லாது அரங்கப்பெருமானின் அடியவர்களுக்குத்

திருத்தொண்டு புரிந்து வந்தார். அங்ஙனம் நாளும் இறைவன் தமக்கு அளித்த பொருட்களையெல்லாம் செலவிட்டார். சிறிது நாட்களிலேயே அப்பொருள்கள் அனைத்தும் செலவாகித் தீர்ந்து விட்டன. அதனால் மனம் வருந்தி செய்வதறியாது மயங்கினார். இறுதியில் வழிப்பறி செய்தாவது திருமாலவன் அடியவர்களுக்கு அமுதளிப்பதும் ஆலயப்பணி புரிவதுமான தொண்டை இனிது நடத்தவேண்டும் என்று மனங்கொண்டார். அதன்படி பரகாலர் திருமணங் கொல்லையில் உள்ள அரசமரத்தடியில் ஒரு கொள்ளைக் கூட்டத்தோடு பதுங்கியிருந்தார். அதர்மமான வழிகளில் பொருளீட்டிய செல்வந்தர்கள் கயவர்கள் முதலானவர்கள் வரும் போதெல்லாம் வழிப்பறிச் செய்து அதனால் கிடைத்த பெரும் பொருட்களைக் கொண்டு அடியார்களுக்குத் தொண்டு செய்து வந்தார்; ஆனால் இவர் வழிப்பறி செய்யும்போது திருமாலின் குறியாக நெற்றியில் திருமண் இட்டிருக்கும் வைணவர்களின் பொருட்களை மட்டும் கொள்ளையடிக்க மாட்டார்.

ஒருநாள் நெற்றியில் திருமண் இடாத பெண்ணொருத்தியை பரகாலர் வழிமறித்து அவள் கையிலிருந்த வெள்ளிக் கிண்ணத்தை பறித்தான். அப்போது அந்தப்பெண் சிரித்து, "நாராயணன் நம் சொத்தை ஏற்றுக் கொண்டான்" என்று கூறினாள். உடனே பரகாலர் திடுக்கிட்டு அக்கிண்ணத்தைப் போட்டுவிட்டுத் திரும்பிப் போய் விட்டார்.

திருமால் தம்முடைய பேரருளை எண்ணும் திருத் தொண்டராகிய பரகாலர் தவறான வழி செல்லுதலைத் தடுத்தாட் கொள்ள எண்ணினார். தம் தேவியாருடன் பொன்மணி மாலைகளை அணிந்து திருமணக்கோலம் கொண்டு புதுமணத் தம்பதிகளின் சுற்றத்தாராக கருடன் சேனைத்தலைவர் ஆகியோருடன் புறப்பட்டார். பரகாலர் வழிப்பறிக் கள்ளராக மறைந்திருக்கும் அரசமரத்தடி சாலை வழியே வந்தார். பரகாலர் அவர்களைக் கண்டதும் அவர்கள் முன் தம் கொள்ளைப் படையுடன் பாய்ந்து அவர்களைச் சூழ்ந்து கொண்டார். "அன்புடையவர்களே! ஏதும் மறைத்துக் கொள்ளாமல் உங்கள் நகைகளையெல்லாம் கழற்றிக்கொடுத்து விடுங்கள். இல்லையேல் எங்கள் வாள் முதலிய படைகளுக்கு உங்கள் உயிர்கள் பலியாகிவிடும்!" என்றார்.

உடனே எல்லோரும் தங்கள் அணிமணிகளைக் கழற்றிக் கொடுத்து விட்டார்களா என்று ஆராய்ந்தார். மாப்பிள்ளையின் வலக்கையின் ஒரு விரலில் மட்டும் ஒரு மணி ஆழி இருப்பதைக் கண்டு, "இதை ஏன் கழற்றித் தரவில்லை?" என்று கேட்டார்.

"இதைக் கழற்ற முடியவில்லையே!" என்றார் மணமகன் வேடம் புனைந்திருந்த மணிவண்ணப் பெருமாள்.

பரகாலர் உடனே தம் பற்களால் கடித்து அக்கை விரலாழியைக் கழற்றினார். மாப்பிள்ளையான பெருமாளோ "நம் கலியனோ?" என்றார். பிறகு அவர்கள் கொடுத்த பொருள்களை பரகாலர் தம் பணியாளரைக் கொண்டு மூட்டை கட்டச் சொன்னார். அப்பொருட்களை மூட்டை கட்டியபின் அவற்றை எடுத்துக்கொள்ளச் சொன்னார். அவர்கள் அதைத் தூக்க முயன்றார்கள். அப்பொருள் மூட்டையே மிகவும் கனத்தது. அவர்களால் அதைத் தூக்கவே முடியவில்லை. அதைக் கண்டு வியப்படைந்த பரகாலர் தாமே அம்மூட்டையைத் தூக்க எண்ணி அதை எடுக்க முயன்றார். அவராலும் அதைத் தூக்க முடியவில்லை. அதை சிறிது அசைக்கக்கூட முடியவில்லை.

அதனால் பரகாலர் மிகுந்த கோபம் கொண்டார். மணமகனை நோக்கி "இப்பொருள் மூட்டையை நாங்கள் தூக்க முடியாதபடி ஏதோ ஒரு மந்திரத்தைப் போட்டு விட்டாய்! அம்மந்திரத்தைக் எமக்கு நீ சொல்லா விட்டால் வாளினால் உன்னைக் கொன்று விடுவேன்!" என்றார்.

மணமகனார் "என் அருகிலே வா. அம்மந்திரத்தைக் கூறுகிறேன்" என்றார்.

பரகாலர் அவர் அருகே சென்றார். எம்பெருமானாகிய இறைவன் அவரது வலது காதில் அஷ்டாட்சர மந்திரமான திருவெட்டெழுத்தை உபதேசித்தார். அதைக் கேட்டதும் பரகாலர் அகக்கண் திறந்து "பெற்றதாயினும் ஆயின செய்யும் நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்" என்று வாயார நன்றி கூறித் திகைத்து நின்றார். மணப்பெண் கோலம் பூண்டிருந்த மகாலக்ஷ்மியும் பேரருள் பொங்கும் கண்களால் பரகாலரைப் பார்த்தாள். பிறகு அவர்கள் அனைவரும் மறைந்து விட்டார்கள்.

பரகாலருக்கு ஞானத் தெளிவு பிறந்து விட்டது. திருமகள் நாதனே தம்மிடம் திருவிளையாடல் புரிந்தான் என்பதை யறிந்ததும் அத்திருமகள் நாதனைப் போற்றிப் புகழ்ந்தார்; தம் ஞானக் குறைவையும் இறைவனின் அருளையும் தாம் பெற்ற மந்திரத்தின் சிறப்பையும் எண்ணியவராய் கண்களில் நீர்வழிய மனங்கரைந்தார். உடனே தம்முடைய உள்ளத்தே எழுந்த பேரன்பினால்,

'வாடினேன்; வாடி வருந்தினேன்; மனத்தாற்
பெருந்துயர் இடும்பையிற் பிறந்து
கூடினேன்; கூடி இளையவர் தம்மோடு
அவர் தரும் கலவியே கருதி
ஓடினேன்; உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன்; நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்"

என்று தொடங்கிப் பத்துப் பாசுரங்களைப் பாடினார்.

பரகாலர் இவ்வாறு பாடியவுடன் ஸ்ரீவிஷ்ணு பரமாத்மா தம் தேவியான மகாலட்சுமியோடு பெரிய திருவடிகளான கருடன் மீது ஏறி சங்கு சக்கரதாரியாக அவர் முன் வானில் தோன்றி "எம்மருட் செல்வனே! உன்னுடைய பைந்தமிழ்ப் பாடல்களை நாம் கேட்டு இன்புற விழைகிறோம். ஆதலால் நாம் கோயில் கொண்டுள்ள திருத்தலங்களுக்கெல்லாம் சென்று உலகம் உய்யும் பொருட்டு எம்மைப் பைந்தமிழ்ப் பாசுரங்களால் பாடுவாயாக!" என்று கூறி மறைந்தருளினார்.

ஆலிநாடரான திருமங்கையாழ்வார் பெரிதும் மகிழ்ந்து உடனே தம் தலயாத்திரையைத் தொடங்கினார். முதலில் அவர் வடப்பக்கம் சென்று கிருட்டனை கோதாவரி ஆறுகளில் நீராடிய பின்பு இமயமலையை அடைந்தார். அங்குள்ள திருப்பிரீதி என்ற திருத்தலத்திற்குச் சென்றார். அப்பதியில் திருக்கோயில் கொண்டுள்ள பரமபுருஷர் பரிமளவல்லித் தாயாரை வணங்கி மகிழ்ந்து திருமகள் "நாதனின் பேரருளைக் கருதியவராய், ஆராக்காதலுடன் பாசுரம் பாடலானார்.

"வாலி மாவலத்து ஒருவனது
உடல் கெடவரிசிலை வளைவித்து அன்று
ஏலம் நாறுதண் தடம் பொழில்
இடம் பெற இருந்தநல் இமயத்துள்
ஆவி மாமுகில் அதிர்தர
அருவரை அகடுற முகடு ஏறிப்
பீலி மாமயில் நடஞ் செய்யும்
தடஞ்சுனைப் பிரிதி சென்று அடை நெஞ்சே!"

என்று தொடங்கிப் பத்துப் பாசுரங்களைப் பாடினார்.

பிறகு அவர் பதரிக்குச் (பதரிகாஸ்ரமம்) சென்று, பத்ரீ நாராயணனை வணங்கி, "முற்ற மூத்துக்கோல் துணையா முன்னடி" என்று தொடங்கி "வண்டு தண்தேன் உண்டு வாழும் பதரி நெடுமாலை" என்பதுவரை இரண்டு திருமொழிகள் பாடினார். அத்திருப்பதியை விட்டு நீங்கிய திருமங்கை மன்னன், சாளக்கிராமத்திற்கு (ஷாலிக்ராமத்திற்குச்) சென்று ஸ்ரீதேவி ஸ்ரீமூர்த்தியை தரிசித்து ஒரு திருமொழியும் நைமிசாரணிக்குச் சென்று ஒரு திருமொழியும், சிங்கவேள் குன்றத்திற்குச் (அஹோபிலம்) சென்று லட்சுமி நாச்சியாரையும் நரசிம்மமூர்த்தியையும் வணங்கி ஒரு திருமொழியும் பாடியருளினார். சிங்கவேள் குன்றத்திற்குப் பிறகு, அவர் திருவேங்கடத்தை (திருப்பதி) அடைந்து அலர்மேல் மங்கை மணாளனான ஸ்ரீசீனிவாச பெருமாளை அன்பு பொங்கும் கண்களால் கண்டு பக்திப் பரவசமாகி நான்கு திருமொழிகள் பாடினார்.

பிறகு திருமங்கை மன்னர் திருஎவ்வுளூர் (திருவள்ளூர்) திருவல்லிக்கேணி, திருநீர்மலை ஆகிய திருப்பதிகளுக்குச் சென்று முறையே ஒவ்வொரு திருப்பதியிலும் ஒரு திருமொழி பாடியருளிய பின் திருக்கடல் மல்லைக்கு (மகாபலிபுரத்திற்கு) சென்று அங்குள்ள இறைவனைப் போற்றி இரண்டு திருமொழிகள் பாடினார்.

பிறகு திருஇடவெந்தைக்கும் (திருவடந்தை) திரு அட்டபுய கரத்திற்கும், பாமேச்சுர விண்ணகரத்திற்கும், (வைகுந்தப் பெருமாள் கோயிலுக்கும்) திருக்கோவலூருக்கும்,

திருவயிந்திரத் துக்கும் (திருப்பாதிரிப் புலியூருக்கும்) தில்லைச்சித்திரக் கூடத்துக்கும் சென்றார். அங்கெல்லாம் ஒவ்வொரு திருமொழி பாடியருளினார்.

பின்னர் திருமங்கை மன்னர் திருக்காழிச் சீராம விண்ணகரத்தை (சீர்காழியை) அடைந்தார். அவரைச் சுற்றி சூழ்ந்தார்கள், அடியவர்கள். அவர்கள் எல்லோரும் அவருக்கு முன்பாக "நான்கு கவிப்பெருமாள் வந்தார்; நம் கலியர் வந்தார், ஆலிநாடர் வந்தார். கொங்குமலர் குழலியர் வேள் வந்தார். திருமங்கை மன்னர் வந்தார். பரகாலர் வந்தார்" என்று விருதுகள் சொல்லிச் சென்றனர்.

அப்போது திருஞானசம்பந்தரின் அடியவர்கள் சிலர் அவ்விடம் வந்து அவர்களிடம் "ஐயா! எங்கள் சம்பந்தவள்ளல் இருக்கும் இடத்தில் இவ்வாறெல்லாம் விருதுகள் சொல்லக் கூடாது" என்றார்கள்.

உடனே திருமங்கைமன்னர் அச்சைவ அடியவர்களை நோக்கி "நாம் உங்கள் திருஞானசம்பந்தர் பெருமானைக் காண விரும்புகிறோம். எமது கருத்தை அவருக்குத் தெரிவியுங்கள்" என்றார். அவர்களும் அவ்வாறே தெரிவிப்பதாகக் கூறிவிட்டுச் சென்றார்கள்.

அவர்கள் போனபின் திருமங்கை மன்னர், தம் அடியார்களை நோக்கி, "எமக்கு எம்பெருமானின் திருவுருவம் எதிரில் இருந்தால் தான் இனிய வாக்கு உண்டாகும். ஆதலில் இங்குள்ள வைணவப் பெரியாரிடமிருந்தாவது திருமகள் நாதனின் திருவுருவத்தைப் பெற்று வாருங்கள்!" என்றார்.

அப்போது அங்கிருந்த ஒரு வைணவ சமயத்து முதியவள் "நான் ஆராதிப்பதற்காக வெண்ணெய் உண்ட பெருமாளை வைத்திருக்கிறேன். அத்திருவுருவைத் தங்களிடம் கொண்டு வந்து தருகிறேன். கவலைப்பட வேண்டாம்" என்று கூறிச் சென்று எம்பெருமானின் திருவுருவத்தை கொண்டு வந்து கொடுத்தார்.

திருஞானசம்பந்தரிடம் சென்ற அடியவர்கள் மீண்டும் ஆலிநாடரிடம் வந்து, "தங்களை எங்கள் பெருமான் காண

விரும்புகிறார்!" என்று கூறி அவரைத் தங்கள் பெருமானிடம் அழைத்துச் சென்றார்கள்.

சம்பந்தப் பெருமான், திருமங்கை மன்னரை அன்புடன் வரவேற்று உபசரித்து, தக்கதோர் இருக்கையில் அமரச் செய்து, தானும் எதிரில் அமர்ந்து கொண்டார். இருவரும் வெகுநேரம் வரை உரையாடி மகிழ்ந்தனர். திருமங்கையாரின் இனிய பேச்சைக் கேட்டு மகிழ்ந்த திருஞானசம்பந்த வள்ளல் "அருட் பெரியீர்! தங்கள் வாக்கினின்று வரும் இன்கவியினைச் சுவைக்க விரும்புகிறேன்" என்றார்.

அதற்கு, "அன்பு மனங்கொண்டு என்னை உபசரித்த ஞானச் செல்வரே! தங்களிடம் வந்த அடியவனுக்குத் தாங்கள்தான் முதலில் அவ்விருந்தினை வழங்கியருளுதல் வேண்டும்" என்றார் திருமங்கை மன்னர்.

• திருஞானசம்பந்தர் அதற்கு இணங்கி ஒரு பதிகம் பாடினார். திருமங்கை மன்னர் அப்பதிகத்தைக் கேட்டு மகிழ்ந்து அவரைச் செந்தமிழ்ச் சொற்களால் பாராட்டிவிட்டு, முதியவள் கொடுத்த திருவுருவை தம் எதிரில் வைத்து, ஒரு திருமொழி பாடினார்.

ஆலிநாடரின் திருமொழியைக் கேட்டு உவகையுற்ற திருஞானசம்பந்தர், "தங்களுக்கே 'நாற்கவி பெருமாள்' என்ற பட்டம் உரியதாகும்!" என்று கூறிச் சிறப்பித்தார். அதன்பின் இருவரும் ஒருவரையொருவர் பலபலப் பாராட்டி மகிழ்ந்தார்கள். கடைசியில் திருமங்கையார், சைவ ஞானச்செல்வரிடமிருந்து விடை பெற்று திருவாலிக்குச் சென்றார். அங்கே, வந்து "உனது அடியேன் மனம் புகுந்தாய் புகுந்ததற்பின் வணங்கும் என் சிந்தனைக்கு இனியாய்" என்றும், "தூவிரிய மலர் உழக்கித் துணையோடும் பிரியாதே" என்றும், "கள்வன் கொல்? யான் அறியேன்" என்றும் தொடங்கி மூன்று திருமொழிகள் பாடினார். பின் நாங்கூரை அடைந்து, அங்கே கோயில் கொண்டிருக்கும்

• *திருஞான சம்பந்தர் அப்போது பாடிய பதிகம் எது எனக் குறிக்கப்படவில்லை. மேலும் இவ்வரலாற்றுக் குறிப்புச் சைவ நூல்களில் காணப்படவில்லை.*

பெருமானைக் கண்டு வணங்கி, "நந்தா விளக்கே! அளத்தற்கு அரியாய்" என்று தொடங்கி ஒரு திருமொழி பாடினார். அத்துடன் நில்லாது அவ்வூரைச் சேர்ந்த வைகுந்த விண்ணகரம். அரிமேய விண்ணகரம். திருத்தேவனார் தொகை, திருவண் புருடோத்தமம், திருச்செம்பொன் செய்கோயில், திருத்தெற்றியம்பலம், திருமணிக்கூடம் திருக்காவளம் பாடி, திருவெள்ளக் குளம், திருபார்த்தன்பள்ளி ஆகிய பதிகளுக்குச் சென்று பாம்பணையில் பள்ளிகொண்ட பரந்தாமனை வணங்கி ஒவ்வொரு பதியிலும் ஒவ்வொரு திருமொழியைப் பாடினார்.

பின் அவர், திருவிந்தளூர், வெள்ளியங்குடி, புள்ளம் பூதர்குடி, கூடலூர், திருவெள்ளறை முதலிய தலங்களுக்குச் சென்றார். அங்கேயெல்லாம் குடிகொண்டுள்ள பெருமாளை வணங்கி ஒவ்வொரு திருமொழி பாடினார்.

காவிரியின் இடையில் மேற்கில் முடி வைத்துக் கிழக்கில் திருவடி நீட்டி, வடக்கில் பின்பு காட்டித் தெற்கில் இலங்கை நோக்கி எம்பெருமான் பள்ளி கொண்டுள்ள பொன்னியை அடைந்து அவ்விறைவனைச் சேவித்தார். அப்போது அவர் கண்கள் அன்பால் கண்ணீர் பெருக்கின. ஆனந்த பரவசத்தால் "உந்தி மேல் நான்முகனைப் படைத்தான்" என்று தொடங்கி ஐந்து திருமொழிகளைப் பாடி மகிழ்ந்த பின், சிறிதுகாலம் அங்கே தங்கினார்.

திருமங்கை மன்னர் மீண்டும் தலயாத்திரை தொடங்கி திருப்பேர், நந்திபுர விண்ணகரம் ஆகிய தலங்களை அடைந்து ஒவ்வொரு திருமொழி பாடினார். பிறகு திருவிண்ணகரத்தை அடைந்து அங்கே எழுந்தருளியிருக்கும் உப்பிலியப்பனை மூன்று திருமொழிகளால் போற்றிப் புகழ்ந்தார். பிறகு திருநறையூருக்குச் (நாச்சியார் கோயிலுக்கு) சென்றார். அங்குள்ள நம்பிக்கை நாச்சியாருடன் நம்பி எழுந்தருளியுள்ள கோலத்தைக் கண்டு அவன்மீது அன்பு பெருக, கண்ணீர் திரையிட, மனம் உருகி நம்பியைப் போற்றிப் பத்துத் திருமொழிகள் பாடினார்.

அதன் பிறகு திருச்சேறையை அடைந்து சாரநாதன் சாரநாயகியைக் கண்டு வணங்கி ஒரு திருமொழி பாடினார்.

பின் திருவழுந்தூரை (தேரழுந்தூரை) அடைந்து செங்கமல வல்லியின் மணாளனை ஐந்து திருமொழிகள் பாடினார்; அங்கிருந்து புறப்பட்டு சிறு புலியூர், கண்ணமங்கை என்னும் பதிகளுக்குச் சென்றார். அப்பதிகளிலேயும் ஒவ்வொரு திருமொழி பாடினார்.

பிறகு திருக்கண்ணபுரத்திற்குச் சென்று அங்கே எழுந்தருளி யுள்ள சௌரிராஜப் பெருமாளை துதித்துப் போற்றி நான்கு திருமொழிகள் பாடிய பின் தலைவனைப் பிரிந்த தலைவியின் இரங்கலாக ஒரு திருமொழி பாடிவிட்டு மீண்டும் திருக்கண்ண புரத்தைக் குறித்து ஐந்து திருமொழிகள் பாடினார்.

அங்கிருந்து கிளம்பி திருக்கண்ணங்குடி, திருப்புல்லாணி, திருக்குறுங்குடி, திருவல்லவாழ் முதலிய பகுதிகளுக்குச் சென்று உலகளந்த சேவடியானை சேவித்து திருமொழிகள் பாடினார். பிறகு திருமாலிருஞ் சோலையை அடைந்தார். அங்குள்ள அழகனைப் போற்றி இரண்டு திருமொழிகள் பாடினார். அதன் பின் திருக்கோட்டியூர், திருமெய்யம், திருப்புல்லாணி, திருத்தண்கால், திருமோகூர், திருக்குறுங்குடி முதலிய பகுதிகளில் குடிகொண்டுள்ள பெருமாளைப் போற்றித் திருமொழிகள் பாடியபின், கடைசியாகத் திருவரங்கத்துக்கு வந்து சேர்ந்தார்.

அவ்வாறு தலயாத்திரை சென்று வந்த திருமங்கை மன்னர் மற்றும் பல திருமொழிகள் பாடியருளினார். அவர் அருளிய அத்திருமொழிகளின் தொகைக்கு பெரிய திருமொழி என்று வழங்கலாயிற்று.

திருமங்கை மன்னர் திருவரங்கப் பெருமாளைச் சேவித்து மகிழ்ந்தார். அப்போது அழகிய மணவாளருக்கு விமானம், மண்டபம், திருத்தளிகை, திருமதில், கோபுரம் முதலியன கட்டுவித்தல் வேண்டும் என்ற விருப்பம் அவர் மனதில் எழுந்தது. உடனே தம்முடைய அமைச்சர்களை அழைத்து "அதற்கு பொருள் ஈட்டுவதற்கு என்ன வழி?" என்று கேட்டார்.

அவர்கள் "நாகப்பட்டினத்தில் ஒரு புத்தவிகாரம் இருக்கிறது. அதிலே மாற்று உயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட புத்த உருவம் ஒன்று உண்டு. அதைக் கொண்டு இத்திருப்பணிகளைச் செய்யலாம்!" என்றார்கள்.

அமைச்சர்கள் கூறிய வழியைக் கேட்டு மகிழ்ந்த திருமங்கை மன்னர் தம் படையுடன் நாகப்பட்டினம் சென்று ஒருவரும் அறியாதவாறு அப்புத்த வடிவத்தைக் கைப்பற்றி வந்தார். அதை உருக்கி விற்று அதனாற் கிடைத்த பொருளைக் கொண்டு தொண்டரடிப் பொடியாழ்வார் பெரிய பெருமாளுக்குத் திருமாலைச் சேர்க்கின்ற இடத்தை மட்டும் ஒதுங்கியிருக்கத் திருமதிலைக் கட்டியபின் மற்றுமுள்ள திருப்பணிகளைச் செய்தார். • அதனை அறிந்த தொண்டரடிப் பொடியாழ்வார் தாம் மலர் கொய்யும் ஆயுதத்துக்கு திருமங்கை மன்னருடைய திருப்பெயர்களுள் ஒன்றாகிய 'அருள்மாரி' என்னும் திருப்பெயரைச் சூட்டி மகிழ்ந்தார்.

திருப்பணிகளை முடித்துக் கொண்டதும் திருமங்கை மன்னர் திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், சிறிய திருமடல், பெரிய திருமடல், திருவெழு கூற்றிருக்கை ஆகிய அருமொழிப் பாமாலைப் பாடிப் பரவசமெய்தினார். பிறகு அவர் திருக்குறுங் குடிக்குச் சென்று இவ்வுலகை நீத்து பரமபதம் போய்ச் சேர்ந்தார்.

திருமங்கை ஆழ்வார் திருமாலைத் துதித்துப் பாட முயன்று தம்மைத் தாமே உயர்த்திப் புகழ்ந்து கொள்வதுபோல் பாடி யிருக்கிறார் என்று திருமாலின் அடியார்களே முறையிடும்படி அவர் தம் பாசுரங்களில் சிலவற்றில் தம்மை அறிமுகப் படுத்தியிருக்கிறார். உதாரணமாக;-

செங்கமலத்து அயன் அனைய மறையோர், நாழி
சீராம விண்ணகர் என் செங் கண் மாலே
அம் கமலத் தட வயல் சூழ் ஆழி நாடன்
அருள்மாறி அரட்டு அமுக்கி, அடையார் சீயம்,
கொங்கு மலர் குழலியர்வேள், மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன், கலியன் சொன்ன
சங்க முகத் தமிழ் மாலை பத்தும் வல்லார்
தடங்கடல் சூழ் உலகுக்குத் தலைவர்தாமே!

திருவிளக்குப் பிச்சன் என்ற பக்தர் பெருமாளைத் தரிசித்து நாள்தோறும் உரையாடி வரும் காலத்தில் ஒருநாள் திருமால்

• இதனால் தொண்டரடிப் பொடியாழ்வார் திருமங்கை மன்னர் காலத்தவர் என்பது தோன்றுகின்றது. இது ஆராய்ச்சிக்குரியது.

புன்முறுவல் பூத்து, "நம் பக்தர்களுக்கு ஒரு குறை சொல்லிக் காணோம்!" என்றாராம். அதற்கு திருவிளக்குப் பிச்சன் திருமங்கை யாழ்வாரின் மேற்கூறிய பாடலைக் குறிப்பிட்டு, "தேவரைக் கவி பாடத் தொடங்கித் தன்னைத்தானே கவிபாடிக் கொண்டான். பிரபந்த முகத்தாலே தேவரைப் பாட நினைத்துத் தன்னைத்தானே துதித்துக் கொண்டான்!" என்று விண்ணப்பித்தாராம். பெருமாளோ, "அதுவும் நம்மைத் துதித்தது போன்றது தான்" என்றாராம்.

அடியார்களுக்கு எளியவரான அந்த அனந்த சயனப் பெருமாள் தம் அடியார் தம்மைத் தாமே துதித்துக் கொண்டதையும், தம்மையே துதித்ததாகக் கருதி திருமங்கை ஆழ்வார் மீது பெரும் கிருபை வைத்திருந்தார்.

அத்தகைய சிறப்புப் பெற்ற திருமங்கை ஆழ்வாரைப் போற்றி வணங்குவோம்.

12. மதுரகவியாழ்வார்

பாண்டிய நாட்டிலே பல தெய்வத் திருத்தலங்கள் உண்டு. அவற்றுள் பல வளங்களும் நிரம்பப் பெற்று, எவ்விதக் குறையும் இல்லாத திருக்கோளூர் என்னும் ஊர் சிறந்து விளங்கியது. அது ஆழ்வார் திருநகரி என்னும் தலத்திலுள்ள ஒன்பது வகை திருத் தலங்களுள் ஒன்றாகும். அப்பதியில் வாழும் மக்கள் திருமாலின் மேல் அன்பு கொண்டவர்கள், அருள் நிறைந்தவர்கள்.

அங்கே வேதத்தில் சிறந்த அந்தணர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒரு பகுதியினரான முன்குடுமிச் சோழியப் பிராமணர் மரபில் ஓர் அந்தணருக்கு மைந்தராக (கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில்) குமுதரென்னும் கணநாதரின் அம்சமாக ஈசுவர ஆண்டு, சித்திரை மாதம், சுக்ல சதுர்த்தசி வெள்ளிக்கிழமை, சித்திரை நட்சத்திரங்கூடிய நன்னாளில் மதுரகவியார் பிறந்தார். அவர் ஆதவனுக்கு முன்னால் தோன்றும் அருணோதயம் போன்று, வைணவ அடியார்களுள் தலைசிறந் தவரும் நால்வகைத் தமிழ் மறையை உலகுக்கு அருளியவருமான 'நம்மாழ்வார்' தோன்றுவதற்கு முன்பு தோன்றினார்.



12. மதுரகவியாழ்வார்

கல்வி நூல்கள் பலவற்றையும் ஓதி உணர்ந்தார். தென்மொழி கலைகளிலும், வடமொழி கலைகளிலும், ஆகமங்களிலும், வேதங் களிலும் பெரும் புலமையும் பெற்று, சிறந்த ஒழுக்கமுள்ளவராக, திருமாலிடத்தே அன்பு உடையவராக, உலகத்துயிர்களிடம் அருள் கொண்டவராக விளங்கி வந்தார். அவர் மதுரமாகக் கவிபாடும் திறமையையும், திருமகள் நாதனின் அரும்பெருங் கருணையினால் கைவரப் பெற்றார். கடவுள் அருளால் உண்மை உணர்வு கொண்டார். உலகப்பற்றை அறவே நீத்தார். அவருக்கு இன்ப துன்பங்களில் அகப்பட்டுத் துன்புறும் மக்களுடன் சேர்ந்து வாழவும் பழகவும் பிடிக்கவில்லை. அதனால் அவர் அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை என்னும் ஏழுத் திருத்தலங்களுக்கும் சென்று புனித நீராடி பரந்தாமனைத் தரிசித்து வரவேண்டும் என்று விரும்பினார்.

உடனே அவர் தன் யாத்திரையைத் தொடங்கினார். வடநாட்டிலுள்ள பல பதிகளையும் தரிசித்துக் கொண்டு அயோத்தி மாநகரை வந்தடைந்தார். விக்கிரக வடிவில் அங்கே எழுந்தருளியிருக்கும் இராமபிரானை வணங்கிச் சில காலம் அப்பதியிலேயே தங்கி வாழ்ந்து வந்தார். அப்போது நம்மாழ்வார் புளிய மரத்தடியிலே தொட்டிலிட்டு சீராட்டப் பெற்றார். அவர் கடைசியில் எம்பிரானைத் தவிர வேறு எவரையும் கண்ணால் காண மாட்டேன் என்று சபதம் செய்து அதே மன நிலையோடு பதினாறு வயதுவரை அங்கேயே தங்கியிருந்தார். அவருடைய பெருமைகள் உலகெங்கும் பரவியது. மதுரகவியாரும் அவருடைய பெருமைகளைக் கேள்விப்பட்டு வந்து அவரைச் சந்தித்து அவரையே தம் குருவாகவும் தெய்வமாகவும் கொண்டார். இந்த சந்திப்பு பற்றிய சுவை நிகழ்ச்சியை நம்மாழ்வார் கதையில் காண்க.

ஒருநாள் இரவு மதுரகவியாருக்கு தாம் பிறந்த திருக்கோளூரின் நினைவு வந்தது. உடனே அவர் அவ்வூரில் பெருமாள் எழுந்தருளியிருக்கும் திசை நோக்கி கைகூப்பி வணங்கினார். அப்போது தென் திசையில் அதிசயமான ஒரு பேரொளி அபாரமான திவ்யதேஜஸாக விண்வெளியில் வெளிப்பட்டுத் தோன்றியது. அதைக் கண்டு மதுரகவியார் பெரிதும் வியப்புற்றார். "இதென்ன அதிசயம்? இரவுப் பொழுதில் கதிரவனின் ஒளியையும் தோற்கடிக்கும் தன்மையாக இந்தப் பேரொளி எப்படி எழுந்தது?" என்று தமக்குள்ளாகக் கூறிக்

கொண்டார். அவ்வொளி எங்கிருந்து வருகிறது என்பதை அறிய அவர் மனம் துடித்தது. தென் திசையிலிருந்து வரும் அவ்வொளியைக் காணச் சென்றார். அதை அவர் நோக்கி செல்லச் செல்ல அவ்வொளியும் தென்திசையாக அவர் முன்பு கண்டவாறே அருகிலேயே சென்று கொண்டிருந்தது. இப்படியாக இரவு முழுவதும் மதுரகவியார் அவ்வொளியைப் பின்பற்றி நடந்து கொண்டிருந்தார். பொழுது மெல்ல விடிந்தது. இரவு காணப்பட்ட ஒளியும் மறைந்தது.

அந்த ஒளி மறைந்த இடத்திலேயே மதுரகவியார் தங்கி விட்டார். மீண்டும் இரவு தோன்றியவுடன் அவ்வொளியும் மறுபடியும் வான்வெளியில் எழுந்தது. இவ்வாறாக அவ்வொளி பகலில் மறைவதும் இரவில் தோன்றுவதுமாக இருக்கவே மதுரகவியாரும் இரவில் அப்பேரொளியைத் தொடர்ந்து செல்லலானார். தென்திசை நோக்கிச் சென்ற அவ்வொளியைத் தொடர்ந்து சென்று அவர் பல திருப்பதிகளைக் கடந்து பாண்டிய நாட்டிலுள்ள திருக்குருகூர் என்னும் ஊரை அடைந்தார். உடனே அவ்வொளி அங்கேயுள்ள பெருமானின் திருக்கோயிலுக்குள் சென்று மறைந்தது. அதைக் கண்ட மதுரகவியார் வியப்பெய்தினார். "இக்கோயிலுள் ஏதோ ஒரு சிறப்பு இருக்கிறது" என்பதை உணர்ந்து அதை அறிய வேண்டி அங்குள்ள மக்களை விசாரித்தார். அக்கோயிலினுள் புளிய மரத்தடியில் உண்ணாமலும் பேசாமலும் யோக நித்திரையில் ஆழ்ந்திருக்கும் சடகோபரைப் பற்றிய அதிசயமான வரலாற்றை அவருக்கு ஊர் மக்கள் எடுத்துச் சொன்னார்கள். மதுரகவியார் அதைக் கேட்டு மகிழ்வெய்தி கோயிலினுள் சென்று பார்த்தார்.

அங்கே புளிய மரத்தடியில் சடகோபர் பதினாறு வயதினராக மெய்ஞானத்திலே திளைத்து முழு நிலாவைப் போன்ற முகப்பொலிவோடு பத்மாஸனமாக அமர்ந்து கண்மூடி யோக நிஷ்டையில் ஆழ்ந்திருப்பதை மதுரகவியார் கண்டார். சடகோபரின் முக காந்தியால் கவரப்பட்டாலும் அவர் பிறந்தது முதல் உண்ணுதலையே நீக்கி அசைவற்று பேச்சற்று இருப்பதை நினைத்து அவருக்கு காது கேட்குமா? அவர் கண் திறந்து தன்னைப் பார்த்தருள்வாரா என்று மதுரகவியார் சோதிக்க விரும்பினார். உடனே அவர் தம் இருகைகளையும் தட்டி விட்டுப் பிறகு ஒரு குண்டுக் கல்லையும் தூக்கி சடகோபரின் முன்னிலையில் தொப்பென்று போட்டார். அச்சப்தம் கேட்டவர்

போல் சடகோபர் தம் இரு கண்களையும் திறந்து பார்த்தார். பிறகு சடகோபர் வாய் திறந்தும் பேசுவாரா என்று பரிசோதிப்பதற்காக மதுரகவியார் அவரை நோக்கி, "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று கேட்டார். அதன் உட்பொருளாவது செத்ததின் வயிற்றில் (உயிரற்ற பிரகிருதியினால் உருவான உடம்பில்) சிறியது பிறந்தால் (அணுவடிவமான ஜீவாத்மா பிறந்தால்) எத்தை தின்று (எதை அனுபவித்துக் கொண்டு) எங்கே (இன்பம் உண்டென்று) கிடக்கும்? என்று பொருள்படக் கேட்டார்.

அதற்கு சடகோபர், "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று பதில் கூறினார். அதன் உட்பொருளாவது (மெய்ஞான உணர்வு நினைவு பெற்ற ஜீவாத்மாவாக இருந்தால்) அத்தை (பரமாத்மாவை) தின்று (அனுபவித்துக் கொண்டு) அங்கே (பரமாத்மாவிலே) கிடக்கும்! (அந்நிலை பெறாத ஆத்மாவாக இருந்தால்) அத்தை தின்று (உடலின் தொடர்பால் உருவாகும் ஐம்புலன் இச்சைகளின் நல்வினை தீவினைகளை அனுபவித்துக் கொண்டு) அங்கே கிடக்கும். (அப்பிறவி சுழலிலேயே கட்டுண்டு கிடக்கும்) இந்தப் பதிலைக் கேட்டதும் மதுரகவியார் பரம பக்தியால் மெய்சிலிர்த்து தமக்கு அருள்புரிய பேரொளியாகத் தோன்றி வழிகாட்டி அழைத்து வந்த தேஜஸ் இந்தச் சடகோபரிடமிருந்தே வந்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொண்டு அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்.

பிறகு நம்மாழ்வாரின் அருளைப் பெற்று, அவர் பாடிய பக்திரசம் மிகுந்த தெய்வீகப் பாசுரங்களை மதுரகவியார் பட்டோலையில் எழுதி வரலானார். நம்மாழ்வாரின் அருமையான பாடல்களிலே மதுரகவியாரின் மனம் முழுதுமாக ஆழ்ந்தது. அவற்றையே பாடிப் பாடிப் பரவசமாயினார். தம்முடைய குரு "இவரே" என்று போற்றினார். நம்மாழ்வாரைப் பின்பற்றி மதுரகவியாரும் பக்தி பரபக்தி முறையைக் கையாண்டார். நம்மாழ்வாரையே தெய்வமாகக் கொண்டார். ஆச்சார்யாரிடம் செலுத்தும் பக்தியே ஆண்டவனிடம் செலுத்தும் பக்தி, குருவிற்குச் செய்யும் தொண்டே தெய்வத் திருத்தொண்டு. குருவின் தரிசனமே தெய்வ தரிசனம் என்று மதுரகவி கருதினார். எனவே பரஞானத் தத்துவத்தில் அவர் திளைத்திருந்தும் மற்ற ஆழ்வார்களைப் போல பரம்பொருளான ஸ்ரீமந்நாராயணனை

தத்துவ தரிசனம் கண்டு நாராயணனைப் போல் பாடியது போல் பாடாமல் நாராயணனைப் பாடிய நம்மாழ்வாரை இவர் போற்றிப் பாடினார்; நம்மாழ்வார் மீது மதுரமான பாமாலைகளைத் தொடுத்தார்; "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்று தொடங்கி பதினொரு பாசுரங்களால் ஆன பாமாலை ஒன்றைப் பாடினார். "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்று அப்பாமாலையின் முதற் பாசுரம் தொடங்கப் பெற்றிருப்பதால் அது "கண்ணி நுண் சிறுத்தாம்பு" என்றே வழங்கப் பெறுவதாயிற்று. அப்பாசுரங்கள் அனைத்தும் இனிய இசையுடன் கூடியவை. படிப்பவர் நெஞ்சத்தை உருக்கி உள்ளொளி பெருக்குபவை.

பிறகு மதுரகவியார் நம்மாழ்வாரின் திருவுருவத்தை அர்ச்சக ரூபமாகச் செய்து அப்பெருமாள் கோயிலினுள்ளேயே எழுந்தருளச் செய்து, அதற்கான திருமண்டபத்தையும், மதில்களையும் விமானத்தையும் தோற்றுவித்தார். நாள்தோறும் பலவகை மலர்களைக் கொண்டு மாலை தொடுத்து அத்தெய்வபிரானுக்குச் சூட்டி மகிழ்ந்தார். நம்மாழ்வார் பாடிய பாசுரங்களையெல்லாம் உலகெங்கும் பரவுமாறு பக்தியுடன் பாடினார்; ஆடினார்! அவ்வக் காலங்களில் நம்மாழ்வாரின் படிமத்திற்கு மாலைகள் சூடி வழிபாடுகள் இயற்றி திருவிழாக்களையும் ஏற்படுத்தி சிறப்புச் செய்தார். அப்பொழுது அழகிய பொன் விமானத்தில் அத்தெய்வ உருவை எழுந்தருளச் செய்து, வீதிகள் தோறும் வலம் வரச் செய்வார். விமானத்தின் முன்னே அடியார்களுடன் அவரும் சேர்ந்து, "நம்மாழ்வார் வந்தார்! நற்குணச் சீலர் வந்தார்! தமிழில் வேதம் பாடிய பெருமாள் வந்தார்! திருக்குருகூர் நம்பி வந்தார்! திருவாய் மொழிந்த அருளாளர் வந்தார்! திருவழுதி வளநாடர் வந்தார்! வகுளாபரணர் வந்தார்! காரி மாறர் வந்தார்! சடகோபர் வந்தார்! பராங்குசர் வந்தார்! பவனிநாதர் வந்தார்!" என்று விருதுகள் உரைந்து திருஉலா வருவார்.

இவ்வாறு மதுரகவியார், நம்மாழ்வாருக்குத் திருத் தொண்டுகள் செய்து வரும் நாளில் ஓராண்டு திருவிழா நடத்தினார்; அப்போது நம்மாழ்வாரின் திருவுருவப் படிமத்தை விமானத்தில் ஏற்றி வீதிதோறும் அடியவர்கள் நம்மாழ்வாரின் விருதுகளைக் கூறிக் கொண்டே உலா வந்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே புலவர்களாக இருந்த சிலர் அவ்வுலாவினைக் கண்டார்கள்; அடியவர்கள் கூறிகொண்டு வரும் விருதுகளையும்

கேட்டார்கள்; "புலவரேறு" என்னும் பட்டம் பெற்ற அப் புலவர்களில் சிலர் அகம்பாவத்தினால் அடங்காச் சினம் கொண்டார்கள். உடனே அடியவர்களிடம் சென்று, "அடியவர்களே! நீங்கள் இவ்வாறு ஆழ்வாருக்கு விருதுகள் சொல்வது தவறு. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் புலவர்களாகிய எங்களின் அனுமதி பெற்ற பின்பே இவற்றை மொழிதல் வேண்டும். புலமையில் நாங்கள் ஒப்புயர்வு உடையவர்கள் என்பதைத் தமிழகம் அறியும். மன்னர்களும் எங்கள் புலமையை உணர்ந்தே எங்களை வணங்கிப் பேணிப் பாதுகாக்கின்றனர். இதையறியாமல் உங்கள் ஆழ்வாருக்கு விருதுகள் சொல்கிறீர்களே? எங்களை விட உங்கள் ஆழ்வார் புலமை மிக்கவரோ?" என்று அடியவர்கள் நம்மாழ்வாருக்கு விருதுகள் சொல்லாதவாறு தடுத்தார்கள்.

அடியவர்கள் விரைந்தோடி நம்மாழ்வார் திருவுருவப் படிமத்தின் முன் நின்று பக்தியுடன் பாடிக் கொண்டிருக்கும் மதுர கவியாரிடம் முறையிட்டார்கள். அதனைக் கேட்டதும், "நாளை நாம் அவர்களுடைய சங்கம் உள்ள இடத்திற்கு வருவோம் என்று போய்ச் சொல்லுங்கள்!" என்றார், மதுரகவியார். அங்ஙனமே அடியவர்களும் அப்புலவர்களிடம் சென்று தெரிவித்தார்கள்.

நம்மாழ்வார் விழாவை இனிது முடித்துவிட்டு மதுரகவியார் அன்றிரவு ஆழ்வார் திருமுன் சென்று நின்றார். "எம்மையாளும் தேவரீர்! இதென்ன பெருஞ்சோதனை? இன்று உமக்கு விருதுகள் கூறக்கூடாது என்று சங்கப் புலவர்கள் தடுத்து விட்டார்களே! அவர்களின் அகந்தை அழியுமாறு ஏதேனும் புரிதல் வேண்டும். இல்லாவிட்டால் நான் உணவும் உட்கொள்ளேன். அன்றி உயிரையும் மாய்த்துக் கொள்வேன்" என்று பலவாறாகக் கூறியபின் அவ்விடத்திலேயே படுத்துக் கொண்டார். சிறிது நேரத்தில் ஆழ்ந்தும் உறங்கி விட்டார்.

அப்பொழுது அவர் கனவிலே நம்மாழ்வார் தோன்றி, "நீ கவலைப்படவேண்டாம். நாம், ஒரு பாட்டை ஓர் ஏட்டிலே எழுதி இங்கு வைக்கின்றோம். நீ அவ்வேட்டை எடுத்துச் சென்று சங்கப் புலவர்களிடம் காட்டி அப்பாட்டுக்குப் பொருள் கூறும்படி அவர்களைக் கேள்!" என்று கூறி மறைந்தார்.

உடனே துயில் கலைந்தார் மதுரகவியார். தம் முன் கனவில் கண்டபடி ஓர் ஏடு இருப்பதைப் பார்த்ததும் ஆவலோடு அதை

எடுத்துப் படித்து அகமகிழ்ந்தார். பிறகு விடியற்காலையில் எழுந்து செய்ய வேண்டிய காரியங்களை முடித்துக் கொண்டு மீண்டும் ஆழ்வார் திருவுருவத்தின் முன் வந்து வணங்கி எழுந்து, அந்த ஏட்டுடன் சங்கப் புலவர்களிடம் விரைந்து சென்று "புலவர் பெருமக்களே! எம் தெய்வமாகிய நம்மாழ்வார் பிரானின் பெருமைகளை உணராது, அவருடைய விருதுகளைக் கூறுவதை இகழ்ந்து கூறிய புலவர்கள் யாவர்?" என்று கேட்டார்.

அகம்பாவிகளான சில புலவர்கள் துள்ளியெழுந்து, "நாங்களே!" என்று அவருக்கு மறுமொழி சொன்னார்கள்.

மதுரகவியார் அவர்களைப் புன்னகையோடு நோக்கி விட்டு, "புலவரேறுகளே! இதோ எம்மிடம் எமது ஞானாசிரியராகிய பராங்குசர் ஆசிரியப்பாவில் இயற்றிய பாடல் கொண்ட ஏடு இருக்கிறது. இந்த ஏட்டில் உள்ள பாட்டுக்குப் பொருள் கூறுவீராக" என்று தாம் கொண்டு வந்த ஏட்டை அவர்கள் முன் நீட்டினார்.

அதை அப்புலவர்களுள் ஒருவர் வாங்கி, அப்பாட்டைப் படித்துப் பார்த்தார். பொருள் விளங்காமல் திகைத்தார். பின் மற்றொருவரிடம் அவ்வேட்டைக் கொடுத்தார். அவரும் அதைப் படித்து விட்டுத் திகைத்துத் தடுமாறினார். இப்படியே ஒவ்வொரு புலவரிடமும் அவ்வேடு கைமாறிக் கொண்டே சென்றது. ஆயினும் ஒருவராவது அப்பாடலின் உண்மைப் பொருளை உணர்ந்து சொல்லும் திறம் பெறாமல் தூண்கள் போல் அசைவற்று நின்றார்கள். பிறகு அனைவரும் ஒரு தனியிடத்தில் கூடி தங்களுக்குள் ஆலோசித்து, "இச் செய்தியை பாண்டிய மன்னரும் மற்றையோரும் அறிந்தால் நம்முடைய மதிப்பு அழிந்து விடுமே! இதற்கு என்ன செய்வது?" என்று சிந்தித்தார்கள்.

கடைசியாக அவர்கள் ஒரு முடிவுடன் மதுரகவியாரிடம் வந்து, "நீர் கொண்டு வந்த பாட்டுக்குப் பொருள் சொல்வது ஒரு புறம் இருக்கட்டும். எங்களை ஏற்றுக்கொண்ட சங்கப்பலகை அவருடைய பாடல்களையும் ஏற்றுக் கொண்டால்தான் நாங்கள் உமது ஆழ்வாரைச் சிறந்த புலவர் என்று ஒப்புக் கொள்கிறோம். என்ன, உமக்குச் சம்மதம் தானே?" என்று வினவினார்கள்.

"சங்கப் புலவர்களே! உங்கள் விருப்பப்படியே ஆகட்டும். ஆனாலும் எமது தெய்வமாகிய வகுளாபரணர் அருளிய

அனைத்துப் பாடல்களையும் சங்கப் பலகையில் ஏற்ற வேண்டிய அவசியமில்லை. அவருடைய ஒரு திருப்பாசுரத்தை மட்டுமே ஏற்றினால் போதும். அதுவே உலகில் உள்ள அத்தனை அரும்புலவர் பெருமக்களும் போற்றுதற்கு உரியவர் எங்கள் ஆழ்வார்பிரான் என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்லப் போதுமானது. அதை நீங்களே பாருங்கள்" என்று கூறினார். பிறகு அவர் நம்மாழ்வார் பாடி அருளிய

கண்ணன் கழலினை
நண்ணும் மன முடையீர்
எண்ணும் திரு நாமம்
திண்ணம் நாரணமே!

என்னும் பாசுரத்தை ஒரு சிறிய ஏட்டில் எழுதி அவர்களிடம் கொடுத்தார். அவர்கள் சங்கப் பலகையில் அதை வைத்து விட்டுத் தாங்களும் அச்சங்கப் பலகையில் ஏறி அமர்ந்து கொண்டார்கள். சங்கப் பலகை அப்புலவர்கள் யாவரையும் கீழே தள்ளிவிட்டு அச்சிறிய ஏட்டை மட்டும் சுமந்து, அதன் அளவிற்குக் குறுகிய நிலையில் பொற்றாமரைக் குளத்திலே மிதந்தது. அதைக் கண்டதும் தண்ணீரில் தள்ளப்பட்ட புலவர்கள் அஞ்சி நடுங்கியவாறு மெல்ல நீந்திக் கரையேறி வந்து செய்வதறியாது திகைத்து தடுமாறி நின்றார்கள். தாங்கள் செய்த பழிச்செயலை எண்ணி மனங் கலங்கினார்கள். அதற்குப் பரிகாரமாக நம்மாழ்வாரைப் போற்றிப் புகழ்ந்து பாடுதலே, அக்குற்றத்திற்கான மன்னிப்பைப் பெறுவதற்குரிய வழியாகும் என்று எண்ணமிட்டார்கள். பிறகு அச்சங்கப் புலவர்களுக்கெல்லாம் தலைவராகிய புலவர்,

"ஈ ஆடுவதோ கருடற்கு எதிரே?
இரவிக்கு எதிர் மின்மினியா ஆவதோ?
நாய் ஆடுவதோ உறுவெம் புலிமுன்?
நரி ஆடுவதோ நரகேசரி முன்?
பேய் ஆடுவதோ அழகூர் வசிமுன்?
பெருமான் வகுளாபரணன் அருள்கூர்ந்து
தோவா துரையா யிரமா மறையின்
ஒரு சொற் பெறுமோ உலகிற் கவியே?"

என்று நம்மாழ்வாரைப் போற்றிப் புகழ்ந்து பாடினார். பிறகு மற்றைய புலவர்களும் தனித்தனியே ஒவ்வொரு பாட்டைப் பாடினார்கள். அவையனைத்தும்,

"சேமம் குருகையோ செய்யதிருப் பாற்கடலோ
நாமம் பராங்குசமோ நாரணமோ - தாமம்
துளவோ வகுளமோ தோளிரண்டோ நான்கும்
உளவோ பெருமான் உனக்கு"

என்று ஒரே பாடலாக நேரிசை வெண்பாவில் அமைந்திருக்க அப்புலவர்கள் அதைக் கண்டு பெரும் அச்சமும் வியப்பும் கொண்டார்கள்.

அவர்கள் மதுரகவியாரை நோக்கி, "பெரியீர்! தங்கள் ஆழ்வாருடைய மேன்மையினை நாங்கள் உணர்ந்து கொண்டோம். தங்களின் அருட்செயலால் எங்கள் அகந்தை அழிந்தது. இனி தாங்கள் ஆழ்வாருடைய விருதுகளை வான்முட்டும் அளவு கூறுங்கள். இவ்வுலகம் முழுதும் அவருடைய அருட்புகழ் சென்று பரவட்டும். திக்கெட்டும் அவருக்கு திருவிழா நடைபெறட்டும். நாங்களும் அவ்விழாவிலே கலந்து கொள்கிறோம். உடனே சென்று விழா நடத்துங்கள்" என்று கூறினார்கள்.

அவர்களுடைய உள்ளப்பாங்கைத் திருத்தி அமைத்த பெரு மகிழ்ச்சியுடன் மதுரகவியாழ்வார் விடைபெற்றுச் சென்றார்; அது முதல் எவ்விதத் தடையும் இல்லாமல் தாம் வாழுங்காலம் வரை நம்மாழ்வாருக்கு விழா எடுத்து சிறப்புச் செய்து வந்தார். நம்மாழ்வார் பாடிய பாசுரங்களின் பொருள்களையெல்லாம் மக்களுக்கு எடுத்துக் கூறி நல்வழிப்படுத்தி நெடுங்காலம் மதுரகவியாழ்வார் வாழ்ந்து இறுதியில் நாரணரின் பரமபதத்தை அடைந்தார்.

இவ்வாறு திருமாலின் அருட்புகழை மக்களுக்குச் சொல்லி நல்வழிப்படுத்துவதற்காக மானிடப் பிறவி எடுத்து வந்த பன்னிரு ஆழ்வார்களைப் போற்றி வணங்கி விட்டு, நாம் இக்கதைகளை இனிது முடிப்போமாக!

திருமால் திரு வடி வாழ்க!
திருமால் அடியார் வாழ்க!
அருளா அமலா வாழ்க!
அடியார் அருளே வாழ்க!
அருள்சேர் திருமகள் வாழ்க!
ஆரா அமுதா வாழ்க!
மருள் தனை நீக்கி வாழ்க!
மாநிலம் எல்லாம் வாழ்க!

முற்றும்

மனதை அமைதிப்படுத்தும் ஆன்மீக நூல்கள்:





ஸ்ரீ தேவி பாகவதம்
ஸ்ரீ சிவமகா புராணம்
ஸ்ரீ விநாயகர் புராணம்
ஸ்ரீ விஷ்ணு புராணம்
ஸ்ரீ பெரிய புராணம்
கம்பராமாயணம், மகாபாரதம்.....





மனதை மகிழ்விக்கும் கதைகள்:

விக்கரமாதித்தன் கதைகள்
மதனகாமராஜன் கதைகள்
பீர்பால் கதைகள், தெனாலிராமன் கதைகள்
மரியாதைராமன் கதைகள்
இராயர் அப்பாஜி கதைகள்...





மனதை விரிவடையச் செய்யும் பொன்மொழிகள்:

ஔவையார் பொன்மொழிகள்
பாரதியார் பொன்மொழிகள்
காந்தி பொன்மொழிகள்
புத்தர் பொன்மொழிகள்
பைபிள் பொன்மொழிகள்...

மனதை சிந்திக்க வைக்கும் சிந்தனையாளர்கள்:

டார்வின், ப்ராய்டு
சாக்ரடீஸ், விவேகானந்தர்
அரிஸ்டாடில், தொல்காப்பியர்
டால்ஸ்டாய்...





தரமான புத்தகங்களை குறைந்த விலையில் வெளியிடும்

பிரேமா பிரசுரம்

1952